முன்னுரை

யூதர்களுடைய சரித்திரம் நெகேமியாவின் புஸ்தகத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்திருக்கிறார்கள். இக்காலத்தில் பெர்சியா தேசம் வல்லமையுள்ள தேசமாக விளங்கிற்று. பெர்சியா தேசத்தைப்போலவே கிரேக்கு தேசமும், ரோமாபுரியாரின் தேசமும் வல்லரசாக வளர்ச்சி பெற ஆரம்பிக்கிறது.

பெர்சியா தேசம், கிரேக்கு தேசம், ரோமாபுரியாரின் தேசம் ஆகியவற்றைப்பற்றிய சரித்திர சம்பவங்கள் ஏராளமாய் உள்ளன. ஆனாலும் இக்காலத்தில் யூதர்களுடைய தேசத்தின் சரித்திரத்தைப்பற்றி, பரிசுத்த வேதாகமத்தில் மாத்திரமே சொல்லப்பட்டிருக்கிறது.

எஸ்றாவும், நெகேமியாவும் ராஜாக்களல்ல. அவர்கள் பெரிய சேனைக்கு தளபதிகளுமல்ல. அவர்கள் எந்த தேசத்தின்மீதும் யுத்தம்பண்ணவுமில்லை. அவர்கள் அக்காலத்தில் பேர் பெற்ற தத்துவ ஞானிகளோ அல்லது சிறந்த பேச்சாளர்களோ அல்ல. இவர்கள் இருவரும் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கிறவர்கள். கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறவர்கள். இவர்கள் தங்கள் காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு, தங்களால் முடிந்த உதவிகளை செய்திருக்கிறார்கள்.

கர்த்தருடைய பார்வையில் எஸ்றாவும் நெகேமியாவும் மிகவும் விசேஷித்தவர்கள். இக்காலத்தில் பிளாட்டோ போன்ற தத்துவ ஞானிகள் இருந்தாலும், அவர் உலகப்பிரகாரமான ஜனங்களுக்கு முக்கியமானவராகயிருந்தாலும், கர்த்தருக்கு எஸ்றாவும் நெகமியாவுமே முக்கியமானவர்களாயிருக்கிறார்கள்.

நெகேமியாவின் சரித்திரம் இந்தப் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நெகேமியாவின் கைகளினால் செய்த வேலைகளும், அவருடைய இருதயத்தினால் செய்த வேலைகளும் இந்தப் புஸ்தகத்தில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. நெகேமியா சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களுக்கு ஏராளமான உதவிகளை செய்திருக்கிறார்.

நெகேமியா தன்னுடைய இருபதாம் வருஷத்திலிருந்து (நெகே 1:1), முப்பத்திரண்டாம் வருஷம் (நெகே 13:6) வரையிலும், யூதாதேசத்திற்கு அதிபதியாகயிருந்தவர். இக்காலத்தில் பெர்சியா தேசத்திற்கு அர்தசஷ்டா என்பவன் ராஜாவாயிருக்கிறான். எஸ்றாவுக்கு இந்த அர்தசஷ்டா ராஜாவே சன்னதம் கொடுத்து எருசலேமுக்கு அனுப்பினவன்.

நெகேமியா எருசலேமைக் குறித்து கரிசனையோடிருக்கிறார். அவர் எருசலேமுக்குப்போக ராஜாவின் அனுமதியைப் பெற்றுக்கொள்கிறார் (நெகே 1,2 ஆகிய அதிகாரங்கள்).

நெகேமியா எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிறார். அப்போது அவருக்கு அநேக எதிர்ப்புக்கள் உண்டாயிற்று. நெகேமியா எதிர்ப்புக்களை மேற்கொண்டு எருசலேமின் அலங்கத்தை தொடர்ந்து கட்டுகிறார் (நெகே 3,4 ஆகிய அதிகாரங்கள்).

எருசலேமிலுள்ள யூதர்கள் ஒடுக்கப்படுகிறார்கள். நெகேமியாவின் காலத்தில் யூதர்களை ஒடுக்குவது நிறுத்தப்படுகிறது (நெகே 5-ஆவது அதிகாரம்). நெகேமியா எருசலேமின் அலங்கத்தைக் கட்டி முடிக்கிறார் (நெகே 6-ஆவது அதிகாரம்).

நெகேமியா பாபிலோனிலிருந்து யூதாதேசத்திற்கு திரும்பி வந்த யூதர்களின் அட்டவணையை தயாரிக்கிறார் (நெகே 7-ஆவது அதிகாரம்). நெகேமியாவின் காலத்தில் வசனத்தை பிரசங்கம்பண்ணுதல், ஜெபம்பண்ணுதல், தேவனைத் துதித்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது (நெகே 8-10 ஆகிய அதிகாரங்கள்).

எருசலேமில் குடியிருப்போரின் அட்டவணையும், யூதாவின் மற்ற பட்டணங்களில் குடியிருப்போரின் அட்டவணையும் சேகரிக்கப்படுகிறது. தேவனுடைய ஆலயத்தில் ஆராதனைகள் ஒழுங்குபடுத்தப்படுகிறது (நெகே 11,12 ஆகிய அதிகாரங்கள்). கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிகிறார்கள் (நெகே 13-ஆவது அதிகாரம்)

பாலஸ்தீன தேசத்தில் கி.மு. 446 - 430 ஆகிய வருஷக்காலத்தில் இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது. அர்தசஷ்டா ராஜாவின் 32 ஆவது வருஷ ஆட்சிக் காலத்தில் நெகேமியா இரண்டாம் முறையாக எருசலேமிற்கு வருகிறார். இந்தப் புஸ்தகம் அதற்குப் பின்பு எழுதப்பட்டிருக்க வேண்டும். (நெகே 5:14-19 ; நெகே 13:6-9).

நெகேமியா அல்லது எஸ்றா அல்லது இவர்கள் இருவரும், இந்தப் புஸ்தகத்தின் ஆசிரியர்கள் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

ஆரம்பத்தில் எஸ்றாவும், நெகேமியாவும் ஒரே புஸ்தகமாக இருந்தது. அந்தப் புஸ்தகத்திற்கு "எஸ்றாவின் புஸ்தகம்" என்று பெயர். அதற்குப் பின்பு, இந்தப் புஸ்தகம் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, 1எஸ்றா, 2எஸ்றா என்று இரண்டு புஸ்தகங்களாக்கப்பட்டது. கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் ஏரோம் 2 எஸ்றா புஸ்தகத்தை நெகேமியா என்று பேரிட்டு அழைத்தார். அதற்குப் பின்பு, இதே பெயரே இந்தப் புஸ்தகத்திற்குத் தொடர்ந்து பயன்படுத்தப் படுகிறது.

நெகே 1-7, நெகே 12:27-43 ஆகிய அதிகாரங்களும், அதன் வசனங்களும் தன்னிலை மறுபெயரில் **(first person)** எழுதப் பட்டிருக்கிறது. நெகே 8:1-10:30, நெகே 12:44-13:3 ஆகிய வசனங்கள் பிறநிலை மறுபெயரில் **(third person)** எழுதப் பட்டிருக்கிறது. இதன் மூலமாக நெகேமியாவும், எஸ்றாவும் இந்தப் புஸ்தகத்தை எழுதுவதில் பங்கு பெற்றிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

நெகே 1:1 ஆவது வசனம் "நெகேமியாவின் நடபடிகள்" என்னும் வாக்கியத்தோடு ஆரம்பமாகிறது. நெகேமியாவின் வார்த்தைகளை எஸ்றாவும், பிரதான ஜெபாலயத்தில் உள்ளவர்களும் தொகுத்து வெளியிட்டிருக்க வேண்டும்.

நெகேமியா புஸ்தகத்தில் நான்கு பகுதிகள் உள்ளன. நெகே 1-7 ஆகிய அதிகாரங்களில் பாபிலோனில் நெகேமியாவின் வரலாறும், அவன் பன்னிரண்டு வருஷங்களாக யூதாவின் தேசாதிபதியாக இருந்ததும் விவரிக்கப் பட்டிருக்கிறது. இதை நெகேமியா எழுதியிருக்க வேண்டும். இந்த ஏழு அதிகாரங்களும் தன்னிலை மறுபெயரில் **(first person)** எழுதப்பட்டிருக்கிறது.

நெகே 1-8-13 ஆகிய அதிகாரங்களில் எஸ்றாவோடும், நெகேமியாவோடும் தொடர்புடைய நிகழ்ச்சிகள் எழுதப்பட்டுள்ளன. இவை பிறநிலை மறுபெயரில் **(third person)** எழுதப்பட்டிருக்கிறது.

நெகே 11:1-12:26 ஆகிய வசனங்களில் சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்குத் திரும்பி வந்தவர்களின் ஆறு முக்கியமான அட்டவணைகள் காணப்படுகிறது.

நெகே 12:27-13:31 ஆகிய வசனங்களில் அலங்கத்தின் பிரதிஷ்டை, நெகேமியா யூதாவின் இரண்டாவது தேசாதிபதியாக இருந்தபோது நடைபெற்ற ஆவிக்குரிய உயிர்மீட்சிகள் ஆகியவையெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது.

எருசலேம் மறுபடியும் கட்டி எழுப்பப்பட்ட போது அந்த வேலை மிகவும் மெதுவாக நடைபெறுகிறது. பாபிலோனிய சிறையிருப்புக்குப் பின்பு, இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் எருசலேமில் கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள். யூதர்கள் மறுபடியும் ஒரு தேசமாக ஸ்தாபிக்கப்படுவதற்குப் பலபிரச்சனைகள் உண்டாயிற்று. கர்த்தருடைய உதவியினால் இந்தப் பிரச்சனைகள் எல்லாம் அகன்றன. யூதருடைய இஸ்ரவேல் தேசம் மறுபடியும் ஸ்தாபிக்கப்படுகிறது.

1 அதிகாரம்

நெகேமியா பெர்சியா தேசத்து அரமனையிலிருக்கிறார். அவர் சிறையிருப்பிலிருந்து மீந்து தப்பின யூதரின் செய்தியையும், எருசலேமின் செய்தியையும் விசாரிக்கிறார் (நெகே 1:1,2). சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்த தேசத்தில் மகாதீங்கையும் நிந்தையையும் அனுபவிக்கிறார்கள் என்னும் சோகமான செய்தியை நெகேமியா கேள்விப்படுகிறார் (நெகே 1:3).

நெகேமியா இந்த வார்த்தைகளைக் கேட்டபோது, கர்த்தருடைய சமுகத்தில் உபவாசித்து ஜெபம்பண்ணுகிறார் (நெகே 1:4). நெகேமியாவின் ஜெபவார்த்தைகள் (நெகே 1:5-11).

நெகேமியா
நெகே 1:1-4

நெகே 1:1. அகலியாவின் குமாரனாகிய நெகேமியாவின் நடபடிகள்: இருபதாம் வருஷம் கிஸ்லேயுமாதத்தில் நான் சூசான் என்னும் அரமனையில் இருக்கும்போது சம்பவித்தது என்னவென்றால்,

நெகே 1:2. என் சகோதரரில் ஒருவனாகிய ஆனானியும், வேறே சில மனுஷரும் யூதாவிலிருந்து வந்தார்கள்; அவர்களிடத்தில் நான் சிறையிருப்பில் மீந்து தப்பின யூதரின் செய்தியையும், எருசலேமின் செய்தியையும் விசாரித்தேன்.

நெகே 1:3. அதற்கு அவர்கள்: சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்தத் தேசத்திலே மகா தீங்கையும் நிந்தையையும் அநுபவிக்கிறார்கள்; எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறது என்றார்கள்.

நெகே 1:4. இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி:

நெகேமியா பெர்சியா தேசத்திலே, சூசான் என்னும் அரமனையிலிருக்கிறார். சூசான் பெர்சியா ராஜாவின் ராஜதானி பட்டணம். இங்கு ராஜாவின் அரமனை இருக்கிறது (நெகே 1:1). நெகேமியா பெர்சியா தேசத்தின் ராஜாவுக்கு பானபாத்திரக்காரனாயிருக்கிறார் (நெகே 1:11). பெர்சியா தேசத்தில் நெகேமியாவுக்கு முக்கியமான பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

நெகேமியா ராஜாவின் பானபாத்திரக்காரனாயிருப்பதினால், அவருக்கு ராஜாவோடு நெருங்கி பழகும் சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தினால், நெகேமியாவை சூசான் என்னும் அரமனையில் வைத்திருக்கிறார். நெகேமியா தனக்கு கிடைத்திருக்கிற செல்வாக்கையும், அதிகாரத்தையும் யூதாதேசத்திலுள்ள ஜனங்களின் நன்மைக்காக பயன்படுத்துகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தார்கள். அவர்களை விடுவித்து அழைத்து வர கர்த்தர் மோசேயைத் தெரிந்தெடுத்தார். மோசே பார்வோனுடைய அரமனையில் வளர்ந்தவர். அதுபோலவே தாவீதுக்கும், சவுலின் அரமனையில் உத்தியோகம் கிடைத்திருந்தது.

நெகேமியா பெர்சியா தேசத்து ராஜாவுக்கு மிகவும் நெருக்கமானவர். ராஜாவைச் சுற்றியிருக்கும் பெர்சியா தேசத்து பிரதானிகளோடும் நெகேமியாவுக்கு நல்ல பழக்கமும், செல்வாக்கும் இருக்கிறது. நெகேமியா அரமனையில் தனக்கு இருக்கும் செல்வாக்கை பயன்படுத்தி, யூதாதேசத்திற்கு நன்மை செய்ய விரும்புகிறார்.

கர்த்தருக்கு மீதமானவர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். ஒபதியா ஆகாபின் வீட்டிலிருந்தார். அகஸ்துராயனுடைய வீட்டிலேகூட கர்த்தருடைய பரிசுத்தவான்கள் இருந்தார்கள். கர்த்தரிடத்தில் பக்தியுள்ள நெகேமியாவோ சூசான் என்னும் அரமனையிலிருக்கிறார்.

கர்த்தருடைய சித்தத்தினால், ராஜாக்களின் அரமனைகள், கர்த்தருடைய ஊழியக்காரர்கள் வளர்க்கப்படும் இடமாகவும், ஆதரிக்கப்படும் இடமாகவும், பாதுகாக்கப்படும் இடமாகவும் இருக்கிறது.

இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற சம்பவம் இருபதாம் வருஷம் கிஸ்லேயுமாதத்தில் நெகேமியா சூசான் என்னும் அரமனையில் இருக்கும்போது சம்பவிக்கிறது. இந்தப் புஸ்தகத்திற்கு, "அகலியாவின் குமாரனாகிய நெகேமியாவின் நடபடிகள்" என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. நெகேமியா என்னும் பெயருக்கு, "கர்த்தர் ஆறுதல் செய்கிறார்" என்று பொருள்.

சில தீர்க்கதரிசன புஸ்தகங்கள் "வசனங்கள்" என்னும் வார்த்தையோடு ஆரம்பமாகிறது. (எரே 1:1; ஆமோ 1:1) அதுபோலவே நெகேமியாவின் புஸ்தகமும் "நெகேமியாவின் நடபடிகள்" அதாவது "நெகேமியாவின் வார்த்தைகள்" என்று ஆரம்பமாகிறது. நெகேமியாவின் புஸ்தகம் எஸ்றாவின் புஸ்தகத்தோடு இணைந்து வருகிறது. ஆகையினால் எந்த இடத்தில் தன்னுடைய வார்த்தைகள் ஆரம்பமாகிறது என்பதைக் குறிப்பதற்காக நெகேமியா இந்தப் புஸ்தகத்தின் முதலாவது அதிகாரத்தில், முதலாவது வசனத்தில் "நெகேமியாவின் நடபடிகள்" என்னும் வாக்கியத்தைச் சேர்த்திருக்கிறார்.

இந்த வசனத்தில், "இருபதாம் வருஷம்" என்பது, அர்தசஷ்டா ராஜாவின் இருபதாவது வருஷம். 70 வருஷத்து பாபிலோனிய சிறையிருப்புக்குப் பின்பு, இது 92 ஆவது வருஷமாகும். எஸ் 1:1 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் அகாஸ்வேரு என்னும் ராஜா மேதிய தேசத்தின் தரியு ஆவான். இவன் கோரேசுவின் தகப்பன். இவன் பாபிலோன் வீழ்ச்சியுற்ற பிறகு இரண்டு வருஷம் ஆட்சி புரிந்தான். நெகேமியா எருசலேமுக்குப் போய் அலங்கங்களைக் கட்டி முடிப்பதற்கு முன்பாக, கோரேசு 9 வருஷங்களும், கம்பஸிஸ் 7 வருஷங்களும், முதலாம் தரியு 35 வருஷங்களும், சஷ்டா 21 வருஷங்களும், அர்தசஷ்டா 20 வருஷங்களும் ஆட்சி புரிந்திருக்கிறார்கள். (நெகே 1:1-7:4).

அர்தசஷ்டா ராஜாவின் 20 ஆவது வருஷத்தில் நெகேமியா எருசலேமிற்கு முதன் முறையாக வந்தார். இந்த ராஜா கி.மு. 464 - 424 ஆம் வருஷத்தில் பெர்சிய தேசத்தை ஆட்சி புரிந்தான். நெகேமியா 10 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் உடன்படிக்கையில் நெகேமியா கையெழுத்திட்டிருக்கிறார். அக்காலத்தில் அவர் எருசலேமின் தேசாதிபதியாக இருந்ததினால் நெகேமியாவின் கையெழுத்து முக்கியத்துவம் பெறுகிறது.

நெகேமியா உடன்படிக்கையில் நெகேமியா கையெழுத்திட்டிருப்பதினால் முதலாம் தரியுவின் ஆட்சிக் காலத்தில் அவர் எருசலேமில் இருந்தார் என்று கூறமுடியாது. ஏனெனில் முதலாம் தரியுவின் ஆட்சிக் காலம் 70 வருஷத்திற்கு முன்பு நடைபெற்றது. அக்காலத்தில் எஸ்றா எருசலேமிற்கு வந்தார். எருசலேமிற்கு வந்தவர்கள் ஒவ்வொருவராக அவ்வப்போது உடன்படிக்கையில் கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

நெகேமியா சூசான் என்னும் அரமனையிலிருக்கிறார். அப்போது அவருடைய சகோதரரில் ஒருவனாகிய ஆனானியும், வேறே சில மனுஷரும் யூதாவிலிருந்து சூசான் அரமனையிலுள்ள நெகேமியாவினிடத்திற்கு வருகிறார்கள்; நெகேமியா அவர்களிடத்தில் சிறையிருப்பில் மீந்து தப்பின யூதரின் செய்தியையும், எருசலேமின் செய்தியையும் விசாரிக்கிறார் (நெகே 1:2).

அனானி என்பவன் நெகேமியாவின் சகோதரனாகவோ அல்லது யூதா கோத்திரத்தில் அவருக்கு நெருங்கிய உறவினனாகவோ இருக்க வேண்டும். இவர்கள் இருவருமே இந்தக் கோத்திரத்தின் பிரபுக்களாக இருந்திருக்கிறார்கள்.

நெகேமியாவைப் பார்க்க வந்தவர்கள், அவருக்கு சிநேகிதராயும் உறவுக்காரராயும் இருக்கிறார்கள். நெகேமியா சூசான் அரமனையிலிருந்தாலும், அவருடைய இருதயத்தின் நினைவுகளெல்லாம், சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு யூதாதேசத்திற்கு திரும்பிப்போன யூதர்களைப்பற்றியதாகவே இருக்கிறது. எருசலேம் கர்த்தருடைய பரிசுத்த நகரம். நெகேமியா சூசான் அரமனையிலிருந்தாலும், அவர் எருசலேம் நகரத்தின்மீது நேசமாயிருக்கிறார்.

சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் யூதா தேசத்தில் மகா உபத்திரவங்களை அனுபவிக்கிறார்கள். எருசலேமின் அலங்கம் இடிக்கப்பட்டிருக்கிறது. அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டிருக்கிறது. தேவாலயம் கட்டி முடிக்கப்பட்ட பின்பும், அதன் அலங்கமும், வாசல்களும், இவ்வாறு பாழடைந்திருக்கிறது.

தேவாலயத்தின் அலங்கம் கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டதாக எஸ்றா புஸ்தகத்தில் குறிப்புக்கள் உள்ளன. ஆனாலும் தேவாலயத்தின் கட்டிட வேலையைப் போலவே, நெகேமியா வரும் வரையிலும் அலங்கம் கட்டப்படும் வேலையும் கவனிக்கப்படாமல் இருக்கிறது.

சூசான் அரமனையில் நெகேமியாவுக்கு ஒரு பிரச்சனையுமில்லை. அவர் அங்கே சகல அதிகாரத்தோடும், சகல சம்பத்தோடும் சந்தோஷமாயிருக்கிறார். அரமனையில் நெகேமியாவுக்கு நல்ல மதிப்பு இருக்கிறது. அவர் அங்கே செல்வாக்குள்ளவர். நெகேமியா ஒரு கவலையுமில்லாமல் அரமனையிலே ராஜாவுக்கு பானபாத்திரக்காரராக பணிபுரிகிறார்.

நெகேமியா சூசான் என்னும் அரமனையில் சந்தோஷமாயிருந்தாலும், அவர் இஸ்ரவேல் புத்திரரை மறக்கவில்லை. சிறையிருப்பிலிருந்து திரும்பிப்போனவர்கள் எப்படியிருக்கிறார்களோ என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வம் அவருடைய மனதிலிருக்கிறது. எருசலேம் நகரமும் இப்போது எந்த நிலமையிலிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள நெகேமியா ஆவலாயிருக்கிறார்.

"அவனுக்கு நாற்பது வயதான போது, இஸ்ரவேல் புத்திரராகிய தன்னுடைய சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி அவனுடைய இருதயத்தில் எண்ணமுண்டாயிற்று" (அப் 7:23).

நெகேமியாவின் சரீரம் சூசான் அரமனையிலிருந்தாலும் அவருடைய மனதோ எருசலேமிலிருக்கிறது. பெர்சியா தேசத்திலே நெகேமியாவுக்கு உயர்ந்த அந்தஸ்து இருக்கிறது. ஆனாலும் சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்களாகிய இஸ்ரவேல் புத்திரரைக் குறித்து அவர் கரிசனையுள்ளவராயிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் இப்போது மகிமையிழந்து, சாதாரண ஜனங்களாயிருக்கிறார்கள். அவர்களைப்பற்றி நினைப்பது தன்னுடைய உயர்ந்த அந்தஸ்துக்கு ஏற்றதல்ல என்று நெகேமியா நினைக்கவில்லை.

சிறையிருப்பிலிருந்து திரும்பிப்போன இஸ்ரவேல் புத்திரரோடு ஐக்கியமாகயிருப்பதும், அவர்களுக்கு ஆதரவாகயிருப்பதும் தன்னுடைய உயர்பதவிக்கு அவமானம் என்று நெகேமியா நினைக்கவில்லை. இஸ்ரவேல் புத்திரர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, எருசலேமுக்கு திரும்பிப்போனபோது, நெகேமியா அவர்களோடு கூடப்போகவில்லை. அவர் எருசலேமிலே வாசம்பண்ணவுமில்லை.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்குப் போனவர்களில் சிலர், மறுபடியுமாக பெர்சியா தேசத்திற்கு திரும்பி வருகிறார்கள். நெகேமியாவோ பெர்சியா தேசத்திலேயே தங்கியிருக்கிறார். ஆகையினால் பெர்சியா தேசத்திற்கு திரும்பி வருகிற யூதர்களை நியாயம் தீர்க்கிற தகுதி நெகேமியாவுக்கு இல்லை. பெர்சியா தேசத்திற்கு திரும்பி வந்த யூதர்கள்மீது நெகேமியா குற்றம் சொல்லவும் முடியாது. ஏனென்றால் நெகேமியா இன்னும் எருசலேமுக்கு ஒரு தடவை கூடப்போகவில்லை.

சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் யூதாதேசத்திலே மகாதீங்கையும், நிந்தையையும் அனுபவிக்கிறார்கள். எருசலேமின் அலங்கம் இடிபட்டு கிடக்கிறது. அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டு கிடக்கிறது.

யூதரின் செய்தியையும், எருசலேமின் செய்தியையும் அனானி என்பவன் நெகேமியாவிடம் வந்து சொல்லுகிறான். இவன் நெகேமியாவின் சகோதரரில் ஒருவன். அனானியைப்பற்றி நெகே 7:2-ஆவது வசனத்தில் அதிகமாக சொல்லப்பட்டிருக்கிறது.

"நான் என் சகோதரனாகிய ஆனானியையும், அநேகரைப்பார்க்கிலும் உண்மையுள்ளவனும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்த அரமனைத் தலைவனாகிய அனனியாவையும், எருசலேமின் காவல் விசாரணைக்கு ஏற்படுத்தினேன்" (நெகே 7:2).

அனானி தேவனுக்கு பயந்தவன். அவன் உண்மையுள்ளவன். ஆகையினால் அவன் பொய்சொல்லமாட்டான். எருசலேம் அழிந்து கிடப்பதைப்பற்றி அனானி மிகுந்த பாரத்தோடு சொல்லுகிறான். இடிந்து கிடக்கிற எருசலேமை திரும்பக் கட்டுவதற்கு, நெகேமியாவின் உதவியைக் கேட்பதற்காக, அனானி சூசான் அரமனைக்கு வந்திருக்கலாம்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பரிசுத்த வித்தாகயிருக்கிறார்கள். அவர்கள் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள். கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் அவர்களுக்கு சொந்தமானது. ஆனால் சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு திரும்பிப்போன இஸ்ரவேல் புத்திரரோ, யூதாதேசத்திலே மகாதீங்கையும், நிந்தையையும் அனுபவிக்கிறார்கள். யூதாவைச் சுற்றிலுமுள்ள அந்நிய தேசத்தார் யூதர்களை நெருக்கி ஒடுக்குகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஜனத்தை நிந்திக்கிறார்கள்.

எருசலேம் கர்த்தருக்கு பரிசுத்தமான நகரம். ஆனால் அதன் அலங்கம் இடிபட்டு கிடக்கிறது. எருசலேமுக்கு பாதுகாப்பு இல்லை. அதன் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டு கிடக்கிறது. கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக வந்து, அந்த நகரத்தை அக்கினியால் சுட்டெரித்துப்போட்டார்கள். எருசலேம் நகரம் அப்போது எப்படி இடிபட்டு கிடந்ததோ, அப்படியே இப்போதும் பாழாய்க்கிடக்கிறது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் எழுபது வருஷங்களாக பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தவர்கள். அவர்கள் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு எருசலேமுக்கு திரும்பி வந்திருக்கிறார்கள். இப்போது யூதாதேசத்திலிருக்கிற இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஐசுவரியம் இல்லை. அவர்கள் தரித்திரராயிருக்கிறார்கள். யூதாதேசத்தைச் சுற்றிலுமிருக்கிற சத்துருக்களும் அவர்களை ஒடுக்குகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் ஏராளமான ஆபத்துக்கள் மத்தியிலே பாதுகாப்பு இல்லாமலிருக்கிறார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் எருசலேமிலே தேவனுடைய ஆலயத்தைக் கட்டியிருக்கிறார்கள். யூதாதேசத்திற்கு ஒரு அதிபதியும் இருக்கிறான். அவர்களுடைய வழக்குகளை விசாரிக்க நியாயாதிபதிகளும், அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். யூதாதேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சிகள் ஓரளவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆனாலும் அந்த தேசத்திலே செய்யவேண்டிய நல்ல வேலைகள் இன்னும் ஏராளமாயிருக்கிறது. அந்த வேலைகளை செய்வதற்கு நெகேமியாவின் உதவி தேவைப்படுகிறது. யூதாதேசத்திலிருந்து சூசான் அரமனைக்கு வந்திருக்கிறவர்கள், நெகேமியாவிடம் இஸ்ரவேல் புத்திரர் அனுபவிக்கும் தீங்கையும், நிந்தையையும், எருசலேம் பாழாய்க் கிடப்பதையும் எடுத்து சொல்லுகிறார்கள்.

அவர்கள் சொன்ன வார்த்தைகளைக் கேட்டபோது நெகேமியா அதிர்ச்சியடைகிறார். அவர் சிறையிருப்பிலிருந்து திரும்பிப்போன யூதர்கள்மேலும், எருசலேம் நகரத்தின்மேலும் அதிக கரிசனையுள்ளவர். அவர் எருசலேமின் அழிவையும், இஸ்ரவேல் புத்திரர் அனுபவிக்கும் தீங்கையும் நிந்தைகளையும் கேட்டபோது, உட்கார்ந்து அழுகிறார். சில நாட்களாக துக்கித்து, உபவாசித்து, மன்றாடி பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம்பண்ணுகிறார்.

நெகேமியாவின் ஜெபம்
நெகே 1:5-11

நெகே 1:5. பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு, உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே,

நெகே 1:6. உமது அடியாராகிய இஸ்ரவேல் புத்திரருக்காக இன்று இரவும்பகலும் உமக்கு முன்பாக மன்றாடி, இஸ்ரவேல் புத்திரராகிய நாங்கள் உமக்கு விரோதமாகச் செய்த பாவங்களை அறிக்கையிடுகிற அடியேனுடைய ஜெபத்தைக் கேட்கிறதற்கு, உம்முடைய செவி கவனித்தும், உம்முடைய கண்கள் திறந்தும் இருப்பதாக; நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவஞ்செய்தோம்.

நெகே 1:7. நாங்கள் உமக்கு முன்பாக மிகவும் கெட்டவர்களாய் நடந்தோம்; நீர் உம்முடைய தாசனாகிய மோசேக்குக் கற்பித்த கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொள்ளாதேபோனோம்.

நெகே 1:8. நீங்கள் கட்டளையை மீறினால், நான் உங்கள் ஜாதிகளுக்குள்ளே சிதறடிப்பேன் என்றும்,

நெகே 1:9. நீங்கள் என்னிடத்தில் திரும்பி, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களானால், உங்களிலே தள்ளுண்டு போனவர்கள் வானத்தின் கடையாந்தரத்தில் இருந்தாலும், நான் அங்கேயிருந்து அவர்களைச் சேர்த்து, என் நாமம் விளங்கும்படி நான் தெரிந்துகொண்ட ஸ்தலத்துக்கு அவர்களைக் கொண்டுவருவேன் என்றும் தேவரீர் உம்முடைய தாசனாகிய மோசேக்குக் கட்டளையிட்ட வார்த்தையை நினைத்தருளும்.

நெகே 1:10. தேவரீர் உமது மகா வல்லமையினாலும், உமது பலத்த கரத்தினாலும், மீட்டுக்கொண்ட உமது அடியாரும் உமது ஜனங்களும் இவர்கள்தானே.

நெகே 1:11. ஆண்டவரே, உமது அடியானின் ஜெபத்தையும், உமது நாமத்துக்குப் பயப்படவேண்டும் என்று விரும்புகிற உமது அடியாரின் ஜெபத்தையும் உமது செவிகள் கவனித்திருப்பதாக; இன்றைக்கு உமது அடியானுக்குக் காரியத்தைக் கைகூடி வரப்பண்ணி, இந்த மனுஷனுக்கு முன்பாக எனக்கு இரக்கம் கிடைக்கப்பண்ணியருளும் என்று பிரார்த்தித்தேன். நான் ராஜாவுக்குப் பானபாத்திரக்காரனாயிருந்தேன்.

சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் யூதாதேசத்தில் அனுபவிக்கிற மகாதீங்கையும், நிந்தையையும் கேள்விப்பட்டபோது, நெகேமியா சில நாட்களாக உபவாசித்து ஜெபம்பண்ணுகிறார். அவருடைய ஜெபத்தின் மொத்த விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. நெகேமியா இஸ்ரவேல் புத்திரருக்காக இரவும் பகலும் கர்த்தருக்கு முன்பாக மன்றாடினார். எருசலேமின் அலங்கம் இடிக்கப்பட்டு கிடப்பதைக் குறித்தும், அதன் வாசல் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதைக் குறித்தும் கேள்விப்பட்டு, நெகேமியா கர்த்தருக்கு முன்பாக சில நாட்களாக துக்கித்து, பரலோகத்தின் தேவனை நோக்கி மன்றாடி ஜெபம்பண்ணுகிறார்.

பெர்சியா தேசத்து ராஜா சிறையிருப்பிலிருந்து திரும்பிப்போன இஸ்ரவேல் ஜனங்களுக்கு கிருபை காண்பிக்கவேண்டும். எருசலேமின் அலங்கத்தை திரும்பவும் எடுப்பித்துக் கட்டுவதற்கு ராஜா உதவிசெய்யவேண்டும். கர்த்தருடைய கண்களில் நமக்கு தயவு கிடைக்கும்போது, மனுஷருடைய கண்களிலும் தயவு கிடைக்கும்.

நெகேமியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, தன்னை வெகுவாகத் தாழ்த்துகிறார். கர்த்தரை அதிகமாய் உயர்த்துகிறார். நெகேமியாவின் ஜெபம், கர்த்தருடைய சமுகத்திலே நாம் எவ்வாறு கிட்டிச்சேருவது என்பதற்கு, நம் எல்லோருக்கும் ஒரு முன்மாதிரியாயிருக்கிறது.

கர்த்தர் மகிமையும் மகத்துவமுமுள்ளவர். நாம் பரிசுத்தத்தோடும், பணிவோடும் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக போகவேண்டும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் பரலோகத்தின் தேவனாயிருக்கிறார். அவர் சர்வஅதிகாரமும், சர்வவல்லமையுமுள்ளவர். இந்தப் பூமியிலுள்ள சகல அந்தகார சக்திகளுக்கும் மேலாக, கர்த்தருடைய வல்லமை பெரியது. கர்த்தர் வானத்திற்கும் பூமிக்கும் அதிபதியாயிருக்கிறார். தேவதூதர்களும், இந்தப் பிரபஞ்சத்தின் ராஜாக்களும், கர்த்தருடைய ஆளுகைக்குட்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நாம் போகும்போது, கர்த்தருடைய கிருபையும் சத்தியமும் நமக்கு கிடைக்கும் என்னும் நம்பிக்கையோடு போகவேண்டும். இது பரிசுத்தமான விசுவாசம்.

நெகேமியா கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ணும்போது, "பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு, உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே" (நெகே 1:5) என்று சொல்லி ஜெபம்பண்ணுகிறார்.

நாம் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும். அப்போது கர்த்தர் நம்மோடு பண்ணிய உடன்படிக்கையையும், தம்முடைய கிருபையையும் காத்துக்கொள்வார். கர்த்தர் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணின காரியங்கள் எல்லாம் நிறைவேறும். அவை மாத்திரமல்ல, கர்த்தர் அதைவிட பெரிய காரியங்களையும் நமக்கு செய்வார்.

கர்த்தருடைய அன்பு பெரியது. அவருடைய கிருபையும் இரக்கமும் பெரியது. நாம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்வதற்கும், நம்முடைய மனதிலே நினைப்பதற்கும் அதிகமாக அவர் நமக்கு நன்மை செய்கிறவர்.

நெகேமியா கர்த்தருடைய சமுகத்தில் ஜெபம்பண்ணும்போது, இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களை முதலாவதாக அறிக்கை செய்கிறார். "உமது அடியாராகிய இஸ்ரவேல் புத்திரருக்காக இன்று இரவும்பகலும் உன்க்கு முன்பாக மன்றாடி, இஸ்ரவேல் புத்திரராகிய நாங்கள் உமக்கு விரோதமாகச் செய்த பாவங்களை அறிக்கையிடுகிற அடியேனுடைய ஜெபத்தைக் கேட்கிறதற்கு, உம்முடைய செவி கவனித்தும், உம்முடைய கண்கள் திறந்தும் இருப்பதாக; நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவஞ்செய்தோம்" (நெகே 1:6) என்று நெகேமியா கர்த்தரிடத்தில் பாவஅறிக்கை செய்கிறார்.

நெகேமியா கர்த்தரிடத்தில் பயபக்தியோடு பாவங்களை அறிக்கை செய்கிறார். அந்தப் பாவங்களையெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்தார்கள் என்று சொல்லாமல், "நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவம் செய்தோம்" என்று நெகேமியா மிகுந்த பணிவோடு ஜெபம்பண்ணுகிறார்.

"நாங்கள் உமக்கு முன்பாக மிகவும் கெட்டவர்களாய் நடந்தோம்; நீர் உம்முடைய தாசனாகிய மோசேக்குக் கற்பித்த கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொள்ளாதேபோனோம்" (நெகே 1:7) என்றும் நெகேமியா தன்னுடைய பாவங்களையும் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களையும் கர்த்தரிடத்தில் அறிக்கைபண்ணுகிறார்.

கர்த்தர் மோசேக்கு கற்பித்த கற்பனைகளையும், கட்டளைகளையும் நியாயங்களையும் இஸ்ரவேல் புத்திரர் கைக்கொள்ளவேண்டும். ஆனால் அவர்களோ அவற்றை கைக்கொள்ளாமல் போனார்கள். கர்த்தருடைய கற்பனைகளையும், கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்ளாமல் மீறினால், என்னென்ன தண்டனை கொடுக்கப்படும் என்பதையும் கர்த்தர் அவர்களுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

"நீங்கள் கட்டளையை மீறினால், நான் உங்கள் ஜாதிகளுக்குள்ளே சிதறடிப்பேன்" (நெகே 1:8) என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை ஏற்கெனவே எச்சரித்து சொல்லியிருக்கிறார். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல், அவருடைய கட்டளையை மீறினார்கள். இதனால் கர்த்தர் அவர்களை அந்நிய ஜாதிகளுக்குள்ளே சிதறடித்தார். இஸ்ரவேல் புத்திரரை அந்நிய தேசத்தார் சிறைப்பிடித்துக் கொண்டுபோனார்கள்.

இந்த உலகத்தின் சரித்திரத்தில் இஸ்ரவேல் புத்திரரைப்போல, சிதறடிக்கப்பட்ட ஜாதியார் வேறு யாருமே இல்லை. கர்த்தர் தம்முடைய கோபத்தினால் இஸ்ரவேல் புத்திரரைத் தண்டித்தாலும், அவர் இன்னும் அவர்கள்மீது அன்பாகவே இருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். அப்போது கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த தண்டனைகளை நீக்கிப்போட்டு, சிதறிப்போன அவர்களை, சிறைப்பட்டுப்போன அவர்களை, மறுபடியுமாக அவர்களுடைய காணியாட்சிக்கு கொண்டு வருவார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடத்தில், "நீங்கள் என்னிடத்தில் திரும்பி, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களானால், உங்களிலே தள்ளுண்டு போனவர்கள் வானத்தின் கடையாந்தரத்தில் இருந்தாலும், நான் அங்கேயிருந்து அவர்களைச் சேர்த்து, என் நாமம் விளங்கும்படி நான் தெரிந்துகொண்ட ஸ்தலத்துக்கு அவர்களைக் கொண்டுவருவேன்" (நெகே 1:9) என்று மோசே மூலமாக கட்டளை கொடுத்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய தாசனாகிய மோசேக்குக் கட்டளையிட்ட வார்த்தையை நினைத்தருளுமாறு, நெகேமியா கர்த்தரிடத்தில் பணிவோடு ஜெபம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் இப்போது கர்த்தரிடத்தில் திரும்பி வந்திருக்கிறார்கள். அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவைகளின்படி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் விக்கிரகங்களை ஆராதிப்பதை நிறுத்திவிட்டு, கர்த்தரை ஆராதிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திலே, கர்த்தருக்கு பலிகளை செலுத்தி அவரை ஆராதிக்கிறார்கள்.

ஆகையினால் கர்த்தர் தம்முடைய வார்த்தையின் பிரகாரம், தள்ளுண்டுபோன இஸ்ரவேல் புத்திரரை பூமியின் கடையாந்தரத்திலிருந்து, சேர்த்துக் கொள்கிறார். தம்முடைய நாமம் விளங்கும்படி கர்த்தர் தெரிந்துகொண்ட ஸ்தலத்திற்கு அவர்களைக் கொண்டு வருகிறார்.

நெகேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிற இந்த வாக்கியங்கள் உபா 30:1-5 ஆகிய வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

"நான் உனக்கு முன்பாக வைத்த ஆசீர்வாதமும் சாபமுமாகிய இந்தக் காரியங்களெல்லாம் உன்மேல் வரும்போது; நீ உன் தேவனாகிய கர்த்தரால் துரத்திவிடப்பட்டு, எல்லா ஜாதிகளிடத்திலும் போயிருக்கும்போது, நீ உன் இருதயத்திலே சிந்தனை செய்து,

உன் தேவனாகிய கர்த்தரிடத்துக்கே திரும்பி, இன்று நான் உனக்குக் கற்பிக்கிறபடியெல்லாம், நீயும் உன் பிள்ளைகளும் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்தால்,

உன் தேவனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி, உனக்கு இரங்கி, உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிதற அடித்த எல்லா ஜனங்களிடத்திலும் இருக்கிற உன்னைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுவார்.

உன்னுடையவர்கள் வானத்தின் கடையான திசைமட்டும் துரத்துண்டிருந்தாலும், உன் தேவனாகிய கர்த்தர் அங்கே இருக்கிற உன்னைக் கூட்டி, அங்கேயிருந்து உன்னைக் கொண்டுவந்து,

உன் பிதாக்கள் சுதந்தரித்திருந்த தேசத்தை நீ சுதந்தரிக்கும்படிக்கு, உன் தேவனாகிய கர்த்தர் அதில் உன்னைச் சேர்த்து, உனக்கு நன்மைசெய்து, உன் பிதாக்களைப்பார்க்கிலும் உன்னைப் பெருகப்பண்ணுவார்" (உபா 30:1-5).

நெகேமியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "உம்முடைய வார்த்தையை நினைத்தருளும்" என்று சொல்லுகிறார். கர்த்தர் எதையும் மறக்கிறவரல்ல. கர்த்தர் சர்வஞானமுள்ளவர். அவர் சகல காரியங்களையும் அறிந்து வைத்திருக்கிறவர். நாம் கர்த்தருக்கு எதையும் நினைவுபடுத்த வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் நெகேமியா தன்னுடைய மனதின் விருப்பத்தை கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய கட்டளைகளையும், கற்பனைகளையும் எப்போதுமே நினைவில் வைத்திருக்கிறார். அவர் இஸ்ரவேல் புத்திரரோடு பண்ணின உடன்படிக்கையையும் மறவாமல் நினைவில் வைத்திருக்கிறார். கர்த்தர் என்றும் மாறாதவர். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, கர்த்தருடைய உடன்படிக்கையை மறந்து, அவருக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார்கள்.

நெகேமியா கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை சொல்லி ஜெபம்பண்ணுவதுபோல, நம்முடைய ஜெபங்களில் நாமும் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை சொல்லி ஜெபம்பண்ணவேண்டும்.

"நீர் என்னை நம்பப்பண்ணின வசனத்தை உமது அடியேனுக்காக நினைத்தருளும்" *(சங் 119:49).*

இஸ்ரவேல் புத்திரர் பூர்வகாலங்களிலே கர்த்தருக்கு பரிசுத்தமுள்ள ஜனமாயும், அவருக்கு பிரியமுள்ள ஜனமாயிருந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் கர்த்தரோடு வைத்திருந்த நல்ல ஐக்கியத்தை நெகேமியா இப்போது தன்னுடைய ஜெபத்திலே நினைவுகூருகிறார்.

"தேவரீர் உமது மகா வல்லமையினாலும், உமது பலத்த கரத்தினாலும், மீட்டுக்கொண்ட உமது அடியாரும் உமது ஜனங்களும் இவர்கள்தானே" *(நெகே 1:10)* என்று நெகேமியா இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய அடியார்கள். கர்த்தர் அவர்களை தமக்காக வேறுபிரித்தார். அவர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டார். ஆனால் கர்த்தருடைய உடன்படிக்கையின் ஜனங்களோ இப்போது, யூதாதேசத்திலே மகா தீங்கையும், நிந்தையையும் அனுபவிக்கிறார்கள். கர்த்தருடைய ஜனத்தை சத்துருக்கள் ஒடுக்குகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை பாதுகாக்கவில்லையென்றால், அவர்களைப் பாதுகாப்பதற்கு வேறு யாருமில்லை.

"நாங்களே உம்முடையவர்கள், அவர்களை ஒருபொழுதும் நீர் ஆண்டதில்லை; அவர்களுக்கு உமது நாமம் தரிக்கப்பட்டதுமில்லை" *(ஏசா 63:19).*

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய நாமத்திற்கு பயப்படவேண்டும் என்று விரும்புகிற ஜனங்கள். அவர்கள் கர்த்தருடைய அடியார்கள் என்பதற்கு இதுவே அடையாளம். அவர்கள் கர்த்தருடைய நாமத்தினால் அழைக்கப்படுகிற ஜனங்கள். அவர்கள் கர்த்தருடைய நாமத்தை பரிசுத்தம்பண்ணுகிற ஜனங்கள். அவர்கள் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கிற ஜனங்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சித்தத்திற்கும், அவருடைய விருப்பத்திற்கும் கீழ்ப்படிகிற ஜனங்கள். அவர்கள் கர்த்தருக்கு பிரியமானவர்களாகவும், பிரயோஜனமானவர்களாகவும் இருக்கிறவர்கள். இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே கர்த்தருடைய அடியார் என்று நெகேமியா சொல்லுகிறார்.

நெகேமியா தன்னுடைய ஜெபத்தின் முடிவில், "ஆண்டவரே, உமது அடியானின் ஜெபத்தையும், உமது நாமத்துக்குப் பயப்படவேண்டும் என்று விரும்புகிற உமது அடியாரின் ஜெபத்தையும் உமது செவிகள் கவனித்திருப்பதாக; இன்றைக்கு உமது அடியானுக்குக் காரியத்தைக் கைகூடி வரப்பண்ணி, இந்த மனுஷனுக்கு முன்பாக எனக்கு இரக்கம் கிடைக்கப்பண்ணியருளும்" *(நெகே 1:11)* என்று பிரார்த்திக்கிறார்.

கர்த்தர் தம்முடைய மகாவல்லமையினாலும், பலத்த கரத்தினாலும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து ஏற்கெனவே மீட்டுக்கொண்டார். அதே போன்ற வல்லமை இப்போது மறுபடியும் வெளிப்படவேண்டுமென்று நெகேமியா பிரார்த்தனை செய்கிறார்.

நெகேமியா தன்னைப்பற்றிச் சொல்லும்போது, தான் ராஜாவுக்கு பானபாத்திரக்காரனாகயிருப்பதாக சொல்லுகிறார். ராஜாவுக்கு முன்பாக நெகேமியாவுக்கு இரக்கம் கிடைக்கவேண்டும். கர்த்தரே இந்தக் காரியத்தை செய்து கொடுக்க முடியும். நெகேமியா இதையும் கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறார். "இந்த மனுஷனுக்கு முன்பாக எனக்கு இரக்கம் கிடைக்கப்பண்ணியருளும்" *(நெகே 1:11)* என்று நெகேமியா கர்த்தரிடத்தில் பிரார்த்தனை செய்கிறார்.

நெகேமியாவுக்கு பெர்சியா தேசத்து ராஜாவின் இரக்கம் தேவைப்படவில்லை. அவருக்கு கர்த்தருடைய இரக்கமே தேவைப்படுகிறது. நெகேமியா ராஜாவின் இரக்கத்தைப்பற்றி தன்னுடைய ஜெபத்தில் சொன்னாலும், அவர் மெய்யாகவே கர்த்தருடைய இரக்கத்தையே நாடுகிறார். நமக்கு கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் கிடைக்கும்போது, மனுஷருடைய கண்களில் தயவும் கிடைக்கும்.

2 அதிகாரம்

எருசலேம் பாழாய்க் கிடக்கிற செய்தியையும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டு கிடக்கிற செய்தியையும் கேட்டு நெகேமியா மிகவும் வேதனைப்படுகிறார். அவர் கர்த்தரிடத்தில் அதற்காக மிகுந்த பாரத்தோடு ஜெபம்பண்ணுகிறார். யாக்கோபு கர்த்தரிடத்தில் போராடி ஜெபித்ததுபோல, நெகேமியாவும் கர்த்தரிடத்தில் போராடி ஜெபிக்கிறார். கர்த்தரிடத்தில் ஜெபிக்கும்போது நமக்கு மனுஷர்மீதும் வெற்றி கிடைக்கும்.

நெகேமியா கர்த்தரிடத்தில் ஜெபித்ததன் விளைவாக அவருக்கு ராஜாவின் கண்களிலே தயவு கிடைக்கிறது. எருசலேமின் வாசல்களை பழுதுபார்த்து கட்டுவதற்காக ராஜா நெகேமியாவுக்கு எருசலேமுக்குப்போக அனுமதி கொடுக்கிறான். அலங்கங்களைக் கட்டுவதற்குத் தேவையான பொருட்களையும் நெகேமியாவுக்கு கொடுக்க உத்தரவு பிறப்பிக்கிறான் (நெகே 2:1-8). இது நெகேமியாவுக்கு ஜெபத்தினால் கிடைத்த முதலாவது வெற்றியாகும்.

நெகேமியாவுக்கு சத்துருக்கள்மீதும் வெற்றி கிடைக்கிறது. பெர்சியா தேசத்திலிருந்து எருசலேம் வரையிலும் பிரயாணம்பண்ணும்போது, இராணுவ சேர்வைக்காரரும், குதிரைவீரரும் நெகேமியாவோடு அனுப்பப்படுகிறார்கள் (நெகே 2:9-11).

நெகேமியாவை பரியாசம்பண்ணி நிந்தித்து துன்பப்படுத்தின சத்துருக்கள்மீதும் அவருக்கு வெற்றி கிடைக்கிறது (நெகே 2:19,20).

எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவதற்கு ஏராளமான ஆட்கள் தேவைப்படுவார்கள். நெகேமியா எருசலேமின் அலங்கத்தைக் கட்டும் வேலையைப்பற்றி ஜனங்களிடம் சொல்லுகிறார். அப்போது அவர்கள் அந்த நல்ல வேலைக்கு தங்கள் கைகளை திடப்படுத்துகிறார்கள். நெகேமியாவுக்கு இந்த விஷயத்தில் ஜனங்கள்மீதும் வெற்றி கிடைக்கிறது (நெகே 2:12-16).

எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவதற்கு எல்லா ஜனங்களும் தங்கள் கைகளை திடப்படுத்துகிறார்கள். எருசலேமின் அலங்கத்தை அவர்கள் எல்லோருமாக சேர்ந்து கட்டுகிறார்கள். இந்த விஷயத்திலும் நெகேமியாவுக்கு ஜனங்கள்மீது வெற்றி கிடைக்கிறது (நெகே 2:17,18).

அர்தசஷ்டா ராஜா
நெகே 2:1-8

நெகே 2:1. அர்தசஷ்டா ராஜாவின் இருபதாம் வருஷம் நிசான் மாதத்திலே, திராட்சரசம் ராஜாவுக்கு முன்பாக வைத்திருக்கையில், நான் அதை எடுத்து அவருக்குக் கொடுத்தேன்; நான் முன் ஒருபோதும் அவர் சமுகத்தில் துக்கமாயிருந்ததில்லை.

நெகே 2:2. அப்பொழுது ராஜா என்னைப் பார்த்து: நீ துக்கமுகமாயிருக்கிறது என்ன? உனக்கு வியாதியில்லையே, இது மனதின் துக்கமே ஒழிய வேறொன்றும் அல்ல என்றார்; அப்பொழுது நான் மிகவும் பயந்து,

நெகே 2:3. ராஜாவை நோக்கி: ராஜா என்றைக்கும் வாழ்க; என் பிதாக்களின் கல்லறைகள் இருக்கும் ஸ்தலமாகிய நகரம் பாழானதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கும்போது, நான் துக்கமுகத்தோடு இராதிருப்பது எப்படி என்றேன்.

நெகே 2:4. அப்பொழுது ராஜா என்னைப் பார்த்து: நீ கேட்கிற காரியம் என்ன என்றார். அப்பொழுது நான்: பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம்பண்ணி,

நெகே 2:5. ராஜாவைப் பார்த்து: ராஜாவுக்குச் சித்தமாயிருந்து, அடியேனுக்கு உமது சமுகத்தில் தயை கிடைத்ததானால், என் பிதாக்களின் கல்லறைகளிருக்கும் பட்டணத்தைக் கட்டும்படி, யூதா தேசத்துக்கு நீர் என்னை அனுப்ப வேண்டிக்கொள்ளுகிறேன் என்றேன்.

நெகே 2:6. அப்பொழுது ராஜஸ்திரீயும் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். ராஜா என்னைப் பார்த்து: உன் பிரயாணம் எத்தனைநாள் செல்லும், நீ எப்பொழுது திரும்பிவருவாய் என்று கேட்டார். இவ்வளவு காலம்செல்லுமென்று நான் ராஜாவுக்குச் சொன்னபோது, என்னை அனுப்ப அவருக்குச் சித்தமாயிற்று.

நெகே 2:7. பின்னும் நான் ராஜாவைப் பார்த்து: ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால், நான் யூதாதேசத்துக்குப் போய்ச்சேருமட்டும், நதிக்கு அப்புறத்திலிருக்கிற தேசாதிபதிகள் என்னை வழிவிட்டனுப்பும்படிக்கு அவர்களுக்குக் கடிதங்கள் கொடுக்கும்படிக்கும்,

நெகே 2:8. தேவாலயத்துக்கு இருக்கிற அரணின் கதவு வேலைக்கும், நகர அலங்கத்தின் வேலைக்கும், நான் தங்கப்போகிற வீட்டின் வேலைக்கும் வேண்டிய மரங்களை ராஜாவின் வனத்துக் காவல்காரனாகிய ஆசாப் எனக்குக் கொடுக்கும்படிக்கும், அவனுக்கும் ஒரு கடிதம் கட்டளையிடப்படுவதாக என்றேன்; என்தேவனுடைய தயவுள்ள கரம் என்மேல் இருந்தபடியால் ராஜா அவைகளைஎனக்குக் கட்டளையிட்டார்.

எருசலேம் நகரமும் அதின் அலங்கங்களும் மறுபடியும் புதுப்பித்துக் கட்டப்படவேண்டுமென்று நெகேமியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். சுமார் மூன்று மாதங்கள் ஆகும் வரையிலும் நெகேமியா கர்த்தரிடத்தில் மாத்திரம் ஜெபம்பண்ணுகிறார். எருசலேமின் அலங்கங்கள் இடிந்து கிடக்கிற செய்தியை நெகேமியா கிஸ்லேயு மாதத்தில் கேள்விப்படுகிறார். இப்போது நிசான் மாதமாயிற்று. நான்கு மாதங்கள் கடந்துவிட்டது.

நெகேமியா நிசான் மாதத்திலே அர்த்சஷ்டா ராஜாவினிடத்தில், தான் எருசலேமுக்குபோக விரும்பும் காரியத்தை பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறார். ஒருவேளை இந்த நான்கு மாதங்களும் மழைகாலமாவோ அல்லது குளிர்காலமாவோ இருந்திருக்கலாம். அது பிரயாணத்திற்கு ஏற்ற காலமல்ல. நல்ல பிரயாணத்திற்கு சாதகமான காலம் வரும் வரையிலும் நெகேமியா காத்திருக்கிறார்.

அர்தசஷ்டா ராஜாவின் அனுமதியில்லாமல் அவரை யாரும் பார்க்க வரமுடியாது. ஒருவேளை நெகேமியாவுக்கு நிசான் மாதத்தில்தான் ராஜாவைப் பார்க்கும் அனுமதி கிடைத்திருக்கலாம்.

"யாராவது அழைப்பிக்கப்படாமல், உள்முற்றத்தில் ராஜாவினிடத்தில் பிரவேசித்தால், புருஷரானாலும் ஸ்திரீயானாலும் சரி, அவர்கள் பிழைக்கும்படிக்கு அவர்களுக்கு ராஜா பொற்செங்கோலை நீட்டினாலொழிய மற்றப்படி சாகவேண்டும் என்கிற ஒரு தவறாத சட்டமுண்டு, இது ராஜாவின் சகல ஊழியக்காரருக்கும், ராஜாவினுடைய நாடுகளிலுள்ள சகல ஜனங்களுக்கும் தெரியும்; நான் இந்த முப்பது நாளளவும் ராஜாவினிடத்தில் வரவழைப்பிக்கப்படவில்லை என்று சொல்லச்சொன்னாள்" (எஸ் 4:11).

நிசான் மாதத்திலே ராஜாவுக்கு திராட்சரசம் கொடுக்கும் வாய்ப்பு நெகேமியாவுக்கு கிடைக்கிறது. அர்தசஷ்டா ராஜாவின் இருபதாம் வருஷம் நிசான் மாதத்திலே, திராட்சரசம் ராஜாவுக்கு முன்பாக வைத்திருக்கையில், நெகேமியா அதை எடுத்து ராஜாவுக்குக் கொடுக்கிறார் (நெகே 2:1).

பெர்சிய யூதர்கள் அபிப் என்று அழைக்கப்பட்ட மாதத்தை நிசான் என்று அழைக்கிறார்கள். யூதருடைய நாள்காட்டியில் இது முதலாவது மாதமாகும்.

நெகேமியா அர்தசஷ்டா ராஜாவுக்கு பானபாத்திரக்காரனாயிருக்கிறார். பெர்சிய அரண்மனையில் இந்தப் பதவி மிகவும் உயர்ந்த பதவியாகும். ராஜாவுடைய சமுகத்தில் பானபாத்திரக்காரன் தினமும் வந்து ராஜாவுக்கு ஊழியம் செய்வான். ராஜா ஓய்வாக இருக்கும் நேரமெல்லாம் இவனும் அவரோடு கூடவே இருப்பான். மற்றவர்களுக்குக் கிடைக்காத அநேக சிலாக்கியங்கள் பானபாத்திரக்காரனுக்குக் கிடைக்கும். பானபாத்திரக்காரன் பொதுவாக அரவாணியாக இருப்பான். சாலொமோன் ராஜாவின் அரண்மனையிலும் அவனுக்குப் பணிவிடை செய்ய பானபாத்திரக்காரர்கள் இருந்தார்கள் (1இராஜா 10:5; 2நாளா 9:4).

ராஜாவுக்கு முன்பாக யாரும் துக்கமுகமாய் இருக்க முடியாது. நெகேமியா இதற்கு முன்பு ஒருபோதும் ராஜாவின் சமுகத்தில் துக்கமுகமாயிருந்ததில்லை. ராஜா கேட்கும்போது நெகேமியா அவருக்கு திராட்சரசத்தை எடுத்து கொடுக்கவேண்டும். அப்போது நெகேமியாவின் முகம் சந்தோஷமான முகமாகயிருக்கவேண்டும்.

ராஜா நெகேமியாவின் முகத்தைப் பார்ப்பார். நெகேமியாவின் முகம் துக்கமாயிருந்தால், அது ராஜாவுக்கு பிடிக்காது. அவருக்கு கோபம் வந்துவிடும். ஆனால் இப்போது நெகேமியா ராஜாவின் சமுகத்தில் துக்கமுகமாயிருக்கிறார்.

அப்பொழுது ராஜா நெகேமியாவைப் பார்த்து: "நீ துக்கமுகமாயிருக்கிறது என்ன? உனக்கு வியாதியில்லையே, இது மனதின் துக்கமே ஒழிய வேறொன்றும் அல்ல" என்று சொல்லுகிறான் (நெகே 2:2).

ராஜாவின் வார்த்தைகளைக் கேட்டபோது நெகேமியாவுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று. நெகேமியாவின் துக்கமுகம் ராஜாவுக்கு தெரிந்துவிடுகிறது. ஆகையினால் நெகேமியா ராஜாவுக்கு முன்பாக மிகவும் பயப்படுகிறார்.

ராஜாவுடைய சமுகத்திற்கு முன்பாக நெகேமியா இதற்கு முன்பு துக்க முகமாக இருந்ததில்லை. நெகேமியா தன்னுடைய துக்கத்தை வெளிப்படுத்தாமல் மறைத்துப் பார்த்தார். ஆனாலும் ராஜாவுக்கு நெகேமியாவின் துக்கம் தெரிந்து விட்டது.

பெர்சிய ராஜாக்களுக்கு முன்பாக வேலைக்காரர்கள் எப்போதும் சந்தோஷமாக இருக்க வேண்டும். ராஜாவுக்கு முன்பாகத் துக்கமுகமாக இருப்பது மிகப்பெரிய குற்றம். இதற்காக மரண தண்டனை கூட கொடுக்கப்படலாம். ராஜாவுக்குத் தன்னுடைய துக்கம் தெரிந்துவிட்டபடியினால் தனக்கு என்ன தண்டனை கிடைக்குமோ என்று நெகேமியா மிகவும் பயப்படுகிறார். ஆனால் ராஜாவோ நெகேமியாவைத் தண்டிப்பதற்குப் பதிலாக அவரை ஆசீர்வதிக்கிறான் (நெகே 2:2-8).

நல்லவர்கள் தங்கள் சாதுரியமான வார்த்தைகளினாலும், பிறரை துக்கப்படுத்தாத, கோபப்படுத்தாத சந்தோஷமான வார்த்தைகளினாலும், தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லுவார்கள். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும், நாம் கோபமான வார்த்தைகளைப் பேசாமல், சமாதானமான வார்த்தைகளையும், சந்தோஷமான வார்த்தைகளையும் பேசக்கற்றுக்கொள்ள வேண்டும்.

"அழ ஒரு காலமுண்டு, நகைக்க ஒரு காலமுண்டு; புலம்ப ஒரு காலமுண்டு, நடனம்பண்ண ஒரு காலமுண்டு" (பிர 3:4).

தன்னுடைய முகம் துக்கமாயிருப்பதற்கான காரணம் நெகேமியாவுக்கு தெரியும். நெகேமியாவால் உண்மையை மறைக்க முடியவில்லை. அப்பொழுது நெகேமியா ராஜாவை நோக்கி, "ராஜா என்றைக்கும் வாழ்க; என் பிதாக்களின் கல்லறைகள் இருக்கும் ஸ்தலமாகிய நகரம் பாழானதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கும்போது, நான் துக்கமுகத்தோடு இராதிருப்பது எப்படி" (நெகே 2:3) என்று சொல்லுகிறார்.

எருசலேம் நகரம் பாழாய்க் கிடக்கிறது. அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்படுகிறது. இதுவே நெகேமியாவின் துக்க முகத்திற்கு காரணம். ராஜா நெகேமியாவின் துக்க முகத்தைக் குறித்து விசாரிக்கும்போது, நெகேமியா உண்மையைச் சொல்லாமல் அதை மூடி மறைக்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, நெகேமியா ராஜாவுக்கு தன்னுடைய துக்கமுகத்திற்கான காரணத்தை சொல்லுகிறார்.

நெகேமியா ஒருவேளை வியாதியாயிருப்பாரோ என்னும் சந்தேகம் ராஜாவுக்கு வந்திருக்கிறது. ஆனாலும், "இது மனதின் துக்கமே ஒழிய வேறொன்றும் அல்ல" என்று ராஜா சமாதான வார்த்தைகளை சொல்லுகிறார். ஆனால் நெகேமியாவோ உண்மையை மறைக்காமல், "எருசலேம் நகரம் பாழாய்க் கிடக்கும்போது, அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டு கிடக்கும்போது, நான் துக்கமுகத்தோடு இராதிருப்பது எப்படி" என்று கேட்கிறார். இதுவே நெகேமியாவின் துக்கமுகத்திற்கு உண்மையான காரணம்.

அர்தசஷ்டா ராஜா நெகேமியாவின்மீது பிரியமாயிருக்கிறார். நெகேமியாவின் துக்கமுகம் சந்தோஷமாய் மாறவேண்டும் என்பது ராஜாவின் விருப்பம். ஆகையினால் ராஜா நெகேமியாவைப் பார்த்து, "நீ கேட்கிற காரியம் என்ன" என்று கேட்கிறான். ஒருவேளை அர்தசஷ்டா ராஜா யூதமார்க்கத்தை நேசிக்கிறவனாயிருக்கலாம். இந்த ராஜாதான் எஸ்றாவை எருசலேமுக்குப் போகுமாறு அனுப்பியவன். யூதாதேசத்திலே ஆவிக்குரிய காரியங்களை சீர்படுத்துவதற்காக அர்தசஷ்டா ராஜா எஸ்றாவை எருசலேமுக்கு அனுப்பினான்.

ராஜா இப்போது ஒரு தேசாதிபதியாகயிருக்கிறான். எருசலேமின் அலங்கங்களை மறுபடியும் எடுப்பித்து கட்டுவதற்காக, அவன் நெகேமியாவை அங்கே அனுப்பப்போகிறான். எருசலேமுக்கு நன்மை செய்யவேண்டும் என்னும் விருப்பம் அர்தசஷ்டா ராஜாவின் மனதிலிருக்கிறது. ஆகையினால் ராஜா நெகேமியாவைப் பார்த்து, "நீ கேட்கிற காரியம் என்ன" என்று கேட்கிறான்.

ராஜா நெகேமியாவிடம் அவனுடைய தேவையைக் குறித்து கேட்கிறான். ராஜாவிடம் பேசுவதற்கு முன்பாக நெகேமியா கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறான். தன்னுடைய விண்ணப்பம் ராஜாவின் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம்பண்ணுகிறான். இதுபோன்ற ஜெபம் இங்கு இரண்டாம் முறையாகக் கூறப்பட்டிருக்கிறது. *(நெகே 2:4; நெகே 1:11).*

ராஜாவின் கேள்விக்கு நெகேமியா உடனே பதில் சொல்லவில்லை. ராஜாவுக்கு பதில் சொல்லும் முன்பாக, நெகேமியா பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம்பண்ணுகிறார். ராஜாவிடத்தில் பேசுவதற்கு கர்த்தர் நெகேமியாவுக்கு ஞானமுள்ள வார்த்தைகளைத் தரவேண்டும். நெகேமியாவின் விண்ணப்பங்களை அங்கீகரித்து உதவி செய்வதற்கு, கர்த்தர் ராஜாவுக்கு கிருபையுள்ள இருதயத்தை தரவேண்டும். இந்த இரண்டு காரியங்களையும் கர்த்தரால் மாத்திரமே கொடுக்க முடியும். ஆகையினால் நெகேமியா பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம்பண்ணி, அவருடைய உதவியையும் ஒத்தாசையையும் நாடுகிறார். நெகேமியாவுக்கு ஞானமுள்ள வார்த்தைகள் தேவைப்படுகிறது. அவருக்கு மனுஷர் கண்களிலே தயவும் தேவைப்படுகிறது.

நெகேமியா ஜெபம் பண்ணுகிற மனுஷன். *(நெகே 1:5-11; நெகே 2:4; நெகே 4:4-5; நெகே 5:19; நெகே 6:9,14; நெகே 13:14,22,29,31).* ராஜாவுடைய சமுகத்தில் தனக்குச் சகாயம் கிடைக்க வேண்டுமென்று நெகேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார். யூதா தேசத்திற்குச் சென்று, அங்கு பட்டணத்தைக் கட்ட ராஜா தன்னை அனுப்ப வேண்டுமென்று *(நெகே 2:5).* நெகேமியா ராஜாவிடம் விண்ணப்பம் பண்ணுகிறார். நெகேமியாவின் விண்ணப்பத்தைக் கர்த்தரும் அங்கிகரிக்கிறார். ராஜாவும் அங்கிகரிக்கிறான். *(நெகே 2:6-8).*

நெகேமியா அர்தசஷ்டா ராஜாவைப் பார்த்து, "ராஜாவுக்குச் சித்தமாயிருந்து, அடியேனுக்கு உமது சமுகத்தில் தயை கிடைத்ததானால், என் பிதாக்களின் கல்லறைகளிலிருக்கும் பட்டணத்தைக் கட்டும்படி, யூதா தேசத்துக்கு நீர் என்னை அனுப்ப வேண்டிக்கொள்ளுகிறேன்" *(நெகே 2:5)* என்று கேட்கிறார்.

நெகேமியா பின்னும் ராஜாவைப் பார்த்து, "ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால், நான் யூதாதேசத்துக்குப்போய்ச்சேருமட்டும், நதிக்கு அப்புறத்திலிருக்கிற தேசாதிபதிகள் என்னை வழிவிட்டனுப்பும்படிக்கு அவர்களுக்குக் கடிதங்கள் கொடுக்கும்படிக்கும், தேவாலயத்துக்கு இருக்கிற அரணின் கதவு வேலைக்கும், நகர அலங்கத்தின் வேலைக்கும், நான் தங்கப்போகிற வீட்டின் வேலைக்கும் வேண்டிய மரங்களை ராஜாவின் வனத்துக் காவலாளனாகிய ஆசாப் எனக்குக் கொடுக்கும்படிக்கும், அவனுக்கும் ஒரு கடிதம் கட்டளையிடப்படுவதாக" (நெகே 2:7,8) என்றும் கேட்கிறார்.

பெர்சியா தேசம் மகாவிஸ்தாரமாய் விரிந்து பரவியிருக்கிறது. அர்தசஷ்டா ராஜாவின்கீழ் ஏராளமான தேசாதிபதிகள் இருக்கிறார்கள். நெகேமியா எருசலேமிலே அலங்கத்தைக் கட்டுவதற்கும், அதன் வாசல்களை செப்பனிடுவதற்கும் ஏராளமான பொருட்கள் தேவைப்படுகிறது. அந்த பகுதியிலுள்ள தேசாதிபதிகள் நெகேமியாவுக்கு ஆதரவாயிருக்கவேண்டும்.

நெகேமியா செருபாபேலோடோ (எஸ்றா 2:1-70), எஸ்றாவோடோ (எஸ்றா 8) எருசலேமிற்குத் திரும்பிப் போகவில்லை. செருபாபேலும், எஸ்றாவும் எருசலேமிற்குப் போய், 20 வருஷங்களுக்குப் பின்பு, நெகேமியா அங்கு போகிறார் (நெகே 1:1; நெகே 2:1).

பெர்சிய தேசத்தில் ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்திற்குப் பிரயாணம் பண்ணும்போது, ராஜாவின் முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும். ராஜாவின் அனுமதியைப் பெற்றால் அந்த நபர் எந்த மாகாணத்திற்குப் பிரயாணம் பண்ணினாலும், அந்த மாகாணத்தின் தேசாதிபதி அந்த நபருக்குப் பாதுகாப்பு கொடுப்பார்.

நெகேமியா இவற்றையெல்லாம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று விரும்பி, ராஜாவிடம் பணிவோடு கேட்கிறார். தேவனுடைய தயவுள்ள கரம் நெகேமியாவின் மேல் இருக்கிறது. ஆகையினால் அர்தசஷ்டா ராஜா அவைகளை நெகேமியாவுக்கு கட்டளையிடுகிறார். நெகேமியா கேட்டுக்கொண்ட காரியங்களெல்லாம் அவருக்கு கொடுக்கப்படுகிறது.

அர்தசஷ்டா ராஜா நெகேமியாவின்மேல் பிரியமாயிருக்கிறார். நெகேமியா ராஜாவின் பானபாத்திரக்காரன். ராஜாவுக்கு நெகேமியாவின் சேவை தேவைப்படுகிறது. நெகேமியா ராஜாவுக்கு திராட்சரசத்தை எடுத்து கொடுக்கும்போதும், தன்னுடைய விண்ணப்பங்களை ராஜாவினிடத்தில் சொல்லும்போதும், ராஜஸ்திரீயும், ராஜாவின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறாள்.

அப்பொழுது ராஜா நெகேமியாவைப் பார்த்து, "உன் பிரயாணம் எத்தனை நாள் செல்லும், நீ எப்போது திரும்பி வருவாய்" என்று கேட்கிறான். நெகேமியாவை எருசலேமுக்கு நிரந்தரமாய் அனுப்பி வைக்க ராஜாவுக்கு இஷ்டமில்லை. நெகேமியாவின் சேவையை இழக்க ராஜா ஆயத்தமாயில்லை. நெகேமியா ராஜாவினிடத்தில், தான் திரும்பி வருவதற்கு இவ்வளவு காலம் செல்லும் என்று சொல்லுகிறார். அதைக் கேட்டபோது ராஜாவுக்கு நெகேமியாவை அனுப்ப சித்தமாயிற்று. நெகேமியா ஒரு நல்ல வேலையாக எருசலேமுக்குப் போக விரும்புகிறார். அந்த நல்ல வேலையில் ராஜாவின் உதவியும் நெகேமியாவுக்கு கிடைக்கிறது.

நெகேமியா ராஜாவினிடத்தில் பேசுவதற்கு முன்பாக, பரலோகத்தின் தேவனிடத்தில் பேசினார். இதினால் நெகேமியாவுக்கு ராஜாவின்மீது வெற்றி கிடைத்திருக்கிறது. இது ஜெபத்தினால் கிடைத்த வெற்றி.

பெர்சியாவின் ராஜாவுக்கு பக்கத்தில் ராஜஸ்திரீயும் உட்கார்ந்திருக்கிறாள். பொதுவாக பெர்சியா தேசத்து அரமனையில், ராஜஸ்திரீ கூட, ராஜாவின் அனுமதியில்லாமல் அவரைப் பார்க்க வரமுடியாது. இப்போது ராஜஸ்திரீ ராஜாவுக்கு அருகில் உட்கார்ந்திருப்பது, நெகேமியாவுக்கு அநுகூலமாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு அநுகூலமான சூழ்நிலைகளையும், காலங்களையும் ஏற்படுத்தி தருகிறார்

"ஏழாம் நாளிலே ராஜா திராட்சரசத்தினால் களிப்பாயிருக்கும்போது, மகா ரூபவதியாயிருந்த ராஜஸ்திரீயாகிய வஸ்தியின் சௌந்தரியத்தை ஜனங்களுக்கும் பிரபுக்களுக்கும் காண்பிக்கும்படி, ராஜகிரீடம் தரிக்கப்பட்டவளாக, அவளை ராஜாவுக்கு முன்பாக அழைத்துவரவேண்டுமென்று, ராஜாவாகிய அகாஸ்வேருவின் சமுகத்தில் சேவிக்கிற மெகுமான், பிஸ்தா, அற்போனா, பிக்தா, அபக்தா, சேதார், கர்காஸ் என்னும் ஏழு பிரதானிகளுக்கும் கட்டளையிட்டான்" (எஸ் 1:10,11).

கர்த்தருடைய கிருபையும், வல்லமையும் நெகேமியாவுக்கு கிடைத்திருக்கிறது. தேவனுடைய தயவுள்ள கரம் நெகேமியாவின்மேல் தங்கியிருப்பதினால், அவருடைய விண்ணப்பங்களை ராஜா அங்கீகரிக்கிறான். நாம் எந்த ஒரு காரியத்தையும் செய்வதற்கு முன்பாக, ஜெபம்பண்ணிவிட்டு செய்ய ஆரம்பிக்க வேண்டும். அப்போதுதான் கர்த்தருடைய தயவுள்ள கரம் நம்மேலும் இருக்கும்.

எருசலேமில் நெகேமியா
நெகே 2:9-20

நெகே 2:9. அப்படியே நான் நதிக்கு அப்புறத்திலிருக்கிற தேசாபதிகளிடத்துக்கு வந்து, ராஜாவின் கடிதங்களை அவர்களுக்குக் கொடுத்தேன்; ராஜா என்னோடேகூட இராணுவச் சேர்வைக்காரரையும், குதிரைவீரரையும் அனுப்பியிருந்தார்.

நெகே 2:10. இதை ஓரானியனான சன்பல்லாத்தும், அம்மோனியனான தொபியா என்னும் ஊழியக்காரனும் கேட்டபோது, இஸ்ரவேல் புத்திரரின் நன்மையை விசாரிக்க ஒருவன் வந்தான் என்பது அவர்களுக்கு மிகவும் விசனமாயிருந்தது.

நெகே 2:11. நான் எருசலேமுக்கு வந்து, அங்கே மூன்றுநாள் இருந்தபின்பு,

நெகே 2:12. நான் சில மனுஷரைக் கூட்டிக்கொண்டு, ராத்திரியில் எழுந்து நகர சோதனை செய்தேன்; ஆனாலும் எருசலேமுக்காகச் செய்யும்படி என் தேவன் என் மனதிலே வைத்ததை நான் ஒருவருக்கும் அறிவிக்கவில்லை; நான் ஏறிப்போன மிருகமேயல்லாமல் வேறொரு மிருகமும் என்னோடிருந்ததில்லை.

நெகே 2:13. நான் அன்று ராத்திரி பள்ளத்தாக்கின் வாசல்வழியாய்ப் புறப்பட்டு, வலுசர்ப்பத் துரவைக் கடந்து, குப்பைமேட்டு வாசலுக்கு வந்து, எருசலேமில் இடிந்துபோன அலங்கத்தையும், அக்கினியால் சுட்டெரிக்கப்பட்ட அதின் வாசல்களையும் பார்வையிட்டேன்.

நெகே 2:14. அவ்விடத்தை விட்டு ஊருணி வாசலண்டைக்கும், ராஜாவின் குளத்தண்டைக்கும் போனேன்; நான் ஏறியிருந்த மிருகம் அங்கே நடந்துபோகிறதற்கு வழியில்லாதிருந்தது.

நெகே 2:15. அன்று ராத்திரியிலேயே நான் ஆற்றோரமாய் போய், அலங்கத்தைப் பார்வையிட்டுத் திரும்பி, பள்ளத்தாக்கின் வாசல்வழியாய் வந்துவிட்டேன்.

நெகே 2:16. நான் போனதும், நான் செய்ததும் அதிகாரிகள் ஒருவருக்கும் தெரியாது; அதுவரையிலும் நான் யூதருக்காகிலும், ஆசாரியர்கள் பெரியவர்கள் அதிகாரிகளுக்காகிலும், வேலைசெய்கிற மற்றவர்களுக்காகிலும் ஒன்றும் அறிவிக்கவில்லை.

நெகே 2:17. பின்பு நான் அவர்களை நோக்கி: எருசலேம் பாழாயிருக்கிறதையும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறதையும், நாம் இருக்கிற சிறுமையையும் பார்க்கிறீர்களே; நாம் இனி நிந்தைக்குள்ளாயிராதபடிக்கு, எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி,

நெகே 2:18. என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறதையும், ராஜா என்னோடே சொன்ன வார்த்தைகளையும் அவர்களுக்கு அறிவித்தேன்; அப்பொழுது அவர்கள்: எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்.

நெகே 2:19. ஓரோனியனான சன்பல்லாத்தும், அம்மோனியனான தொபியா என்னும் ஊழியக்காரனும் அரபியனான கேஷேமும் இதைக் கேட்டபோது, எங்களைப் பரியாசம்பண்ணி, எங்களை நிந்தித்து: நீங்கள் செய்கிற இந்தக் காரியம் என்ன? நீங்கள் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணப்போகிறீர்களோ என்றார்கள்.

நெகே 2:20. அதற்கு நான் மறுமொழியாக: பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியத்தைக் கைகூடிவரப்பண்ணுவார்; அவருடைய ஊழியக்காரராகிய நாங்கள் எழுந்து கட்டுவோம்; உங்களுக்கோவென்றால் எருசலேமிலே பங்குமில்லை பாத்தியமுமில்லை; உங்கள் பேர் விளங்க ஒன்றும் இல்லையென்று அவர்களுடனே சொன்னேன்.

அர்தசஷ்டா ராஜா நெகேமியாவை எருசலேமுக்கு தனியாக அனுப்பவில்லை. நெகேமியாவோடுகூட எருசலேமுக்குப்போக ராஜா இராணுவ சேர்வைக்காரரையும் குதிரை வீரரையும் அனுப்புகிறான். இவர்கள் நெகேமியாவின் பாதுகாப்புக்காக அனுப்பப்படுகிறார்கள். அர்தசஷ்டா ராஜா நெகேமியாவை கனம்பண்ணுவதினால், அவருக்கு இந்த சலுகைகளும் சிலாக்கியங்களும் கிடைத்திருக்கிறது. ராஜாவின் வேலைக்காரர்களும் நெகேமியாவுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுப்பார்கள்.

ராஜா அனுப்பின பரிவாரங்களோடு, நெகேமியா நதிக்கு அப்புறத்திலிருக்கிற தேசாதிபதிகளிடத்தில் வந்து, ராஜாவின் கடிதங்களை அவர்களுக்கு கொடுக்கிறார் (நெகே 2:9).

நெகேமியா எருசலேமுக்கு வரும்போது, அவரை இரண்டுவிதமான ஜனங்கள் சந்திக்கிறார்கள். ஒரு பிரிவார் எருசலேமிலிருக்கிற யூதர்களும், அவர்களுடைய சிநேகிதர்களும் ஆவார்கள். மற்றொரு பிரிவார் யூதர்களுக்கு தீங்கு செய்ய விரும்புகிற சத்துருக்கள். நெகேமியா எருசலேமுக்கு வரும்போது இவ்விரண்டு பிரிவான ஜனங்களையும் சந்திக்கிறார்.

நெகேமியா எருசலேமுக்கு வந்து மூன்றநாள் தங்கியிருக்கிறார். அவர் அங்கே வந்திருப்பது அநேகருக்கு தெரியாது. நெகேமியாவை வரவேற்க யூதாதேசத்தின் அதிபதியோ அல்லது யூதர்களுடைய மூப்பர்களோ அல்லது தேசத்தில் பிரதானமானவர்களோ யாரும் வரவில்லை. நெகேமியாவுக்கு வரவேற்பு கொடுக்கப்படவில்லை. நெகேமியாவும் தன்னுடைய வருகையை விளம்பரம்பண்ணாமல், எருசலேமிலே மூன்றுநாள் தங்கியிருக்கிறார்.

எருசலேமிலுள்ள ஜனங்கள் நெகேமியாவின் வருகையைக் கவனிக்காவிட்டாலும், நெகேமியாவும் அவரோடு கூடயிருக்கிற மனுஷரும் எருசலேமை நன்றாய்க் கவனிக்கிறார்கள். நகரத்தை சுற்றி வந்து ஆராய்ந்து பார்க்கிறார்கள்.

நெகேமியா சில மனுஷரைக் கூட்டிக்கொண்டு, ராத்திரியில் எழுந்து நகர சோதனை செய்கிறார்; ஆனாலும் எருசலேமுக்காகச் செய்யும்படி தேவன் நெகேமியாவின் மனதிலே வைத்ததை அவர் ஒருவருக்கும் அறிவிக்கவில்லை; நெகேமியா ஏறிப்போன மிருகமேயல்லாமல் வேறொரு மிருகமும் அவரோடிருக்கவில்லை (நெகே 2:12).

நெகேமியா இரவுவேளையிலே எருசலேம் நகரத்தைப் பார்வையிடுகிறார். ஒருவேளை அப்போது நிலா வெளிச்சம் அதிகமாயிருந்திருக்கலாம். நெகேமியா அன்று ராத்திரி பள்ளத்தாக்கின் வாசல்வழியாய்ப் புறப்பட்டு, வலுசர்ப்பத் துரவைக் கடந்து, குப்பைமேட்டு வாசலுக்கு வந்து, எருசலேமில் இடிந்துபோன அலங்கத்தையும், அக்கினியால் சுட்டெரிக்கப்பட்ட அதின் வாசல்களையும் பார்வையிடுகிறார் (நெகே 2:13).

எருசலேமின் அலங்கங்களை மறுபடியும் புதுப்பித்து கட்டுவதற்கு என்னென்ன வேலைகளை செய்யவேண்டும் என்றும், அதை எப்படி செய்யவேண்டும் என்றும் நெகேமியா திட்டம்பண்ணுகிறார். பழைய அஸ்திபாரம் வலுவாயிருக்கிறதா என்பதை சோதித்துப் பார்க்கிறார். அலங்கங்கள் இடிந்து கிடந்தாலும், அந்த இடிபாடுகளில் கிடக்கிற பழைய பொருட்களில் சிலவற்றை மறுபடியும் பயன்படுத்த முடியுமா என்று நெகேமியா சோதித்துப் பார்க்கிறார்.

சபையின் அலங்கங்களை கட்டியெழுப்ப விரும்புகிறவர்கள். முதலாவதாக அந்த அலங்கங்களில் ஏற்பட்டிருக்கிற சேதாரங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். சீர்திருத்தம் பண்ணுவதற்கு முன்பாக குழப்பங்களை ஆராய்ந்து பார்த்து, எதை திருத்தவேண்டும் என்று தீர்மானம்பண்ணவேண்டும். எதில் மாற்றம் தேவைப்படுகிறது என்பதையும், எதை அப்படியே விட்டுவிடலாம் என்பதையும் ஆராந்து பார்க்கவேண்டும்.

நெகேமியா அன்று ராத்திரி பள்ளத்தாக்கின் வாசல்வழியாய்ப் புறப்பட்டு, வலுசர்ப்பத் துரவைக் கடந்து, குப்பைமேட்டு வாசலுக்கு வந்து, எருசலேமில் இடிந்துபோன அலங்கத்தையும், அக்கினியால் சுட்டெரிக்கப்பட்ட அதின் வாசல்களையும் பார்வையிடுகிறார் (நெகே 2:13).

நெகேமியா அவ்விடத்தை விட்டு ஊருணி வாசலண்டைக்கும், ராஜாவின் குளத்தண்டைக்கும் போகிறார்; அவர் ஏறியிருந்த மிருகம் அங்கே நடந்துபோகிறதற்கு வழியில்லாதிருக்கிறது (நெகே 2:14).

அன்று ராத்திரியிலேயே நெகேமியா ஆற்றோரமாய் போய், அலங்கத்தைப் பார்வையிட்டுத் திரும்பி, பள்ளத்தாக்கின் வாசல்வழியாய் வந்துவிடுகிறார் (நெகே 2:15).

எருசலேமில் பன்னிரண்டு வாசல்கள் இருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு:

1. பள்ளத்தாக்கின் வாசல் (நெகே 2:13; நெகே 3:13)
2. ஊருணி வாசல் (நெகே 2:14; நெகே 3:15; நெகே 12:37)
3. ஆட்டு வாசல் (நெகே 3:1; நெகே 12:39)
4. மீன் வாசல் (நெகே 3:3; நெகே 12:39)
5. பழைய வாசல் (நெகே 3:6; நெகே 12:39)
6. குப்பைமேட்டு வாசல் (நெகே 2:13; நெகே 3:14; நெகே 12:31)
7. தண்ணீர் வாசல் (நெகே 3:25,26)
8. குதிரை வாசல் (நெகே 3:28)
9. கிழக்கு வாசல் (நெகே 3:29)
10. மிப்காத் வாசல் (நெகே 3:31)
11. எப்பிராயீம் வாசல் (நெகே 8:16; நெகே 12:39)
12. காவல்வீட்டு வாசல் (நெகே 12:39)

நெகேமியா எந்தெந்த அலங்கங்களையெல்லாம் பார்வையிட்டார் என்பதில் வரலாற்று ஆசிரியர்களிடையே கருத்து வேறுபாடு இருக்கிறது. கிழக்கு வாசலில் உள்ள பெதஸ்தா குளத்திலிருந்து நெகேமியா பிரயாணம் செய்திருக்க வேண்டும். அங்கிருந்து வடக்கு முகமாகவும், மேற்கு முகமாகவும், தெற்கு முகமாகவும் பிரயாணம் செய்து, இறுதியில் கிழக்கு முகமாக வந்து சீலோவாம் குளத்திற்கு வந்து சேர்ந்திருக்க வேண்டும். (நெகே 2:12-16) என்பது பொதுவான கருத்து.

யூதருடைய ஆசாரியர்கள், பெரியவர்கள், அதிகாரிகள் ஆகியோரைப் பற்றி இந்தப் புஸ்தகத்தில் குறிப்புக்கள் உள்ளன. செருபாபேல், எஸ்றா ஆகியோர் எருசலேமுக்குத் திரும்பி வந்த பின்பு, அவர்கள் யூத ஜனத்தாரின் சமுதாய அமைப்பை ஒழுங்கு படுத்தியிருக்கிறார்கள். இவர்களுக்கு முன்பு பெரியவர்கள், அதிகாரிகள் ஆகியோர் யூதர் மத்தியிலே இல்லை.

நெகேமியா இரவுவேளையிலே எருசலேமின் அலங்கத்தை சுற்றிப்பார்க்கிறார். அவர் போனதையும், செய்ததையும் யாருக்கும் அறிவிக்கவில்லை. ஆகையினால் நெகேமியா போனதும், அவர் செய்ததும் அதிகாரிகள் ஒருவருக்கும் தெரியாது; அதுவரையிலும் நெகேமியா யூதருக்காகிலும், ஆசாரியர்கள் பெரியவர்கள் அதிகாரிகளுக்காகிலும், வேலைசெய்கிற மற்றவர்களுக்காகிலும் ஒன்றும் அறிவிக்கவில்லை (நெகே 2:16).

நெகேமியா வெளிவேஷத்திற்காகவோ அல்லது சுயவிளம்பரத்திற்காகவோ ஊழியம் செய்ய வரவில்லை. அவர் கர்த்தருடைய உண்மையான ஊழியக்காரர். எருசலேமின் அலங்கங்களை புதுப்பித்துக் கட்டவேண்டும் என்பதும், எருசலேம் நகரம் மகிமையுள்ள நகரமாயிருக்கவேண்டும் என்பதுமே நெகேமியாவின் விருப்பம். தனக்கு பெயரும் புகழும், பெருமையும் உண்டாகவேண்டும் என்பது நெகேமியாவின் விருப்பமல்ல. கர்த்தர் நெகேமியாவின் மனதிலே ஒரு சில காரியங்களை வைத்திருக்கிறார். அதை அவர் ஒருவருக்கும் அறிவிக்கவில்லை (நெகே 2:12).

நெகேமியா நகரத்தைச் சுற்றி பார்த்த பின்பு தேவன் தன்னுடைய மனதில் வைத்ததை தன்னுடைய அதிகாரிகளுக்கு சொல்லுகிறார். "எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள்" என்றும், நெகேமியா அவர்களுக்கு சொல்லுகிறார்.

நெகேமியா அவர்களை நோக்கி: "எருசலேம் பாழாயிருக்கிறதையும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறதையும், நாம் இருக்கிற சிறுமையையும் பார்க்கிறீர்களே; நாம் இனி நிந்தைக்குள்ளாயிராதபடிக்கு, எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள்" (நெகே 2:17) என்று சொல்லுகிறார்.

எருசலேமிலுள்ள அலங்கத்தைக் கட்டும் வேலையில், நெகேமியா தன்னுடைய அதிகாரிகள் எல்லோரையும் பயன்படுத்த விரும்புகிறார். நெகேமியா அவர்களுக்கு அதிகாரியாகயிருந்தாலும், ராஜாவின் நிருபம் நெகேமியாவுக்கு கொடுக்கப்பட்டிருந்தாலும், அவர் தன்னுடைய அதிகார தோரணையில் அவர்களிடத்தில் பேசவில்லை. அவர்களை தன்னுடைய சிநேகிதராகவும், சகோதரராகவும் பாவித்து அவர்களோடு அன்பாகப் பேசுகிறார். எருசலேமின் அலங்கத்தை தன்னோடுகூட கட்ட வருமாறு நெகேமியா அவர்களை அன்போடு அழைக்கிறார்.

நெகேமியா அவர்களை நோக்கி, "எருசலேம் பாழாயிருக்கிறதையும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறதையும், நாம் இருக்கிற சிறுமையையும் பார்க்கிறீர்களே; நாம் இனி நிந்தைக்குள்ளாயிராதபடிக்கு, எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள்" (நெகே 2:17) என்று சொல்லுகிறார்.

நெகேமியா அவர்களை உற்சாகப்படுத்தும் வண்ணமாக தேவனுடைய கரம், தன்மேல் நன்மையாகயிருக்கிறதையும், ராஜா தன்னோடே சொன்ன வார்த்தையையும் அவர்களுக்கு அறிவிக்கிறார். அப்பொழுது அவர்கள், "எழுந்து கட்டுவோம் வாருங்கள்" (நெகே 2:18) என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்துகிறார்கள்.

எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவது நெகேமியாவின் திட்டமல்ல. அது கர்த்தருடைய திட்டம். தன்னுடைய பெருமைக்காகவோ அல்லது தன்னுடைய நாமபிரஸ்தாபத்திற்காகவோ நெகேமியா எருசலேமின் அலங்கத்தைக் கட்டவில்லை. கர்த்தருடைய நாமமகிமைக்காகவே அவர் அலங்கத்தைக் கட்டுகிறார். இதனால் தேவனுடைய கரம் நெகேமியாவின்மேல் நன்மையாயிருக்கிறது. அலங்கத்தைக் கட்டவேண்டும் என்னும் யோசனையை கர்த்தரே நெகேமியாவின் இருதயத்தில் கொடுத்திருக்கிறார்.

கர்த்தருடையகரம் நெகேமியாவின்மேல் நன்மையாகயிருப்பதினால், அர்தசஷ்டா ராஜாவும், நெகேமியாவோடே அலங்கத்தைக் கட்டுவதற்கு சாதகமான வார்த்தைகளை சொல்லியிருக்கிறான். நெகேமியா ராஜாவினிடத்தில் எருசலேமின் பாழடைந்த நிலமையைப்பற்றி சொன்னவுடனேயே, ராஜா எருசலேமுக்குப்போக நெகேமியாவுக்கு அனுமதி கொடுக்கிறான். வாயில்களை செப்பனிடத்திற்கு தேவையான மரங்களையும் நெகேமியாவுக்கு கொடுக்குமாறு கட்டளையிடுகிறான்.

நெகேமியாவின் வார்த்தைகளைக் கேட்டு, யூதாவிலுள்ள மனுஷர் எல்லோரும், அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டு கிடக்கிற வாசல்களை செப்பனிடவேண்டும் என்று தீர்மானம்பண்ணுகிறார்கள். "எழுந்து கட்டுவோம் வாருங்கள்" என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்கு தங்கள் கைகளைத் திடப்படுத்துகிறார்கள். நல்ல வேலையை செய்வதற்கு போதுமான கைகள் தேவைப்படுகிறது. ஆனாலும் அந்தக் கைகள் எல்லாவற்றையும் இயக்குவதற்கும், அவற்றை தலைமை தாங்கி நடத்துவதற்கும், ஒரு நல்ல தலை போதுமானது. நெகேமியா அவர்கள் எல்லோருக்கும் ஒரு நல்ல தலைவராயிருக்கிறார்.

நெகேமியா எருசலேமுக்கு வந்தபோது யூதர்களும் அவர்களுடைய சிநேகிதர்களும் அவருக்கு ஆதரவாயிருக்கிறார்கள். ஆனாலும் அக்காலத்தில் அங்கே யூதருக்கு விரோதமாக சிலர் எழும்பியிருக்கிறார்கள். சன்பல்லாத் என்பவனும் தொபியா என்பவனும் சமாரியர்கள். சன்பல்லாத் பிறப்பினால் மோவாபியன். தொபியாவோ பிறப்பினால் அம்மோனியன்.

நெகேமியா ராஜாவின் உத்தரவோடும், இராணுவ சேர்வைக்காரரோடும், குதிரைவீரரோடும் எருசலேமுக்கு வருவதை சன்பல்லாத்தும் தொபியாவும் விரும்பவில்லை. நதிக்கு அப்புறத்திலிருக்கிற தேசாதிபதிகளுக்கு, பெர்சியா தேசத்து ராஜா கடிதங்களைக் கொடுத்திருக்கிறார். இந்தக் கடிதங்களில் நெகேமியாவுக்கு தேவையான உதவிகளை செய்யுமாறு எழுதப்பட்டிருக்கிறது.

இதை ஓரானியனான சன்பல்லாத்தும், அம்மோனியனான தொபியா என்னும் ஊழியக்காரனும் கேட்டபோது, இஸ்ரவேல் புத்திரரின் நன்மையை விசாரிக்க ஒருவன் வந்தான் என்பது அவர்களுக்கு மிகவும் விசனமாயிருக்கிறது (நெகே 2:10).

"சன்பல்லாத்" என்னும் பெயருக்கு "இரகசியமான விரோதி" என்று பொருள். யூதருடைய சிறையிருப்புக்குப் பின்பு, இவன் அவர்களுடைய விரோதியாக இருக்கிறான். எருசலேமின் அலங்கம் கட்டப்படும் வேலையில் சன்பல்லாத்து நெகேமியாவிற்கு எதிர்த்து நின்றான். (நெகே 2:10,19; நெகே 4:1,7; நெகே 6:1-14; நெகே 13:38). நெகேமியா எருசலேமில் இருந்தபோது, சன்பல்லாத்திற்கு சுமார் 85 வயதாக இருக்க வேண்டும். "தொபியா" என்னும் பெயருக்கு "கர்த்தர் நல்லவர்" என்று பொருள்.

யூதாவின் மனுஷர் தங்கள் கைகளைத் திடப்படுத்தி எருசலேமின் அலங்கத்தைக் கட்டும்போது, அவர்களுடைய சத்துருக்கள் அவர்களுக்கு விரோதமாக எழும்பி வருகிறார்கள்.

ஓரோனியனான சன்பல்லாத்தும், அம்மோனியனான தொபியா என்னும் ஊழியக்காரனும் அரபியனான கேஷேமும் இதைக் கேட்டபோது, அவர்களைப் பரியாசம்பண்ணி, அவர்களை நிந்தித்து: "நீங்கள் செய்கிற இந்தக் காரியம் என்ன? நீங்கள் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணப்போகிறீர்களோ" (நெகே 2:19) என்று கேட்கிறார்கள்.

அரபியனான கேஷேமு (நெகே 6:6) என்பவன் ஆகார், இஸ்மவேல் ஆகியோருடைய சந்ததியில் வந்தவன். இந்தச் சந்ததியார் ஆகாரியர் என்று அழைக்கப்படுகிறார்கள். (சங் 83:5)

சத்துருக்களின் பரியாச வார்த்தைகளையும் நிந்தையான வார்த்தைகளையும் கேட்டு நெகேமியா சோர்ந்துபோய்விடவில்லை. நெகேமியா அவர்களுக்கு மறுமொழியாக, "பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியத்தைக் கைகூடிவரப்பண்ணுவார்; அவருடைய ஊழியக்காரராகிய நாங்கள் எழுந்து கட்டுவோம்; உங்களுக்கோவென்றால் எருசலேமிலே பங்குமில்லை பாத்தியமுமில்லை; உங்கள் பேர் விளங்க ஒன்றும் இல்லை" (நெகே 2:20) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடையகரம் நெகேமியாவின்மேல் நன்மையாகயிருப்பதினால், அர்தசஷ்டா ராஜாவும், நெகேமியாவோடே அலங்கத்தைக் கட்டுவதற்கு சாதகமான வார்த்தைகளை சொல்லியிருக்கிறான். நெகேமியா ராஜாவினிடத்தில் எருசலேமின் பாழடைந்த நிலமையைப்பற்றி சொன்னவுடனேயே, ராஜாஎருசலேமுக்குப்போக நெகேமியாவுக்கு அனுமதி கொடுக்கிறான். வாயில்களை செப்பனிடத்திற்கு தேவையான மரங்களையும் நெகேமியாவுக்கு கொடுக்குமாறு கட்டளையிடுகிறான்.

நெகேமியாவின் வார்த்தைகளைக் கேட்டு, யூதாவிலுள்ள மனுஷர் எல்லோரும், அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டு கிடக்கிற வாசல்களை செப்பனிடவேண்டும் என்று தீர்மானம்பண்ணுகிறார்கள். "எழுந்து கட்டுவோம் வாருங்கள்" என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்கு தங்கள் கைகளைத் திடப்படுத்துகிறார்கள். நல்ல வேலையை செய்வதற்கு போதுமான கைகள் தேவைப்படுகிறது. ஆனாலும் அந்தக் கைகள் எல்லாவற்றையும் இயக்குவதற்கும், அவற்றை தலைமை தாங்கி நடத்துவதற்கும், ஒரு நல்ல தலை போதுமானது. நெகேமியா அவர்கள் எல்லோருக்கும் ஒரு நல்ல தலைவராயிருக்கிறார்.

நெகேமியா எருசலேமுக்கு வந்தபோது யூதர்களும் அவர்களுடைய சிநேகிதர்களும் அவருக்கு ஆதரவாயிருக்கிறார்கள். ஆனாலும் அக்காலத்தில் அங்கே யூதருக்கு விரோதமாக சிலர் எழும்பியிருக்கிறார்கள். சன்பல்லாத் என்பவனும் தொபியா என்பவனும் சமாரியர்கள். சன்பல்லாத் பிறப்பினால் மோவாபியன். தொபியாவோ பிறப்பினால் அம்மோனியன்.

நெகேமியா ராஜாவின் உத்தரவோடும், இராணுவ சேர்வைக்காரரோடும், குதிரைவீரரோடும் எருசலேமுக்கு வருவதை சன்பல்லாத்தும் தொபியாவும் விரும்பவில்லை. நதிக்கு அப்புறத்திலிருக்கிற தேசாதிபதிகளுக்கு, பெர்சியா தேசத்து ராஜா கடிதங்களைக் கொடுத்திருக்கிறார். இந்தக் கடிதங்களில் நெகேமியாவுக்கு தேவையான உதவிகளை செய்யுமாறு எழுதப்பட்டிருக்கிறது.

இதை ஓரானியனான சன்பல்லாத்தும், அம்மோனியனான தொபியா என்னும் ஊழியக்காரனும் கேட்டபோது, இஸ்ரவேல் புத்திரரின் நன்மையை விசாரிக்க ஒருவன் வந்தான் என்பது அவர்களுக்கு மிகவும் விசனமாயிருக்கிறது *(நெகே 2:10)*.

"சன்பல்லாத்" என்னும் பெயருக்கு "இரகசியமான விரோதி" என்று பொருள். யூதருடைய சிறையிருப்புக்குப் பின்பு, இவன் அவர்களுடைய விரோதியாக இருக்கிறான். எருசலேமின் அலங்கம் கட்டப்படும் வேலையில் சன்பல்லாத்து நெகேமியாவிற்கு எதிர்த்து நின்றான். *(நெகே 2:10,19; நெகே 4:1,7; நெகே 6:1-14; நெகே 13:38)*. நெகேமியா எருசலேமில் இருந்தபோது, சன்பல்லாத்திற்கு சுமார் 85 வயதாக இருக்க வேண்டும். "தொபியா" என்னும் பெயருக்கு "கர்த்தர் நல்லவர்" என்று பொருள்.

யூதாவின் மனுஷர் தங்கள் கைகளைத் திடப்படுத்தி எருசலேமின் அலங்கத்தைக் கட்டும்போது, அவர்களுடைய சத்துருக்கள் அவர்களுக்கு விரோதமாக எழும்பி வருகிறார்கள்.

ஓரோனியனான சன்பல்லாத்தும், அம்மோனியனான தொபியா என்னும் ஊழியக்காரனும் அரபியனான கேஷேமும் இதைக் கேட்டபோது, அவர்களைப் பரியாசம்பண்ணி, அவர்களை நிந்தித்து: "நீங்கள் செய்கிற இந்தக் காரியம் என்ன? நீங்கள் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணப்போகிறீர்களோ" *(நெகே 2:19)* என்று கேட்கிறார்கள்.

அரபியனான கேஷேமு *(நெகே 6:6)* என்பவன் ஆகார், இஸ்மவேல் ஆகியோருடைய சந்ததியில் வந்தவன். இந்தச் சந்ததியார் ஆகாரியர் என்று அழைக்கப்படுகிறார்கள். *(சங் 83:5)*

சத்துருக்களின் பரியாச வார்த்தைகளையும் நிந்தையான வார்த்தைகளையும் கேட்டு நெகேமியா சோர்ந்துபோய்விடவில்லை. நெகேமியா அவர்களுக்கு மறுமொழியாக, "பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியத்தைக் கைகூடிவரப்பண்ணுவார்; அவருடைய ஊழியக்காரராகிய நாங்கள் எழுந்து கட்டுவோம்; உங்களுக்கோவென்றால் எருசலேமிலே பங்குமில்லை பாத்தியமுமில்லை; உங்கள் பேர் விளங்க ஒன்றும் இல்லை" *(நெகே 2:20)* என்று சொல்லுகிறார்.

"ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக்காரியத்தைச் சிந்திப்பானேன்?" *(சங் 2:1)*.

3 அதிகாரம்

நெகேமியா யூதாஜனத்தாரிடம் எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள் என்று சொன்னபோது அவர்கள், "எழுந்து கட்டுவோம் வாருங்கள்" என்று சொல்லுகிறார்கள். வாயினால் வார்த்தைகளை சொல்லுவது வேறு. சொன்ன வார்த்தைகளை செய்து நிறைவேற்றுவது என்பது வேறு.

யூதாவின் மனுஷர் "எழுந்து கட்டுவோம் வாருங்கள்" என்று சொல்லிவிட்டு, ஒன்றும் செய்யாமல் சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. இயேசுகிறிஸ்து இளைய குமாரனைப்பற்றி உவமையில் சொன்னபோது, அவன் தன் தகப்பனிடம் "போகிறேன் ஐயா, என்று சொல்லியும் அவன் போகவில்லை" என்று சொன்னார். யூதாவின் மனுஷர் அந்த இளையகுமாரனைப்போல வார்த்தைகளினால் ஜாலம் பண்ணவில்லை. அவர்கள் எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற அந்த நல்ல வேலைக்கு தங்கள் கைகளை திடப்படுத்துகிறார்கள்.

எருசலேமின் அலங்கத்தைக் கட்டவேண்டும் என்று தீர்மானம்பண்ணியவுடன், அவர்கள் காலதாமதம்பண்ணாமல், அதற்குரிய வேலைகளை செய்ய ஆரம்பிக்கிறார்கள். இந்த அதிகாரத்தில் எருசலேமின் அலங்கம் கட்டப்படுவது பற்றி விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சம்பவம் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவையாவன:

1. எருசலேமின் அலங்கங்களை கட்டியவர்களின் பெயர்கள். அவர்களுக்கு மேன்மை உண்டாகும் வண்ணமாக, அவர்களுடைய பெயர்கள் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. எருசலேமின் அலங்கத்தில் பல வாசல்கள் இருக்கிறது. அலங்கத்தைக் கட்டியவர்கள் எந்தெந்த வாசல் பகுதியைக் கட்டினார்கள் என்றும், அவர்கள் அந்த வேலைகளை எந்தப் பகுதியில் ஆரம்பித்து, எந்தப் பகுதி வரையிலும் செய்தார்கள் என்றும் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆட்டுவாசலிலிருந்து மீன் வாசல் வரையிலும் (நெகே 3:1,2). பழைய வாசல் (நெகே 3:3-5). பள்ளத்தாக்கின் வாசல் (நெகே 3:6-12). குப்பை மேட்டு வாசல் (நெகே 3:13,14). ஊருணி வாசல் (நெகே 3:15). தண்ணீர் வாசல் (நெகே 3:16-26). குதிரை வாசலிலிருந்து ஆட்டுவாசல் வரையிலும். அவர்கள் ஆட்டுவாசலில் அலங்கத்தைக் கட்டும் வேலையை ஆரம்பித்தார்கள் (நெகே 3:27-32). ஆட்டுவாசலில் தங்கள் வேலையை முடிக்கிறார்கள். இவ்வாறாக எருசலேம் நகரத்தைச் சுற்றிலும் அலங்கம் கட்டி முடிக்கப்படுகிறது.

எருசலேமின் வாசல்களும் அவற்றை கட்டியவர்களும் நெகே 3:1-32

நெகே 3:1. அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய எலியாசீபும், அவன் சகோதரராகிய ஆசாரியர்களும் எழுந்து, ஆட்டுவாசலைக் கட்டினார்கள்; அதைக் கட்டி, அவர்கள் பிரதிஷ்டைபண்ணி, அதின் கதவுகளை வைத்து, மேயா என்கிற கொம்மைமுதல் அனானெயேலின் கொம்மைமட்டும் கட்டிப் பிரதிஷ்டை பண்ணினார்கள்.

நெகே 3:2. அவன் அருகே எரிகோவின் மனுஷர் கட்டினார்கள்; அவர்கள் அருகே இம்ரியின் குமாரனாகிய சக்கூர் கட்டினான்.

நெகே 3:3. மீன்வாசலை அசெனாவின் குமாரர் கட்டினார்கள்; அதற்கு உத்தரம்பாவி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பான்களையும் போட்டார்கள்.

நெகே 3:4. அவர்கள் அருகே கோசின் குமாரனாகிய உரியாவின் மகன் மெரேமோத் பழுதுபார்த்துக் கட்டினான்; அவர்கள் அருகே மெஷேசாபெயேலின் குமாரனாகிய பெரகியாவின் மகன் மெசுல்லாம் பழுதுபார்த்துக் கட்டினான்; அவர்கள் அருகே பானாவின் குமாரனாகிய சாதோக் பழுதுபார்த்துக் கட்டினான்.

நெகே 3:5. அவர்கள் அருகே தெக்கோவா ஊரார் பழுதுபார்த்துக் கட்டினார்கள்; அவர்களுடைய பிரபுக்களோ, தங்கள் ஆண்டவருடைய வேலைக்குத் தங்கள் கழுத்தைக் கொடுக்கவில்லை.

நெகே 3:6. பழைய வாசலைப் பசெயாகின் குமாரனாகிய யோய்தாவும், பேசோதியாவின் குமாரனாகிய மெசுல்லாமும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்; அவர்கள் அதற்கு உத்தரம்பாவி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டார்கள்.

நெகே 3:7. அவர்கள் அருகே கிபியோன் மிஸ்பா ஊர்களின் மனுஷரான மெலத்தியா என்னும் கிபியோனியனும், யாதோன் என்னும் மெரொனோத்தியனும், நதிக்கு இப்புறத்திலிருக்கிற அதிபதியின் சமஸ்தானமட்டும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

நெகே 3:8. அவர்கள் அருகேதட்டாரில் ஒருவனாகிய அராயாவின் குமாரன் ஊசியேல் பழுதுபார்த்துக் கட்டினான்; அவன் அருகே தைலக்காரரில் ஒருவன் குமாரனாகிய அனனியா பழுதுபார்த்துக் கட்டினான்; அதுமுதற்கொண்டு அகலமான மதில்மட்டும் எருசலேம் இடிக்காமல் விட்டிருந்தது.

நெகே 3:9. அவர்கள் அருகே எருசலேம் பட்டணத்தின் பாதிக்குப் பிரபுவாகிய ஊரின் குமாரன் ரெப்பாயா பழுதுபார்த்துக் கட்டினான்.

நெகே 3:10. அவர்கள் அருகே அருமாப்பின் குமாரன் யெதாயா தன் வீட்டுக்கு எதிரானதைப் பழுதுபார்த்துக் கட்டினான்; அவன் அருகே ஆசாப்நெயாவின் குமாரன் அத்தூஸ் பழுதுபார்த்துக் கட்டினான்.

நெகே 3:11. மற்றப் பங்கையும், சூளைகளின் கொம்மையையும், ஆரீமின் குமாரன் மல்கிஜாவும், பாகாத்மோவாபின் குமாரன் அசூபும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

நெகே 3:12. அவன் அருகே எருசலேம் பட்டணத்தின் மறுபாதிக்குப் பிரபுவாகிய அலோகேசின் குமாரன் சல்லூமும், அவன் குமாரத்திகளும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

நெகே 3:13. பள்ளத்தாக்கின் வாசலை ஆனூனும், சானோவாகின் குடிகளும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்; அவர்கள் அதைக் கட்டி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டு, குப்பைமேட்டு வாசல்மட்டாக அலங்கத்தில் ஆயிரம் முழம் கட்டினார்கள்.

நெகே 3:14. குப்பைமேட்டு வாசலைப் பெத்கேரேமின் மாகாணத்துப் பிரபுவாகிய ரெக்காவின் குமாரன் மல்கியா பழுதுபார்த்து, அதைக் கட்டி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டான்.

நெகே 3:15. ஊருணிவாசலை மிஸ்பாவின் மாகாணத்துப் பிரபுவாகிய கொல்லோசேயின் குமாரன் சல்லூம் பழுதுபார்த்து, அதைக் கட்டி, மச்சுப்பாவி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டு, ராஜாவின் சிங்காரத் தோட்டத்தண்டையிலிருக்கிற சீலோவாவின் குளத்து மதிலையும், தாவீதின் நகரத்திலிருந்து இறங்குகிற படிகள்மட்டாக இருக்கிறதையும் கட்டினான்.

நெகே 3:16. அவனுக்குப் பின்னாகப் பெத்சூர் மாகாணத்தின் பாதிக்குப் பிரபுவாகிய அஸ்பூகின் குமாரன் நெகேமியா தாவீதின் கல்லறைகளுக்கு எதிரான இடமட்டாகவும், வெட்டப்பட்ட குளமட்டாகவும், பராக்கிரமசாலிகளின் வீடுமட்டாகவும் இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான்.

நெகே 3:17. அவனுக்குப் பின்னாக லேவியரில் பானியின் குமாரன் ரேகூமும், அவன் அருகே கேகிலா மகாணத்தில் தன்னுடைய பாதிப்பங்குக்குப் பிரபுவாகிய அசபியாவும் பழுதுபார்த்துக்கட்டினார்கள்.

நெகே 3:18. அவனுக்குப் பின்னாக அவனுடைய சகோதரரில் கேகிலா மகாணத்து மறுபாதிக்குப் பிரபுவாகிய எனாதாதின் குமாரன் பாபாயி பழுதுபார்த்துக் கட்டினான்.

நெகே 3:19. அவன் அருகே மிஸ்பாவின் பிரபுவாகிய யெசுவாவின் குமாரன் ஏசர் என்பவன் மதிலின் கோடியிலே ஆயுதசாலையின் படிகளுக்கு எதிரேயிருக்கிற வேறொரு பங்கைப் பழுதுபார்த்துக் கட்டினான்.

நெகே 3:20. அவனுக்குப் பின்னாகச் சாபாயின் குமாரன் பாருக் அந்தக் கோடிதுவக்கிப் பிரதான ஆசாரியனாகிய எலியாசீபின் வாசற்படிமட்டும் இருக்கிற பின்னொரு பங்கை வெகு ஜாக்கிரதையோடே பழுதுபார்த்துக் கட்டினான்.

நெகே 3:21. அவனுக்குப் பின்னாகக் கோசின் குமாரனாகிய உரியாவின் மகன் மெரேமோத் எலியாசீபின் வீட்டு வாசற்படி துவக்கி அவனுடைய வீட்டின் கடைக்கோடிமட்டும் இருக்கிற பின்னொரு பங்கைப் பழுதுபார்த்துக் கட்டினான்.

நெகே 3:22. அவனுக்குப் பின்னாகச் சமனான பூமியில் வாசமாயிருக்கிற ஆசாரியர்கள் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

நெகே 3:23. அவர்களுக்குப் பின்னாக பென்யமீனும், அசூபும் தங்கள் வீட்டுக்கு எதிரே இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள்; அவர்களுக்குப் பின்னாக அனனியாவின் குமாரனாகிய மாசேயாவின் மகன் அசரியா தன் வீட்டின் அருகே இருக்கிறதைப் பழுது பார்த்துக் கட்டினான்.

நெகே 3:24. அவனுக்குப் பின்னாக எனாதாதின் குமாரன் பின்னூவி அசரியாவின் வீடு துவக்கி அலங்கத்துக் கோடி வளைவுவரைக்கும் இருக்கிற வேறொரு பங்கைப் பழுதுபார்த்துக் கட்டினான்.

நெகே 3:25. ஊசாயின் குமாரன் பாலால் வளைவுக்கு எதிரேயும், காவல் வீட்டின் முற்றத்துக்கடுத்த ராஜாவின் உயரமான அரமனைக்கு வெளிப்புறமாயிருக்கிற கொம்மைக்கு எதிரேயும் இருக்கிறதைக் கட்டினான்; அவனுக்குப் பின்னாகப் பாரோஷின் குமாரன் பெதாயாவும்,

நெகே 3:26. ஓபேலிலே குடியிருக்கிற நிதனீமியரைச் சேர்ந்த மனிதரும் கிழக்கேயிருக்கிற தண்ணீர் வாசலுக்கு வெளிப்புறமான கொம்மைக்கு எதிரேயிருக்கிற இடமட்டும் கட்டினார்கள்.

நெகே 3:27. அவர்களுக்குப் பின்னாகத் தெக்கோவா ஊரார் வெளிப்புறமான பெரிய கொம்மைக்கு எதிரே ஓபேலின் மதில்மட்டும் இருக்கிற பின்னொரு பங்கைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

நெகே 3:28. குதிரைவாசல் முதற்கொண்டு ஆசாரியர்கள் அவரவர் தங்கள் வீடுகளுக்கு எதிரே இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

நெகே 3:29. அவர்களுக்குப் பின்னாக இம்மேரின் குமாரன் சாதோக் தன் வீட்டுக்கு எதிரே இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான்; அவனுக்குப் பின்னாகக் கிழக்கு வாசலைக் காக்கிற செக்கனியாவின் குமாரன் செமாயா. பழுதுபார்த்துக் கட்டினான்.

நெகே 3:30. அவனுக்குப் பின்னாகச் செல்மீயாவின் குமாரன் அனனியாவும், சாலாபின் ஆறாவது குமாரனாகிய ஆனூனும், வேறொரு பங்கைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள்; அவர்களுக்குப் பின்னாகப் பெரகியாவின் குமாரன் மெசுல்லாம், தன் அறைவீட்டுக்கு எதிரே இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான்.

நெகே 3:31. அவனுக்குப் பின்னாகத் தட்டானின் குமாரன் மல்கியா மிப்காத் என்னும் வாசலுக்கு எதிரே நிதனீமியரும் மளிகைக்காரரும் குடியிருக்கிற ஸ்தல முதல்கோடியின் மேல்வீடுமட்டாகவும் இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான்.

நெகே 3:32. கோடியின் மேல்வீட்டுக்கும் ஆட்டுவாசலுக்கும் நடுவே இருக்கிறதைத் தட்டாரும் மளிகைக்காரரும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

எருசலேம் நகரம் பாழாயிருக்கிறது. அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டிருக்கிறது. எருசலேமின் அலங்கங்கள் மறுபடியுமாய்க் கட்டியெழுப்பப்படும் சம்பவம் இந்த வசனப்பகுதியில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

எலியாசீப் என்பவன் பிரதான ஆசாரியன். அவனுடைய சகோதரர்களும் ஆசாரியராயிருக்கிறார்கள். பிரதான ஆசாரியனாகிய எலியாசீபும், அவன் சகோதரராகிய ஆசாரியர்களும் எழுந்து ஆட்டுவாசலைக் கட்டுகிறார்கள் (நெகே 3:1). எருசலேமின் அலங்கங்களை அநேகர் கட்டினாலும், இந்த ஆசாரியர்களே அலங்கங்களைக் கட்டுவதற்கு முதலாவதாக முன்வருகிறார்கள்.

தேவாலயத்தின் அலங்கங்கள், மதில்கள் ஆகியவற்றின் கட்டுமான வேலை மறுபடியும் ஆரம்பமாயிற்று. பிரதான ஆசாரியனாகிய எலியாசீபும், மற்ற ஆசாரியர்களும் ஆட்டு வாசலைக் கட்டுகிறார்கள். "எலியாசீப்" என்னும் பெயருக்கு "தேவன் மீட்கிறார்" என்று பொருள்.

ஆட்டுவாசல் தேவாலயத்தின் வடகிழக்கு பகுதியிலுள்ளது. தேவாலயத்திற்குப் பலியிடப்படும் ஆடுகளை இந்த வாசல் வழியாகக் கொண்டு வருவது வழக்கம். (யோவான் 5:2).

"மேயா என்கிற கொம்மை" தீர்க்கதரிசனம் நிறைவேறப்போகும் வருங்காலத்தில் முக்கியத்துவம் பெறும். (எரே 31:38; சக 14:10). ஆட்டுவாசலின் இருபக்கத்திலும் மேயா, அனானெயேல் ஆகிய இரண்டு கொம்மைகள் உள்ளன.

அலங்கங்களைக் கட்டுவதில் பல பகுதிகள் உள்ளது. அதில் கட்டுமான வேலைகளை செய்யவேண்டும். அதற்கேற்ற திறமையுள்ளவர்கள் அலங்கங்களைக் கட்டவேண்டும். அவர்கள் எருசலேமின் அலங்கத்தைக் கட்டும்போது, அவர்களுக்கு ஆபத்து வருவதற்கு வாய்ப்புள்ளது. ஆபத்தை எதிர்த்து நிற்கக்கூடிய பராக்கிரமசாலிகள், கட்டிட வேலையைச் செய்கிறவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும்.

ஆசாரியர்கள் ஆட்டுவாசலைக் கட்டுகிறார்கள். தேவனுடைய ஆலயத்திலே ஆடுகளைப் பலியிடுவது வழக்கம். இந்த ஆடுகள் ஆட்டுவாசல் வழியாக ஆலயத்திற்குள் கொண்டு போகப்படும். ஆசாரியர்கள் கர்த்தருக்கு இந்த ஆடுகளை சர்வாங்க தகனபலியாக செலுத்துவார்கள். ஆகையினால் ஆசாரியர்கள் தங்களுடைய ஊழியத்தோடு தொடர்புடைய ஆட்டுவாசலைக் கட்டுகிறார்கள்.

அக்கினியால் சுட்டெரிக்கப்படும் காணிக்கைகள் ஆசாரியரின் சுதந்தரம். ஆகையினால் ஆசாரியர்கள் ஆட்டுவாசலைக் கட்டுகிறார்கள். அவர்கள் அதைக் கட்டி, பிரதிஷ்டைபண்ணி, அதின் கதவுகளை வைத்து, மேயா என்கிற கொம்மைமுதல் அனானெயேலின் கொம்மைமட்டும் கட்டிப் பிரதிஷ்டை பண்ணுகிறார்கள் (நெகே 3:1).

ஆட்டுவாசலைக் கட்டுவது பற்றி சொல்லப்படும்போது, அவர்கள் அதைக்கட்டி பிரதிஷ்டைபண்ணுகிறார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற வாசல்களைக் கட்டியவர்கள் அவற்றை பிரதிஷ்டை பண்ணவில்லை. ஆனால் ஆசாரியர்களோ தாங்கள் கட்டின ஆட்டுவாசலை பிரதிஷ்டை பண்ணுகிறார்கள். வார்த்தையினாலும் ஜெபத்தினாலும் பிரதிஷ்டை நடைபெறுகிறது.

எருசலேமின் அலங்கங்களைப் பழுதுபார்த்து கட்டுவதற்கு ஏராளமான வேலையாட்கள் தேவைப்படுகிறார்கள். வாசல்களைக் கட்டுவது நல்ல ஊழியம். இந்த ஊழியத்தில் அநேகர் பங்குபெறுகிறார்கள். ஒவ்வொருவரும் தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற அலங்கத்தின் பகுதியிலே, தங்களுடைய வேலைகளை நல்ல முறையிலே செய்கிறார்கள்.

அலங்கத்தைக் கட்டுகிறவர்கள் எல்லோருக்கும் ஒரே மாதிரியான திறமைகளும், ஒரே மாதிரியான ஆற்றல்களும், தாலந்துகளும் இருப்பதில்லை. ஆகையினால் அவர்களெல்லோரும் தங்களுடைய திறமைக்கேற்ற பிரகாரம், தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற வேலைகளை செய்து முடிக்கிறார்கள்.

எருசலேமின் அலங்கம் இடிந்து கிடக்கிறது. இப்போது எருசலேமின் அலங்கங்கள் பழுதுபார்ப்படுகிறது. இந்த அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுகிற வேலைகளை செய்கிறவர்கள் எல்லோருமே எருசலேமில் வாசம்பண்ணுகிறவர்களல்ல. எருசலேம் ஊராரும் அலங்கத்தைக் கட்டுகிறார்கள். எருசலேம் அல்லாத, மற்ற ஊர்களைச் சேர்ந்தவர்களும் அலங்கத்தைக் கட்டுகிறார்கள்.

எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிறவர்கள் எல்லோருமே, எருசலேமின் பொதுவான நன்மையை நாடுகிறவர்கள். தங்களுக்கு விசேஷித்த மகிமையோ, மேன்மையோ உண்டாகவேண்டும் என்பதற்காக அவர்கள் இந்த வேலையை செய்யவில்லை.

அலங்கத்தைக் கட்டுகிறவர்களில் எரிகோவின் மனுஷரைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசாரியர்கள் ஆட்டுவாசலைக் கட்டும்போது, அவர்கள் அருகே எரிகோவின் மனுஷரும் கட்டுகிறார்கள் (நெகே 3:2).

எரிகோவின் மனுஷர் பெர்சிய தேசத்திலிருந்து யூதா தேசத்திற்கு 44,114 பேர் திரும்பி வந்தார்கள். செருபாபேலோடு 42,360 பேரும் (எஸ்றா 2), எஸ்றாவோடு 1,754 பேரும் (எஸ்றா 8) திரும்பி வந்தார்கள். இவர்கள் எல்லோரும் எருசலேம் என்னும் ஒரே ஊரில் குடியேறாமல், இஸ்ரவேல் தேசம் முழுவதிலும் குடியேறினார்கள். (எஸ்றா 2:70; எஸ்றா 3:1; எஸ்றா 4:10; எஸ்றா 10:14; நெகே 7:73; நெகே 8:15; நெகே 9:25; நெகே 10:37; நெகே 11:1-3,20,36; நெகே 12:44).

எருசலேமைச் சுற்றிலும் 32 பட்டணங்கள் உள்ளன. அவற்றின் பெயர்கள் நெகே 11:20-26 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. பெர்சிய தேசத்திலிருந்து திரும்பி வந்தவர்களில் ஒருசிலர் மட்டுமே எருசலேமில் இருக்கிறார்கள். ஆகையினால் நகரத்தை மறுபடியும் கட்டுவதற்கு நீண்டகாலமாயிற்று. (நெகே 1:3; நெகே 2:3; நெகே 7:1-4).

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த ஒவ்வொரு பிரிவினரும் தங்களுடைய வீடுகளையும், தங்களுடைய பட்டணங்களையும் கட்டுவதில் கவனம் செலுத்துகிறார்கள். இதனால் பல வருஷங்களாக அவர்களால் எருசலேமைக் கட்டுவதில் கவனம் செலுத்த முடியவில்லை.

மற்றப் பட்டணங்களிலிருந்து எருசலேம் பட்டணத்திற்கு வந்து, குடியேறுமாறு ஜனங்களை அழைத்து வருகிறார்கள். (நெகே 11:1-2). தேவாலயத்தை மறுபடியும் கட்டுவதற்கு பல இடங்களிலிருந்து வந்த ஜனங்கள் உதவி புரிகிறார்கள். ஆனாலும் நெகேமியாவின் காலத்தில் பட்டணத்தின் வீதிகளும், அலங்கங்களும் இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை.

நெகேமியா அலங்கங்களைக் கட்டுவதற்கு எருசலேமிற்கு வந்தபோது தேவாலயம் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. (நெகே 2:8; நெகே 3:10; நெகே 6:10; நெகே 8:16; நெகே 10:32-39; நெகே11:1-22; நெகே 12:40; நெகே 13:4-14).

எரிகோவின் மனுஷரைப்போலவே கிபியோன், மிஸ்பா ஆகிய ஊர்களின் மனுஷரும் (நெகே 3:7). சானோவாகின் குடிகளும் (நெகே 3:13) எருசலேமின் அலங்கத்தைப்பழுது பார்த்து கட்டுகிறார்கள். எருசலேமின் அலங்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் உதவிகரம் நீட்டவேண்டும்.

எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிறவர்கள் சாதாரண மனுஷர் மாத்திரமல்ல. எருசலேமின் பிரபுக்களும், மற்ற பட்டணங்களின் பிரபுக்களும், அலங்கத்தில் ஒரு பகுதியை எடுத்துக் கட்டுகிறார்கள். பிரபுக்களிடத்தில் ஐசுவரியமும், வல்லமையும், ஆள்பலமும் இருக்கிறது. எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவது கர்த்தருக்கு செய்யும் ஊழியம். இந்த நல்ல வேலையில் பிரபுக்களும் பங்குபெறுகிறார்கள். தங்கள் கைகளை திடப்படுத்துகிறார்கள். அவர்களும் எருசலேமின் அலங்கத்தை எழுந்து கட்டுகிறார்கள்.

யோர்தான் நதியிலிருந்தும், கலிலேயாக் கடலிலிருந்தும் எருசலேம் பட்டணத்திற்குள் மீன் வாசல் வழியாகவே மீன்களை எடுத்துச் செல்வார்கள். இந்த வாசல் பட்டணத்தின் வடக்கு சுவரில் உள்ளது.

பானாவின் குமாரனாகிய சாதோக் மீன்வாசலைப் பழுதுபார்த்து கட்டுகிறான். அவனோடு அநேகர் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் அருகே தெக்கோவா ஊரார் பழுதுபார்த்துக் கட்டுகிறார்கள்; அவர்களுடைய பிரபுக்களோ, தங்கள் ஆண்டவருடைய வேலைக்குத் தங்கள் கழுத்தைக் கொடுக்கவில்லை (நெகே 3:5).

தெக்கோவா ஊரார் அலங்கத்தைக் கட்டும்போது, தெக்கோவா ஊரின் பிரபுக்கள், அலங்கத்தைக் கட்டுவதற்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. கர்த்தருடைய ஊழியத்தில் தாங்களும் பங்குபெறவேண்டும் என்னும் அக்கரை அவர்களிடத்தில் இல்லை. அவர்கள் மனதிலே பெருமை இருக்கிறது. அலங்கத்தைக் கட்டுவது தங்களுடைய தகுதிக்கும் அந்தஸ்திற்கும் கீழான வேலை என்று தெக்கோவா ஊரின் பிரபுக்கள் நினைக்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியத்தை எல்லோரும் செய்யவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தை செய்வது நமக்கு கிடைத்திருக்கிற பாக்கியம். ஊழியம் செய்கிறவர்கள் தங்களுடைய சுயபெருமைக்கோ, சுயஅந்தஸ்துக்கோ முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. யாராகயிருந்தாலும், அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை மிகுந்த மனத்தாழ்மையோடு செய்யவேண்டும். ஆண்டவருடைய வேலைக்கு நம்முடைய கழுத்தைக் கொடுக்கவேண்டும். தெக்கோவா ஊரின் பிரபுக்கள், ஆண்டவருடைய ஊழியத்திற்கு தங்களுடைய கழுத்தைக் கொடுக்காமல், அசட்டையாயிருக்கிறார்கள்.

பழைய வாசலைப் பசெயாகின் குமாரனாகிய யோய்தாவும், பேசோதியாவின் குமாரனாகிய மெசுல்லாமும் பழுதுபார்த்துக் கட்டுகிறார்கள். பழைய வாசலை யோய்தாவும், மெசுல்லாமும் சேர்ந்து கட்டுகிறார்கள். கர்த்தருடைய ஊழியத்தை தனியாகவும் செய்யலாம். இவர்களைப்போல கூட்டாகவும் சேர்ந்து செய்யலாம். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரருக்கு கொடுக்கும் மகிமையை, இவர்கள் இருவரும் பகிர்ந்துகொள்ளவேண்டும்.

நம்மால் ஒரு சில வேலைகளை எளிதாக செய்யமுடியும். அதே வேளையில், நம்மால் வேறு சில வேலைகளை எளிதாக செய்ய முடியாது. எல்லோராலும் எல்லா வேலைகளையும் சிறப்பாக செய்ய முடியும் என்று சொல்ல முடியாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான தாலந்துகள் கொடுக்கப்படும். நம்மால் ஒரு வேலையை திறமையாக செய்ய முடியாமலிருக்கும்போது, அந்த வேலையை நன்றாய்ச் செய்யக்கூடிய திறமைசாலிகளை நாம் பயன்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட தாலந்துள்ளவர்கள் நம்மோடுகூட ஊழியம் செய்யும்போது அதற்காக கர்த்தரை துதிக்கவேண்டும்.

பழைய வாசலை யோய்தாவும் மெசுல்லாமும் பழுதுபார்த்து கட்டுகிறார்கள். எருசலேம் நகரம் ஆதிகாலத்தில் "சாலேம்" என்னும் பட்டணமாயிருந்தது. மெல்கிசேதேக் என்பவர் ஆரம்பத்தில் இந்தப் பட்டணத்தைக் கட்டினார். அந்தப் பழைய பட்டணத்தில் இருந்த வாசலே "பழைய வாசல்" என்று இங்கு அழைக்கப்படுகிறது. அந்தப் பழைய வாசலை இவர்கள் இருவரும் பழுதுபார்த்து கட்டுகிறார்கள்.

"பழைய வாசல்" என்பது தற்காலத்தில் தமஸ்கு வாசல் என்றழைக்கப்படும் வாசலாகவோ, அல்லது வடக்குப் பக்கத்திலிருந்து பட்டணத்திற்குள் நுழையும் பிரதான வாசலாகவோ அல்லது கிழக்குப் பக்கத்திலுள்ள வாசலாகவோ இருப்பதற்கு வாய்ப்புள்ளது. (நெகே 3:3-5).

எருசலேமின் அலங்கத்தை கட்டுகிறவர்கள் வெவ்வேறு தாலந்துகளை உடையவர்களாயிருக்கிறார்கள். தட்டார், தைலக்காரர், மளிகைக்காரர் (நெகே 3:8,32) ஆகிய எல்லோருமே எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இவர்கள் தட்டாராகவும், தைலக்காரராகவும், மளிகைக்காரராகவும் இருப்பதினால், கர்த்தர் தங்களை அலங்கம் கட்டுகிற ஊழியத்திற்கு அழைக்கவில்லை என்று நினைக்கவில்லை. கர்த்தர் தங்களுக்கு சம்பந்தமில்லாத வேறு ஊழியப்பொறுப்புக்களை கொடுத்திருக்கிறார் என்று சொல்லி, அலங்கத்தைக் கட்டுகிற ஊழியத்தில் பங்குபெறாமல் இவர்கள் விலகி நிற்கவில்லை.

கர்த்தருடைய அலங்கம் எருசலேமில் பொதுவான நன்மைக்காக கட்டப்படுகிறது. தட்டாருக்கும், தைலக்காரருக்கும், மளிகைக்காரருக்கும் தனித்தனியாக கடைகள் இருக்கும். இவையெல்லாம் அவர்களுடைய சொந்தக்காரியங்கள். இவர்கள் தங்கள் கடைகளை அடைத்துவிட்டு, எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவதற்கு வந்தால், அவர்களுடைய வியாபாரம் பாதிக்கும். அவர்களுக்கு வருமானமும் குறையும்.

எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவது கர்த்தருடைய ஊழியம். தங்களுடைய கடைகளை அடைத்துவிட்டு, கர்த்தருக்கு ஊழியம் செய்யும்போது, கர்த்தர் தங்களுக்கு ஏற்படும் நஷ்டங்களை ஈடுகட்டுவார் என்று இவர்கள் நினைக்கிறார்கள். இவர்கள் கர்த்தருக்காக ஊழியம் செய்யும்போது, கர்த்தர் இவர்களைக் கனம்பண்ணுவார். அவர்களை தம்முடைய நன்மைகளினால் நிரப்புவார். ஆகையினால் தங்களுக்கு ஒரு குறைவும் வராது என்று நினைத்து, தட்டாரும், தைலக்காரரும், மளிகைக்காரரும் எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிறார்கள்.

"சூளைகளின் கொம்மை" என்பது நகரத்தின் வடமேற்கு மூலையிலுள்ள கொம்மையாகவோ, அல்லது மேற்கு அலங்கத்தின் மேலுள்ள கொம்மையாகவோ இருக்க வேண்டும். இந்தப் பெயருக்கான காரணம் தெரியவில்லை.

எருசலேம் பட்டணத்தில் குடியிருந்தவர்கள் பொதுவாக ஆடுகளை மேய்க்கிறவர்கள். அவர்கள் வனாந்தரங்களுக்குத் தங்கள் ஆடுகளை ஓட்டிச் சென்று, மேய்ப்பது வழக்கம். வனாந்தரங்களில் கள்ளர்களின் பயம் அதிகமாக இருக்கும். இதற்காக இவர்கள் உயரமான கொம்மைகளைக் கட்டி, அதில் பாதுகாப்பாகத் தங்கியிருப்பது வழக்கம். இங்கிருந்து திருடர்களையும், கொலைகாரர்களையும் மேய்ப்பர்கள் விரட்டி அடிப்பார்கள். (2நாளா 27:4). திராட்சைத் தோட்டங்களிலும் அக்காலத்தில் கோபுரங்களைக் கட்டியிருக்கிறார்கள். (மத் 21:33).

எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலையில், சில ஸ்திரீகளும் பங்குபெறுகிறார்கள். எருசலேம் பட்டணத்தின் மறுபாதிக்குப் பிரபுவாகிய அலோகேசின் குமாரன் சல்லூமும், அவன் குமாரத்திகளும் பழுதுபார்த்துக் கட்டுகிறார்கள் (நெகே 3:12).

சல்லூமின் குமாரத்திகளைப் பற்றி இங்கு கூறப்பட்டிருக்கிறது. அலங்கங்களைப் பழுதுபார்க்கும் வேலைகளில் ஸ்திரீகளும் பயன்படுத்தப்பட்டார்கள். இஸ்ரவேல் புத்திரரில் புருஷரும் ஸ்திரீகளும் எல்லாருமாகச் சேர்ந்து, தங்களுடைய கடமைகளைச் செய்து, அலங்கங்களைக் கட்டுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு எதிராகப் பல சத்துருக்கள் எழும்பியிருக்கிறார்கள். இவர்களுடைய தேசம் மறுபடியும் எழும்பி வராதவாறு அவர்கள் தடைபண்ண முயற்சி பண்ணுகிறார்கள். ஆகையினால் எவ்வளவு விரைவில் அலங்கங்களைக் கட்டி முடிக்க வேண்டுமோ அவ்வளவு விரைவில் அவற்றைக் கட்டி முடிப்பதற்கு இஸ்ரவேல் புத்திரர் பிரயாசப் படுகிறார்கள். பெர்சிய ராஜாவின் ஆதரவு இஸ்ரவேல் புத்திரருக்கு இருந்தபோதிலும் அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைத் தொடர்ந்து தொந்தரவு பண்ணுகிறார்கள்.

சல்லூமின் குமாரத்திகளால் கடினமான கட்டுமான வேலைகளை செய்ய முடியாது. ஸ்திரீகள் தங்கள் சரீரத்தில் பலவீனமுள்ளவர்கள். ஆனாலும் அவர்கள் தங்களிடத்திலுள்ள பொருளாதாரத்தை, எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலைகளுக்கு கொடுக்கிறார்கள். அலங்கத்தைக் கட்டுவதற்குத் தேவையான பொருட்களை வாங்கித் தருகிறார்கள். அலங்கத்தைக் கட்டுகிறவர்களுக்கு சம்பளம் கொடுக்கிறார்கள். கர்த்தருடைய ஊழியத்தில் புருஷர்கள் பங்குபெறுவது போலவே, ஸ்திரீகளும் பங்குபெறலாம்.

அப்போஸ்தலர் பவுலின் காலத்தில், சுவிசேஷ ஊழியத்திற்கு ஒரு சில ஸ்திரீகள் உதவியாயிருந்தார்கள்.

"கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்தி சொல்லுகிறேன். அன்றியும், என் உத்தமகூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன் வேலையாட்களோடுங் கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடே கூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது" (பிலி 4:2,3).

எருசலேமில் சேரும் குப்பைகளை மற்ற வாசல்கள் வழியாக நகரத்திற்குப் புறம்பே கொண்டு செல்வதற்குப் பதிலாக இந்தக் குப்பை மேட்டு வாசல் வழியாக அவர்கள் எடுத்துச் சென்றிருக்க வேண்டும். இப்போதும் ஒலிவமலை அல்லது எரிகோவிற்கு பிரயாணம் மேற்கொள்கிறவர்கள் அலங்கத்திற்கு அருகிலுள்ள உயர்ந்த குப்பை மேடுகளைக் காணமுடியும். இந்தக் குப்பை மேடுகள் பல நூற்றாண்டுகளாக உள்ளன.

மிருகங்களைப் பலிசெலுத்தும்போது உண்டாகும் கழிவுப் பொருட்களைப் பற்றி முதன் முதலில் வேதாகமத்தில் இந்த வசனப் பகுதியில் கூறப்பட்டிருக்கிறது. மிருகங்களின் சாணமும், வேறுசில பொருட்களும் பலிபீடத்தின்மீது தகனிக்கப்படக்கூடாது. அவற்றை ஆலயத்திற்குப் புறம்பே கொண்டுபோய் சேர்க்கவேண்டும் (யாத் 29:14; லேவி 4:11; லேவி 8:17; லேவி 16:27; எண் 19:5).

வேதாகமத்தில் மிருகஜீவன்களின் கழிவுகள் விவசாயத்திற்குப் பயன்படுவதைப் பற்றியும், (லூக்கா 13:8) எரிபொருளாகப் பயன்படுவது பற்றியும் (எசே 4:12-15) கூறப்பட்டிருக்கிறது.

வேதாகமத்தில் குப்பை என்பது பயனற்ற பொருள், அழிந்துபோகக்கூடிய பொருள் என்னும் அர்த்தத்தில் கூறப்பட்டிருக்கிறது. (1இராஜா 14:10; 2இராஜா 6:25; 2இராஜா 9:37; யோபு 20:7; சங் 83:10; எரே 8:2; எரே 9:22; எரே 16:4; எரே 25:33; செப் 1:17; பிலி 3:8). இதுபோலவே குப்பை மேடு என்னும் வார்த்தையும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (1சாமு 2:8; எஸ்றா 6:11; சங் 113:7; ஏசா 25:10; தானி 2:5; தானி 3:29; லூக்கா 14:35).

குப்பை மேடு என்பது கோபத்தைக் குறிப்பதற்கும், (2இராஜா 18:27; ஏசா 36:12) கடிந்து கொள்வதற்கும் (மல் 2:3) பயன்படுத்தப்படும் வார்த்தையாகும்.

"ஊருணிவாசல்" என்பது சீலோவாம் குளத்திற்கு அருகிலுள்ளது. இதற்கு "சீலோவாமின் தண்ணீர்கள்" (ஏசா 8:6) என்றும், "சீலோவாம் குளம்" (யோவான் 9:7; லூக்கா 13:4) என்றும் மறுபெயர்கள் உள்ளன. எசேக்கியாவின் காலத்தில் சீலோவாம் குளத்திற்குத் தண்ணீர் கொண்டுபோகும் வாய்க்கால்கள் தூர்வாறப்பட்டன (2இராஜா 20:20; 2நாளா 2:30).

"தாவீதின் கல்லறைகள்" சீயோனில் உள்ளன. யூதா தேசத்து ராஜாக்களின் கல்லறைகள் இங்கு ஏராளமாய் உள்ளன. (1இராஜா 2:10; 1இராஜா 11:43; 1இராஜா 15:8,24; 1இராஜா 22:50; 2இராஜா 8:24; 2இராஜா 9:28; 2இராஜா 12:21; 2இராஜா 14:20; 2இராஜா 15:7,38; 2இராஜா 16:20).

"கேகிலா" எருசலேமிற்குத் தென்கிழக்கே 15 மைல் தூரத்தில் எப்ரோன் மலையில் கேகிலா உள்ளது. மதிலின் கோடியிலே ஆயுதசாலை உள்ளது. சத்துருக்களிடமிருந்து தங்களைப் பாதுகாப்பதற்காக மதிலின்கோடியில் ஆயுதங்களைச் சேகரித்து வைத்திருப்பது வழக்கம்.

தேவாலயம் மறுபடியும் கட்டி முடிக்கப்பட்ட போது, யெசுவா பிரதான ஆசாரியனாக இருந்தான். இவனுக்குப் பின்பு, எலியாசீப் பிரதான ஆசாரியனாக வருகிறான். இதன் மூலமாகத் தேவாலயம் கட்டப்படும்போது, நெகேமியா எருசலேமிற்கு வரவில்லை என்பது தெளிவாகிறது. யோர்தான் பள்ளத்தாக்கிற்குச் சமனான பூமி என்னும் மறுபெயரும் உள்ளது.

ஓபேலிலே நிதனீமியர் குடியிருக்கிறார்கள். ஓபேலுக்கு அருகில் தண்ணீர் ஏராளமாக இருக்கும். நிதனீமியர் தேவாலயத்திற்குத் தேவையான மரங்களையும், தண்ணீரையும் சுமந்து செல்கிறார்கள். ஆகையினால் இவர்கள் தண்ணீர் செழிப்பாக இருக்கும் ஓபேலில் குடியிருக்கிறார்கள்.

கீதரோன் பள்ளத்தாக்கிலுள்ள ஓபேலில் கிழக்குப் பகுதியில் கீகோனின் ஊற்று உள்ளது. இந்த ஊற்றுக்கு அருகாமையிலுள்ள வாசல் "தண்ணீர் வாசல்" என்று அழைக்கப்படுகிறது .

"பெரிய கொம்மை" என்பது ஒருவேளை சீலோவாம் கோபுரமாக இருக்கலாம். (லூக்கா 13:4). "குதிரைவாசல்" தேவாலயத்தின் தென்கிழக்குப் பகுதியிலுள்ளது. இது தாவீதின் நகரத்திற்கு அருகில் உள்ளது. இது ஆரம்பத்தில் எபூசியரின் கோட்டையாக இருந்தது. அதன்பின்பு, தென்கிழக்கு மலைப்பகுதி முழுவதற்கும் இது விரிவுபடுத்தப் பட்டது. (2சாமு 5:7; 1நாளா 11:5). இஸ்ரவேலின் ராஜாக்களோடும், தாவீதின் நகரத்தோடும் ஏராளமான குதிரைகள் சம்பந்தப்பட்டுள்ளன. ஆகையினால் இந்த வாசலுக்குக் "குதிரைவாசல்" என்னும் பெயர் வந்திருக்கலாம்.

எருசலேமின் அலங்கத்தை கட்டுகிறவர்களில் சிலர், தங்கள் வீட்டிற்கு எதிரானதை பழுதுபார்த்து கட்டுகிறார்கள் (நெகே 3:10,23,28,29). மெசுல்லாம் என்பவன் தன் அறைவீட்டிற்கு எதிரே இருக்கிறதைப் பழுதுபார்த்து கட்டுகிறான் (நெகே 3:30). இவர்கள் எல்லோரும் தங்கள் வீட்டிற்கு எதிரே பழுதடைந்து கிடக்கிற அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுகிறார்கள்.

எருசலேமின் அலங்கம் பழுதடைந்து கிடக்கும்போது, எல்லோருமே தங்களால் முடிந்த ஒரு வேலையை செய்து, பழுதை நீக்கவேண்டும். எருசலேம் முழுவதும் பிரயோஜனமாயிருக்கும் ஒரு நல்ல வேலை நடைபெறும்போது, அதிலே எல்லோரும் தங்களுடைய ஒத்துழைப்பை கொடுக்கவேண்டும். எருசலேமின் குடிகள் தங்களுக்கு அருகாமையிலுள்ள இடங்களிலோ அல்லது தங்கள் வீட்டிற்கு எதிராக அல்லது பக்கத்தில் அல்லது பின்புறத்தில் உள்ள இடங்களிலோ காணப்படும் பழுதுகளை நீக்கவேண்டும்.

ஒரு தெருவிலுள்ள ஒவ்வொருவரும், தங்கள் வீட்டிற்கு முன்னால் உள்ள வாசற்படியை சுத்தம்பண்ணும்போது, அந்த தெரு முழுவதும் சுத்தமாகும். அறைவீடு என்பது ஒரே ஒரு அறையுள்ள வீடாகும். இது மிகவும் சிறியது. ஆனாலும் இந்த அறை வீட்டிலுள்ளவனும், தனக்கு எதிரே இருக்கிற அலங்கத்தைப் பழுதுபார்க்கிறான்.

கர்த்தருடைய ஊழியத்தில் நம் எல்லோருக்குமே பங்குள்ளது. நம்முடைய ஊழியம் நம்முடைய வீட்டிலும், நம்முடைய உற்றார் உறவினர் மத்தியிலும், நம்முடைய தெருக்களிலும், நம்முடைய ஊர்களிலும் ஆரம்பமாகவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும், தங்கள் பகுதியில் ஊழியம் செய்யும்போது, அந்த தேசம் முழுவதும் ஊழியம் நடைபெறும்.

பிரதான ஆசாரியனாகிய எலியாசீபின் வாசற்படிமட்டும் இருக்கிற பின்னொரு பங்கை வெகு ஜாக்கிரதையோடே பழுதுபார்த்துக் கட்டுகிறான் (நெகே 3:20). எருசலேமின் அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுகிறவர்கள் எல்லோருமே ஜாக்கிரதையாகத்தான் தங்கள் வேலைகளை செய்கிறார்கள். ஆனாலும் இவனுடைய வேலையைப்பற்றி சொல்லும்போது மட்டும், "இவன் வெகுஜாக்கிரதையாய்ப் பழுதுபார்த்து கட்டினான்" என்று விசேஷமாக சொல்லப்பட்டிருக்கிறது.

நாம் ஒரு நல்ல வேலையை ஜாக்கிரதையாய் செய்யும்போது, அதைப் பார்த்து அசதியாயிருக்கிறவர்கள்கூட, தங்கள் வேலையை ஜாக்கிரதையாய் செய்வார்கள். நம்முடைய வேலைகளை நாம் அசதியாய் செய்யும்போது தங்கள் வேலைகளை ஜாக்கிரதையாய் செய்கிறவர்கள்கூட, நம்மைப் பார்த்து அசதியாய் வேலை செய்ய ஆரம்பித்துவிடுவார்கள்.

நம்முடைய வேலைகளை வெகுஜாக்கிரதையாய் செய்யும்போது நாம் அதிகமாய்ப் பிரயாசப்படவேண்டியதிருக்கும். பிரயாசப்படாமல் எந்த வேலையையும் நேர்த்தியாய்ச் செய்து முடிக்க முடியாது. பிரயாசத்தோடு வேலை செய்கிறவர்கள் தங்கள் வேலைகளை சீக்கிரத்தில் செய்து முடிப்பார்கள். கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறவர்கள் எல்லோருமே வெகுஜாக்கிரதையாய் ஊழியம் செய்யவேண்டும். ஒரு ஊழியக்காரருடைய ஜாக்கிரதையைப் பார்த்து, மற்ற ஊழியக்காரரும் கர்த்தருக்கு ஜாக்கிரதையாய் ஊழியம் செய்யவேண்டும் என்னும் ஆர்வத்தைப் பெறவேண்டும்.

சாலாபின் ஆறாவது குமாரனாகிய ஆனூன் என்பவன் அலங்கத்தின் ஒரு பங்கை பழுதுபார்த்து கட்டுகிறான் (நெகே 3:30). இவனுடைய தகப்பனுக்கு ஆறுகுமாரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே ஆனூனுக்கு வயதில் மூத்தவர்கள். ஆனூன் இளைகுமாரனாக இருந்தாலும், அவனும் அலங்கத்தில் ஒரு பங்கை பழுதுபார்த்து கட்டுகிறான்.

நாம் ஒரு நல்ல காரியத்தை செய்யும்போது, நம்முடைய இளவயதை நினைத்துப் பார்த்து, அந்த வேலையில் ஈடுபடாமல் ஒதுங்கி நிற்கக்கூடாது. நாம் பார்வையாளர்களாகயில்லாமல், வேலையில் பங்குபெறுகிறவர்களாக இருக்கவேண்டும். நம்மைவிட வயதில் மூத்தவர்கள் எல்லா வேலையையும் பார்த்துக்கொள்வார்கள் என்று நினைத்து நாம் ஒதுங்கி சும்மாயிருக்கக்கூடாது. சாலாபின் ஆறாவது குமாரனாகிய ஆனூன் தன்னுடைய பங்கை செய்ததுபோல, வயதில் இளையவர்களும் தங்கள் பங்கை செய்யவேண்டும்.

கர்த்தருடைய ஊழியத்தை பெரியவர்களும் செய்யவேண்டும். சிறியவர்களும் செய்யவேண்டும். சிறியவர்கள் வேடிக்கைப் பார்க்கிறவர்களாகயிருக்கக்கூடாது. கர்த்தருடைய ஊழியத்தை வயதில் பெரியவர்கள் செய்துகொள்வார்கள் என்று நினைத்து, வயதில் சிறியவர்கள் ஊழியம் செய்யாமல் ஒதுங்கி நிற்கக்கூடாது.

கர்த்தர் மூத்தவனையும் தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்துகிறார். இளைவனையும் பயன்படுத்துகிறார். நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கும் போது, கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு, நம்முடைய இளவயது ஒருபோதும் தடையாயிருக்காது. கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களே, அவருக்கு பிரயோஜனமுள்ளவர்களாயிருப்பார்கள்.

எருசலேமின் அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுகிறவர்களில் சிலர் தங்களுடைய வேலைகளை சீக்கிரத்தில் முடித்துவிடுகிறார்கள். அதன் பின்பு அவர்கள் மற்றவர்கள் செய்கிற வேலைகளில் உதவியாயிருக்கிறார்கள். அவர்களுடைய வேலைகளில் தங்களுக்கு சில பொறுப்புக்களை எடுத்துக்கொண்டு, இன்னும் அதிகமாய் வேலை செய்கிறார்கள்.

உரியாவின் மகன் மெரெமோத் என்பவன் மீன்வாசலில் ஒரு பகுதியைக் கட்டினான் (நெகே 3:4). அதன் பின்பு அவன் எலியாசீபின் வீட்டு வாசற்படி துவக்கி அவனுடைய வீட்டின் கடைக்கோடிமட்டும் இருக்கிற பின்னொரு பங்கைப் பழுதுபார்த்துக் கட்டுகிறான் (நெகே 3:21).

மெரொமோத் தனக்கு கொடுக்கப்பட்ட வேலையை முடித்துவிட்டு, அதன் பின்பு அவன் மற்றொரு வேலையையும் எடுத்து செய்கிறான். மெரொமோத்தைப்போலவே தெக்கோவா ஊராரும் அலங்கத்தின் ஒரு பகுதியை பழுதுபார்த்து கட்டுகிறார்கள் (நெகே 3:5). அவர்கள் தங்கள் வேலையை முடித்த பின்பு வெளிப்புறமான பெரிய கொம்மைக்கு எதிரே ஓபேலின் மதில்மட்டும் இருக்கிற பின்னொரு பங்கைப் பழுதுபார்த்துக் கட்டுகிறார்கள் (நெகே 3:27).

எருசலேமின் அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுவதில் தெக்கோவா ஊரார் மிகவும் விசேஷமாக வேலை செய்கிறார்கள். அவர்களுடைய பிரபுக்கள் அலங்கத்தைக் கட்டுகிற வேலையில் பங்குபெறவில்லை. தெக்கோவா ஊரின் பிரபுக்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்யாவிட்டாலும், தெக்கோவா ஊரார் இரட்டிப்பான வேலையை செய்கிறார்கள்.

தெக்கோவா ஊரார் தங்களுடைய பிரபுக்களின் மோசமான உதாரணத்தைப் பின்பற்றி, அலங்கத்தைப் பழுதுபார்க்காமல் சும்மாயிருக்கவில்லை. தங்கள் பிரபுக்கள் ஆண்டவருடைய வேலைக்கு தங்கள் கழுத்தைக் கொடுக்காததினால், தாங்களும் தங்கள் கழுத்தைக் கொடுக்கப்போவதில்லை என்று சாக்குப்போக்கு சொல்லி சும்மாயிருக்கவில்லை.

தெக்கோவா ஊரார் இரட்டிப்பான வேலைகளை செய்வதைப் பார்த்து, அந்த ஊரின் பிரபுக்கள் தங்களுடைய குற்றங்களை உணர்ந்திருப்பார்கள். ஒருவேளை அவர்கள் தங்கள் தப்பிதங்களுக்கு மனந்திரும்பி, ஆண்டவருடைய வேலைக்கு தங்களுடைய கழுத்துக்களைக் கொடுத்திருக்கலாம்.

கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறவர்கள் மற்றவர்களுடைய நல்ல முன்மாதிரியை பார்த்து, தாங்களும் வெகுஜாக்கிரதையாக ஊழியம் செய்யவேண்டும். நாம் ஒருபோதும் மற்றவர்களுடைய மோசமான முன்மாதிரியைப் பார்த்து, அவர்களைப்போல ஊழியம் செய்யாமல்சோம்பேறிகளாயிருந்துவிடக்கூடாது.

எருசலேமின் அலங்கத்தை அநேகர் பழுதுபார்த்து கட்டுகிறார்கள். நெகேமியாவும் அவர்களோடு சேர்ந்து அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுகிறார். ஆனாலும் நெகேமியாவைப்பற்றி விசேஷமாக ஒன்றும் சொல்லப்படவில்லை. மற்றவர்களைப்போல நெகேமியாவின் பெயரும் சாதாரணமாகவே சொல்லப்பட்டிருக்கிறது.

"அவனுக்குப் பின்னாகப் பெத்சூர் மாகாணத்தின் பாதிக்குப் பிரபுவாகிய அஸ்பூகின் குமாரன் நெகேமியா தாவீதின் கல்லறைகளுக்கு எதிரான இடமட்டாகவும், வெட்டப்பட்ட குளமட்டாகவும், பராக்கிரமசாலி களின் வீடுமட்டாகவும் இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான்" (நெகே 3:16).

நெகேமியா ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருக்கவில்லை. அவர் மற்றவர்களைப்போல அலங்கத்தின் ஒரு குறிப்பிட்ட வாசல் பகுதியை கட்டி முடிக்காவிட்டாலும், மற்ற எல்லோரையும்விட இவர் அதிகமாய் வேலைசெய்கிறார். நெகேமியா அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுகிறவர்களின் வேலைகளை மேற்பார்வையிடுகிறார்.

எருசலேமின் அலங்கத்தை எடுத்துக் கட்டுகிறவர்கள் எந்தெந்த இடங்களில் வேலை செய்யவேண்டும் என்று, நெகேமியா தீர்மானம்பண்ணி, அவர்களை அந்தந்த இடங்களுக்கு அனுப்புகிறார். பராக்கிரமசாலிகளாயிருக்கிறவர்கள் அலங்கத்தை பழுதுபார்த்து கட்டுகிறவர் களுக்கு பாதுகாப்பாயிருக்கிறார்கள்.

"அன்றுமுதற்கொண்டு என் வேலைக்காரரில் பாதிப்பேர் வேலைசெய்தார்கள், பாதிப்பேர் ஈட்டிகளையும் பரிசைகளையும் வில்லுகளையும் கவசங்களையும் பிடித்து நின்றார்கள்; அதிகாரிகள் யூதா வம்சத்தார் எல்லாருக்கும் பின்னாக நின்றார்கள்" (நெகே 4:16).

அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுகிறவர்கள் சோர்வடையும்போது நெகேமியா அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி, அவர்களை உற்சாகப்படுத்துகிறார். வேலை நடக்கும் ஸ்தலங்களில் யாருக்காவது அதிக உதவி தேவைப்படும்போது, நெகேமியா அங்கே கூடுதலான ஆட்களை அனுப்புகிறார்.

எருசலேமைச் சுற்றிலுமிருக்கிற அலங்கம் இடிந்து பாழாய்க் கிடக்கிறது. அது நெகேமியாவின் மேற்பார்வையிலே பழுதுபார்க்கப்படுகிறது. இந்தக் கட்டுமான வேலைக்கு விரோதமாக சத்துருக்கள் யாராவதுவருகிறார்களா என்பதை நெகேமியா உன்னிப்பாய்க் கவனித்துக்கொண்டிருக்கிறார்.

கப்பல் ஓட்டுகிற மாலுமி துடுப்பை இயக்கவேண்டிய அவசியமில்லை. அவர் சுக்கானைப் பிடித்து படகை இயக்கவேண்டும். நெகேமியாவின் வேலை மிகவும் முக்கியமான வேலை. அவர் கட்டுமான வேலைகளில் அதிகமாய் ஈடுபடாவிட்டாலும், அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுகிறவர்களை சரியாக இயக்குகிறார். நெகேமியா ஒரு கப்பலின் மாலுமியைப்போல தன்னுடைய கடமையை கவனமாய் நிறைவேற்றுகிறார்.

4 அதிகாரம்

யூதர்கள் எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து எருசலேமின் அலங்கத்தைப் பழுதுபார்த்துக் கட்டுகிறார்கள். அலங்கத்தைக் கட்டுவது நல்ல வேலை. ஆனாலும் இந்த வேலைக்கு எதிர்ப்பு வருகிறது. நெகேமியாவோ எதிர்ப்பைப் பார்த்து தளர்ந்துபோகாமல், எருசலேமின் அலங்கத்தை பழுதுபார்த்து கட்டி முடிக்கிறார்.

இஸ்ரவேலரின் சத்துருக்கள் அலங்கத்தைக் கட்டுகிற யூதர்களை நிந்திக்கிறார்கள். அவர்கள் யூதர்களை அவமதிக்கிறார்கள். அலங்கத்தைக் கட்டுகிறவர்கள் சத்துருக்களின் நிந்தையை கர்த்தரிடத்தில் சொல்லி ஜெபம்பண்ணுகிறார்கள். சத்துருக்கள் நிந்தித்தாலும் யூதர்கள் எருசலேமின் அலங்கத்தை பழுதுபார்த்துக் கட்டுகிற வேலைகளை தொடர்ந்து செய்கிறார்கள் (நெகே 4:1-6).

யூதர்கள் அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுவதை நிறுத்துவதற்கு, அவர்களுடைய சத்துருக்கள் வேறொரு உபாயத்தைக் கையாளுகிறார்கள். யூதர்களுக்கு விரோதமாக ஆயுதம் ஏந்தி வந்து, அவர்களுடைய வேலைகளை தடுத்து நிறுத்தவேண்டும் என்று சத்துருக்கள் திட்டமிடுகிறார்கள் (நெகே 4:7,8,10-12). நெகேமியா சத்துருக்களுக்கு விரோதமாக ஜாமங்காக்கிறவர்களை இரவும் பகலும் காவல் காப்பதற்கு வைக்கிறார் (நெகே 4:9). இஸ்ரவேல் புத்திரர் அலங்கத்திற்கு பின்னாக ஈட்டிகளையும் வில்லுகளையும் பிடித்து தங்கள் ஜனத்திற்கு பாதுகாப்பாயிருக்கிறார்கள் (நெகே 4:13).

எருசலேமின் அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுகிறவர்கள் சோர்ந்துபோய்விடாதவாறு, நெகேமியா அவர்களை வார்த்தையினால் உற்சாகப்படுத்துகிறார் (நெகே 4:16). சத்துருக்களின் ஆலோசனைகள் முறியடிக்கப்படுகிறது (நெகே 4:15).

சத்துருக்களால் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக திடீரென்று எழும்பி வர முடியவில்லை. இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களை சந்திப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். எருசலேமின் அலங்கத்தை பழுதுபார்த்துக் கட்டுகிற வேலை தொடர்ந்து நடைபெறுகிறது (நெகே 4:16-23).

நிந்தை
நெகே 4:1-6

நெகே 4:1. நாங்கள் அலங்கத்தைக் கட்டுகிற செய்தியைச் சன்பல்லாத் கேட்டபோது, அவன் கோபித்து, எரிச்சலடைந்து, யூதரைச் சக்கந்தம்பண்ணி:

நெகே 4:2. அந்த அற்பமான யூதர் செய்கிறது என்ன, அவர்களுக்கு இடங்கொடுக்கப்படுமோ, பலியிடுவார்களோ, ஒரு நாளிலே முடித்துப்போடுவார்களோ, சுட்டெரித்துப் போடப்பட்டு மண்மேடுகளான கற்களுக்கு உயிர் கொடுப்பார்களோ என்று தன் சகோதரருக்கும் சமாரியாவின் சேனைக்கும் முன்பாகச் சொன்னான்.

நெகே 4:3. அப்பொழுது அம்மோனியனாகிய தொபியா அவன் பக்கத்தில் நின்று: அவர்கள் கட்டினாலும் என்ன, ஒரு நரி ஏறிப்போனால் அவர்களுடைய கல்மதில் இடிந்துபோகும் என்றான்.

நெகே 4:4. எங்கள் தேவனே, நாங்கள் அவமதிக்கப்படுகிறதைக் கேட்டு, அவர்கள் நிந்திக்கிற நிந்தையை அவர்கள் தலையின்மேல் திருப்பி, அவர்களைச் சிறையிருப்பின் தேசத்திலே சூறைக்கு ஒப்புக்கொடும்.

நெகே 4:5. அவர்கள் அக்கிரமத்தை மூடிப்போடாதேயும்; அவர்கள் பாவம் உமக்கு முன்பாகக் கொலைக்கப்படாதிருப்பதாக; கட்டுகிறவர்களுக்கு மனமடிவுண்டாகப் பேசினார்களே.

நெகே 4:6. நாங்கள் அலங்கத்தைக் கட்டிவந்தோம்; அலங்கமெல்லாம் பாதிமட்டும் ஒன்றாய் இணைந்து உயர்ந்தது; ஜனங்கள் வேலைசெய்கிறதற்கு ஆவலாயிருந்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எருசலேமைச் சுற்றிலும் அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுகிறார்கள். அவர்கள் அலங்கத்தைக் கட்டுகிற செய்தியைச் சன்பல்லாத் கேட்டபோது, அவன் கோபித்து, எரிச்சலடைந்து, யூதரைச் சக்கந்தம் பண்ணுகிறான் (நெகே 4:1). சன்பல்லாத்தோடு தொபியா என்பவனும் சேர்ந்துகொண்டு யூதர்களை நிந்திக்கிறான்.

சன்பல்லாத் யூதருக்கு விரோதமான வார்த்தைகளை தன் சகோதரருக்கும், சமாரியாவின் சேனைக்கு முன்பாகவும் சொல்லுகிறான். யூதர்களுக்கு எல்லா இடங்களிலும் சத்துருக்கள் இருக்கிறார்கள். அதே வேளையில் யூதர்களின் வேவுகாரர்களும் அந்த இடங்களிலெல்லாம் இருக்கிறார்கள். சன்பல்லாத் யூதருக்கு விரோதமாக சொன்ன செய்தி, வேவுகாரர்கள் மூலமாக நெகேமியாவுக்கு அறிவிக்கப்படுகிறது.

இஸ்ரவேலரின் சத்துருக்கள் கோபமாயிருக்கிறார்கள். அவர்கள் எரிச்சலாயிருக்கிறார்கள். நெகேமியா எருசலேமுக்கு வந்திருக்கிற செய்தியை ஓரானியனான சன்பல்லாத்தும், அம்மோனியனான தொபியா என்னும் ஊழியக்காரனும் கேட்டபோது, இஸ்ரவேல் புத்திரரின் நன்மையை விசாரிக்க ஒருவன் வந்தான் என்பது அவர்களுக்கு மிகவும் விசனமாயிருக்கிறது (நெகே 2:10).

நெகேமியா எருசலேமுக்கு வந்த செய்தியே, இஸ்ரவேலரின் சத்துருக்களுக்கு விசனமாயிருந்தது. இப்போது நெகேமியாவும் இஸ்ரவேல் புத்திரரும் எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற செய்தி, அவர்களுடைய சத்துருக்களுக்கு மிகவும் எரிச்சலாயிருக்கிறது. நெகேமியாவுக்கு சத்துருக்களின் கோபமும், எரிச்சலும் அறிவிக்கப்படுகிறது.

இஸ்ரவேலரின் சத்துருக்கள் யூதர்களை ஏளனமாகப் பேசுகிறார்கள். அவர்களை "அற்பமான யூதர்" என்று சொல்லுகிறார்கள். சன்பல்லாத் யூதருக்கு விரோதமாக எரிச்சலான வார்த்தைகளை சொல்லும்போது, "அந்த அற்பமான யூதர் செய்கிறது என்ன, அவர்களுக்கு இடங்கொடுக்கப்படுமோ, பலியிடுவார்களோ, ஒரு நாளிலே முடித்துப்போடுவார்களோ, சுட்டெரித்துப் போடப்பட்டு மண்மேடுகளான கற்களுக்கு உயிர் கொடுப்பார்களோ" (நெகே 4:2) என்று சொல்லுகிறான்.

எருசலேமின் அலங்கத்தை பழுதுபார்த்துக் கட்டுவது என்பது ஒரே நாளில் செய்து முடிக்கிற வேலையல்ல. ஆனால் சன்பல்லாத்தோ, யூதர்கள் அலங்கங்களை வேகமாகக் கட்டுவதைப் பார்த்து, "அவர்கள் ஒரே நாளில் முடித்துப்போடுவார்களோ" என்று கேட்கிறான்.

யூதர்கள் எருசலேமின் அலங்கத்தைக் கட்டி முடித்த பின்பு, கர்த்தருக்கு நன்றி சொல்லி அந்த அலங்கத்தைப் பிரதிஷ்டைபண்ணுவார்கள். அவர்கள் கர்த்தருக்கு பலிகளை செலுத்துவார்கள். யூதர்கள் கர்த்தருக்கு பலிசெலுத்துவதையும் சன்பல்லாத் ஏளனமாகச் சொல்லுகிறான். "அவர்கள் ஒரே நாளிலே அலங்கத்தைக் கட்டி முடித்து, பலியிட்டு, பிரதிஷ்டைபண்ணுவார்களோ" என்று சொல்லுகிறான்.

சன்பல்லாத் யூதருக்கு விரோதமான வார்த்தைகளை சொல்லுகிறபோது, அம்மோனியனாகிய தொபியா என்பவன் அவன் பக்கத்தில் நிற்கிறான். அவனும் யூதர்களை ஏளனம்பண்ணுகிறான். "அவர்கள் கட்டினாலும் என்ன, ஒரு நரி ஏறிப்போனால் அவர்களுடைய கல்மதில் இடிந்துபோகும்" (நெகே 4:3) என்று தொபியாவும் நிந்தையான வார்த்தைகளை சொல்லுகிறான்.

இஸ்ரவேல் புத்திரர் எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவதற்கு, அவர்களுக்கு சத்துருக்கள் மூலமாக ஏழுவிதமான எதிர்ப்புக்கள் வருகிறது. அதன் விவரம் வருமாறு:

1. கோபம் (நெகே 4:1)
2. சக்கந்தம்பண்ணுதல் (நெகே 4:1-3)
3. சதி பண்ணுவதும், யுத்தமும் (நெகே 4:7-8)
4. தொடர்ந்து அச்சுறுத்துதல் (நெகே 4:10-23)
5. பொல்லாப்பு (நெகே 6:1-4)
6. குற்றச்சாட்டு (நெகே 6:5-9)
7. ஏமாற்றுதல் (நெகே 6:10-14)

சத்துருக்கள் சொல்லுகிற ஏளனவார்த்தைகளையும், நிந்தையான வார்த்தைகளையும் கேட்டு, நெகேமியா அவர்களைப்போலவே அவர்களுக்கு பதில் வார்த்தைகளைச் சொல்லவில்லை. நெகேமியா சத்துருக்களுக்கு முன்பாக தன்னை உயர்த்துவதற்கு பதிலாக, கர்த்தருடைய சமுகத்திலே தன்னைத் தாழ்த்துகிறார். அவர் கர்த்தரிடத்தில் பயபக்தியோடு விண்ணப்பம்பண்ணுகிறார். சத்துருக்கள் சொன்ன நிந்தையான வார்த்தைகளையெல்லாம் கர்த்தருடைய சமுகத்திலே ஒப்புக்கொடுக்கிறார்.

நெகேமியா கர்த்தரை நோக்கி, "எங்கள் தேவனே, நாங்கள் அவமதிக்கப்படுகிறதைக் கேட்டு, அவர்கள் நிந்திக்கிற நிந்தையை அவர்கள் தலையின்மேல் திருப்பி, அவர்களைச் சிறையிருப்பின் தேசத்திலே சூறைக்கு ஒப்புக்கொடும்" (நெகே 4:4) என்று மிகுந்த பணிவோடு ஜெபம்பண்ணுகிறார்.

பழிவாங்குதல் கர்த்தருக்குரியது. நாம் யாரையும் பழிவாங்கக்கூடாது. நம்முடைய சத்துருக்களையும் சிநேகிக்கவேண்டும் என்பதும், அவர்களுக்காக ஜெபம்பண்ணவேண்டும் என்பதும் இயேசுகிறிஸ்துவின் உபதேசம். ஆனாலும் நெகேமியா தன்னுடைய மனதிலுள்ள வேதனைகளை கர்த்தரிடத்தில் மறைக்காமல் சொல்லுகிறார். "நாங்கள் அவமதிக்கப்படுகிறோம்" என்று நெகேமியா தங்களுடைய நிலமையை சொல்லுகிறார்.

சத்துருக்கள் அக்கிரமக்காரராயிருக்கிறார்கள். அவர்கள் எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற இஸ்ரவேல் புத்திரரை நிந்திக்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அவர்களை பழிவாங்கவேண்டுமென்று நெகேமியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

நெகேமியா கர்த்தரை நோக்கி, "எங்கள் தேவனே, அவர்கள் நிந்திக்கிற நிந்தையை அவர்கள் தலையின்மேல் திருப்பி, அவர்களைச் சிறையிருப்பின் தேசத்திலே சூறைக்கு ஒப்புக்கொடும். அவர்கள் அக்கிரமத்தை மூடிப்போடாதேயும்; அவர்கள் பாவம் உமக்கு முன்பாகக் கொலைக்கப்படாதிருப்பதாக" (நெகே 4:4,5) என்று சத்துருக்களுக்கு விரோதமாக கர்த்தரிடத்தில் பேசுகிறார்.

நெகேமியா இப்போது ஜெபத்தின் ஆவியினால் வழிநடத்தப்படாமல், தீர்க்கதரிசன ஆவியினால் வழிநடத்தப்படுகிறார். இங்கு சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகளை நெகேமியாவின் ஜெபவார்த்தைகள் என்று சொல்லுவதற்கு பதிலாக, கர்த்தர் நெகேமியா மூலமாக சொல்லுகிற தீர்க்கதரிசன வார்த்தைகள் என்று சொல்லலாம்.

நாம் கர்த்தருடைய சமுகத்தில், நம்முடைய சத்துருக்களுக்கு விரோதமாக இதுபோல ஜெபிக்க முடியாது. நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கும் நாம் நன்மை செய்யவேண்டும். தம்மை நிந்தித்தவர்களையும், தம்மை துன்பப்படுத்தினவர்களையும், தம்மை சிலுவையில் அறைந்தவர்களையும் இயேசுகிறிஸ்து சபிக்கவில்லை. கிறிஸ்துவானவர் அவர்களுக்காக பிதாவின் சமுகத்திலே பரிந்து பேசி ஜெபம்பண்ணுகிறார். "பிதாவே அவர்களுக்கு மன்னியும்" என்பதே கிறிஸ்துவின் ஜெபம். நம்முடைய சத்துருக்களுக்கு விரோதமாக நாம் ஏறெடுக்கவேண்டிய ஜெபமும் இதுபோலவே இருக்கவேண்டும்.

சத்துருக்கள் எருசலேமின் அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுகிறவர்களுக்கு மனமடிவுண்டாகப் பேசுகிறார்கள். அந்த நிந்தையான பேச்சுக்களைக் கேட்டு நெகேமியாவும், அவரோடுகூட அலங்கத்தைக் கட்டுகிறவர்களும் சோர்ந்துபோகவில்லை. சத்துருக்களின் பரியாச வார்த்தைகளைக் கேட்டு, அவர்கள் மனமுடைந்து, தாங்கள் செய்கிற நல்ல வேலைகளை நிறுத்திவிடவில்லை.

நெகேமியா சத்துருக்களின் நிந்தையான வார்த்தைகளை கர்த்தரிடத்தில் சொல்லியபின்பு, அலங்கத்தைக் கட்டுகிற வேலையை தடையில்லாமல் தொடர்ந்து செய்கிறார்.

அவர்கள் அலங்கத்தைக் கட்டிவருகிறார்கள்; அலங்கமெல்லாம் பாதிமட்டும் ஒன்றாய் இணைந்து உயருகிறது; ஜனங்கள் வேலைசெய்கிறதற்கு ஆவலாயிருக்கிறார்கள் (நெகே 4:6). அவர்கள் தங்கள் வேலைகளை வேகமாய்ச் செய்கிறார்கள். மிகவும் குறுகிய காலத்தில் அலங்கத்தில் பாதி உயரமட்டும் கட்டி முடித்துவிடுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரின் கைகள் திடப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்களுடைய மனதும் ஒருமனப்பட்டிருக்கிறது.

சத்துருக்களின் ஆலோசனை நெகே 4:7-15

நெகே 4:7. எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலை வளர்ந்தேறுகிறது என்றும், இடிக்கப்பட்ட இடங்கள் அடைபட்டு வருகிறது என்றும் சன்பல்லாத்தும், தொபியாவும், அரபியரும், அம்மோனியரும், அஸ்தோத்தியரும் கேட்டபோது, அவர்கள் மிகவும் எரிச்சலாகி,

நெகே 4:8. எருசலேமின்மேல் யுத்தம்பண்ண எல்லாரும் ஏகமாய் வரவும், வேலையைத் தடுக்கவும் கட்டுப்பாடு பண்ணினார்கள்.

நெகே 4:9. ஆனாலும் நாங்கள் எங்கள் தேவனை நோக்கி ஜெபம்பண்ணி, அவர்கள் நிமித்தம் இரவும்பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைத்தோம்.

நெகே 4:10. அப்பொழுது யூதா மனிதர்: சுமைகாரரின் பெலன் குறைந்துபோகிறது; மண்மேடு மிச்சமாயிருக்கிறது; நாங்கள் அலங்கத்தைக் கட்டக்கூடாது என்றார்கள்.

நெகே 4:11. எங்கள் சத்துருக்களோவென்றால்: நாங்கள் அவர்கள் நடுவே வந்து, அவர்களைக் கொன்றுபோடுமட்டும், அவர்கள் அதை அறியாமலும் பாராமலும் இருக்கவேண்டும்; இவ்விதமாய் அந்த வேலையை ஓயப்பண்ணுவோம் என்றார்கள்.

நெகே 4:12. அதை அவர்களண்டையிலே குடியிருக்கிற யூதரும், பல இடங்களிலுமிருந்து எங்களிடத்துக்கு வந்து, பத்துவிசை எங்களுக்குச் சொன்னார்கள்.

நெகே 4:13. அப்பொழுது நான்: அலங்கத்துக்குப் பின்னாக இருக்கிற பள்ளமான இடங்களிலும் மேடுகளிலும், பட்டயங்களையும், ஈட்டிகளையும், வில்லுகளையும் பிடித்திருக்கிற ஜனங்களைக் குடும்பங்குடும்பமாக நிறுத்தினேன்.

நெகே 4:14. அதை நான் பார்த்து எழும்பி, பிரபுக்களையும் அதிகாரிகளையும் மற்ற ஜனங்களையும் நோக்கி: அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்; நீங்கள் மகத்துவமும் பயங்கரமுமான ஆண்டவரை நினைத்து, உங்கள் சகோதரருக்காகவும், உங்கள் குமாரருக்காகவும், உங்கள் மனைவிகளுக்காகவும், உங்கள் வீடுகளுக்காகவும் யுத்தம்பண்ணுங்கள் என்றேன்.

நெகே 4:15. எங்களுக்குச் செய்தி தெரியவந்ததென்றும், தேவன் அவர்கள் ஆலோசனையை அபத்தமாக்கினாரென்றும், எங்கள் பகைஞர் கேட்டபோது, நாங்கள் எல்லாரும் அவரவர் தங்கள் வேலையைச் செய்ய அலங்கத்துக்குத் திரும்பினோம்.

யூதர்களின் சத்துருக்கள் அவர்களுக்கு விரோதமாக சதிஆலோசனை பண்ணுகிறார்கள். எருசலேமின் அலங்கத்தை பழுதுபார்த்துக் கட்டுகிற வேலையை நிறுத்துவதற்கு, சத்துருக்கள் யூதர்கள்மீது யுத்தம்பண்ணவும், யூதர்களைக் கொன்றுபோடவும் சதிபண்ணுகிறார்கள். ஆரம்பத்தில் சன்பல்லாத், தொபியா ஆகிய இருவர் மாத்திரமே யூதருக்கு விரோதமாக நிந்தையான வார்த்தைகளைப் பேசினார்கள். இப்போதோ சத்துருக்களோடு அநேகர் சேர்ந்துகொள்கிறார்கள்.

எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலை வளர்ந்தேறுகிறது என்றும், இடிக்கப்பட்ட இடங்கள் அடைபட்டு வருகிறது என்றும் சன்பல்லாத்தும், தொபியாவும், அரபியரும், அம்மோனியரும், அஸ்தோத்தியரும் கேட்டபோது, அவர்கள் மிகவும் எரிச்சலாகிறார்கள். அவர்கள் எருசலேமின்மேல் யுத்தம்பண்ண எல்லாரும் ஏகமாய் வரவும், வேலையைத் தடுக்கவும் கட்டுப்பாடு பண்ணுகிறார்கள் (நெகே 4:7,8).

"அஸ்தோத்தியர்" என்பவர்கள் பெலிஸ்தரில் மீதமானவர்கள். இஸ்ரவேல் புத்திரரின் சத்துருக்கள் எல்லோரும் அவர்கள்மீது யுத்தம் பண்ண ஏகமாய் வருகிறார்கள். ஆனால் யூதர்களோ கர்த்தரிடத்தில் தொடர்ந்து ஜெபிக்கிறார்கள். தங்களுடைய சத்துருக்களுக்கு எதிராக மிகுந்த எச்சரிப்போடும் இருக்கிறார்கள். இதனால் அவர்கள்மீது வந்த யுத்த அச்சுறுத்தல்கள் நின்று போயிற்று (நெகே 4:7-12).

சத்துருக்களுக்கு யூதர்கள்மீது கோபமும் எரிச்சலும் வருகிறது. யூதர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை ஆராதிக்கிறார்கள். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கிறார். யூதர்கள் செழித்திருக்கிறார்கள். யூதர்கள் நன்றாயிருப்பது அவர்களுடைய சத்துருக்களுக்கு பிடிக்கவில்லை. சத்துருக்கள் பொறாமையினாலே, யூதர்களை அழிக்கவேண்டும் என்று சதிபண்ணுகிறார்கள்.

தீயகுணமுள்ளவர்கள் நல்ல வேலைகளை தடுத்து நிறுத்தவேண்டும் என்று நினைப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் தீயயோசனைகளினால் தங்களைத் தாங்களே உற்சாகப்படுத்திக்கொள்வார்கள். நல்ல வேலை எப்பொழுதுமே கர்த்தருடைய வேலையாயிருக்கிறது. கர்த்தர் செய்ய நினைக்கிற காரியத்தை யாராலும் தடைபண்ண முடியாது. நல்ல வேலைகள் எப்போதுமே விருத்தியடையும்.

இஸ்ரவேலின் சத்துருக்கள் எருசலேமின்மேல் யுத்தம்பண்ண வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள். யூதர்கள் எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவதை தடுக்கவேண்டுமென்று, அவர்களுடைய சத்துருக்கள் அவர்களுக்கு விரோதமாக எழும்பி வருகிறார்கள். இது சத்துருக்களின் சுபாவம். சத்துருக்கள் இப்படித்தான் யோசிப்பார்கள் என்பதும், இப்படித்தான் செய்வார்கள் என்பதும் மறைக்க முடியாத இரகசியம்.

ஆனால் எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற யூதர்களே, அந்த வேலைக்கு தடையாயிருக்கிறார்கள். அந்த வேலையை செய்கிறதற்கு ஆவலாயிருக்கிறவர்களை, சோர்வடையச் செய்கிறார்கள். சத்துருக்கள் "யூதர்களுடைய வேலையைத் தடுப்போம்" என்று சொல்லும்போது, யூதர்களும், "நாங்கள் அலங்கத்தைக் கட்டக்கூடாது" (நெகே 4:10) என்று சொல்லுகிறார்கள்.

தங்களால் அலங்கத்தைக் கட்ட முடியவில்லையென்றும், சுமைகாரரின் பெலன் குறைந்துபோகிறது என்றும், மண்மேடு மிச்சமாயிருக்கிறது என்றும் யூதாமனிதர் நெகேமியாவிடம் குறை சொல்லுகிறார்கள். சுமைகாரரின் பெலன் குறைந்துபோனதினால், அவர்கள் களைப்படைந்து சோர்ந்துபோயிருக்கிறார்கள்.

சுமைகாரர்கள் மண்மேடுகளை அகற்றவேண்டும். அலங்கத்தைக் கட்டும்போது கீழே விழுந்துகிடக்கிற குப்பைகளையும், தேவையற்ற பொருட்களையும் அகற்றுவது சுமைகாரரின் வேலை. ஆனால் மண்மேடு அதிகமாயிருக்கிறது. சுமைகாரரால் அதை சுமந்து அகற்ற முடியவில்லை. ஆகையினால் இப்போது அலங்கத்தைக் கட்டுவதை நிறுத்திவிடலாம் என்று யூதாமனுஷர் சொல்லுகிறார்கள். இவர்களுடைய வார்த்தை, சத்துருக்களின் வார்த்தைக்கு ஆதரவாயிருக்கிறது.

எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவது மிகவும் நல்ல வேலை. அது கர்த்தருடைய வேலை. நெகேமியா இந்த வேலைக்கு பொறுப்பான தலைவராயிருக்கிறார். இந்த வேலையை துரிதமாய் செய்வதற்கு, சத்துருக்கள் மூலமாகவும் பிரச்சனைகள் வருகிறது. யூதாமனுஷர் மூலமாகவும் பிரச்சனை வருகிறது.

ஊழியத்தில் தலைவராகயிருக்கிறவர்கள், இப்படிப்பட்ட இரட்டிப்பான பிரச்சனைகளை சந்திக்க வேண்டியது வரும். தன்னோடுகூட ஊழியம் செய்கிறவர்கள் பயப்படும்போதும், சத்துருக்கள் பயப்படுத்தும்போதும் தலைவர்களுக்கு பிரச்சனை வரும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மனுஷருக்கு பயப்படக்கூடாது. கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள். ஊழியக்காரர்கள் பலவீனமாயிருந்து, பயப்படும்போது, அவர்கள் மூலமாக அவர்களுடைய தலைவர்களுக்கு நிச்சயமாகவே பிரச்சனைகள் வரும்.

நெகேமியாவுக்கு இப்போது சத்துருக்கள் மூலமாகவும் பிரச்சனைகள் வந்திருக்கிறது. யூதாமனுஷர் மூலமாகவும் பிரச்சனைகள் வந்திருக்கிறது. நெகேமியா சத்துருக்களின் பிரச்சனையை சமாளிப்பதற்கு கர்த்தருடைய உதவியை எதிர்பார்க்கிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணுகிறார்கள். தங்களுக்கு விரோதமாக எழும்பி வருகிற சத்துருக்களினிமித்தம், அவர்கள் இரவும் பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைக்கிறார்கள் (நெகே 4:9).

சத்துருக்களின் சதிஆலோசனைகள் நெகேமியாவுக்கு அறிவிக்கப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரரின் சத்துருக்கள், "நாங்கள் அவர்கள் நடுவே வந்து, அவர்களைக் கொன்றுபோடுமட்டும், அவர்கள் அதை அறியாமலும் பாராமலும் இருக்கவேண்டும்; இவ்விதமாய் அந்த வேலையை ஓயப்பண்ணுவோம்" (நெகே 4:11) என்று தங்களுக்குள்ளே சதிஆலோசனை பண்ணுகிறார்கள்.

சத்துருக்களின் சதிஆலோசனையை அவர்கள் அண்டையிலே குடியிருக்கிற யூதர்கள் நெகேமியாவுக்கு வந்து அறிவிக்கிறார்கள். இந்த யூதர்கள் இஸ்ரவேல் தேசத்தின் பல இடங்களிலும் குடியிருக்கிறவர்கள். பக்தியுள்ள யூதர்கள் எருசலேமில் அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டும்போது, இந்த யூதர்கள் அந்த நல்ல வேலைக்கு தங்களுடைய கைகளை திடப்படுத்தவில்லை. அவர்கள் அலங்கத்தைக் கட்டுகிற வேலையில் பங்குபெறாமல், தங்கள் சத்துருக்கள் அண்டையில் குடியிருக்கிறார்கள்.

இந்த யூதர்கள் அலங்கத்தைக் கட்டுகிறவர்களுக்கு உதவியாக வேலை செய்ய முன்வரவில்லை. அலங்கத்தைக் கட்டுவதில் இவர்களுடைய பங்கு ஒன்றுமில்லை. அலங்கத்தைக் கட்டுவதற்காக இவர்கள் எருசலேமுக்கு வரவுமில்லை. ஆனாலும் அலங்கத்தைக் கட்டுகிற யூதர்களுக்கு விரோதமாக, சத்துருக்கள் சதிஆலோசனை பண்ணும்போது, அவர்கள் அண்டையில் குடியிருக்கிற இந்த யூதர்கள், சத்துருக்களின் சதிஆலோசனைகளை கேள்விப்பட்டு, அதை எருசலேமிலே வந்து அறிவிக்கிறார்கள்.

சத்துருக்களின் சதிஆலோசனையை சொல்ல வருகிற யூதர்கள், பல இடங்களிலுமிருந்து எருசலேமுக்கு வருகிறார்கள். அவர்கள் சத்துருக்களின் சதிஆலோசனையை பத்து விசை நெகேமியாவுக்கும், அவரோடுகூட எருசலேமின் அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுகிறவர்களுக்கும் சொல்லுகிறார்கள். இவர்கள் கட்டுகிற வேலையில் உதவிசெய்யா விட்டாலும், அலங்கத்தைக் கட்டுவதற்கு தடைபண்ணுகிற சதிஆலோசனைகளை அவர்களுக்கு தெரியப்படுத்தி, ஏதோ ஒரு வழியில் உதவி செய்கிறார்கள். அவர்கள் பத்துவிசை எருசலேமுக்கு வந்து சத்துருக்களின் சதிஆலோசனையைப்பற்றி, அலங்கத்தைக் கட்டுகிறவர்களுக்கு சொல்லியிருப்பதினால், அவர்களுக்கும் எருசலேம் நகரத்தின்மீது பிரியம் இருப்பது தெரிகிறது.

சத்துருக்கள் அண்டையில் குடியிருக்கிற யூதர்கள், அலங்கத்தைக் கட்டுகிற வேலையிலே நேரடியாக ஈடுபட்டு உதவிசெய்யாவிட்டாலும், அவர்கள் அலங்கத்தைக் கட்டுகிறவர்களுக்கு வேவுகாரர்களைப்போல உதவிசெய்கிறார்கள்.

சத்துருக்கள் இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே வந்து அவர்களை கொன்றுபோடவேண்டும் என்பதும், இந்த சதியை இஸ்ரவேலர் அறியாமலும் பாராமலும் இருக்கவேண்டும் என்பதும், எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலையை ஓயப்பண்ணவேண்டும் என்பதும் சத்துருக்களின் சதிஆலோசனை. ஆனால் அவர்களுடைய சதியை அவர்கள் அண்டையில் குடியிருக்கிற யூதர்கள், எருசலேமிலே அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுகிறவர்களுக்கு அறிவிக்கிறார்கள். கர்த்தருக்கு மீதமானவர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள்.

சத்துருக்களின் சதிஆலோசனையை முறியடிப்பதற்கு, நெகேமியா தன்னுடைய சுயபலத்தை நம்பவில்லை. அவர் கர்த்தரையே நம்புகிறார். எருசலேமின் அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுகிற வேலை தடையில்லாமல் நடைபெறவேண்டும். அந்த நல்ல வேலை பூரணமாக முடிவுபெறவேண்டும். அலங்கத்தைக் கட்டுகிறவர்களுக்கும் உயிர்ச்சேதாரம் வரக்கூடாது. அவர்களுக்கும் பாதுகாப்பு தேவை.

சத்துருக்களண்டையிலே குடியிருக்கிற யூதர்கள், நெகேமியாவினிடத்திலும், அலங்கத்தைக் கட்டுகிறவர்களிடத்திலும், சத்துருக்களின் சதிஆலோசனையைப்பற்றிச் சொல்லுகிறார்கள். அப்பொழுது, "அதை நான் பார்த்து எழும்பி" (நெகே 4:16) என்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

நெகேமியா பரலோகத்தின் தேவனை நோக்கிப் பார்க்கிறார். தன்னையும், தான் செய்கிற வேலையையும் தேவனுடைய தெய்வீக பாதுகாப்புக்கு ஒப்புக்கொடுக்கிறார். அலங்கத்தைக் கட்டுகிறவர்கள், தங்கள் தேவனை நோக்கி ஜெபம்பண்ணியிருக்கிறார்கள் (நெகே 4:9).

கர்த்தருடைய பிள்ளைகள் எந்த வேலையை செய்தாலும், அந்த வேலையை கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணிவிட்டுத்தான் ஆரம்பிப்பார்கள். நாம் செய்கிற வேலைகளை கர்த்தருடைய கரத்திலே ஒப்புக்கொடுக்கவேண்டும். கர்த்தரே நம்மையும், நாம் செய்கிற வேலைகளையும் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டுமென்று ஜெபம்பண்ணி, கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும்.

நெகேமியா தன்னுடைய துக்கங்களையும், பயங்களையும், கவலைகளையும் கர்த்தருடைய சமுகத்திலே ஒப்புக்கொடுக்கிறார். இதனால் அவருடைய இருதயம் பாரமில்லாமல் இலகுவாயிருக்கிறது. நெகேமியா சத்துருக்களைப்பற்றிக் கேள்விப்படும்போது, அவர் செய்கிற முதல் காரியம், "அவர் கர்த்தரை நோக்கிப் பார்த்ததுதான்".

இஸ்ரவேல் புத்திரரின் பாதுகாப்புக்காக, நெகேமியா மற்ற காரியங்களை நோக்கிப் பார்ப்பதற்கு முன்பாக, அவர் கர்த்தரை நோக்கிப் பார்க்கிறார். அவர் சத்துருக்களுக்கு விரோதமாக ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு முன்பாக, கர்த்தரிடத்தில் தான் ஏறெடுக்கிற ஜெபத்தைப் பயன்படுத்துகிறார். நாமும் எந்த வேலையை செய்தாலும், அந்த வேலையை கர்த்தரோடு ஆரம்பிக்கவேண்டும்.

நெகேமியா கர்த்தரை நோக்கிப் பார்த்த பின்பு, தன்னைச் சுற்றிலும் பார்க்கிறார். அவர் பிரபுக்களையும், அதிகாரிகளையும், மற்ற ஜனங்களையும் நோக்கிப் பார்க்கிறார்.

விசுவாசிகளாகிய நமக்கும் ஆவிக்குரிய யுத்தமுள்ளது. இது மாம்சப் பிரகாரமான யுத்தமல்ல. இந்த யுத்தத்தை எப்படி செய்யவேண்டுமென்று இயேசுகிறிஸ்து நமக்கு கற்றுக்கொடுத்திருக்கிறார்.

"நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்" *(மத் 26:41).*

இயேசுகிறிஸ்து சொன்ன பிரகாரம், நம்முடைய ஆவிக்குரிய யுத்தத்தில், நாம் விழித்திருந்து ஜெபம்பண்ண வேண்டும். இவ்விரண்டும் சேர்ந்து நடைபெற்றால்தான், யுத்தத்தில் நமக்கு ஜெயம் கிடைக்கும். விழித்திருக்காமல், ஜெபித்தால் மாத்திரம் போதும் என்று நினைக்கக்கூடாது. ஜெபம்பண்ணினால் மாத்திரம் போதும், ஆவிக்குரிய யுத்தத்திலே நமக்கு ஜெயம் கிடைக்கும் என்று நினைக்கக்கூடாது. விழித்திருக்காமல், ஜெபிப்பதை மாத்திரம் செய்கிறவர்கள், சோம்பேறிகளாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை சோதித்துப் பார்க்கிறார்கள்.

நம்முடைய ஆவிக்குரிய யுத்தத்தில் நாம் ஜெபம்பண்ணாமல், விழித்திருந்தால் மாத்திரம் போதுமானது என்றும் நினைக்கக் கூடாது. இது நம்முடைய இருதயத்தின் பெருமையினால் உண்டாகிற சிந்தனை. நம்முடைய சிந்தனை இவ்வாறு இருக்குமென்றால், நாம் கர்த்தருடைய கிருபையை அசட்டைபண்ணுகிறவர்களாயிருப்போம்.

நம்முடைய ஆவிக்குரிய யுத்தங்களில் நாம் ஜெயம்பெறவேண்டுமென்றால், இயேசுகிறிஸ்து நமக்கு கட்டளையாக சொன்னதுபோல "விழித்திருந்து ஜெபம்பண்ணவேண்டும்". இவ்விரண்டில் ஏதாவது ஒன்று நம்மிடத்தில் காணப்படவில்லையென்றாலும், நமக்கு கர்த்தருடைய பாதுகாப்பு கிடைக்காது.

நெகேமியா சத்துருக்களின் சதிஆலோசனையை கேள்விப்பட்டபோது, அவர் கர்த்தரை நோக்கிப் பார்க்கிறார். இது கர்த்தரிடத்தில் ஏறெடுக்கிற ஜெபம். அதன் பின்பு அவர் இஸ்ரவேல் ஜனங்களை நோக்கிப் பார்க்கிறார். அலங்கத்தின் பாதுகாப்புக்கும், அதைக் கட்டுகிறவர்களின் பாதுகாப்புக்கும் என்ன செய்யவேண்டும் என்று, கர்த்தருடைய ஆலோசனையைப் பெற்றுக்கொள்கிறார். நெகேமியா அதன் பிரகாரம் செயல்படுகிறார். இது விழித்திருப்பதாகும்.

நெகேமியா கர்த்தரையும் ஜனங்களை நோக்கிப் பார்த்த பின்பு, அலங்கத்துக்குப் பின்னாக இருக்கிற பள்ளமான இடங்களிலும் மேடுகளிலும், பட்டயங்களையும், ஈட்டிகளையும், வில்லுகளையும் பிடித்திருக்கிற ஜனங்களைக் குடும்பங்குடும்பமாக நிறுத்துகிறார் *(நெகே 4:13).*

மேடுகளில் நிறுத்தப்பட்டிருக்கிறவர்கள், சத்துருக்களை தூரத்தில் வரும்போதே கண்டுபிடித்துவிடுவார்கள். எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலை பாதியளவு முடிந்த நிலமையிலுள்ளது. ஆகையினால் எல்லோருமே பள்ளமான இடங்களில் நிறுத்தப்பட்டால், சத்துருக்கள் வருவதைப் பார்க்க முடியாது. மேட்டிலும் பாதுகாப்பு தேவைப்படுகிறது. பள்ளத்திலும் பாதுகாப்பு தேவைப்படுகிறது.

சத்துருக்கள் தங்களுக்கு விரோதமாக வரும்போது, மேட்டிலிருக்கிறவர்கள் அவர்கள்மீது ஈட்டிகளை எறியலாம். பெரிய கற்களை அவர்கள்மீது தூக்கிப்போட்டு, அவர்களைத் தாக்கலாம். சத்துருக்கள் ஒருவேளை அலங்கத்தின் தாழ்வான பகுதிக்கு வந்தால், பள்ளமான இடங்களில் நிறுத்தப்பட்டிருக்கிறவர்கள். அவர்களோடு யுத்தம்பண்ணலாம்.

நெகேமியா இஸ்ரவேல் ஜனங்களை குடும்பம் குடும்பமாக நிறுத்துகிறார். அவர்கள் எல்லோருமே உற்றார் உறவினர்கள். உறவுமுறையிலிருக்கிறவர்கள், ஒருவருக்கொருவர் உதவியாயிருப்பார்கள்.

நெகேமியா சத்துருக்களுக்கு விரோதமாக இஸ்ரவேல் புத்திரரை நிறுத்திய பின்பு, அவர்களுக்கு உற்சாகமான வார்த்தைகளைச் சொல்லுகிறார். "அவர்களுக்கு பயப்படாதிருங்கள்" என்பதே நெகேமியா அவர்களுக்கு சொல்லுகிற முதலாவது வார்த்தை. இஸ்ரவேல் புத்திரர் தங்களை பராக்கிரமசாலிகளாக நினைத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் எல்லோருமே கர்த்தருடைய சேனையில் பணிபுரிகிறவர்கள். மகத்துவமும் பயங்கரமுமான ஆண்டவரே அவர்களுடைய படைத்தளபதியாயிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களைப் பார்த்து ஒருவேளை பயப்படலாம். அவர்களுடைய கண்களுக்கு, சத்துருக்கள் பெரியவர்களாகவும், பயங்கரமானவர்களாகவும் தெரியலாம். ஆனாலும் அவர்களை தங்கள் கர்த்தரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சத்துருக்கள் மிகவும் சாதாரணமானவர்கள். அவர்களால் கர்த்தருக்கு விரோதமாக எழும்பி நிற்கவும் முடியாது. கர்த்தரோடு அவர்களால் யுத்தம்பண்ணவும் முடியாது.

கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்கு பயங்கரமானவராயிருக்கிறார். கர்த்தர் சத்துருக்களைக் கீழ்ப்படுத்துகிறவர். கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, கர்த்தருடைய மகத்துவமும், பயங்கரமும் வெளிப்படும். நம்மிடத்தில் மனுஷர் பயம் இருக்கக்கூடாது என்றால், நமக்குள்ளே கர்த்தருக்கு பயப்படும் பயம் இருக்கவேண்டும். மனுஷருக்கு பயப்படும் பயம் என்னும் கண்ணியில் விழாதிருக்கவேண்டுமென்றால், கர்த்தருக்கு பயப்படும் பயம் நம்மை ஆளுகைசெய்யவேண்டும்.

நெகேமியா இஸ்ரவேல் புத்திரருக்கு உற்சாகமான வார்த்தைகளையும், அவர்களை தைரியப்படுத்தும் வார்த்தைகளையும் சொல்லுகிறார். நெகேமியா அவர்களை நோக்கி, "நீங்கள் மகத்துவமும் பயங்கரமுமான ஆண்டவரை நினைத்து, உங்கள் சகோதரருக்காகவும், உங்கள் குமாரருக்காகவும், உங்கள் மனைவிகளுக்காகவும், உங்கள் வீடுகளுக்காகவும் யுத்தம்பண்ணுங்கள்" (நெகே 4:14) என்று சொல்லுகிறார்.

நெகேமியா சத்துருக்களை எதிர்த்து நிற்க ஆயத்தமாயிருக்கிறார். இதனால் சத்துருக்களுக்கு ஏமாற்றமுண்டாயிற்று. தாங்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக வருவதை, அவர்கள் அறியாமலும் பாராமலும் இருக்கவேண்டும் (நெகே 4:11) என்று சத்துருக்கள் நினைத்தார்கள். ஆனால் அவர்களுடைய சதிஆலோசனைகளை அவர்கள் அண்டையில் குடியிருக்கிற யூதர்கள் நெகேமியாவுக்கு அறிவித்துவிடுகிறார்கள்.

சத்துருக்கள் தங்களுக்கு விரோதமாக வரும் செய்தியை இஸ்ரவேல் புத்திரர் தெரிந்துகொள்கிறார்கள். அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் சத்துருக்களின் ஆலோசனையை அபத்தமாக்கியிருக்கிறார். இதையெல்லாம் சத்துருக்கள் கேள்விப்பட்டபோது, அவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும் யோசனையை கைவிட்டுவிடுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் அவரவர் தங்கள் வேலையை செய்ய அலங்கத்திற்கு திரும்புகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரை, அவர்கள் எதிர்பாராத வேளையில் திடீரென்று தாக்கினால்தான், அவர்களுக்கு விரோதமாக தங்களால் யுத்தம்பண்ண முடியும் என்பதை சத்துருக்கள் அறிந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய சதிஆலோசனை இஸ்ரவேல் புத்திரருக்கு தெரிந்துவிடுகிறது. சத்துருக்களால் இஸ்ரவேலருக்கு விரோதமாக திடீரென்று வந்து, அவர்களை கலங்கப்பண்ண முடியாது. இவ்வாறாக கர்த்தருடைய கிருபையினால், சத்துருக்களின் சதிஆலோசனை முறியடிக்கப்படுகிறது.

கர்த்தருடைய கிருபை தங்கள்மேல் இருக்கிறது என்பதை உணர்ந்து, இஸ்ரவேல் புத்திரர் அலங்கத்தைப் பழுதுபார்க்கிற வேலையை உற்சாகமாகச் செய்கிறார்கள். அவர்கள் சந்தோஷமாகவும் கர்த்தருடைய வேலையை செய்கிறார்கள்.

கட்டுகிறவர்களின் ஆயத்தம்
நெகே 4:16-23

நெகே 4:16. அன்றுமுதற்கொண்டு என் வேலைக்காரரில் பாதிப்பேர் வேலைசெய்தார்கள், பாதிப்பேர் ஈட்டிகளையும் பரிசைகளையும் வில்லுகளையும் கவசங்களையும் பிடித்து நின்றார்கள்; அதிகாரிகள் யூதா வம்சத்தார் எல்லாருக்கும் பின்னாக நின்றார்கள்.

நெகே 4:17. அலங்கத்திலே கட்டுகிறவர்களும், சுமைசுமக்கிறவர்களும், சுமையேற்றுகிறவர்களும், அவரவர் ஒரு கையினாலே வேலைசெய்து, மறுகையினாலே ஆயுதம் பிடித்திருந்தார்கள்.

நெகே 4:18. கட்டுகிறவர்கள் அவரவர் தங்கள் பட்டயத்தைத் தங்கள் இடுப்பிலே கட்டிக்கொண்டவர்களாய் வேலைசெய்தார்கள்; எக்காளம் ஊதுகிறவன் என்னண்டையிலே நின்றான்.

நெகே 4:19. நான் பிரபுக்களையும் அதிகாரிகளையும் மற்ற ஜனங்களையும் நோக்கி: வேலை பெரிதும் விஸ்தாரமுமாயிருக்கிறது; நாம் அலங்கத்தின்மேல் சிதறப்பட்டு ஒருவருக்கு ஒருவர் தூரமாயிருக்கிறோம்.

நெகே 4:20. நீங்கள் எவ்விடத்திலே எக்காளச் சத்தத்தைக் கேட்கிறீர்களோ அவ்விடத்திலே வந்து, எங்களோடே கூடுங்கள்; நம்முடைய தேவன் நமக்காக யுத்தம்பண்ணுவார் என்றேன்.

நெகே 4:21. இப்படியே நாங்கள் வேலை செய்துகொண்டிருந்தோம்; அவர்களிலே பாதிப்பேர் கிழக்கு வெளுக்கும் நேரமுதல் நட்சத்திரங்கள் காணுமட்டும் ஈட்டிகளைப் பிடித்திருந்தார்கள்.

நெகே 4:22. அக்காலத்திலே நான் ஜனங்களைப் பார்த்து: இராமாறு நமக்குக் காவலுக்கும் பகல்மாறு வேலைக்கும் உதவ, அவரவர் தங்கள் வேலைக்காரரோடுங்கூட எருசலேமுக்குள்ளே இராத்தங்கக்கடவர்கள் என்று சொல்லி,

நெகே 4:23. நானாகிலும், என் சகோதரராகிலும், என் வேலைக்காரராகிலும், என்னைப் பின்பற்றி காவல்காக்கிற சேவகராகிலும் எங்கள் வஸ்திரங்களைக் களைந்துபோடாதிருந்தோம்; அவரவருக்கு ஆயுதமும் தண்ணீரும் இருந்தது.

சத்துருக்களின் சதிஆலோசனை முறிந்துபோயிற்று என்பதை அலங்கத்தைக் கட்டுகிறவர்கள் அறிந்துகொள்கிறார்கள். அவர்கள் எல்லோரும், அவரவர் தங்கள் வேலையை செய்ய அலங்கத்திற்கு திரும்புகிறார்கள். ஆனாலும் அவர்கள் தங்கள் ஆயுதங்களை கீழே போடவில்லை. சத்துருக்கள் தங்களுக்கு விரோதமாக மறுபடியும் வந்தால், அவர்களை எதிர்ப்பதற்கும், தங்களைப் பாதுகாப்பதற்கும் இஸ்ரவேல் புத்திரர் ஆயுதம் ஏந்தி ஆயத்தமாயிருக்கிறார்கள்.

அன்றுமுதற்கொண்டு நெகேமியாவின் வேலைக்காரரில் பாதிப்பேர் வேலைசெய்கிறார்கள், பாதிப்பேர் ஈட்டிகளையும் பரிசைகளையும் வில்லுகளையும் கவசங்களையும் பிடித்து நிற்கிறார்கள் (நெகே 4:16). ஆயுதம் ஏந்தியிருக்கிறவர்கள் தங்களுடைய பாதுகாப்புக்காக மாத்திரமல்ல, அலங்கத்தைக் கட்டுகிறவர்களின் பாதுகாப்புக்காகவும் அங்கே நிற்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு ஆபத்து வரும்போது, வேலை செய்கிற பாதிப்பேர், தங்களுடைய வேலைகளை உடனே நிறுத்திவிட்டு, அவர்களும் ஆயுதங்களை ஏந்தி சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆயுதம் ஏந்தியிருக்கிற பாதிப்பேர், வேலைசெய்கிறவர்களுக்கு யுத்த ஆபத்தின் செய்தியை சொன்னவுடனே, அவர்கள் எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து, சத்துருக்களுக்கு விரோதமாய்க் கூடிக்கொள்வார்கள்.

அலங்கத்திலே கட்டுகிறவர்களும், சுமைசுமக்கிறவர்களும், சுமையேற்றுகிறவர்களும், அவரவர் ஒரு கையினாலே வேலைசெய்து, மறுகையினாலே ஆயுதம் பிடித்திருக்கிறார்கள் (நெகே 4:17).

ஆயுதம் பிடித்திருக்கிறவர்களும், அலங்கத்தில் வேலை செய்கிறவர்களும், தங்களுடைய வேலையின் நேரத்தை பகிர்ந்துகொள்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட வேளை வரையிலும் ஆயுதம் பிடித்திருக்கிறவர்கள், அதற்கு பின்பு அலங்கத்தைக் கட்டுகிறார்கள். அப்போது அதுவரையிலும் அலங்கத்தைக் கட்டியவர்கள், இப்போது ஆயுதத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

"அவரவர் ஒரு கையினாலே வேலைசெய்து, மறுகையினாலே ஆயுதம் பிடித்திருக்கிறார்கள்" என்னும் வாக்கியத்திற்கு, எழுத்து பூர்வமாக அப்படியே விளக்கம் சொல்ல முடியாது. ஒரு கையினால் ஆயுதம் பிடித்து, மறுகையினால் வேலை செய்வது இயலாத காரியம். அப்படி செய்தால், வேலையும் ஒழுங்காக நடக்காது. ஆயுதத்தையும் ஒழுங்காக பிடிக்க முடியாது. இங்கு சொல்லப்பட்டிருக்கிற வாக்கியத்திற்கு, "அவர்கள் வேலை செய்யவும் ஆயத்தமாயிருக்கிறார்கள், ஆயுதம் ஏந்தி யுத்தம்பண்ணவும் ஆயத்தமாயிருக்கிறார்கள்" என்று பொருள்.

கட்டுகிறவர்கள் அவரவர் தங்கள் பட்டயத்தைத் தங்கள் இடுப்பிலே கட்டிக்கொண்டவர்களாய் வேலைசெய்கிறார்கள் (நெகே 4:18). வேலை செய்கிறவர்களின் இடுப்புகளில் ஆயுதம் கட்டப்பட்டிருப்பதினால், அவர்களால் தடையில்லாமல் வேலை செய்ய முடியும். தேவைப்படும்போது, அவர்களால் ஆயுதத்தையும் பயன்படுத்தமுடியும்.

கர்த்தருடைய வார்த்தையே ஆவியானவரின் பட்டயமாயிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தை நம்முடைய கரத்தில் எப்போதும் இருக்கவேண்டும். நம்முடைய ஊழியத்திலும் கர்த்தருடைய வார்த்தை தேவைப்படுகிறது. நமக்கு வருகிற ஆவிக்குரிய போராட்டங்களை நடத்துவதற்கும் கர்த்தருடைய வார்த்தை தேவைப்படுகிறது. பட்டயமில்லாமல் உலகப்பிரகாரமான யுத்தத்தை நடத்த முடியாது. அதுபோலவே ஆவியின் பட்டயமாகிய கர்த்தருடைய வார்த்தையில்லாமல், ஆவிக்குரிய யுத்தம்பண்ண முடியாது.

அலங்கத்தைக் கட்டுகிறவர்களுக்கு விரோதமாக சத்துருக்கள் வரும்போது, இஸ்ரவேல் புத்திரருக்கு சத்துருக்களைப் பற்றிய எச்சரிப்பின் வார்த்தைகளை உடனே தெரிவிக்கவேண்டும். சத்துருக்கள் வருவது தெரிந்தால், அவர்களுக்கு விரோதமாக திடீரென்று யுத்தம்பண்ணி, அவர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கலாம். இதற்காக நெகேமியா எக்காளம் ஊதுகிற ஒருவனை தன்னண்டையில் நிறுத்தியிருக்கிறார். அவன் சத்துருக்கள் மூலமாக வரும் ஆபத்தைக் கண்டவுடனே, எக்காளத்தை ஊதி இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் எச்சரிப்பான்.

இஸ்ரவேல் புத்திரர் அலங்கத்தைக் கட்டுகிற தங்கள் வேலைகளைச் செய்யும்போது, அதிகாரிகள் யூதாவம்சத்தார் எல்லோருக்கும் பின்னாக நிற்கிறார்கள் (நெகே 4:16). அலங்கத்தைக் கட்டுகிறவர்களுக்கு அதிகாரிகள் தேவையான உதவிகளை செய்கிறார்கள். அவர்களுக்கு தேவையான ஆலோசனைகளையும் சொல்லுகிறார்கள்.

எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவது மிகப்பெரிய வேலை. நெகேமியா இந்த வேலையைப்பற்றி பிரபுக்களிடத்திலும், அதிகாரிகளிடத்திலும், ஜனங்களிடத்திலும் சொல்லும்போது, "இந்த வேலை பெரிதும் விஸ்தாரமுமாயிருக்கிறது" (நெகே 4:19) என்று சொல்லுகிறார்.

வேலை விஸ்தாரமாயிருப்பதினால், அலங்கத்தைக் கட்டுகிறவர்கள் ஒருவருக்கொருவர் தூரமாக, அலங்கத்தின்மேல் சிதறப்பட்டிருக்கிறார்கள். அலங்கத்தைக் கட்டுகிறவர்கள் எல்லோருமே, ஒரே வேளையில் தங்கள் வேலைகளை செய்கிறார்கள். அவர்கள் வேலை செய்யும்போது நெகேமியா ஒரிடத்தில் நிற்காமல், அலங்கம் முழுவதும் சுற்றி நடந்து, நடைபெறுகிற வேலையை மேற்பார்வை செய்கிறார். அலங்கத்தைக் கட்டுகிறவர்களை உற்சாகப்படுத்துகிறார்.

அலங்கத்தைக் கட்டுகிறவர்கள் ஒரிடத்தில் வேலையை முடித்த பின்பு, மற்ற இடங்களுக்கும்போய் வேலை செய்கிறார்கள். இவர்கள் அங்கே வேலைசெய்கிறவர்களுக்கு உதவியாகப் போகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக சத்துருக்கள் வரும்போது எக்காளம் ஊதப்படும். எந்த இடத்திலிருந்து எக்காளம் ஊதப்படுகிறதோ, அந்த இடத்திற்கு இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கூடிவரவேண்டும். சத்துருக்களை எதிர்ப்பதற்கு அவர்கள் ஒன்றுகூட வேண்டும்.

நாம் கர்த்தருடைய சபையைக் கட்டியெழுப்பும்போது, நமக்கு விரோதமாக சத்துருவானவன் கிரியை செய்யும்போது, விசுவாசிகளெல்லோரும் ஒருமனப்பட்டு ஜெபிக்கக்கூடிவரவேண்டும். நம்முடைய தேவன் நமக்காக யுத்தம்பண்ணுவார்.

நெகேமியாவின் ஆலோசனைப் பிரகாரமாக இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், எருசலேமின் அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுகிற வேலையை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களிலே பாதிப்பேர் கிழக்கு வெளுக்கும் நேரமுதல் நட்சத்திரங்கள் காணுமட்டும் ஈட்டிகளைப் பிடித்திருக்கிறார்கள் (நெகே 4:21).

எருசலேமிலே அலங்கத்தைப் பழுதுபார்த்து கட்டுகிறவர்களில் சிலர், வெளிஊர்களிலிருந்து வந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் இந்த வேலை முடிவுபெறும் வரையிலும், எருசலேமிலேயே தங்கவேண்டுமென்று, நெகேமியா கட்டளையிடுகிறார்.

நெகேமியா ஜனங்களைப் பார்த்து: "இராமாறு நமக்குக் காவலுக்கும் பகல்மாறு வேலைக்கும் உதவ, அவரவர் தங்கள் வேலைக்காரரோடுங்கூட எருசலேமுக்குள்ளே இராத்தங்கக்கடவர்கள்" (நெகே 4:22) என்று சொல்லுகிறார்.

அலங்கத்தைக் கட்டுகிறவர்கள் எல்லோருக்கும் போதுமான வீடு வசதிகள் உள்ளன. அலங்கங்களுக்குள்ளும் ஆயிரக்கணக்கானோர் தங்க முடியும். எருசலேமிற்கு வெளியில் தங்கியிருக்கிறவர்கள் இப்போது நகரத்திற்கு உள்ளே தங்குமாறு அழைக்கப் படுகிறார்கள். அநேக வீடுகள் இருந்தாலும், அந்த வீடுகளில் குடியிருப்போர் கொஞ்சம் பேராகவே இருக்கிறார்கள். (நெகே 7:4).

சத்துருக்கள் ஒருவேளை இரவுவேளையிலே யூதர்களுக்கு விரோதமாக வந்தால், அவர்களை எதிர்கொள்ள இராமாறு காவலுக்கு நிற்கிறார்கள். பகல்வேளையிலே பகல்மாறு காவலுக்கு நிற்கிறார்கள். இரவோ அல்லது பகலோ, சத்துருக்கள் எந்த வேளையில் வந்தாலும், அவர்களை எதிர்ப்பதற்கு இஸ்ரவேல் புத்திரர் ஆயத்தமாயிருக்கிறார்கள்.

நெகேமியாவும் அவருடைய சகோதரரும், அவருடைய வேலைக்காரரும் அலங்கத்தைக் கட்டுகிற வேலையிலும், ஆயுதம் ஏந்தி ஜனங்களைப் பாதுகாக்கிற வேலையிலும் தீவிரமாயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் வஸ்திரங்களைக் களைந்துபோடாதிருக்கிறார்கள் (நெகே 4:23).

"எங்கள் வஸ்திரங்களைக் களைந்து போடாதிருந்தோம்" என்பது ஒரு உவமான வாக்கியம். 52 நாட்களாக அலங்கத்தைக் கட்டும் வேலை தொடர்ந்து நடைபெறுகிறது. வேலை செய்கிறதற்கு இஸ்ரவேல் புத்திரர் ஆவலாய் இருக்கிறார்கள். தங்கள் வஸ்திரங்களைக் களைந்துபோட வில்லை என்னும் வாக்கியம் அவர்கள் தங்கள் வேலையில் ஓய்வெடுக்கவில்லை என்னும் பொருளைத் தருகிறது. (நெகே 6:15).

அவர்கள் எப்போதுமே ஆயுதம் பிடித்தவர்களாகவும், சத்துருக்களை எதிர்கொள்ள ஆயத்தமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். கர்த்தருடைய தெய்வீக கிருபையினாலும், அவருடைய பராமரிப்பினாலும், இஸ்ரவேல் புத்திரருக்கு போதுமான அளவு ஆயுதமும் தண்ணீரும் இருக்கிறது.

5 அதிகாரம்

நெகேமியா யூதாதேசத்திற்கு அதிபதியாகயிருக்கிறார். அவர் ஞானமும் உண்மையுமுள்ளவர். அந்நிய ஜாதியார் யூதாதேசத்திற்கு விரோதமாக எழும்பி வரும்போது, நெகேமியா அந்த சத்துருக்களை முறியடித்து, யூதாவின் மனுஷரை பாதுகாக்கிறார்.

பிரச்சனைகள் அந்நிய தேசத்திலிருந்தும் வரும். சொந்த தேசத்திலிருந்தும் வரும். சில சமயங்களில் அந்நிய தேசத்தார் இஸ்ரவேல் புத்திரருக்கு சத்துருக்களாயிருப்பதுபோலவே, யூதாதேசத்தாரும் தங்கள் சொந்த ஜனத்திற்கு சத்துருக்களாயிருப்பார்கள். அப்படிப்பட்ட பிரச்சனை இப்போது யூதர்களுக்கு வந்திருக்கிறது. யூதர்கள் தங்களைத் தாங்களே அழித்துப்போடாதவாறு, நெகேமியா அவர்களைப் பாதுகாக்கிறார்.

யூதர்களில் தரித்திரராயிருக்கிறவர்கள் நெகேமியாவினிடத்தில் வந்து, ஐசுவரியவான்களாயிருக்கிற யூதர்களுக்கு விரோதமாக முறையிடுகிறார்கள். தரித்திரர்கள் ஐசுவரியவான்களிடத்தில் கடன்வாங்கியிருக்கிறார்கள் (நெகே 5:1-5).

ஐசுவரியவான்கள் தரித்திரரை ஒடுக்கக்கூடாது. நெகேமியா யூதர்கள் மத்தியிலே சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்துகிறார். ஐசுவரியவான்களால் ஒடுக்கப்பட்டிருக்கிற ஏழைகளை, விடுவிக்கிறார் (நெகே 5:6-13).

நெகேமியா யூதாதேசத்திற்கு அதிபதியாயிருக்கிறார். அவர் யூதர்கள் அனைவருக்கும் நல்ல முன்மாதிரியாக இருக்கிறார். யூதர்கள்மீது அன்பாகவும், கரிசனையாகவும் இருக்கிறார் (நெகே 5:14-19).

கடன் வாங்குகிறார்கள்
நெகே 5:1-5

நெகே 5:1. ஜனங்களுக்குள் அநேகரும் அவர்களுடைய ஸ்திரீகளும் யூதராகிய தங்கள் சகோதரர்மேல் முறையிடுகிற பெரிய கூக்குரலுண்டாயிற்று.

நெகே 5:2. அதென்னவென்றால், அவர்களில் சிலர்: நாங்கள் எங்கள் குமாரரோடும் எங்கள் குமாரத்திகளோடும் அநேகரானபடியினால், சாப்பிட்டுப் பிழைக்கும்படிக்கு நாங்கள் தானியத்தைக் கடனாக வாங்கினோம் என்றார்கள்.

நெகே 5:3. வேறு சிலர்: எங்கள் நிலங்களையும் எங்கள் திராட்சத்தோட்டங்களையும் எங்கள் வீடுகளையும் நாங்கள் அடைமானமாக வைத்து, இந்தப் பஞ்சத்திலே தானியம் வாங்கினோம் என்றார்கள்.

நெகே 5:4. இன்னும் சிலர்: ராஜாவுக்குத் தீர்வைசெலுத்த, நாங்கள் எங்கள் நிலங்கள்மேலும் எங்கள் திராட்சத்தோட்டங்கள்மேலும், பணத்தைக் கடனாக வாங்கினோம் என்றும்;

நெகே 5:5. எங்கள் உடலும் எங்கள் சகோதரர் உடலும் சரி; எங்கள் பிள்ளைகளும் அவர்கள் பிள்ளைகளும் சரி; ஆனாலும், இதோ, நாங்கள் எங்கள் குமாரரையும் எங்கள் குமாரத்திகளையும்அடிமைத்தனத்திற்கு உட்படுத்தவேண்டியதாயிருக்கிறது; அப்படியே எங்கள் குமாரத்திகளில் சிலர் அடிமைப்பட்டுமிருக்கிறார்கள்; அவர்களை மீட்க எங்களுக்கு திர்வாகமில்லை; எங்கள் நிலங்களும் எங்கள் திராட்சத் தோட்டங்களும் வேறே மனிதர் கைவசமாயிற்று என்றார்கள்.

கடினமான காலங்களும், கடினமான இருதயங்களும், தரித்திரருக்கு அதிகமான பிரச்சனைகளைக் கொடுக்கும். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள், ஏராளமான பிரச்சனைகளை அனுபவிக்கிறார்கள். இந்தக் காலம் யூதர்களுக்கு மிகவும் கடினமான காலமாயிருக்கிறது. பஞ்சகாலமாக இருக்கிறது (நெகே 5:3). தேசத்தில் சரியாக மழை பெய்யவில்லை.

யூதாதேசத்திலிருக்கிற எல்லோருக்கும் தானியம் தேவைப்படுகிறது. ஆனால் தேசத்தில் விளைச்சல் சரியாகயில்லை. தானியத்தின் விலை மிகவும் அதிகமாயிருக்கிறது. தரித்திரர்களால் அதிகவிலை கொடுத்து, தானியத்தை வாங்க முடியவில்லை. இதனால் யூதர்களில் சிலர், தங்கள் நிலங்களையும், தங்கள் வீடுகளையும் அடைமானமாக வைத்து, இந்தப் பஞ்சத்தில் தானியம் வாங்குகிறார்கள்.

ஒவ்வொரு யூதருடைய குடும்பத்திலும், குடும்பத்தினரின் எண்ணிக்கையும் அதிகமாயிருக்கிறது. அவர்களுக்கு அதிகமான குமாரரும், அதிகமான குமாரத்திகளும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் சாப்பிட்டு பிழைத்திருக்கவேண்டும். இதற்காக அவர்கள் தானியத்தை கடனாக வாங்குகிறார்கள். தானியத்தைக் கிரயத்திற்கு வாங்க அவர்களிடத்தில் பணமில்லை (நெகே 5:2).

குடும்பத்தில் குமாரர்களும் குமாரத்திகளும் ஏராளமானோர் இருக்கும்போது, அந்தக் குடும்பத்திற்கு ஏராளமான தானியம் தேவைப்படும். குடும்பச்செலவும் அதிகரிக்கும். யூதாதேசமோ பஞ்சகாலத்திலிருக்கிறது. அவர்களுக்கு தானிய விளைச்சலும் சரியாகயில்லை. அவர்களுடைய கையிலும் பணமில்லை. இதனால் தரித்திரர்கள் ஐசுவரியவான்களிடத்தில் கடன் வாங்குகிறார்கள்.

தேசத்தில் தானியம் இல்லாதபடியினால், வரியும் அதிகமாயிருக்கிறது. ராஜாவின் அரண்மனைக்கு தானியம் வேண்டும். யூதர்கள் எல்லோரும் ராஜாவுக்கு வரிசெலுத்தவேண்டும். வரிசெலுத்துவதற்கு அவர்களிடத்தில் பணமில்லை. இதனால் யூதர்களில் சிலர் ராஜாவுக்கு தீர்வை செலுத்த, தங்கள் நிலங்கள்மேலும், தங்கள் திராட்சத்தோட்டங்கள் மேலும், பணத்தை கடனாக வாங்குகிறார்கள் (நெகே 5:4).

யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தாலும், அவர்களிடத்தில் அடிமைத்தனத்தின் அடையாளம் இன்னும் இருக்கிறது. பாபிலோன் தேசத்திலிருந்து யூதர்கள் விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திற்குப்போனபோது, அவர்களிடத்தில் ஐசுவரியம் ஏதுவுமில்லை. அவர்களில் அநேகர் யூதாதேசத்திற்கு தரித்திரராகவே போனார்கள். இன்னும் தரித்திரராகவே இருக்கிறார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள், யூதாதேசத்திற்கு வந்து சேர்ந்தபோது, அவர்களுக்கு எதிர்பாராத செலவுகள் வருகிறது. அவர்கள் குடியிருப்பதற்கு வீடுகள் வேண்டும். வீட்டைக் கட்டுவதற்கு அதிகமாக செலவு ஆகும். பாபிலோன் தேசத்திலிருந்து யூதர்கள் கொண்டு வந்த பணமெல்லாம், ஒரு சில நாட்களிலேயே செலவாயிற்று.

சிறையிருப்பிலிருந்து வந்த யூதர்கள், யூதாதேசத்திலே தங்களை இன்னும் ஸ்திரப்படுத்தவில்லை. அவர்களுடைய நிலங்களும், திராட்சத்தோட்டங்களும் இன்னும் பண்படுத்தப்படவில்லை. தேசத்தில் மழையும் பெய்யவில்லை. செலவும் அதிகம். பஞ்சமும் அதிகம். இதனால் சிறையிருப்பிலிருந்து வந்த யூதர்களுக்கு, பிரச்சனைகளுக்குமேல் பிரச்சனைகளும், பாரங்களுக்குமேல் பாரங்களும் வருகிறது.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் எல்லோருக்குமே பணம் வேண்டும். தங்களிடத்தில் பணம் இல்லாதவர்கள், இருக்கிறவர்களிடத்தில் கடனாக வாங்குகிறார்கள். கடன்கொடுக்கிறவர்களோ இந்த சந்தர்ப்பத்தை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் கடன்வாங்குவதற்காக தங்கள் குமாரரையும், தங்கள் குமாரத்திகளையும், அவர்களுடைய அடிமைத்தனத்திற்குட்படுத்த வேண்டியதாயிற்று (நெகே 5:5).

கடன்கொடுக்கிறவர்கள் நூற்றுக்கொன்று வீதமாக, கடன்பட்டவர்களிடத்தில் வட்டியை தண்டி வருகிறார்கள் (நெகே 5:11). பன்னிரண்டு சதவீத வட்டி என்பது, அதிகமான வட்டி. இது மாதவட்டி. கடன் வாங்குகிறவர்களால் ஒவ்வொரு மாதமும் இந்த வட்டியை செலுத்த முடியவில்லை. இதனால் வட்டியின் பாரம் அதிகரிக்கிறது.

தரித்திரர்கள் சாப்பிட்டு பிழைப்பதற்காக கடன் வாங்கும்போது, வசதியுள்ளவர்கள் முடிந்த வரையிலும் அவர்களுக்கு வட்டியில்லாத கடனை கொடுக்கவேண்டும். முடிந்தால், ஐசுவரியவான்கள் தரித்திரருக்கு இலவசமாகப் போஜனம் கொடுக்கவேண்டும். ஒருவேளை வட்டி வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும், மிகவும் குறைந்த வட்டியே வாங்கவேண்டும்.

தரித்திரருடைய பரிதாபமான சூழ்நிலைகளைப் பொறுத்து, ஐசுவரியவான்கள் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். தரித்திரரும் சாப்பிட்டு பிழைக்கவேண்டும். அவர்களுக்கு தானியம் வேண்டும். கடன்கொடுக்கிறவர்கள் அடைமானம் இல்லாமல் கடன்கொடுக்கமாட்டார்கள். இதனால் தரித்திரர்களில் சிலர் தங்கள் நிலங்களையும், தங்கள் வீடுகளையும், தங்கள் திராட்சத்தோட்டங்களையும் அடைமானமாக வைத்து, கடன்வாங்குகிறார்கள்.

தரித்திரருடைய நிலங்களும், அவர்களுடைய திராட்சத்தோட்டங்களும், அவர்களுக்கு கடன்கொடுத்தவர்கள் வசமாயிற்று (நெகே 5:5). கடன்கொடுக்கிறவர்கள், கடன் வாங்குகிறவர்களின் நிலங்களையும், திராட்சத்தோட்டங்களையும், ஒலிவதோப்புகளையும், வீடுகளையும் அவர்களுக்கு கொஞ்சம் பணத்தையும், தானியத்தையும், திராட்சரசத்தையும், எண்ணெயையும் கொடுத்து வாங்குகிறார்கள். ஐசுவரியவான்கள் தரித்திரரிடத்தில் நூற்றுக்கொன்று விதமாக வட்டி வாங்குவதினால், அந்த வட்டியே அவர்களுடைய நிலங்களின் கிரயமாயிற்று (நெகே 5:11).

கடன்பட்டவர்கள் தங்களுடைய சொத்துக்களை, கடன்வாங்கியவர்களிடத்தில் கொஞ்சம் கொஞ்சமாக இழந்துவிடுகிறார்கள். தாங்கள் வாங்கின கடனுக்கு வட்டியை செலுத்த முடியாதபோது, அவர்கள் தங்கள் குமாரரையும், குமாரத்திகளையும் அடிமைத்தனத்திற்குட்படுத்துகிறார்கள். யூதர்களில் சிலர் தாங்கள் சாப்பிட்டு பிழைக்கவேண்டும் என்பதற்காக, தங்களுடைய பிள்ளைகளையே அடிமைகளாக விற்றுப்போடுகிறார்கள். அடிமைப்படுத்தப்பட்ட தங்கள் பிள்ளைகளை மீட்பதற்கு அவர்களிடத்தில் நிர்வாகம் இல்லை. இப்படிப்பட்ட வேதனைகளை அனுபவிக்கிற அநேகர், நெகேமியாவினிடத்தில் வந்து முறையிடுகிறார்கள்.

பொதுஜனங்கள் தலைவர்கள்மீதும், காசுக்காரர்கள்மீதும், அதிகாரிகள்மீதும், குற்றம் சுமத்துகிறார்கள். இவர்கள் ஏழைகளை ஒடுக்குகிறார்கள். நெகேமியா தீவிரமாகச் செயல்பட்டு, இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் அநியாயம் நடப்பதைத் தடுக்கிறார். பிரபுக்களையும், வட்டிக்குக் கடன் கொடுக்கிறவர்களையும் நெகேமியா கடிந்து கொள்கிறார். யூதர்களிடமிருந்து அநியாயமாகப் பறிக்கப்பட்ட நிலங்களை உடனடியாக அவர்களிடமே திருப்பித் தருவதற்கு உத்தரவிடுகிறார். (நெகே 5:1-11). பிரபுக்களும் நெகேமியாவின் வார்த்தைக்குக் கட்டுப்படுகிறார்கள் (நெகே 5:12-19).

ஜனங்களுக்குள் அநேகரும் அவர்களுடைய ஸ்திரீகளும் யூதராகிய தங்கள் சகோதரர்மேல் முறையிடுகிற பெரிய கூக்குரலுண்டாயிற்று (நெகே 5:1). பாதிக்கப்பட்டவர்கள் நெகேமியாவினிடத்தில் வந்து முறையிடுகிறார்கள். அவர் யூதாதேசத்திற்கு அதிபதியாயிருக்கிறார். நெகேமியாவால் தங்களை ஒடுக்குகிறவர்களின் கைகளிலிருந்து விடுவிக்க முடியும் என்று அவர்கள் நம்பிக்கையோடிருக்கிறார்கள். நெகேமியா உத்தமராகவும், நல்லவராகவும், நீதிமானாகவும், பெலமுள்ளவராகவும் இருக்கிறார் என்பது அவர்களுக்கு தெரிந்திருக்கிறது.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள், அதிகமான வேதனைகளை அனுபவித்ததுபோல இக்காலத்திலும் அநேகர் ஒடுக்கப்படுகிறார்கள். அவர்கள் மிகுந்த துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவிக்கிறார்கள். அதிகமாய் ஒடுக்கப்படுகிற ஜனங்களுக்காக நாம் கர்த்தரிடத்தில் பரிந்துபேசி ஜெபம்பண்ணவேண்டும். அவர்களுக்காக மனஉருக்கத்தைக் காண்பிக்கவேண்டும். நாம் தரித்திரருக்கு இரக்கம் காண்பிக்கவில்லையென்றால், நியாயத்தீர்ப்பு நாளின்போது, நமக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்பு கிடைக்கும்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள், தங்கள் சகோதரரை ஒடுக்கக்கூடாது. அவர்கள் எல்லோருமே அடிமைத்தன வீட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்திருக்கிறார்கள். விடுவிக்கப்பட்டவர்களை மறுபடியும் அடிமைப்படுத்தக்கூடாது. அவர்கள்மீது அதிகமான பாரத்தை சுமத்தக்கூடாது.

"அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்" (ஏசா 58:6,7).

நெகேமியாவின் ஆலோசனை
நெகே 5:6-13

நெகே 5:6. அவர்கள் கூக்குரலையும், இந்த வார்த்தைகளையும் நான் கேட்டபோது, மிகவும் கோபங்கொண்டு,

நெகே 5:7. என் மனதிலே ஆலோசனைபண்ணி, பிற்பாடு பிரபுக்களையும் அதிகாரிகளையும் கடிந்துகொண்டு: நீங்கள் அவரவர் தங்கள் சகோதரர்மேல் ஏன் வட்டி சுமத்துகிறீர்கள் என்று சொல்லி, அவர்களுக்கு விரோதமாக ஒரு பெரிய சபை கூடிவரச்செய்து,

நெகே 5:8. அவர்கள் நோக்கி: புறஜாதியாருக்கு விற்கப்பட்ட யூதராகிய எங்கள் சகோதரரை நாங்கள் எங்கள் சக்திக்குத்தக்கதாய் மீட்டிருக்கையில், நீங்கள் திரும்ப உங்கள் சகோதரரை விற்கலாமா? இவர்கள் நமக்கு விலைப்பட்டுப் போகலாமா என்றேன்; அப்பொழுது அவர்கள் மறு உத்தரவு சொல்ல இடமில்லாமல் மவுனமாயிருந்தார்கள்.

நெகே 5:9. பின்னும் நான் அவர்களை நோக்கி: நீங்கள் செய்கிற காரியம் நல்லதல்ல; நம்முடைய பகைஞராகிய புறஜாதியார் நிந்திக்கிறதினிமித்தம் நீங்கள் நம்முடைய தேவனுக்குப் பயந்து நடக்கவேண்டாமா?

நெகே 5:10. நானும் என் சகோதரரும் என் வேலைக்காரரும் இவ்விதமாகவா அவர்களுக்குப் பணமும் தானியமும் கடன் கொடுத்திருக்கிறோம்? இந்த வட்டியை விட்டுவிடுவோமாக.

நெகே 5:11. நீங்கள் இன்றைக்கு அவர்கள் நிலங்களையும், அவர்கள் திராட்சத்தோட்டங்களையும், அவர்கள் ஒலிவத்தோப்புகளையும், அவர்கள் வீடுகளையும், நீங்கள் பணத்திலும் தானியத்திலும் திராட்சரசத்திலும் எண்ணெயிலும் நூற்றுக்கொன்று வீதமாக அவர்களிடத்தில் தண்டிவருகிற வட்டியையும், அவர்களுக்குத் திரும்பக் கொடுத்துவிடுங்கள் என்றேன்.

நெகே 5:12. அதற்கு அவர்கள்: நாங்கள் அதைத் திரும்பக் கொடுத்துவிட்டு, இனி அப்படி அவர்களிடத்தில் கேட்கமாட்டோம்; நீர் சொல்லுகிறபடியே செய்வோம் என்றார்கள்; அப்பொழுது நான் ஆசாரியர்களை அழைத்து, அவர்கள் இந்த வார்த்தையின்படி செய்ய அவர்களை ஆணையிடுவித்துக்கொண்டேன்.

நெகே 5:13. நான் என் வஸ்திரத்தை உதறிப்போட்டு, இப்படி இந்த வார்த்தையை நிறைவேற்றாத எந்த மனிதனையும் அவன் வீட்டிலும் அவன் சம்பாத்தியத்திலும் இருந்து தேவன் உதறிப்போடக்கடவர்; இந்தப்பிரகாரமாக அவன் உதறிப்போடப்பட்டு, வெறுமையாய்ப் போவானாக என்றேன்; அதற்குச் சபையார் எல்லாரும் ஆமென் என்று சொல்லி, கர்த்தரைத் துதித்தார்கள்; பின்பு ஜனங்கள் இந்த வார்த்தையின்படியே செய்தார்கள்.

நெகேமியா எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலையிலே முழுமையாய் ஈடுபட்டிருக்கிறார். அப்பொழுது ஜனங்களுக்குள் அநேகர், தங்கள் சகோதரர் மேல் முறையிடுகிற பெரிய கூக்குரல் உண்டாயிற்று. நெகேமியா அலங்கத்தை கட்டுகிற வேலையிலே கவனம் செலுத்துகிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ அவரிடத்தில் வந்து, தங்கள் சகோதரருக்கு விரோதமாக முறையிடுகிறார்கள்.

நெகேமியா அலங்கத்தைக் கட்டுவதில் கவனம் செலுத்தினாலும், இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சகோதரருக்கு விரோதமாக முறையிடுவதையும் கவனித்துக் கேட்கிறார். அவர்களுடைய முறையீடுகளை புறக்கணித்து ஒதுக்கி தள்ளிவிடவில்லை. அவர்களுடைய பிரச்சனைகளும் மிகவும் முக்கியமானது. அந்தப் பிரச்சனைகளையும் சீக்கிரத்தில் தீர்த்து வைக்கவேண்டும். ஆகையினால் நெகேமியா அலங்கத்தைக் கட்டினாலும், அவர்களுடைய பிரச்சனைகளிலும் கவனம் செலுத்துகிறார்.

நெகேமியா எருசலேமின் அலங்கத்தை எவ்வளவு உயரமாகக் கட்டினாலும், எவ்வளவு பெரியதாக கட்டினாலும், எவ்வளவு வலுவானதாக கட்டினாலும், எருசலேம் நகரத்திலே இருக்கிற ஜனங்கள் கர்த்தருக்கு பயந்து, உண்மையுள்ளவர்களாய் ஜீவிக்கவில்லயென்றால், அவர்களுக்கு மெய்யான பாதுகாப்பு இல்லை. கர்த்தர் அவர்களைப் பாதுகாக்கவில்லையென்றால், அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை.

எருசலேம் நகரத்திலிருக்கிற யூதர்களில் ஐசுவரியவான்களாயிருக்கிறவர்கள், தங்கள் சகோதரரில் தரித்திரராயிருக்கிறவர்களை ஒடுக்குகிறார்கள். ஏழைக்கு இரங்குகிறவன்மேல் கர்த்தர் கிருபையாக இரங்குவார். தரித்திரரை ஒடுக்குகிறவர்களுக்கு விரோதமாக கர்த்தருடைய கோபம் வரும்.

நெகேமியா இஸ்ரவேல் புத்திரருடைய கூக்குரலையும், அவர்கள் சொல்லுகிற வார்த்தைகளையும் கேட்டபோது, அவர் மிகவும் கோபங்கொள்கிறார் (நெகே 5:6). அவர் தன் மனதிலே ஆலோசனை பண்ணுகிறார் (நெகே 5:7). நெகேமியா தன் மனதிலே ஆலோசனைபண்ணுவதினால், அவர் யாரிடத்திலும் அவசரப்பட்டு ஒன்றையும் சொல்லவில்லை. அவர் எந்த ஒரு காரியத்தையும் செய்யவுமில்லை.

நெகேமியா தன் மனதிலே ஆலோசனைபண்ணிய பிற்பாடு, அவர் பிரபுக்களையும் அதிகாரிகளையும் கடிந்துகொள்கிறார். அவர்களோடு என்ன சொல்லவேண்டும் என்றும், அதை எப்படி சொல்லவேண்டும் என்றும், அதை எப்பொழுது சொல்லவேண்டும் என்றும், நெகேமியா தன் மனதிலே ஆலோசனைபண்ணினார்.

அதற்கு பிற்பாடு நெகேமியா பிரபுக்களையும் அதிகாரிகளையும் கடிந்துகொள்கிறார். இவர்கள் ஐசுவரியவான்கள். சிறையிருப்பிலிருந்து ஏராளமான யூதர்கள் திரும்பி வந்தாலும் பிரபுக்களிடத்திலும், அதிகாரிகளிடத்திலும் மாத்திரமே அதிகமாய்ப் பணம் இருக்கிறது. ஒருவேளை இவர்கள் அதிகாரத்திலிருப்பதினால், தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி, தரித்திரரை துணிகரமாக ஒடுக்கியிருக்கலாம்.

நெகேமியாவின் காலத்திலிருந்த பிரபுக்களையும், அதிகாரிகளையும் போல நம்மிடத்திலும் இப்போது பணபலமும், அதிகார பலமும் இருக்குமென்றால், நாம் துணிகரமாய்ப் பாவம் செய்யக்கூடாது. கர்த்தர் நம்முடைய துணிகரமான பாவங்களைப் பார்ப்பார், அவர் நம்மை விசாரிப்பார் என்னும் பயம் நம்முடைய மனதிலிருக்கவேண்டும். நாம் கர்த்தருக்கு பயந்து நன்மை செய்யவேண்டும், தீமையை விட்டு விலகவேண்டும்.

நெகேமியா பிரபுக்களையும் அதிகாரிகளையும் கடிந்துகொள்ளும்போது, "நீங்கள் அவரவர் தங்கள் சகோதரர்மேல் ஏன் வட்டி சுமத்துகிறீர்கள்" என்று கோபத்தோடு கேட்கிறார். அதன்பின்பு அவர் அவர்களுக்கு விரோதமாக, ஒரு பெரிய சபையை கூடிவரச்செய்கிறார். நெகேமியாவின் ஆலோசனைகளை இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கேட்கவேண்டும். இதுவரையிலும் தரித்திரரை ஒடுக்குகிறவர்கள், இனிமேல் அவர்களை ஒடுக்கக்கூடாது என்று தீர்மானம்பண்ணவேண்டும்.

நெகேமியா இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோருக்கும் ஆலோசனை சொல்ல விரும்புகிறார். அவர் சொன்ன ஆலோசனையின்படி செய்வதற்கு, இஸ்ரவேல் புத்திரர் ஆணையிட்டுக்கொடுக்கவேண்டும். இதற்காகவே நெகேமியா ஒரு பெரிய சபையை கூடிவரச்செய்கிறார்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் மத்தியிலே எஸ்றாவும் நெகேமியாவும் மிகவும் வல்லமையாய் ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் இருவருமே ஞானமுள்ளவர்கள். நல்லவர்கள். அவர்கள் ஜனங்கள் மத்தியிலே பிரயோஜனமுள்ள ஊழியத்தை செய்கிறார்கள். ஆனாலும் எஸ்றா, நெகேமியா ஆகிய இருவரின் சுபாவங்களிலும், நிர்வாகத்திலும் வித்தியாசமுள்ளது.

இஸ்ரவேல் புத்திரர் அந்நிய ஜாதி ஸ்திரீகளை விவாகம்பண்ணியிருந்தார்கள். எஸ்றா அவர்கள் செய்திருக்கிற பாவங்களை கேள்விப்பட்டு, தன்னுடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறார். கர்த்தருடைய சமுகத்திலே அழுது ஜெபம்பண்ணுகிறார். அவர்களை திருத்துவது என்பதும், அவர்கள் மத்தியிலே ஆவிக்குரிய எழுப்புதலை உண்டுபண்ணுவது என்பதும் இயலாத காரியம்போல எஸ்றாவுக்கு தெரிகிறது. ஆகையினால் எஸ்றா அவர்களுடைய மனதிலே பதியும் வண்ணமாக மிகுந்த பாரத்தோடு பேசுகிறார். எஸ்றா மென்மையான சுபாவமுள்ளவர்.

நெகேமியா எஸ்றாவைப்போல மென்மையான சுபாவமுள்ளவரல்ல. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சகோதரருக்கு விரோதமாக நெகேமியாவிடம் முறையிடுகிறார்கள். அவர்களுடைய கூக்குரலையும், அவர்கள் சொன்ன வார்த்தைகளையும் கேட்டபோது, நெகேமியா மிகவும் கோபங்கொள்கிறார். அவர் தன் மனதிலே ஆலோசனைபண்ணி பிரபுக்களையும் அதிகாரிகளையும் கடிந்துகொள்கிறார். நெகேமியா தப்பு செய்தவர்களை கண்டிக்கும் வரையிலும் ஓய்ந்திருக்கவில்லை.

நெகேமியா தப்பு செய்தவர்களைத் திருத்துவதற்கு கடினமான முறைகளை கையாளுகிறார். அவர்கள் தங்கள் தப்பிதங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்றும், அவர்களுடைய மனதிலே மாற்றம் ஏற்படவேண்டும் என்றும் நெகேமியா அவர்களிடத்தில் தெளிவாகவும், திட்டமாகவும் சொல்லுகிறார். நெகேமியாவின் சுபாவம் கோபகுணமுள்ளது. தான் நினைத்ததை உடனே சாதிக்கவேண்டும் என்னும் தீர்மானமுள்ளவர்.

எஸ்றாவும் நெகேமியாவும் பரிசுத்தவான்களாகயிருந்தாலும், அவர்களுடைய சுபாவங்களில் வித்தியாசமிருக்கிறது. அவர்கள் இருவருமே கர்த்தருடைய ஊழியக்காரர்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை வித்தியாசமான முறையிலே செய்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியத்தை நல்லமுறையில் செய்யவேண்டும். ஒருவேளை நம்முடைய ஊழியமுறைகளில் வித்தியாசங்கள் இருக்கலாம். ஆனாலும் நம்முடைய ஊழியங்களில் உண்மையிருக்கவேண்டும். எல்லா ஊழியங்களும் ஒன்றுபோலிருக்காது. பரிசுத்த ஆவியானவர் அவர்களை வழிநடத்துகிற பிரகாரம், அவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்வார்கள். மற்றவர்கள் நம்மைப்போல ஊழியம் செய்யவில்லை என்பதற்காக, நாம் அவர்களைப்பற்றி குறைசொல்லவும் கூடாது, அவர்கள்மீது கோபப்படவும் கூடாது.

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் ஒரு பெரிய சபையாக நெகேமியாவினிடத்தில் கூடிவந்திருக்கிறார்கள். நெகேமியா அவர்களுக்கு நல்ல ஆலோசனைகளை சொல்லுகிறார். அவர்கள் செய்திருக்கிற தப்பிதங்களை அவர்களுக்கு புரியும் விதத்தில் எடுத்து சொல்லுகிறார்.

நாம் மனுஷருடைய தப்பிதங்களை அவர்களுக்கு எடுத்து சொல்லும்போது, ஏனோதானோவென்று மூடி மறைத்து பேசக்கூடாது. அவர்களுடைய தப்பிதங்களை, அவர்கள் உணரும் வண்ணமாக, தெளிவாக சொல்லவேண்டும். தப்பு செய்தவர்களுக்கு புத்தி சொல்லும்போது, காலதாமதமில்லாமல் உடனே சொல்லவேண்டும். அப்போதுதான் அது அவர்களுடைய மனச்சாட்சியோடு பேசும் அவர்களுடைய மனச்சாட்சியை உணர்த்தும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சகோதரரை ஒடுக்குகிறார்கள். அவர்கள் எல்லோருமே கர்த்தருக்கு விசேஷமானவர்கள். "புறஜாதியாருக்கு விற்கப்பட்ட யூதராகிய எங்கள் சகோதரரை நாங்கள் எங்கள் சக்திக்குதக்கதாய் மீட்டிருக்கிறோம்" என்று நெகேமியா அவர்களிடத்தில் சொல்லுகிறார்.

நெகேமியா ஏழைகளை ஒடுக்குகிற ஐசுவரியவான்களைப் பார்த்து, "நீங்கள் திரும்ப உங்கள் சகோதரரை விற்கலாமா?" என்றும், "இவர்கள் நமக்கு விலைப்பட்டுப்போகலாமா" என்றும் கேட்கிறார் *(நெகே 5:8)*.

கடனுக்காகத் தங்கள் சகோதரரையே விற்றுப்போடுவது நியாயமான செயலல்ல. யூபிலி வருஷத்தில் இஸ்ரவேல் புத்திரர்கள் பட்ட கடனெல்லாம் முடிந்து போகும். ஆனாலும் கடன்பட்டவர்களுடைய மனதில் பாரமான சுமைகள் இருக்கும். தங்களுக்கு ஏற்பட்ட அநியாயங்களை நினைத்து, ஏழைகள் வருத்தப்படுவார்கள். இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் நடைபெறும் அநியாயங்களை நெகேமியா அகற்றிப்போடுகிறார்.

நெகேமியா இஸ்ரவேல் சபையாருக்கு முன்பாக சத்தியத்தை எடுத்து சொன்னபோது, அவர்கள் மறுஉத்தரவு சொல்ல இடமில்லாமல் மவுனமாயிருக்கிறார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த யூதர்கள், கர்த்தருடைய தெய்வீக வழிநடத்துதலினாலும், அவருடைய பராமரிப்பினாலும், சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் புறஜாதியாரிடத்தில் அடிமைகளாயிருந்தவர்கள். அவர்களை நெகேமியா போன்றவர்கள் தங்கள் சக்திக்குதக்கதாய் மீட்டிருக்கிறார்கள். ஆனால் யூதர்களுடைய பிரபுக்களும் அதிகாரிகளும் அவர்களை அடிமைகளாக்குகிறார்கள்.

நெகேமியா தப்பு செய்த பிரபுக்களையும், அதிகாரிகளையும், ஐசுவரியவான்களையும் நோக்கி, "நீங்கள் செய்கிற காரியம் நல்லதல்ல" என்று வெளிப்படையாக சொல்லுகிறார். தரித்திரரை நிந்திப்பது பாவம். நெகேமியா அவர்களை நோக்கி, "நம்முடைய பகைஞராகிய புறஜாதியார் நிந்திக்கிறதினிமித்தம் நீங்கள் நம்முடைய தேவனுக்குப் பயந்து நடக்கவேண்டாமா?" *(நெகே 5:9)* என்று கேட்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் அவருடைய நாமமகிமைக்காகவே ஜீவிக்க வேண்டும். அதற்கேற்ற கிரியை நடப்பிக்க வேண்டும். நம்முடைய பேச்சும், செயலும் கர்த்தரைத் தூஷிப்பதற்குக் காரணமாகி விடக்கூடாது. பாவிகளுக்கு மத்தியில் நாம் முன் உதாரணமாக ஜீவித்து, நற்கனிகளை வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும். நம்முடைய ஜெபங்களுக்குக் கர்த்தர் பதில்கொடுப்பார் என்று விசுவாசித்து ஜீவிக்க வேண்டும்.

புறஜாதியார் இஸ்ரவேல் புத்திரரை நிந்திக்கிறார்கள். ஆனால் இப்போது இஸ்ரவேல் புத்திரரே தங்களுடைய சகோதரரை நிந்திக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை ஆராதிப்பதாக சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், தரித்திரரை நிந்திக்கிறார்கள். அந்தப் புறஜாதியார் தரித்திரரை நிந்திக்கிற பிரபுக்களையும் அதிகாரிகளையும் தூஷிப்பார்கள்.

கர்த்தரையும் அவருடைய ஊழியத்தையும் புறஜாதி ஜனங்கள் நிந்திக்கிறார்கள். புறஜாதியாரின் நிந்தையைவிட ஊழியக்காரர்கள் உலகப்பிரகாரமாகவும், கடின இருதயத்தோடும் நடந்துகொள்ளும்போது, கர்த்தருடைய நாமம் அதிகமாய் நிந்திக்கப்படும்.

பிரபுக்களும் அதிகாரிகளும் இஸ்ரவேல் புத்திரரை நிந்திக்கிறார்கள். அவர்களிடத்தில் நூற்றுக்கொன்று வீதமாக வட்டி வாங்குகிறார்கள். அவர்கள் வாங்கின வட்டிகளை, அந்தத் தரித்திரர்களுக்கே திரும்ப கொடுத்துவிடவேண்டும் என்று நெகேமியா சொல்லுகிறார்.

நெகேமியா அவர்களை நோக்கி, "நீங்கள் இன்றைக்கு அவர்கள் நிலங்களையும், அவர்கள் திராட்சத்தோட்டங்களையும், அவர்கள் ஒலிவத்தோப்புகளையும், அவர்கள் வீடுகளையும், நீங்கள் பணத்திலும் தானியத்திலும் திராட்சரசத்திலும் எண்ணெயிலும் நூற்றுக்கொன்று வீதமாக அவர்களிடத்தில் தண்டிவருகிற வட்டியையும், அவர்களுக்குத் திரும்பக் கொடுத்துவிடுங்கள்" (நெகே 5:11) என்று சொல்லுகிறார்.

வருஷத்திற்கு 12% வட்டி வாங்கும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சகோதரருக்குள்ளே வட்டி வாங்கும் வழக்கம் தடைபண்ணப்பட்டிருக்கிறது. (யாத் 22:25; லேவி 25:36)

நெகேமியா அவர்களிடத்தில் அதிகாரத்தோடு பேசினாலும், உரிமையோடும் பேசுகிறார். "இந்த வட்டியை விட்டுவிடுவோமாக" என்று நெகேமியா அவர்களிடத்தில் சொல்லுகிறார். நெகேமியா வட்டி வாங்கவில்லை. ஆனாலும் அதிகாரிகளின் பாவத்தில், நெகேமியா தன்னையும் ஒருவராக சேர்த்துக்கொண்டு, "இந்த வட்டியை விட்டுவிடுவோமாக" என்று சொல்லுகிறார்.

நெகேமியா யூதாதேசத்திற்கு அதிபதியாயிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளை கொடுக்கும் அதிகாரம் அவரிடத்திலிருக்கிறது.

ஆனாலும் அவர்கள்மீதுள்ள அன்பினால், நெகேமியா அவர்களிடத்தில் அன்போடும், கரிசனையோடும் பரிந்து பேசுகிறார்.

நெகேமியாவின் ஆலோசனைகளைக் கேட்டு, தப்பு செய்தவர்கள் மனந்திரும்புகிறார்கள். "நாங்கள் அதை திரும்பக் கொடுத்துவிட்டு, இனி அப்படி அவர்களிடத்தில் கேட்கமாட்டோம்" (நெகே 5:12) என்று சொல்லுகிறார்கள். அவர்கள் நெகேமியாவினிடத்தில் சொல்லும்போது "நீர் சொல்லுகிறபடியே செய்வோம்" என்றும் சொல்லுகிறார்கள்.

நெகேமியா அப்பொழுது ஆசாரியர்களை அழைக்கிறார். அந்த ஆசாரியர்கள் அவர்களை, இந்த வார்த்தையின்படி செய்ய ஆணையிடச் சொல்லுகிறார்கள். ஜனங்களும் ஆணையிடுகிறார்கள்.

நெகேமியா தன் வஸ்திரத்தை உதறிப்போட்டு, "இப்படி இந்த வார்த்தையை நிறைவேற்றாத எந்த மனிதனையும் அவன் வீட்டிலும் அவன் சம்பாத்தியத்திலும் இருந்து தேவன் உதறிப்போடக்கடவர்; இந்தப்பிரகாரமாக அவன் உதறிப்போடப்பட்டு, வெறுமையாய்ப் போவானாக" (நெகே 5:13) என்று சொல்லுகிறார்; அதற்குச் சபையார் எல்லாரும் "ஆமென்" என்று சொல்லி, கர்த்தரைத் துதிக்கிறார்கள்; பின்பு ஜனங்கள் இந்த வார்த்தையின்படியே செய்கிறார்கள்.

"வஸ்திரத்தை உதறிப்போடுதல்" என்பது எபிரெயருடைய வழக்குச் சொல். ஒருவரைச் சபிப்பதற்கும், ஒரு காரியத்தின்மீது தனக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதை அறிவிப்பதற்கும் இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய வஸ்திரத்தை உதறிப் போடுவார்கள். வட்டி வாங்குகிறவர்கள் தாங்கள் செய்த தவறுகளுக்குப் பிராயச்சித்தம் செய்யா விட்டால் கர்த்தரும் தம்முடைய கிருபையிலிருந்து அவர்களை உதறிப்போடுவார் என்னும் பொருளில் இந்த வாக்கியம் இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (லூக்கா 6:38; அப் 18:6).

நெகேமியாவின் நல்ல சாட்சி
நெகே 5:14-19

நெகே 5:14. நான் யூதாதேசத்திலே அதிபதியாயிருக்கும்படி ராஜாவாகிய அர்தசஷ்டா எனக்குக் கற்பித்த நாளாகிய அவருடைய இருபதாம் வருஷம் தொடங்கி, அவருடைய முப்பத்திரண்டாம் வருஷம்வரைக்குமிருந்த பன்னிரண்டு வருஷகாலமாய், நானும் என் சகோதரரும் அதிபதிகள் வாங்குகிறபடியை வாங்கிச் சாப்பிடவில்லை.

நெகே 5:15. எனக்கு முன்னிருந்த அதிபதிகள் ஜனங்களுக்குப் பாரமாயிருந்து, அவர்கள் கையிலே அப்பமும் திராட்சரசமும் வாங்கினதும் அல்லாமல், நாற்பது சேக்கல் வெள்ளியும் வாங்கிவந்தார்கள்; அவர்கள் வேலைக்காரர் முதலாய் ஜனங்கள்மேல் அதிகாரம் செலுத்தினார்கள்; நானோ தேவனுக்குப் பயந்ததினால் இப்படிச் செய்யவில்லை.

நெகே 5:16. ஒரு வயலையாவது நாங்கள் கொள்ளவில்லை; அந்த அலங்கத்தின் வேலையிலே முயன்று நின்றேன்; என்வேலைக்காரரனைவரும் கூட்டமாய் அந்த வேலைக்குக் கூடிவந்தார்கள்.

நெகே 5:17. யூதரும் மூப்பருமான நூற்றைம்பதுபேரும், எங்களைச் சுற்றிலுமிருக்கிற புறஜாதிகளிடத்திலிருந்து எங்களிடத்திற்கு வந்தவர்களும் என் பந்தியில் சாப்பிட்டார்கள்.

நெகே 5:18. நாளொன்றுக்கு ஒரு காளையும், முதல்தரமான ஆறு ஆடும் சமைக்கப்பட்டது; பட்சிகளும் சமைக்கப்பட்டது; பத்துநாளைக்கு ஒருதரம் நானாவிதத் திராட்சரசமும் செலவழிந்தது; இப்படியெல்லாம் இருந்தபோதும், இந்த ஜனங்கள் பட்டபாடு கடினமாயிருந்தபடியால், அதிபதிகள் வாங்குகிறபடியே நான் வாங்கவில்லை.

நெகே 5:19. என் தேவனே, நான் இந்த ஜனத்துக்காகச் செய்த எல்லாவற்றின்படியும் எனக்கு நன்மையுண்டாக என்னை நினைத்தருளும்.

நெகேமியா இஸ்ரவேல் சபையாரிடத்தில் தன்னுடைய சாட்சியை எடுத்து சொல்லுகிறார். தனக்கு பெருமை உண்டாகவேண்டும் என்றோ அல்லது தனக்கு நல்ல பெயர் கிடைக்கவேண்டும் என்றோ, நெகேமியா தன்னைப்பற்றி பெருமையாக சொல்லவில்லை. நெகேமியாவின் அதிகாரத்திற்கு கீழே பணிபுரிகிற பிரபுக்களும், அதிகாரிகளும் தங்கள் வேலையை உண்மையாய் செய்யவேண்டும். அவர்கள் ஜனங்கள்மீது கரிசனையுள்ளவர்களாயிருக்கவேண்டும். நெகேமியாவின் நல்ல முன்மாதிரியை பின்பற்றி, அவர்களும் கர்த்தருக்கு பயந்து நன்மை செய்யவேண்டும்.

நெகேமியா தன்னுடைய சாட்சியை சொல்லும்போது, "நான் யூதாதேசத்திலே அதிபதியாயிருக்கும்படி ராஜாவாகிய அர்தசஷ்டா எனக்குக் கற்பித்த நாளாகிய அவருடைய இருபதாம் வருஷம் தொடங்கி, அவருடைய முப்பத்திரண்டாம் வருஷம்வரைக்குமிருந்த பன்னிரண்டு வருஷகாலமாய், நானும் என் சகோதரரும் அதிபதிகள் வாங்குகிறபடியை வாங்கிச் சாப்பிடவில்லை" (நெகே 5:14) என்று சொல்லுகிறார்.

நெகேமியா தன்னைப்பற்றிச் சொல்லுகிறபோது, அவர் தனக்கு முன்னிருந்த அதிபதிகளைப்பற்றியும் சொல்லுகிறார். ஆனால் நெகேமியா அவர்களில் யாருடைய பெயரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை. ஏனெனில் நெகேமியா அந்த அதிபதிகளைப்பற்றிச் சொல்லுகிற வார்த்தைகள் அவர்களுக்கு பெருமையைக் கொடுக்கிற வார்த்தைகளல்ல. நாமும் மற்றவர்களுக்கு விரோதமான சில வார்த்தைகளைப் பேசும்போது, அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிடாமல் இருப்பது நல்லது.

நெகேமியாவும், அவரோடு கூட இருக்கிறவர்களும் பன்னிரண்டு வருஷங்களாக எந்தச் சம்பளமும் வாங்கவில்லை. நெகேமியா தனக்கென்று, அசையும் சொத்துக்களையோ, அசையாச் சொத்துக்களையோ சொந்தமாக வாங்கிக் கொள்ளவில்லை. நெகேமியாவின் கூட இருக்கிறவர்களும் சம்பளம் வாங்காமலேயே அலங்கத்தின் வேலைகளைச் செய்கிறார்கள். நெகேமியா தன்னுடைய பந்தியில் 150 யூதருக்கு அனுதினமும் போஜனம் கொடுத்து வருகிறார். இவர்கள் தவிர, புறஜாதியாரும் நெகேமியாவின் பந்தியில் சாப்பிடுகிறார்கள். (நெகே 5:14-19).

நெகேமியா அவர்களைப்பற்றிச் சொல்லும்போது, "எனக்கு முன்னிருந்த அதிபதிகள் ஜனங்களுக்குப் பாரமாயிருந்து, அவர்கள் கையிலே அப்பமும் திராட்சரசமும் வாங்கினதும் அல்லாமல், நாற்பது சேக்கல் வெள்ளியும் வாங்கிவந்தார்கள்; அவர்கள் வேலைக்காரர் முதலாய் ஜனங்கள்மேல் அதிகாரம் செலுத்தினார்கள்; நானோ தேவனுக்குப் பயந்ததினால் இப்படிச் செய்யவில்லை" (நெகே 5:15) என்று சொல்லுகிறார்.

இந்தச் சம்பளம் தினச்சம்பளமா, வாரச்சம்பளமா என்று தெரியவில்லை. இது ஒருவேளை அநுதின சம்பளமாக இருக்கலாம். நெகேமியாவுக்கு ஒரு நாளொன்றுக்கு ஆகும் செலவு நெகே 5:18 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

நெகேமியாவுக்கு முன்னிருந்த அதிபதிகள் யூதர்களைக் கசக்கிப் பிழிந்தார்கள். அதிபதிகள் ஜனங்களுடைய பாரங்களை நீக்கவேண்டும். ஆனால் அவர்கள் ஜனங்களுக்கு பாரமாயிருந்தார்கள். பாரங்களை கொடுத்தார்கள். நெகேமியாவோ தனக்கு முன்னிருந்த அதிபதிகளைப்போல ஜனங்களுக்கு தீங்குசெய்யவில்லை.

நெகேமியா இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே தன்னைப்பற்றியும், தன்னோடுகூட இருக்கிறவர்களைப்பற்றியும் சொல்லும்போது, "நானும் என் சகோதரரும் என் வேலைக்காரரும் இவ்விதமாகவா அவர்களுக்குப் பணமும் தானியமும் கடன் கொடுத்திருக்கிறோம்?" (நெகே 5:10) என்று கேட்டார்.

நெகேமியா இப்போது மறுபடியுமாய் தன்னைப்பற்றிச் சாட்சி சொல்லுகிறார். "ஒரு வயலையாவது நாங்கள் கொள்ளவில்லை; அந்த அலங்கத்தின் வேலையிலே முயன்று நின்றேன்; என்வேலைக்காரரனைவரும் கூட்டமாய் அந்த வேலைக்குக் கூடிவந்தார்கள்" (நெகே 5:16) என்பது நெகேமியாவின் மெய்யான சாட்சியாகும்.

நெகேமியாவுக்கும் ஏராளமான செலவுகள் இருக்கிறது. ஆனாலும் அவர் அதிபதிகள் பொதுவாக வாங்குகிற படியைக்கூட வாங்கவில்லை. யூதரும் மூப்பருமான நூற்றைம்பதுபேரும், அவர்களைச் சுற்றிலுமிருக்கிற புறஜாதிகளிடத்திலிருந்து அவரிடத்திற்கு வந்தவர்களும் நெகேமியாவின் பந்தியில் சாப்பிடுகிறார்கள் (நெகே 5:17).

இத்தனை பேரும் அவருடைய பந்தியில் சாப்பிடவேண்டுமென்றால், ஏராளமாய் செலவாகும். நெகேமியா நாளொன்றுக்கு தனக்கு ஆகும் செலவைப்பற்றி இந்த வசனத்தில் சொல்லுகிறார். நாளொன்றுக்கு ஒரு காளையும், முதல்தரமான ஆறு ஆடும் சமைக்கப்படுகிறது; பட்சிகளும் சமைக்கப்படுகிறது; பத்துநாளைக்கு ஒருதரம் நானாவிதத் திராட்சரசமும் செலவழிகிறது (நெகே 5:18).

சாதாரண மனுஷரால் இவ்வளவு செலவு பண்ண முடியாது. நெகேமியா செல்வந்தராக இருந்திருக்க வேண்டும். அல்லது அர்தசஷ்டா ராஜா நெகேமியாவுக்கு மானியமாக பெரிய தொகையைக் கொடுத்திருக்க வேண்டும்.

நெகேமியாவுக்கு அன்றாட செலவுகள் அதிகமாயிருந்தாலும், ஜனங்களோ அவரைவிட மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நெகேமியா அன்புள்ளம் கொண்டவர். அவர் ஜனங்கள் படுகிற பாடுகளை நோக்கிப் பார்க்கிறார். அவர்கள் பட்ட பாடு கடினமாயிருந்தபடியால், அதிபதிகள் வாங்குகிற படியைக்கூட நெகேமியா வாங்கவில்லை. இதனால் ஜனங்கள் செலுத்த வேண்டிய வரிச்சுமை குறைகிறது.

பெர்சிய தேசத்து ராஜா நெகேமியாவை யூதாதேசத்திற்கு அனுப்பியபோது, அவருக்கு ஒரு படியை நியமித்திருந்தார். ஆனாலும் நெகேமியாவும் அவருடைய சகோதரரும் அதிபதிகள் வாங்குகிற படியை வாங்கி சாப்பிடவில்லை.

நெகேமியா இஸ்ரவேல் சபையாரிடத்தில் தன்னுடைய ஆலோசனைகளையும், தன்னைப்பற்றிய நல்ல சாட்சியையும் சொல்லி முடித்த பின்பு, அவர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். "என் தேவனே, நான் இந்த ஜனத்துக்காகச் செய்த எல்லாவற்றின்படியும் எனக்கு நன்மையுண்டாக என்னை நினைத்தருளும்" (நெகே 5:19) என்பதே நெகேமியாவின் ஜெபம்.

நெகேமியா இஸ்ரவேல் ஜனத்திற்கு செய்த நன்மைகளை கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். நெகேமியாவின் ஜெபத்தை கர்த்தர் செவிகொடுத்து கேட்பார். அதே வேளையில் அங்கே கூடியிருக்கிற பிரபுக்களும் அதிகாரிகளும் அவருடைய ஜெபவார்த்தைகளைக் கேட்பார்கள். ஏழைகளை ஒடுக்குகிற அதிகாரிகள் உணர்வடையவேண்டும் என்பதும், அவர்கள் தங்களுடைய தப்பிதங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்பதும் நெகேமியாவின் விருப்பம்.

நெகேமியா கர்த்தரிடத்தில் தான் செய்த நன்மைகளை எடுத்து சொல்லி, கர்த்தர் தன்னை ஆசீர்வாதிக்கவேண்டும் என்று பேரம்பேசவில்லை. கர்த்தர் ஏற்கெனவே நெகேமியாவுக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். கர்த்தருடைய கிருபைகளையும் இரக்கங்களையும் பெற்றுக்கொள்வதற்கு நமக்கு எந்தத் தகுதியுமில்லை. கர்த்தருடைய கிருபையை யாராலும் கிரயத்திற்கு வாங்கமுடியாது. கர்த்தருடைய கிருபையும் அவருடைய இரக்கமும் நமக்கு இலவச ஈவாக அருளப்படுகிறது. தனக்கு நன்மை உண்டாக கர்த்தர் தன்னை நினைத்துப் பார்த்தால், அதுவே தனக்குப் போதுமானது என்று நெகேமியா நினைக்கிறார்.

நெகேமியா பல வருஷங்களாகக் கர்த்தருக்காக ஊழியம் செய்கிறார். சம்பளம் வாங்காமலேயே அலங்கத்தைக் கட்டுகிற வேலையில் ஈடுபடுகிறார். தன்னுடைய எல்லா வேலைகளுக்கும் இவர் கர்த்தரிடம் கேட்கும் ஒரே காரியம் "எனக்கு நன்மையுண்டாக என்னை நினைத்தருளும்" என்பதே. தமக்காக ஊழியம் செய்கிற பிள்ளைகளின் நன்மைகளைக் கர்த்தர் நிச்சயமாகவே நினைத்தருளுவார்.

6 அதிகாரம்

ஒடுக்கப்பட்ட தரித்திரரின் கூக்குரல் நின்று போயிற்று. எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலைகள் துரிதமாக நடைபெறுகிறது. இஸ்ரவேல் புத்திரர் எருசலேமின் அலங்கத்தை சந்தோஷமாய்க் கட்டிமுடிக்கிறார்கள்.

நெகேமியாவும் யூதாவின் மனுஷரும் எருசலேமின் அலங்கத்தை கட்ட ஆரம்பித்தபோது, அவர்களுடைய வேலையை எப்படியாவது தடுத்து நிறுத்தவேண்டுமென்று சத்துருக்கள் முயற்சி பண்ணினார்கள் (நெகே 4-ஆவது அதிகாரம்). ஆனால் சத்துருக்களின் முயற்சிகள் ஒன்றும் நிறைவேறவில்லை.

சத்துருக்கள் தந்திர ஆலோசனைபண்ணி, எருசலேமின் அலங்கம் கட்டப்படுகிற வேலையை தடுத்து நிறுத்த முயற்சி செய்கிறார்கள். அதற்காக சதிஆலோசனைகளை பண்ணுகிறார்கள். அவர்கள் நெகேமியாவை கண்டு பேசவேண்டும் என்று கூப்பிடுகிறார்கள். ஆனால் நெகேமியாவோ அவர்களுடைய சதித்திட்டத்தை அறிந்துகொண்டு, அவர்களுக்கு உடன்பட மறுத்துவிடுகிறார் (நெகே 6:1-4).

சன்பல்லாத் நெகேமியாவுக்கு விரோதமாக தூஷண வார்த்தைகளைப் பேசுகிறான். நெகேமியா யூதாதேசத்திற்கு ராஜாவாவதற்காக சதிபண்ணுகிறார் என்றும், அதற்காக அவர் தன்னோடு ஆட்களை சேர்த்துக்கொள்கிறார் என்றும் சன்பல்லாத் அவர்மீது குற்றம் சொல்லுகிறான். நெகேமியாவோ சன்பல்லாத்தின் குற்றச்சாட்டுகளை தீர்மானமாக மறுத்துவிடுகிறார் (நெகே 6:5-9).

சத்துருக்கள் நெகேமியாவுக்கு விரோதமாக கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு கைக்கூலிகொடுத்து, அவர்களை அவருக்கு விரோதமாகப் பயன்படுத்துகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளும் சத்துருக்களின் ஆலோசனைப்பிரகாரம் நெகேமியாவுக்கு கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். ஆனால் நெகேமியாவோ அவர்களுடைய கள்ள வார்த்தைகளை அறிந்துகொண்டு, அவர்களுடைய ஆலோசனைகளுக்கு செவிகொடுக்க மறுத்துவிடுகிறார் (நெகே 6:10-14).

நெகேமியா சத்துருக்களுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறார். ஆனால் யூதர்களில் சிலர் அவர்களுடைய சத்துருக்களோடு இரகசிய உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். எருசலேமின் அலங்கத்தை கட்டுகிற வேலையை தடைபண்ணுவதற்கு இந்த யூதர்களும் சத்துருக்களோடு சேர்ந்து சதிபண்ணுகிறார்கள். ஆனாலும் கர்த்தருடைய கிருபையினால் எருசலேமின் அலங்கம் கட்டி முடிக்கப்படுகிறது (நெகே 6:15-19).

சத்துருக்களின் சதிஆலோசனை நெகே 6:1-9

நெகே 6:1. நான் அலங்கத்தைக் கட்டிமுடித்ததையும், இனி அதிலே திறப்பு ஒன்றுமில்லை என்பதையும், சன்பல்லாத்தும், தொபியாவும், அரபியனான கேஷேமும் எங்களுக்குண்டாயிருந்த மற்றப் பகைஞரும் கேள்விப்பட்டபோது,

நெகே 6:2. நான் வாசல்களுக்கு இன்னும் கதவுபோடாதிருக்கையில், சன்பல்லாத்தும், கேஷேமும் ஆள் அனுப்பி: நாம் ஓனோ பள்ளத்தாக்கில் இருக்கிற கிராமங்கள் ஒன்றில் ஒருவரையொருவர் கண்டு பேசுவோம் வாரும் என்று கூப்பிட்டார்கள்; அவர்களோவென்றால் எனக்குப் பொல்லாப்புச் செய்ய நினைத்தார்கள்.

நெகே 6:3. அப்பொழுது நான் அவர்களிடத்திற்கு ஆட்களை அனுப்பி: நான் பெரிய வேலையைச் செய்கிறேன், நான் வரக்கூடாது; நான் அந்த வேலையைவிட்டு உங்களிடத்திற்கு வருகிறதினால் அது மினக்கட்டுப்போவானேன் என்று சொல்லச்சொன்னேன்.

நெகே 6:4. அவர்கள் இந்தப்பிரகாரமாக நாலுதரம் எனக்குச் சொல்லியனுப்பினார்கள்; நானும் இந்தப் பிரகாரமாகவே அவர்களுக்கு மறுமொழி அனுப்பினேன்.

நெகே 6:5. ஐந்தாந்தரமும் சன்பல்லாத்து அந்தப் பிரகாரமாகவே தன் வேலைக்காரனையும், அவன் கையிலே முத்திரைபோடாத ஒரு கடிதத்தையும் எனக்கு அனுப்பினான்.

நெகே 6:6. அதிலே: நீரும் யூதரும் கலகம் பண்ண நினைக்கிறீர்கள் என்றும், அதற்காக நீர் அலங்கத்தைக் கட்டுகிறீர் என்றும், இவ்விதமாக நீர் அவர்களுக்கு ராஜாவாகப் போகிறீர் என்றும்,

நெகே 6:7. யூதாவிலே ஒரு ராஜா இருக்கிறார் என்று உம்மைக்குறித்து எருசலேமிலே கூறுகிற தீர்க்கதரிசிகளையும் சம்பாதித்தீரென்றும் புறஜாதிகளுக்குள்ளே பிரஸ்தாபமாயிருக்கிறது, கஷ்மூவும் அப்படிச் சொல்லுகிறான்; இப்போதும் இந்தச் செய்தி ராஜாவுக்கு எட்டுமே; ஆகையால் நாம் ஒருவரோடொருவர் ஆலோசனைபண்ணுகிறதற்காக நீர் வரவேண்டும் என்று எழுதியிருந்தது.

நெகே 6:8. அதற்கு நான்: நீர் சொல்லுகிற அந்தக் காரியங்களில் ஒன்றும் நடக்கவில்லை; அவைகள் உம்முடைய மனோராஜ்யமே ஒழிய வேறல்ல என்று சொல்லியனுப்பினேன்.

நெகே 6:9. அந்த வேலை நடந்தேறாதபடிக்கு, எங்கள் கை சலித்துப்போம் என்று சொல்லி, அவர்கள் எல்லாரும் எங்களைப் பயமுறுத்தப்பார்த்தார்கள். ஆதலால் தேவனே, நீர் என் கைகளைத் திடப்படுத்தியருளும்,

சத்துருக்கள் நெகேமியாவுக்கு விரோதமாக இரண்டு சதிஆலோசனைகளை பண்ணுகிறார்கள். முதலாவதாக அவரை ஒரு கண்ணியில் விழவைப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். சத்துருக்களின் முயற்சி தோல்வியடைகிறது. அதன் பின்பு அவர்கள் நெகேமியாவை பயமுறுத்தி, அவருடைய வேலையை தடுத்து நிறுத்த சதிபண்ணுகிறார்கள். சத்துருக்களின் இந்த சதிஆலோசனையும் தோல்வியடைகிறது.

நெகேமியாவும் அவரோடுகூடயிருக்கிற ஜனங்களும் எருசலேமின் அலங்கத்தை கட்டி வருகிறார்கள். அவர்கள் செய்கிற வேலையை இஸ்ரவேலின் சத்துருக்களும் கவனமாய்க் கவனித்துக்கொண்டு வருகிறார்கள். நெகேமியா ஏராளமான எதிர்ப்புக்களுக்கு மத்தியில் அலங்கத்தைக் கட்டி முடிக்கிறார். இனிமேல் அலங்கத்திலே திறப்பு ஒன்றுமில்லை. வாசல்களுக்கு இன்னும் கதவு போடப்படவில்லை. அலங்கத்தின் மற்ற கட்டுமான வேலைகள் எல்லாம் முடிவுபெற்றிருக்கிறது.

நெகேமியா அலங்கத்தைக் கட்டிமுடித்ததையும், இனி அதிலே திறப்பு ஒன்றுமில்லை என்பதையும், சன்பல்லாத்தும், தொபியாவும், அரபியனான கேஷேமும் எங்களுக்குண்டாயிருந்த மற்றப் பகைஞரும் கேள்விப்படுகிறார்கள் (நெகே 6:1). எருசலேமின் வாசல்களுக்கு இன்னும் கதவுகள் போடப்படவில்லை என்பதையும் சத்துருக்கள் கேள்விப்படுகிறார்கள்.

நெகேமியாவின் வேலையை தடுத்து நிறுத்தவேண்டுமென்றால் சத்துருக்கள் துரிதமாய் செயல்படவேண்டும். அவர்கள் அந்த வேலையை இப்போது தடுக்கவில்லையென்றால், இனிமேல் அவர்களால் அதை எப்போதும் தடுக்க முடியாது. வாசல்களுக்கு கதவுகள் போடப்பட்டுவிட்டால் எருசலேமின் பாதுகாப்பு அதிகரிக்கும். ஆகையினால் நெகேமியா வாசல்களுக்கு கதவுகளை போடும் முன்பாகவே, அவருடைய வேலைகளை எப்படியாவது தடுத்து விடவேண்டுமென்று சத்துருக்கள் முயற்சி பண்ணுகிறார்கள்.

நெகேமியா சத்துருக்களுக்கு பயப்படவில்லை. எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிறவர்கள் ஒரு கையினால் ஆயுதம் ஏந்தி, மற்றொரு கையினால் கட்டுகிறார்கள். சத்துருக்கள் தங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தாலும், அவர்களை எதிர்த்து நிற்பதற்கும் இஸ்ரவேல் புத்திரர் ஆயத்தமாயிருக்கிறார்கள். அலங்கத்தைக் கட்டுகிறவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினாலும் அந்த வேலையை தங்களால் தடுத்து நிறுத்த முடியாது என்பது சத்துருக்களுக்கு தெரிந்திருக்கிறது. ஆகையினால் சத்துருக்கள் நெகேமியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணாமல், அவருக்கு விரோதமாக சதிஆலோசனைகளை பண்ணுகிறார்கள்.

நெகேமியா வாசல்களுக்கு இன்னும் கதவுபோடாதிருக்கையில், சன்பல்லாத்தும், கேஷேமும் அவரிடத்திற்கு ஆள் அனுப்புகிறார்கள். அவர்கள் நெகேமியாவை நோக்கி, "நாம் ஓனோ பள்ளத்தாக்கில் இருக்கிற கிராமங்கள் ஒன்றில் ஒருவரையொருவர் கண்டு பேசுவோம் வாரும்" (நெகே 6:2) என்று கூப்பிடுகிறார்கள். நெகேமியாவை கண்டு பேசி சமாதானம்பண்ணவேண்டும் என்பது அவர்களுடைய நோக்கமல்ல. அவர்கள் நெகேமியாவுக்கு பொல்லாப்பு செய்ய நினைக்கிறார்கள்.

நெகேமியா அலங்கத்தைக் கட்டி முடித்து விட்டார். இனி அதில் திறப்பு ஒன்றுமில்லை. ஆனாலும் நெகேமியாவின் சத்துருக்கள் அவருக்கு எதிராகத் தொடர்ந்து சதி பண்ணுகிறார்கள். ஒரு கிராமத்தில் ஒருவரையொருவர் கண்டு பேசுவதற்கு வருமாறு நெகேமியாவை அழைக்கிறார்கள். அங்கு நெகேமியாவைக் கொன்றுபோட்டு அவர் மூலமாக நடைபெறும் வேலைகளைத் தடைபண்ணுவது சத்துருக்களின் திட்டமாகும்.

ஆனால் நெகேமியாவோ மிகுந்த ஞானமாக "நான் பெரிய வேலையைச் செய்கிறேன், நான் வரக்கூடாது" என்று கூறி மறுத்துவிடுகிறார். நெகேமியா அவர்களிடத்திற்கு நேரடியாகப் போகாமல், தன்னுடைய ஆட்களை அனுப்புகிறார். (நெகே 6:3). நெகேமியாவின் சத்துருக்கள் இதுபோல நான்கு முறை முயற்சி பண்ணியும் தோல்வியுறுகிறார்கள். அதன் பின்பு, அவர்கள் நெகேமியாவிற்கு ஒரு நிருபத்தை எழுதி அனுப்புகிறார்கள் (நெகே 6:4-5).

நெகேமியா சத்துருக்களின் பொல்லாத மனதை அறிந்திருக்கிறார். அவர்களுடைய அழைப்பை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். எருசலேமின் அலங்கத்தை தடையில்லாமல் கட்டவேண்டும் என்பது நெகேமியாவின் விருப்பம். அலங்கத்தைக் கட்டுகிற வேலை நின்றுவிடக்கூடாது.

நெகேமியா தன்னுடைய ஆட்களை சன்பல்லாத்திடமும், கோஷேமிடமும் அனுப்புகிறார். அவர்கள் நெகேமியாவின் வார்த்தைகளை சத்துருக்களுக்கு சொல்லுகிறார்கள். "நான் பெரிய வேலையைச் செய்கிறேன், நான் வரக்கூடாது; நான் அந்த வேலையைவிட்டு உங்களிடத்திற்கு வருகிறதினால் அது மினக்கட்டுப்போவானேன்" (நெகே 6:3) என்று நெகேமியா தன்னுடைய ஆட்கள் மூலமாக சத்துருக்களுக்கு செய்தி சொல்லி அனுப்புகிறார்.

அலங்கத்தைக் கட்டுகிற வேலைகள் முடிந்துபோயிற்று. அதிலே திறப்பு ஒன்றுமில்லை. வாசல்களுக்கு கதவுகள் மாத்திரம் இன்னும் போடப்படவேண்டும். இந்த நேரத்தில் நெகேமியா சத்துருக்களோடு கண்டுபேசிக்கொண்டிருந்தால், அவருடைய வேலை தடைபடும். நெகேமியா தன்னுடைய நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. ஆகையினால் நெகேமியா சத்துருக்களை சந்தித்துப் பேச மறுத்துவிடுகிறார்.

சத்துருக்களோ நெகேமியாவின் வார்த்தைகளைக் கேட்டு சோர்ந்துபோய்விடவில்லை. அவர்கள் நெகேமியாவின் மனதை எப்படியாவது மாற்றிவிடவேண்டும் என்றும், தங்களுடைய கோரிக்கைக்கு அவரை சம்மதிக்க வைக்கவேண்டும் என்றும் முயற்சி பண்ணுகிறார்கள். இதற்காக அவர்கள் இந்தப்பிரகாரமாக நாலுதரம் நெகேமியாவுக்குச் சொல்லியனுப்புகிறார்கள்; நெகேமியாவும் இந்தப் பிரகாரமாகவே அவர்களுக்கு மறுமொழி அனுப்புகிறார் (நெகே 6:4).

சத்துருக்கள் நெகேமியாவோடு சமாதான வார்த்தைகளைப் பேசவேண்டும் என்று சொல்லி சதிபண்ணுகிறார்கள். ஆனால் அவர்களுடைய சதிஆலோசனை நிறைவேறவில்லை. அவர்களுடைய சதிமுயற்சிகள் வீணாய்ப்போயிற்று. சத்துருவாகிய சன்பல்லாத்து நெகேமியாவின் வேலையை தடுத்து நிறுத்துவதற்கு தொடர்ந்து சதிபண்ணுகிறான்.

நெகேமியா எருசலேமின் பாதுகாப்புக்காக அலங்கத்தைக் கட்டுகிறார். நெகேமியாவின் மனதில் வேறு தீயயோசனை ஒன்றுமில்லை. ஆனால் சன்பல்லாத்தோ நெகேமியாவின் மனதில் தீயயோசனை இருக்கிறது என்றும், அவர் எருசலேமுக்கு அலங்கத்தைக் கட்டுவதினால், பெர்சியா தேசத்து ராஜாவுக்கு விரோதமாக கலகம்பண்ண முயற்சி பண்ணுகிறார் என்றும், நெகேமியா யூதாதேசத்திற்கு ராஜாவாக ஆசைப்படுகிறார் என்றும் சன்பல்லாத்து நெகேமியாவின்மீது குற்றம் சொல்லுகிறான்.

சன்பல்லாத்து நான்குதரம் தன்னுடைய ஆட்களை நெகேமியாவிடம் அனுப்பினான். அவர்கள் சன்பல்லாத்தின் வார்த்தைகளை நெகேமியாவுக்கு சொன்னார்கள். இப்போது ஐந்தாம் தரமும், சன்பல்லாத் தன்னுடைய வேலைக்காரனை நெகேமியாவினிடத்தில் அனுப்புகிறான். இப்போது புதிய முயற்சியாக, சன்பல்லாத்து தன்னுடைய வேலைக்காரன் கையிலே முத்திரைபோடாத ஒரு கடிதத்தைக் கொடுத்து, நெகேமியாவினிடத்தில் அனுப்புகிறான் (நெகே 6:5).

வேதாகமத்தில் முதலாவது கடிதம் தாவீது யோவாபுக்கு எழுதியதாகும். (2சாமு 11:14). யேசபேல் தன் கணவனாகிய ஆகாபின் பேரில் நிருபத்தை எழுதியிருக்கிறாள். (1இராஜா 21:8). சீரியாவின் ராஜா இஸ்ரவேலின் ராஜாவுக்கு நிருபத்தை எழுதினான். (2இராஜா 5:5-7). யெகூவும் நிருபங்களை எழுதியிருக்கிறான். (2இராஜா 10:1). இந்த நிருபங்களெல்லாம் தோல்சுருள்களில் எழுதப்பட்டதா அல்லது பாப்பைரஸ் என்னும் புல்லில் எழுதப்பட்டதா என்று தெளிவாகத் தெரியவில்லை.

எகிப்து தேசத்தில் பாப்பைரஸ் புல்லிலும், மிருகங்களின் தோல்களிலும், பனை ஓலைகளிலும் நிருபங்களை எழுதுவது வழக்கம். பெர்சியாவிலிருந்து முக்கியமான நபர்களுக்கு அனுப்பப்படும் நிருபங்களை ஒரு சுருளில் எழுதி அதை அலங்காரமான குவளைகளில் மூடி அனுப்புவது வழக்கம். அந்த மூடிக்கு ஒரு முத்திரையும் போட்டுவிடுவார்கள். (ஏசா 8:16; ஏசா 29:11; தானி 12:4,9; வெளி 5:4,9; வெளி 10:4; வெளி 22:10).

பெர்சிய தேசத்திற்கு எதிராக நெகேமியாவும், யூதரும் கலகம் பண்ண நினைக்கிறார்கள் என்பது இவர்கள்மீது கூறப்படும் வெளிப்படையான குற்றச்சாட்டு. ஆனால் இதை நெகேமியா மறுக்கிறார். தங்களோடு ஆலோசனை பண்ணுவதற்கு நெகேமியா வரவேண்டுமென்றும், அந்தச் சமயத்தில் நெகேமியாவின் ஜீவனுக்கு ஆபத்து உண்டாக்க வேண்டுமென்றும் சத்துருக்கள் திட்டம் வகுக்கிறார்கள். ஆனால் நெகேமியா சத்துருக்களின் சதிக்கு உடன்படவில்லை. (நெகே 6:4-7).

"யூதாவிலே ஒரு ராஜா இருக்கிறார்" என்று கூறுகிற தீர்க்கதரிசிகளை நெகேமியா சம்பாதித்தார் என்று சன்பல்லாத்து சொல்லுகிறான். தாவீதின் வம்சத்தில் கோனியா அல்லது யோயாக்கீனுக்குப் பின்பு, யூதாவில் எந்த ராஜாவும் ஆட்சி புரியவில்லை. இனிமேல் வரப்போகிற காலத்தில் மேசியாதான் யூதாவின்மீது ராஜாவாக இருப்பார் (எரே 22:24-30).

சன்பல்லாத்தின் நிருபத்திலே, "நீரும் யூதரும் கலகம் பண்ண நினைக்கிறீர்கள் என்றும், அதற்காக நீர் அலங்கத்தைக் கட்டுகிறீர் என்றும், இவ்விதமாக நீர் அவர்களுக்கு ராஜாவாகப் போகிறீர் என்றும், யூதாவிலே ஒரு ராஜா இருக்கிறார் என்று உம்மைக்குறித்து எருசலேமிலே கூறுகிற தீர்க்கதரிசிகளையும் சம்பாதித்தீரென்றும் புறஜாதிகளுக்குள்ளே பிரஸ்தாபமாயிருக்கிறது, கஷ்மூவும் அப்படிச் சொல்லுகிறான்; இப்போதும் இந்தச் செய்தி ராஜாவுக்கு எட்டுமே; ஆகையால் நாம் ஒருவரோடொருவர் ஆலோசனைபண்ணுகிறதற்காக நீர் வரவேண்டும்" (நெகே 6:6,7) என்று எழுதியிருக்கிறது.

சன்பல்லாத்தின் கடிதம் முத்திரைபோடாத கடிதம். ஆகையினால் இந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருக்கிற செய்தி இரகசியமானதல்ல என்பதையும், அது எல்லோருக்கும் தெரிந்திருக்கிற பொதுவான செய்தி என்பதையும், இந்தச் செய்தியை எல்லா ஜனங்களும் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் சன்பல்லாத் தெளிவுபடுத்துகிறான். இந்த கடிதத்தில் எழுதியிருக்கிற செய்தி உண்மையானது என்பதை கஷ்மு என்பவன் உறுதிபண்ணுவான் என்றும் சன்பல்லாத் சொல்லுகிறான்.

யூதாதேசம் பெர்சியா தேசத்து ராஜாவினுடைய ஆளுகையின் கீழிருக்கிறது. ஆனால் நெகேமியாவோ பெர்சியா தேசத்து ராஜாவுக்கு விரோதமாக கலகம்பண்ணி, யூதாதேசத்தை பெர்சியா தேசத்தின் ஆளுகையிலிருந்து பிரித்து, அந்த தேசத்திற்கு தானே ராஜாவாகவேண்டுமென்று நெகேமியா விரும்புகிறார் என்பது சன்பல்லாத்தின் குற்றச்சாட்டு.

சன்பல்லாத் நெகேமியாவுக்கு விரோதமாக குற்றச்சாட்டுக்களைச் சொன்னாலும், அவன் இந்தக் கடிதத்தின் மூலமாய் தன்னை நெகேமியாவின் சிநேகிதனைப்போல காண்பிக்கிறான். "இப்போதும் இந்தச் செய்தி ராஜாவுக்கு எட்டுமே, ஆகையால் நாம் ஒருவரோடொருவர் ஆலோசனைபண்ணுகிறதற்காக நீர் வரவேண்டும்" என்று சன்பல்லாத் இந்தக் கடிதத்தில் வஞ்சகமாக எழுதுகிறான்.

நெகேமியா இந்தக் கடிதத்தை வாசித்துப் பார்த்து, எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலையை நிறுத்திவிட்டு, தன்னிடத்தில் ஆலோசனை பண்ணுவதற்காக வருவார் என்று சன்பல்லாத் எதிர்பார்க்கிறான். யூதாஸ்காரியோத்து இயேசுகிறிஸ்துவை முத்தமிட்டு, அவரைக் காட்டிக்கொடுத்தான். சன்பல்லாத் யூதாஸ்காரியோத்தைப்போல, முத்தமிட்டு கொன்றுபோடும் சதிவேலை பண்ணுகிறான்.

நெகேமியா உண்மையுள்ளவர். சன்பல்லாத் எழுதியிருக்கிற கடிதத்திலே உண்மையான செய்தி எதுவுமில்லை என்பது நெகேமியாவுக்கு தெரிந்திருக்கிறது. நெகேமியாவை குழப்பவேண்டும் என்பதற்காகவும் அவர் செய்கிற வேலைகளை தடுத்து நிறுத்தவேண்டும் என்பதற்காகவும், சன்பல்லாத் இதுபோல சதியோசனைபண்ணி கடிதத்தை எழுதியிருக்கிறான். இந்தச் சதி நெகேமியாவை விழவைப்பதற்காக வைக்கப்பட்டிருக்கும் கண்ணி.

நெகேமியாவோ கர்த்தருடைய கிருபையினால் சத்துருக்களின் கண்ணிக்கு தப்பிக்கிறார். நெகேமியாவின் மனச்சாட்சியில் குற்றமில்லை. அது சுத்தமாயிருக்கிறது. நெகேமியா சன்பல்லாத்தின் கடிதத்தை வாசித்து பார்த்துவிட்டு, "நீர் சொல்லுகிற அந்தக் காரியங்களில் ஒன்றும் நடக்கவில்லை; அவைகள் உம்முடைய மனோராஜ்யமே ஒழிய வேறல்ல" *(நெகே 6:8)* என்று தன்னுடைய ஆட்கள் மூலமாக சன்பல்லாத்திற்கு சொல்லியனுப்புகிறார்.

நம்முடைய மனச்சாட்சி சுத்தமாயிருந்தாலும், நம்முடைய பாதுகாப்புக்கு, நம்முடைய மனச்சாட்சியின்மீது நம்பிக்கை வைக்க முடியாது. நம்முடைய நம்பிக்கையை எப்போதுமே கர்த்தர் மீதுதான் வைக்கவேண்டும். நெகேமியா தன்னுடைய வார்த்தைகளை சன்பல்லாத்திற்கு சொல்லி அனுப்பினாலும், அவர் பரலோகத்தின் தேவனுக்கு நேராக ஜெபம்பண்ணுகிறார்.

"தேவனே, நீர் என் கைகளை திடப்படுத்தியருளும்" *(நெகே 6:9)* என்று நெகேமியா கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறார். எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலை நடந்தேறாதபடிக்கு, நெகேமியாவின் கைகளும், அவரோடுகூட அலங்கத்தைக் கட்டுகிறவர்களின் கைகளும் சலித்துப்போகும் என்று சத்துருக்கள் சொல்லுகிறார்கள். சத்துருக்கள் எல்லோரும் நெகேமியாவையும், யூதர்களையும் பயமுறுத்த பார்க்கிறார்கள். நெகேமியாவோ கர்த்தர்மீது நம்பிக்கை வைக்கிறார். கர்த்தரே தன்னுடைய கைகளை திடப்படுத்தியருள வேண்டுமென்று நெகேமியா கர்த்தருடைய சமுகத்தில் தன்னையும், தான் சந்திக்கிற எல்லா பிரச்சனைகளையும் ஒப்புக்கொடுக்கிறார்.

கள்ளத்தீர்க்கதரிசி
நெகே 6:10-14

நெகே 6:10. மெகதாபெயேலின் குமாரனாகிய தெலாயாவின் மகன் செமாயா தன் வீட்டிலே அடைக்கப்பட்டிருக்கும் போது, நான் அவனிடத்தில் போனேன்; அப்பொழுது அவன்: நாம் இருவருமாய் தேவனுடைய வீடாகிய ஆலயத்துக்குள்ளே போய், தேவாலயத்தின் கதவுகளைப் பூட்டுவோம் வாரும்; உம்மைக் கொன்றுபோட வருவார்கள், இரவிலே உம்மைக் கொன்றுபோட வருவார்கள் என்றான்.

நெகே 6:11. அதற்கு நான்: என்னைப்போன்ற மனிதன் ஓடிப்போவானோ? என்னைப் போன்றவன் உயிர் பிழைக்கும்படி தேவாலயத்திலே போய்ப் பதுங்குவானோ? நான் போவதில்லை என்றேன்.

நெகே 6:12. தேவன் அவனை அனுப்பவில்லையென்றும், தொபியாவும் சன்பல்லாத்தும் அவனுக்குக் கூலி கொடுத்ததினால், அவன் எனக்கு விரோதமாய் அந்தத் தீர்க்கதரிசனத்தைச் சொன்னான் என்றும் அறிந்துகொண்டேன்.

நெகே 6:13. நான் பயந்து அப்படிச் செய்து பாவங் கட்டிக்கொள்ளுகிறதற்கும், என்னை நிந்திக்கத்தக்க அபகீர்த்திக்கு முகாந்தரம் உண்டாக்குகிறதற்கும் அவனுக்குக் கைக்கூலி கொடுத்திருந்தார்கள்.

நெகே 6:14. என் தேவனே, தொபியாவும் சன்பல்லாத்தும் செய்த இந்தச் செய்கைகளுக்குத்தக்கதாக நீர் அவர்களையும், நொவதியாள் என்னும் தீர்க்கதரிசியானவளையும், எனக்குப் பயமுண்டாக்கப் பார்த்த மற்றத் தீர்க்கதரிசிகளையும் நினைத்துக்கொள்ளும்.

யூதர்களுக்கு சத்துருவாயிருக்கிறவர்கள் சோர்ந்து போகாமல், நெகேமியாவுக்கு தொடர்ந்து பிரச்சனைகளைக் கொடுக்கிறார்கள். நெகேமியா எருசலேமைச் சுற்றிலும் அலங்கத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறார். அவருடைய வேலையை தடுத்து நிறுத்தவேண்டும் என்பதே சத்துருக்களின் நோக்கம்.

நெகேமியா தன்னுடைய வேலையை நிறுத்திவிட்டு, அவர் தன்னுடைய பாதுகாப்புக்காக தேவாலயத்திற்குள்ளே ஒழிந்துகொள்ளவேண்டும் என்று ஒரு கள்ளத்தீர்க்கதரிசி ஆலோசனை சொல்லுகிறான். நெகேமியா அலங்கத்தைக் கட்டுகிற இடத்திலே இருக்கக்கூடாது. அவர் வேறு எங்கு வேண்டுமானாலும் போயிருக்கலாம் என்பது சத்துருக்களுடைய சதிஆலோசனை.

சத்துருக்கள் நெகேமியாவை பயமுறுத்துகிறார்கள். எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவது நல்ல வேலை. ஆனால் அவர் அந்த நல்ல வேலையை விட்டு விட்டு மதியீனமான வேலையையும், பரியாசமான வேலையையும் செய்யவேண்டும் என்று சத்துருக்கள் முயற்சிபண்ணுகிறார்கள்.

சத்துருக்கள் செமாயா என்னும் கள்ளத்தீர்க்கதரிசியை கூலிக்கு அமர்த்தியிருக்கிறார்கள். நெகேமியா தன்னுடைய உயிருக்கு பயந்து, கள்ளத்தீர்க்கதரிசியாகிய செமாயாவின் ஆலோசனைக்கு கீழ்ப்படிந்தால், அவர் தன்மீது பாவத்தைக் கட்டிக்கொள்வார். நெகேமியாவை நிந்திக்கத்தக்க அவகீர்த்திக்கு முகாந்தரமுண்டாகும். நெகேமியாவுக்கு நிந்தனை வரவேண்டும் என்பதும், யூதர்கள் எல்லோரும் அவரை நிந்திக்கவேண்டும் என்பதும் சத்துருக்களின் நோக்கம். இதற்காக சத்துருக்கள் செமாயா என்னும் கள்ளத்தீர்க்கதரிசிக்கு கைக்கூலி கொடுத்திருக்கிறார்கள் (நெகே 6:13).

சத்துருக்கள் செமாயா என்னும் கள்ளத்தீர்க்கதரிசிக்கு கைக்கூலி கொடுத்ததுபோல, நொவதியாள் என்னும் தீர்க்கதரிசினிக்கும், மேலும் சில கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் கைக்கூலி கொடுத்து, அவர்கள் மூலமாக நெகேமியாவை வஞ்சிக்கப்பார்க்கிறார்கள். நெகேமியா எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலையை நிறுத்திவிட்டு, தன்னுடைய உயிரை காத்துக்கொள்ள அவர் எங்கேயாவது ஓடி ஒளிந்துகொள்ளவேண்டும் என்பது அவருடைய திட்டம்.

செமாயா என்பவன் மெகதாபெயேலின் குமாரனாகிய தெலாயாவின் மகன். இவன் ஒரு கள்ளத்தீர்க்கதரிசி. இவன் தன் வீட்டிலே அடைக்கப்பட்டிருக்கிறான். உலகப்பிரகாரமான எந்த வேலையிலும் ஈடுபடாமல், தன்னுடைய வீட்டிற்குள்ளே, தனியாகயிருக்கிறான். இவன் தன் வீட்டை விட்டு வெளியே வரமாட்டான். செமாயா தன் வீட்டிற்குள்ளே எப்போதும் தேவனைப்பற்றித் தியானித்துக்கொண்டிருக்கிறான் என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். ஆனால் இவன் கர்த்தரை தியானிக்கவில்லை. இவன் ஒரு மாய்மாலக்காரன்.

செமாயா தன் வீட்டிலே அடைக்கப்பட்டிருக்கும்போது, நெகேமியா அவனிடத்திற்குப்போகிறார் (நெகே 6:10). அந்த வீட்டிலே மேலும் சில தீர்க்கதரிசிகளும், நொவதியாள் என்னும் தீர்க்கதரிசினியும் இருக்கிறார்கள் (நெகே 6:14). இவர்கள் எல்லோருமே யூதர்களுடைய சத்துருக்களுக்கு ஆதரவாயிருக்கிறார்கள். சத்துருக்களுக்கு சாதகமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். இவர்களிடத்தில் பணஆசை இருக்கிறது. சத்துருக்கள் இந்த கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு கைக்கூலி கொடுத்து, அவர்களை தங்களுடைய சதித்திட்டத்தில் பயன்படுத்துகிறார்கள்.

செமாயா என்னும் கள்ளத்தீர்க்கதரிசி நெகேமியாவிடத்தில், "நாம் இருவருமாய் தேவனுடைய வீடாகிய ஆலயத்துக்குள்ளே போய், தேவாலயத்தின் கதவுகளைப் பூட்டுவோம் வாரும்; உம்மைக் கொன்றுபோட வருவார்கள், இரவிலே உம்மைக் கொன்றுபோட வருவார்கள்" (நெகே 6:10) என்று சொல்லுகிறான்.

செமாயாவோடு கூடயிருக்கிற மற்ற கள்ளத்தீர்க்கதரிசிகளும் அவனைப்போலவே பொய்சொல்லுகிறார்கள். அவர்கள் நெகேமியாவுக்கு ஆதரவாயிருப்பதுபோலவும், அவர்மீது அக்கரையுள்ளவர்போலவும் பேசுகிறார்கள். நெகேமியா ஆபத்துக்கு தப்பிக்கவேண்டுமென்றும், ஆபத்து முடியும் வரையிலும் அவர் தேவாலயத்தின் கதவுகளைப் பூட்டிக்கொண்டு உள்ளே மறைவாக ஒளிந்திருக்கவேண்டும் என்றும் கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள்.

எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலைகள் வேகமாக நடைபெறுகிறது. நெகேமியா கள்ளத்தீர்க்கதரிசியின் வார்த்தையைக் கேட்டு, தேவனுடைய ஆலயத்திலே ஒளிந்துகொண்டால், அலங்கத்தைக் கட்டுகிறவர்கள் தங்கள் வேலையை நிறுத்திவிடுவார்கள். தங்கள் கையில் பிடித்திருக்கிற ஆயுதங்களையும் கீழே போட்டுவிடுவார்கள். ஆயுதமில்லாத யூதர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவது சத்துருக்களுக்கு எளிதாகயிருக்கும். யூதர்களால் சத்துருக்களை எதிர்க்க முடியாது. அவர்கள் இதுவரையிலும் கட்டியெழுப்பியிருக்கிற அலங்கத்தை இடித்துப்போடலாம் என்று, சத்துருக்கள் சதித்திட்டம் போடுகிறார்கள்.

நெகேமியாவோ கள்ளத்தீர்க்கதரிசியாகிய செமாயாவின் கபடவார்த்தைகளுக்கு செவி கொடுக்கவில்லை. நெகேமியா அவனை நோக்கி, "என்னைப்போன்ற மனிதன் ஓடிப்போவானோ? என்னைப் போன்றவன் உயிர் பிழைக்கும்படி தேவாலயத்திலே போய்ப் பதுங்குவானோ? நான் போவதில்லை" (நெகே 6:11) என்று காலதாமதமில்லாமல் உடனே பிரதியுத்தரம் சொல்லுகிறார்.

செருபாபேல் தேவாலயத்தை ஏற்கெனவே கட்டி முடித்துவிட்டார். (நெகே 7:5-67; எஸ்றா 2:1-65). தேவாலயம் மறுபடியும் கட்டி முடிக்கப்பட்ட பின்பு, அலங்கங்கள் கட்டப்படும் வேலை ஆரம்பிக்கப்பட்ட பின்பு, நெகேமியா எருசலேமிற்கு வருகிறார். பூரணமாக கட்டி முடிக்கப்படாமல், அரைகுறையாக விடப்பட்டிருக்கும் அலங்க வேலையை நெகேமியாவும், அவருடைய ஆட்களும் 52 நாட்களில் கட்டி முடித்து விடுகிறார்கள். (நெகே 6:15). அலங்கங்களில் காணப்பட்ட திறப்புக்களை நெகேமியா அடைக்கிறார். எருசலேமின் மொத்த அலங்கத்தையும் 52 நாளில் கட்டி முடிப்பது என்பது மிகவும் கடினமான காரியம். ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட வேலையை நெகேமியா 52 நாளில் கட்டி முடித்திருக்கிறார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

நெகேமியா சத்துருக்களுக்கு பயந்து ஓடி ஒளிந்துகொள்கிறவரல்ல. நெகேமியா ஒரு யுத்தவீரர். சத்துருக்களுக்கு பயந்து ஓடுவதைவிட, யுத்தக்களத்திலே மரித்துப் போவதையே நெகேமியா தேர்ந்தெடுப்பார். எருசலேமின் அலங்கத்தைக் கட்டாமல், அதை அப்படியே விட்டுவிட்டு, தன்னுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக, தேவாலயத்திலே போய் ஒடி ஒளிந்துகொள்ளவேண்டும் என்னும் கோழைத்தனமான எண்ணம் அவருடைய மனதில் இல்லை. நெகேமியா கள்ளத்தீர்க்கதரிசியாகிய செமாயாவைப் பார்த்து, "என்னைப்போன்ற மனிதன் ஓடிப்போவானோ" என்று கேட்கிறார்.

நெகேமியாவுக்கு சத்துருக்களின் சதிஆலோசனை தெரிந்திருக்கிறது. செமாயா கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லாமல், கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறான் என்பதையும் நெகேமியா அறிந்திருக்கிறார்.

தேவன் செமாயாவை அனுப்பவில்லையென்றும், தொபியாவும் சன்பல்லாத்தும் அவனுக்குக் கூலி கொடுத்ததினால், அவன் தனக்கு விரோதமாய் அந்தத் தீர்க்கதரிசனத்தைச் சொன்னான் என்றும் நெகேமியா அறிந்துகொள்கிறார் (நெகே 6:12).

நெகேமியாவிற்கு எதிராக அவருடைய சத்துருக்கள் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பியிருக்கிறார்கள். தொபியாவும் சன்பல்லாத்தும் அவனுக்குக் கூலி கொடுத்ததினால், அவன் நெகேமியாவிற்கு விரோதமாய் தீர்க்கதரிசனத்தைச் சொன்னான். இந்த இரகசியத்தைக் கர்த்தர் நெகேமியாவிற்கு வெளிப்படுத்துகிறார். நெகேமியா ஒவ்வொரு சூழ்நிலையிலும் கர்த்தரைச் சார்ந்திருப்பதினால் அந்தத் தீர்க்கதரிசியைத் தேவன் அனுப்பவில்லை என்று தெரிந்து கொள்கிறார்.

நெகேமியா செமாயாவின் வார்த்தையைக் கேட்டு, சத்துருவுக்கு பயந்து, ஓடி ஒளிந்திருந்தால், அவர் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்கிறவராயிருப்பார். நெகேமியா சத்துருவுக்கு பயப்படவில்லை. அவர் கர்த்தருக்கு பயப்படுகிறார். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள். அவர்கள் பாவம் செய்ய பயப்படுவார்கள். தனக்கு அபகீர்த்தி ஏற்படுவதையும் நெகேமியா விரும்பவில்லை. நெகேமியாவை நிந்திக்கத்தக்க அபகீர்த்திக்கு முகாந்தரம் உண்டாக்குகிறதற்கு, சத்துருக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு கைக்கூலி கொடுத்திருக்கிறார்கள் (நெகே 6:13).

நெகேமியாவுக்கு சத்துருக்களின் சதிஆலோசனை தெரியவருகிறது. அவர் உடனே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். "என் தேவனே, தொபியாவும் சன்பல்லாத்தும் செய்த இந்தச் செய்கைகளுக்குத்தக்கதாக நீர் அவர்களையும், நொவதியாள் என்னும் தீர்க்கதரிசியானவளையும், எனக்குப் பயமுண்டாக்கப் பார்த்த மற்றத் தீர்க்கதரிசிகளையும் நினைத்துக்கொள்ளும்" (நெகே 6:14) என்று நெகேமியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

அலங்கம் கட்டி முடிக்கப்படுகிறது நெகே 6:15,16

நெகே 6:15. அப்படியே அலங்கமானது ஐம்பத்திரண்டு நாளைக்குள்ளே கட்டப்பட்டு, எலூல் மாதம் இருபத்தைந்தாந் தேதியிலே முடிந்தது.

நெகே 6:16. எங்கள் பகைஞர் எல்லாரும் அதைக் கேட்டபோதும், எங்கள் சுற்றுப்புறத்தாராகிய புறஜாதியான அனைவரும் கண்டபோதும், மிகவும் முனையற்றுப்போய், இந்தக் கிரியை எங்கள் தேவனால் கைகூடி வந்ததென்று அறிந்தார்கள்.

நெகேமியா எருசலேமின் அலங்கத்தைக் கட்டி முடிக்கிறார். ஆனாலும் சத்துருக்கள் அவருக்கு விரோதமாக தொடர்ந்து பிரச்சனைகளைக் கொடுத்து கொண்டிருக்கிறார்கள்.

அலங்கமானது ஐம்பத்திரண்டு நாளைக்குள்ளே கட்டப்பட்டு, எலூல் மாதம் இருபத்தைந்தாந் தேதியிலே முடிகிறது (நெகே 6:15).

எருசலேமின் அலங்கம் கட்டி முடிக்கப்பட்ட செய்தியை, பகைஞர் எல்லோரும் கேட்கிறார்கள். யூதர்களுடைய சுற்றுப்புறத்தாராகிய புறஜாதியார் அனைவரும் கட்டி முடிக்கப்பட்ட அலங்கத்தைக் காண்கிறார்கள். இதனால் அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியமும் பயமும் உண்டாயிற்று. சத்துருக்கள் மிகவும் முனையற்றுப்போனார்கள். இந்தக் கிரியை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரால் கைகூடி வந்தது என்பதை சத்துருக்கள் அறிந்துகொள்கிறார்கள் (நெகே 6:16).

யூதருடைய சத்துருக்கள் அவர்களுக்கு பிரச்சனைகளைக் கொடுத்தாலும் கர்த்தருடைய கிருபையினால் அலங்கம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. நெகேமியாவும் அவருடைய மனுஷரும் ஐம்பத்திரண்டு நாளைக்குள்ளே அலங்கத்தை கட்டி முடித்திருக்கிறார்கள். இந்த காலத்தில் ஓய்வுநாளையும் பரிசுத்தமாக ஆசரித்திருப்பார்கள். அலங்கத்தைக் கட்டுகிற வேலையில் ஏராளமானோர் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் இந்த நல்ல வேலையை சந்தோஷமாய்ச் செய்தார்கள். எருசலேமின் அலங்கம் நேர்த்தியாய்க் கட்டி முடிக்கப்படவேண்டும் என்னும் ஆர்வம் அவர்களுடைய மனதிலிருந்தபடியினால், அவர்கள் எல்லோரும் இந்த நல்ல வேலைக்கு தங்கள் கைகளைத் திடப்படுத்தி, உற்சாகமாய் அலங்கத்தைக் கட்டி முடித்திருக்கிறார்கள்.

தொபியாவின் சதி
நெகே 6:17-19

நெகே 6:17. அந்த நாட்களில் யூதாவிலுள்ள பெரிய மனிதரிடத்திலிருந்து தொபியாவுக்குப் போகிறதும், தொபியாவினிடத்திலிருந்து அவர்களுக்கு வருகிறதுமான கடிதங்கள் அநேகமாயிருந்தது.

நெகே 6:18. அவன் ஆராகின் குமாரனாகிய செகனியாவுக்கு மருமகனாயிருந்ததும் அல்லாமல், அவன் குமாரனாகிய யோகனான் பெரகியாவின் குமாரனாகிய மெசுல்லாமின் குமாரத்தியை விவாகம் பண்ணியிருந்தபடியாலும், யூதாவில் அநேகர் அவனுக்கு ஆணையிட்டுக் கொடுத்திருந்தார்கள்.

நெகே 6:19. அவன் செய்யும் நன்மைகளையும் அவர்கள் எனக்கு முன்பாக விவரித்து, என் வார்த்தைகளை அவனுக்குக் கொண்டுபோவார்கள்; தொபியா எனக்குப் பயமுண்டாகக் கடிதங்களை அனுப்புவான்.

நெகேமியா எருசலேமின் அலங்கத்தைக் கட்டி முடித்திருக்கிறார். சத்துருக்கள் கட்டப்பட்ட அலங்கத்தைப் பார்த்து பொறாமைப்படுகிறார்கள். அவர்கள் பல வழிகளில் அலங்கத்தைக் கட்டுகிற வேலையை தடுத்துப்போட முயற்சி பண்ணினார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சிகளெல்லாமே தோல்வியுற்றது. அலங்கம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்து சத்துருக்களின் மனதில் வேதனையும் துக்கமும் உண்டாயிற்று.

கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. கர்த்தருக்கு சித்தமான காரியம் நடைபெறும். கர்த்தருடைய சித்தத்தை எதிர்த்து நிற்க யாரும் முயற்சி பண்ணக்கூடாது.

நெகேமியா யூதாதேசத்திற்கு அதிபதியாயிருக்கிறார். யூதர்கள் மத்தியிலே நெகேமியாவுக்கு மதிப்பும் மரியாதையும் இருக்கிறது. ஜனங்கள் நெகேமியாவினுடைய ஆளுகையை மதிக்கிறார்கள். அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார்கள். ஆனாலும் யூதர்களில் சிலர் நெகேமியாவுக்கு உண்மையுள்ளவர்களாயில்லை. அவர்கள் தொபியா என்னும் சத்துருவோடு சேர்ந்துகொண்டு, நெகேமியாவுக்கு விரோதமாக சதிபண்ணுகிறார்கள்.

தொபியா என்பவன் ஆராகின் குமாரனாகிய செகனியாவுக்கு மருமகன். மேலும் தொபியாவின் குமாரனாகிய யோகனான் பெரகியாவின் குமாரனாகிய மெசுல்லாமின் குமாரத்தியை விவாகம் பண்ணியிருக்கிறான். இதனால் யூதாவில் அநேகர் தொபியாவுக்கு ஆணையிட்டுச் கொடுத்திருக்கிறார்கள் (நெகே 6:18). இவர்கள் யூதர்களாகயிருந்தாலும், தொபியாவோடு இரகசிய சிநேகம் வைத்திருக்கிறார்கள்.

யூதர்கள் தங்களுக்குள் ஒற்றுமையாயிருக்கவேண்டும். அவர்கள் தங்களுக்குத் தாங்களே பிரிந்திருந்திருந்தால் யூதாதேசம் பலமிழந்துபோகும். ஆனாலும் அந்த நாட்களில் யூதாவிலுள்ள பெரிய மனிதரிடத்திலிருந்து தொபியாவுக்குப் போகிறதும், தொபியாவினிடத்திலிருந்து அவர்களுக்கு வருகிறதுமான கடிதங்கள் அநேகமாயிருக்கிறது (நெகே 6:17).

நெகேமியாவுக்கு விரோதமாக எழும்பியிருக்கிற யூதர்கள் தொபியாவோடு சம்பந்தம்பண்ணினவர்கள். அந்நிய ஜாதியாரோடு விவாகம்பண்ணினால் இப்படிப்பட்ட பிரச்சனைகள் வரும். யூதர்களுக்குள்ளே இருக்கிற நெகேமியாவின் சத்துருக்கள், தொபியா செய்யும் காரியங்களை நன்மையான காரியங்கள் என்று சொல்லுகிறார்கள். நெகேமியாவும், தொபியாவும் சிநேகமாயிருக்கவேண்டுமென்று இந்த யூதர்கள் விரும்புகிறார்கள். இதற்காக அவர்கள் நெகேமியாவின் வார்த்தைகளை தொபியாவுக்கு கொண்டு போகிறார்கள். தொபியா நெகேமியாவுக்கு பயமுண்டாக கடிதங்களை அனுப்புகிறான் (நெகே 6:19).

யூதர்களில் நெகேமியாவுக்கு பகைஞராயிருக்கிறவர்கள், அவருடைய ஆலோசனைகளுக்கு செவிகொடுக்கவில்லை. சத்துருக்கள் நெகேமியாவுக்கு விரோதமாக சதிசெய்தாலும், கர்த்தர் நெகேமியாவுக்கு நன்மை செய்கிறார்.

7 அதிகாரம்

நெகேமியா எருசலேமின் அலங்கத்தை கட்டி முடித்திருக்கிறார். அலங்கத்தின் வாசல்களுக்கு கதவுகளும் போடப்பட்டிருக்கிறது. இதற்கு பின்பு தான் செய்ய வேண்டிய வேலைகளை நெகேமியா கருத்தாய் திட்டமிட்டு செய்கிறார்.

எருசலேம் நகரத்தைப் பாதுகாக்கவேண்டும் (நெகே 7:1-4). எருசலேம் நகரத்தில் போதுமான எண்ணிக்கையில் ஜனங்கள் குடியிருக்கவேண்டும். இதற்காக நெகேமியா சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேல் புத்திரரின் வம்ச அட்டவணையை ஆராய்ந்து பார்க்கிறார் (நெகே 7:5-73). இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே, பத்துப்பேரில் ஒருவரை எருசலேமிலே குடியிருக்கப்பண்ணுகிறார்கள் (நெகே 11:1).

எருசலேமுக்கு காவல்

நெகே 7:1-4

நெகே 7:1. அலங்கம் கட்டிமுடிந்து, கதவுகள் போடப்பட்டு, வாசல் காவலாளரையும், பாடகரையும், லேவியரையும் ஏற்படுத்தினபின்பு,

நெகே 7:2. நான் என் சகோதரனாகிய ஆனானியையும், அநேகரைப் பார்க்கிலும் உண்மையுள்ளவனும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்த அரமனைத்தலைவனாகிய அனனியாவையும், எருசலேமின் காவல் விசாரணைக்கு ஏற்படுத்தினேன்.

நெகே 7:3. அவர்களை நோக்கி: வெயில் ஏறுமட்டும் எருசலேமின் வாசல்கள் திறக்கப்படவேண்டாம்; நீங்கள் நிற்கும் போதே கதவுகளைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டு, எருசலேமின் குடிகளில் காவலாளர் அவரவர் தங்கள் காவலிலே, அவரவர் தங்கள் வீடுகளுக்கு எதிராக நிறுத்தப்படவேண்டும் என்றேன்.

நெகே 7:4. பட்டணம் விஸ்தாரமும் பெரிதுமாயிருந்தது; அதற்குள்ளே ஜனங்கள் கொஞ்சமாயிருந்தார்கள், வீடுகளும் கட்டப்படவில்லை.

கர்த்தர் தம்முடைய சபையைப்பற்றிச் சொல்லும்போது, "எருசலேமே, உன் மதில்களின் மேல் பகல்முழுதும் இராமுழுதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன்" (ஏசா 66:2) என்று சொல்லுகிறார். நெகேமியா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து எருசலேமுக்கு ஜாமக்காரரை ஏற்படுத்துகிறார்.

எருசலேமின் அலங்கங்களுக்கு ஜீவனில்லை. அலங்கங்களிலே காவலாளரை நிறுத்தவேண்டும். ஜீவனுள்ள காவலாளர், அலங்கத்தில் நிற்கவில்லையென்றால், அந்த அலங்கம் எருசலேம் நகரத்திற்கு பாதுகாப்பைக் கொடுக்காது.

எருசலேமின் அலங்கம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதன் வாசல்களில் கதவுகள் போடப்பட்டிருக்கிறது. நெகேமியா எருசலேமைப் பாதுகாப்பதற்கு காவலாளரையும், பாடகரையும், லேவியரையும் ஏற்படுத்துகிறார். அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளை நெகேமியா அவர்களுக்கு திட்டம்பண்ணிக்கொடுக்கிறார்.

கர்த்தருடைய ஆராதனையே எருசலேமுக்கு பாதுகாப்பாகயிருக்கும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்களுடைய ஊழியங்களை உண்மையாய்ச் செய்யும்போது, அவர்களே அலங்கங்கள்மீது நிற்கிற ஜாமக்காரரைப்போல இருப்பார்கள்.

எருசலேமின் காவல் விசாரணைக்கு நெகேமியா இரண்டுபேரை நியமிக்கிறார். இவர்கள் இருவரும் சேனாபதிகள் போல இருக்கிறார்கள். எருசலேம் நகரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை நெகேமியா இவர்களிடத்தில் பொறுப்பாய் ஒப்புக்கொடுக்கிறார். எருசலேமின் பாதுகாப்புக்கும், அதன் சமாதானத்திற்கும் இவர்கள் உத்திரவாதம் கொடுக்கவேண்டும்.

நெகேமியா நியமித்த இரண்டு பேரில் ஒருவன் அனானி. இவன் நெகேமியாவின் சகோதரன். நெகேமியா பெர்சியா தேசத்திலிருந்தபோது, எருசலேமின் அலங்கங்கள் பாழாய்க் கிடக்கிறது என்னும் செய்தி அவருக்கு அறிவிக்கப்பட்டது. அப்போது நெகேமியா பெர்சியா தேசத்திலிருந்து எருசலேமுக்கு வந்தார். அவரோடுகூட, அவருடைய சகோதரனாகிய அனானியும் வந்தான்.

அனானி என்பவன் உத்தம குணமுள்ளவன். அவன் நெகேமியாவின் நம்பிக்கைக்கு பாத்திரமானவன். அனானி இஸ்ரவேல் தேசத்தின்மீதும், இஸ்ரவேல் புத்திரர்மீதும் அன்பாயிருக்கிறான்.

எருசலேமின் காவல் விசாரணைக்காக நெகேமியா ஏற்படுத்தின இரண்டு பேரில் மற்றொருவன் அனனியா. இவன் அநேகரைப் பார்க்கிலும் உண்மையுள்ளவன். அனனியா தேவனுக்குப் பயந்தவன். அரமனை தலைவன் (நெகே 7:2).

நெகேமியா காவல் சேனாபதிகளை நோக்கி, "வெயில் ஏறு மட்டும் எருசலேமின் வாசல்கள் திறக்கப்படவேண்டாம்; நீங்கள் நிற்கும் போதே கதவுகளைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டு, எருசலேமின் குடிகளில் காவலாளர் அவரவர் தங்கள் காவலிலே, அவரவர் தங்கள் வீடுகளுக்கு எதிராக நிறுத்தப்படவேண்டும்" (நெகே 7:3) என்று கட்டளைகொடுக்கிறார்.

எருசலேம் பட்டணம் விஸ்தாரமும் பெரிதுமாயிருக்கிறது; அதற்குள்ளே ஜனங்கள் கொஞ்சமாயிருக்கிறார்கள், வீடுகளும் கட்டப்படவில்லை (நெகே 7:4). இப்போது எடுத்து கட்டப்பட்டிருக்கிற அலங்கங்கள், இதற்கு முன்பு எந்த இடத்தில் இருந்ததோ, அந்த இடத்திலேயே கட்டப்பட்டிருக்கிறது.

எருசலேமின் அலங்கங்கள் கட்டி முடிக்கப்பட்டிருந்தாலும், எருசலேம் நகரத்திற்குள்ளே இன்னும் வீடுகள் கட்டப்படவில்லை. பழைய வீடுகள் இடிந்து கிடக்கிறது. அங்கே ஒருவரும் குடியிருக்கவில்லை. எருசலேம் நகரத்திற்குள்ளே ஜனங்கள் கொஞ்சமாயிருக்கிறார்கள்.

நெகேமியா விசுவாசத்தோடு எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிறார். எருசலேம் நகரத்திற்குள்ளே இஸ்ரவேல் புத்திரர் ஏராளமானோர் வந்து குடியேறுவார்கள் என்று நெகேமியா நம்பிக்கையோடிருக்கிறார். கர்த்தர் சகரியா தீர்க்கதரிசியின் மூலமாக சொன்ன தீர்க்கதரிசனத்தை நெகேமியா நம்புகிறார்.

"நான் சீயோனிடத்தில் திரும்பி, எருசலேமின் நடுவிலே வாசம்பண்ணுவேன்; எருசலேம் சத்திய நகரம் என்றும், சேனைகளுடைய கர்த்தரின் பர்வதம் பரிசுத்த பர்வதம் என்றும் அழைக்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார். திரும்பவும் எருசலேமின் வீதிகளில் முதிர்வயதினாலே தங்கள் கைகளில் கோலைப்பிடித்து நடக்கிற கிழவரும் கிழவிகளும் குடியிருப்பார்கள்"

"நகரத்தின் தெருக்களிலே விளையாடுகிற ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் அதின் வீதிகளில் நிறைந்திருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்"

"சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: அது இந்த ஜனத்தில் மீதியானவர்களின் பார்வைக்கு இந்நாட்களில் ஆச்சரியமாயிருந்தாலும், என் பார்வைக்கும் ஆச்சரியமாயிருக்குமோ என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். இதோ, கிழக்குதேசத்திலும் தெற்கு தேசத்திலுமிருந்து என் ஜனங்களை நான் இரட்சித்து, அவர்களை அழைத்துக்கொண்டு வருவேன்; அவர்கள் எருசலேமின் நடுவிலே குடியிருப்பார்கள்; அவர்கள் எனக்கு உண்மையும் நீதியுமான ஜனமாயிருப்பார்கள், நான் அவர்களுக்கு தேவனாயிருப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (சக 8:3-8).

இப்போது எருசலேம் நகரத்திற்குள்ளே ஜனங்கள் கொஞ்சமாயிருந்தாலும், சீக்கிரத்தில் இங்கே திரளான ஜனங்கள் வாசம்பண்ணுவார்கள் என்று நெகேமியா நம்பிக்கையோடிருக்கிறார். ஏராளமான ஜனங்கள் எருசலேமிலே குடியிருக்கும்போது, அவர்கள் எல்லோருக்கும் நகரத்திற்குள்ளே குடியிருப்பு வசதிகள் வேண்டும். பாதுகாப்பான அலங்கம் வேண்டும். இப்போது எருசலேம் நகரத்தில் வீடுகள் கட்டப்படாமலும், ஜனங்கள் கொஞ்சமாயும் இருந்தாலும், எருசலேம் பட்டணம் விஸ்தாரமும் பெரிதுமாயிருக்கிறது. எருசலேமின் அலங்கம் கட்டி முடிக்கப்பட்டு, அதன் வாசல்களுக்கு கதவுகள் போடப்பட்டிருக்கிறது. அலங்கங்களில் காவலாளரும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

காவலாளர் எருசலேமின் அலங்கத்தை இரவு முழுவதும் காவல் காக்கவேண்டும். இரவுவேளையிலே எருசலேமின் வாசல்களை திறக்கக்கூடாது. வாசல்களின் கதவுகளை சாத்தி அதற்கு தாழ்ப்பாள் போடவேண்டும். காலையில் சூரியன் உதிக்கும் வரையிலும் வாசல் கதவுகளை திறக்கக்கூடாது. காலைவேளையில், சூரிய வெளிச்சம் உதிக்கும். அப்போது இருள் நீங்கும். பொழுது விடிந்த பிறகு அலங்கத்தின் கதவுகளைத் திறக்கலாம் என்று நெகேமியா கட்டளையிடுகிறார்.

நெகேமியா எருசலேமைப் பாதுகாக்க காலாளரையும் நிறுத்துகிறார். சத்துருக்கள் வரும்போது, அலங்கத்தை காவல் காக்கிறவர்கள் எச்சரிக்கையின் எக்காளம் ஊதுவார்கள். அப்போது எருசலேம் நகரத்திற்கு ஆபத்து வந்திருக்கிறது என்பதை உணர்ந்து, நகரத்தார் எல்லோரும் சத்துருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஒன்றுகூடுவார்கள்.

எருசலேமின் குடிகளில் காவலாளர், அவரவர் தங்கள் காவலிலே, அவரவர் தங்கள் வீடுகளுக்கு எதிராக நிறுத்தப்படுகிறார்கள். காவலாளர் தங்கள் வீடுகளுக்கு முன்பாக நிறுத்தப்படுவதினால், அவர்களுடைய காவல் பலமாயிருக்கும். அவர்கள் மற்றவர்களுடைய வீடுகளை காவல்காக்கவில்லை. அவர்கள் தங்கள் வீடுகளையே காவல்காக்கிறார்கள். இதனால் அவர்களுடைய காவலில் கவனமும், அக்கரையும் அதிகமாயிருக்கும்.

ஒரு பட்டணத்திலுள்ள ஒவ்வொருவரும், தங்களையும், தங்கள் வீடுகளையும் பாதுகாக்கவேண்டும். அப்போதுதான் மொத்த பட்டணத்திற்கும் பாதுகாப்பு கிடைக்கும். கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும், தங்களையும், தங்களுடைய குடும்பத்தாரையும் பாவத்திற்கு விரோதமாக பாதுகாத்துக்கொள்ளவேண்டும். பாவம் நம் எல்லோருக்கும் பொதுவான சத்துரு.

நெகேமியா எருசலேமின் பாதுகாப்புக்கு கர்த்தரையே நம்புகிறார். அவர் எத்தனை காவலாளரை பாதுகாப்புக்காக நிறுத்தினாலும், கர்த்தர் நகரத்தைப் பாதுகாக்கவில்லையென்றால், எருசலேமுக்கு பாதுகாப்பு இல்லை. இதை நெகேமியாவும், இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். "கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா" (சங் 127:1).

வம்ச அட்டவணை
நெகே 7:5-7

நெகே 7:5. அப்பொழுது வம்ச அட்டவணைகளைப் பார்க்கிறதற்கு, நான் பிரபுக்களையும் அதிகாரிகளையும் ஜனங்களையும் கூடிவரச்செய்ய, என் தேவன் என் மனதிலே ஒரு எண்ணத்தை உண்டாக்கினார்; முந்தி வந்தவர்களின் வம்ச அட்டவணைப் புஸ்தகம் அப்பொழுது எனக்கு அகப்பட்டது; அதிலே எழுதியிருக்க நான் கண்டது என்னவென்றால்;

நெகே 7:6. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் சிறைபிடித்துப்போனவர்களும், சிறையிருப்பிலிருந்து செருபாபேலோடும், யெசுவா, நெகேமியா, அசரியா, ராமியா, நகமானி, மொர்தெகாய், பில்சான், மிஸ்பெரேத், பிக்வாயி, நெகூம், பானா என்பவர்களோடுங்கூட வந்து,

நெகே 7:7. எருசலேமுக்கும் யூதாவுக்கும் திரும்பித் தங்கள் தங்கள் பட்டணங்களிலே குடியிறங்கினவர்களுமான இந்தத் தேசத்தின் புத்திரராகிய இஸ்ரவேல் ஜனங்களான மனிதரின் தொகையாவது:

எருசலேமின் அலங்கம் உயரமானதாகவும், பெலமானதாகவும் இருந்தாலும், நகரத்திற்குள்ளே போதுமான அளவு ஜனங்கள் குடியிருக்கவில்லையென்றால், நகரத்திற்கு பாதுகாப்பு இல்லை என்பதை நெகேமியா அறிந்திருக்கிறார்.

பெர்சிய தேசத்தின் சிறையிருப்பிலிருந்து முதலாவதாகப் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பி வந்தவர்களுடைய அட்டவணை நெகேமியாவின் கைக்குக் கிடைக்கிறது. (நெகே 7:6).

சிறையிருப்பிலிருந்து முதலாவதாகத் திரும்பி வந்தவர்கள் அனைவரும் எருசலேமிற்கு வந்து குடியேறவில்லை. அவர்கள் தங்கள் தங்கள் பட்டணங்களிலே குடியிறங்கினார்கள். ஆகையினால் எருசலேமில் குடியிருக்கிறவர்களின் எண்ணிக்கை மிகவும் கொஞ்சமாக இருக்கிறது. இதன் காரணத்தினால் அவர்கள் எருசலேமின் அலங்கங்களைக் கட்டுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. எருசலேமிலும் அவர்கள் பல வீடுகளைக் கட்டவில்லை. (நெகே 7:4) அவரவர்கள் தங்கள் தங்கள் பட்டணங்களில் தங்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொண்டு குடியிருக்கிறார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களுடைய வம்ச அட்டவணைகளைப் பார்க்கிறதற்கு, நெகேமியா பிரபுக்களையும் அதிகாரிகளையும் ஜனங்களையும் கூடிவரச்செய்கிறார். இது நெகேமியாவின் சொந்த யோசனையல்ல. கர்த்தரே நெகேமியாவின் மனதில் இந்த எண்ணத்தை உண்டாக்கியிருக்கிறார் (நெகே 7:5).

யூதாதேசத்தின் பிரபுக்களும் அதிகாரிகளும் நெகேமியாவினிடத்தில் முந்தி வந்தவர்களின் வம்ச அட்டவணைப் புஸ்தகத்தை கொடுக்கிறார்கள். இது நெகேமியாவின் கையில் இப்பொழுதுதான் அகப்பட்டிருக்கிறது. அதில் எழுதப்பட்டிருக்கிற விவரங்களை நெகேமியா கருத்தாய் ஆராய்ந்து பார்க்கிறார்.

ஒரு தேசத்தில் பட்டணங்களும் இருக்கும். கிராமங்களும் இருக்கும். கிராமங்களில் ஜனங்கள் வாசம்பண்ணுவதுபோல, பட்டணங்களிலும் ஜனங்கள் வாசம்பண்ணவேண்டும். பட்டணத்திலும் கிராமங்களிலும் இருக்கிற ஜனத்தொகையில் அதிக வித்தியாசம் இருக்கக்கூடாது. பட்டணங்களும் கிராமங்களும் சமசீரான நிலமையிலிருக்கவேண்டும்.

சில தேசங்களில் கிராமங்களில் ஜனங்கள் இருக்கமாட்டார்கள். எல்லோரும் பட்டணத்திற்கு வந்துவிடுவார்கள். பட்டணத்தில் ஜனநெருக்கடி அதிகமாயிருக்கும். அங்கே அவர்களுக்கு போதுமான அடிப்படை வசதிகள்கூட இருக்காது. கிராமங்களில் விவசாயம்பண்ணுவதற்கு ஒருவரும் இருக்கமாட்டார்கள். இதனால் தானியங்களின் விலை அதிகரித்து, பட்டணத்து ஜனங்கள் அதிகமாய்க் கஷ்டப்படுவார்கள்.

ஜனங்கள் எல்லோரும் கிராமத்தில் குடியிருந்தால், பட்டணங்களில் ஜனத்தொகை குறைந்துவிடும். ஆளில்லாத வீட்டிற்கு பாதுகாப்பு இல்லை. ஜனங்கள் இல்லாத பட்டணத்திற்கும் பாதுகாப்பு இருக்காது. கொஞ்சம் பேரைக்கொண்டு பெரிய பட்டணங்களைப் பாதுகாக்க முடியாது. நெகேமியா பட்டணத்தையும் கிராமங்களையும் யோசித்துப் பார்க்கிறார். எருசலேம் பட்டணத்தை எவ்வாறு பாதுகாக்கவேண்டும் என்னும் எண்ணத்தை, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், நெகேமியாவின் மனதிலே உண்டாக்குகிறார்.

கர்த்தர் தனக்கு கொடுத்த எண்ணத்தின் பிரகாரமாக நெகேமியா பிரபுக்களையும் அதிகாரிகளையும் ஜனங்களையும் கூடிவரச்செய்கிறார். இப்போது எருசலேம் நகரத்திலே எத்தனை குடும்பத்தார் இருக்கிறார்கள் என்னும் விவரமும், அவர்களுடைய ஜனத்தொகையின் விவரமும் இந்தப் பிரபுக்களுக்கும், அதிகாரிகளுக்கும் தெரிந்திருக்கும். அவர்கள் எருசலேமுக்கு வெளியே எங்கெல்லாம் குடியிருக்கிறார்கள் என்னும் விவரமும் அவர்களுக்கு தெரியும்.

நெகேமியா சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களின் எண்ணிக்கையை கணக்கிடுவதற்காக, முந்தி வந்தவர்களின் வம்ச அட்டவணை புஸ்தகத்தை ஆராய்ந்து பார்க்கிறார். இப்போது இருக்கிற ஜனத்தொகையையும், பழைய வம்ச அட்டவணையையும் நெகேமியா ஒப்பிட்டு பார்க்கிறார். எஸ்றா 2-ஆவது அதிகாரத்தில் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களின் வம்ச அட்டவணை சொல்லப்பட்டிருக்கிறது.

நெகேமியா புஸ்தகத்தின் 7-ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற வம்ச அட்டவணை, எஸ்றா 2-ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற வம்ச அட்டவணைக்கு ஒப்பாயிருக்கிறது. ஜனங்களின் எண்ணிக்கையில் ஒரு சில வித்தியாசங்கள் உள்ளன. வேறு பெரிய வித்தியாசம் எதுவுமில்லை.

வம்ச அட்டவணையை பிரதி எடுத்தவர்கள், ஒரு சில பிழைகளை செய்திருக்கலாம். ஒருவேளை அவர்கள் வெவ்வேறு மூலஆவணங்களிலிருந்து பிரதியெடுத்து இந்த வம்ச அட்டவணையை தயாரித்திருக்கலாம். இதனால் இவ்விரண்டு அட்டவணைகளுக்கும் இடையே எண்ணிக்கையில் ஒரு சில வித்தியாசம் காணப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரரின் வம்ச அட்டவணையில் ஒன்று, பாபிலோன் தேசத்திலிருந்து செருபாபேலோடு யூதாதேசத்திற்கு திரும்பி வந்தவர்களின் அட்டவணையாகும். மற்றொரு வம்ச அட்டவணை அவர்கள் எருசலேமுக்கு வந்தபோது எண்ணப்பட்ட அட்டவணை. பாடகர்களின் எண்ணிக்கையும் இவ்விரண்டு அட்டவணைகளிலும் வித்தியாசம் காணப்படுகிறது. எஸ்றாவின் அட்டவணையில் 200 பாடகர்கள் என்றும், நெகேமியாவின் அட்டவணையில் 245 பாடகர்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

பொது ஜனங்கள்
நெகே 7:8-38

நெகே 7:8. பாரோஷின் புத்திரர் இரண்டாயிரத்துநூற்று எழுபத்திரண்டுபேர்.

நெகே 7:9. செபத்தியாவின் புத்திரர் முந்நூற்று எழுபத்திரண்டுபேர்.

நெகே 7:10. ஆராகின் புத்திரர் அறுநூற்று ஐம்பத்திரண்டுபேர்.

நெகே 7:11. யெசுவா யோவாப் என்பவர்களின் சந்ததிக்குள்ளிருந்த பாகத் மோவாபின் புத்திரர் இரண்டாயிரத்து எண்ணூற்றுப் பதினெட்டுபேர்.

நெகே 7:12. ஏலாமின் புத்திரர் ஆயிரத்து இருநூற்று ஐம்பத்துநாலுபேர்.

நெகே 7:13. சத்தூவின் புத்திரர் எண்ணூற்று நாற்பத்தைந்துபேர்.

நெகே 7:14. சக்காயின் புத்திரர் எழுநூற்று அறுபது பேர்.

நெகே 7:15. பின்னூவின் புத்திரர் அறுநூற்று நாற்பத்தெட்டுப்பேர்.

நெகே 7:16. பெபாயின் புத்திரர் அறுநூற்று இருபத்தெட்டுப்பேர்.

நெகே 7:17. அஸ்காதின் புத்திரர் இரண்டாயிரத்து முந்நூற்று இருபத்திரண்டு பேர்.

நெகே 7:18. அதோனிகாமின் புத்திரர் அறுநூற்று அறுபத்தேழுபேர்.

நெகே 7:19. பிக்வாயின் புத்திரர் இரண்டாயிரத்து அறுபத்தேழுபேர்.

நெகே 7:20. ஆதீனின் புத்திரர் அறுநூற்று ஐம்பத்தைந்து பேர்.

நெகே 7:21. எசேக்கியாவின் சந்ததியான ஆதேரின் புத்திரர் தொண்ணூற்றுஎட்டுப்பேர்.

நெகே 7:22. ஆசூமின் புத்திரர் முந்நூற்று இருபத்தெட்டுபேர்.

நெகே 7:23. பேசாயின் புத்திரர் முந்நூற்று இருபத்துநாலுபேர்.

நெகே 7:24. ஆரீப்பின் புத்திரர் நூற்றுப்பன்னிரண்டுபேர்.

நெகே 7:25. கிபியோனின் புத்திரர் தொண்ணூற்று ஐந்துபேர்.

நெகே 7:26. பெத்லகேம் ஊராரும், நெத்தோபா ஊராரும் நூற்று எண்பத்தெட்டுப்பேர்.

நெகே 7:27. ஆனதோத்தூர் மனிதர் நூற்று இருபத்தெட்டுபேர்.

நெகே 7:28. பெத்அஸ்மாவேத் ஊரார் நாற்பத்திரண்டுபேர்.

நெகே 7:29. கீரியாத்யாரீம், கெபிரா, பேரோத் ஊர்களின் மனிதர் எழுநூற்று நாற்பத்துமூன்றுபேர்.

நெகே 7:30. ராமா, காபா ஊர்களின் மனிதர் அறுநூற்று இருபத்தொருபேர்.

நெகே 7:31. மிக்மாஸ் ஊரார் நூற்று இருபத்திரண்டுபேர்.

நெகே 7:32. பெத்தேல், ஆயி ஊர்களின் மனிதர் நூற்று இருபத்துமூன்றுபேர்.

நெகே 7:33. வேறொரு நேபோ ஊரார் ஐம்பத்திரண்டுபேர்.

நெகே 7:34. மற்றொரு ஏலாம் புத்திரர் ஆயிரத்து இருநூற்று ஐம்பத்துநாலுபேர்.

நெகே 7:35. ஆரீம் புத்திரர் முந்நூற்று இருபதுபேர்.

நெகே 7:36. எரிகோ புத்திரர் முந்நூற்று நாற்பத்தைந்துபேர்.

நெகே 7:37. லோத், ஆதீத், ஓனோ ஊர்களின் புத்திரர் எழுநூற்று இருபத்தொரு பேர்.

நெகே 7:38. செனாகா புத்திரர் மூவாயிரத்துத் தொளாயிரத்து முப்பதுபேர்.

பாபிலோனிலிருந்து யூதாதேசத்திற்கு திரும்பி வந்தவர்களில் பொதுஜனங்களும் இருக்கிறார்கள். அவர்களில் ஆசாரியர்கள், லேவியர்கள், நிதனீமியர்கள், சாலொமோனுடைய வேலைக்காரரின் புத்திரர்கள் ஆகியோரும் இருக்கிறார்கள். இவர்களில் சிலரால் தங்கள் பூர்வோத்திரத்தை சொல்ல முடியவில்லை. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் தங்களோடு பொருட்களையும் வெகுமதிகளையும் கொண்டு வந்திருக்கிறார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களின் வம்ச அட்டவணை எஸ்றா 2:1-35 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆசாரியர்கள்
நெகே 7:39-42

நெகே 7:39. ஆசாரியரானவர்கள்: யெசுவா குடும்பத்தானாகிய யெதாயாவின் புத்திரர் தொளாயிரத்து எழுபத்துமூன்றுபேர்.

நெகே 7:40. இம்மேரின் புத்திரர் ஆயிரத்து ஐம்பத்திரண்டுபேர்.

நெகே 7:41. பஸ்கூரின் புத்திரர் ஆயிரத்து இருநூற்று நாற்பத்தேழுபேர்.

நெகே 7:42. ஆரீமின் புத்திரர் ஆயிரத்துப் பதினேழுபேர்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த ஆசாரியர்களின் வம்ச அட்டவணை எஸ்றா 2:36-39 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் எல்லோரும் தங்கள் பூர்வோத்திரத்தை சொல்ல முடிந்தவர்கள்.

லேவியர்கள்
நெகே 7:43-45

நெகே 7:43. லேவியரானவர்கள்: ஒதியாவின் புத்திரருக்குள்ளே கத்மியேலின் குமாரனாகிய யெகூவாவின் புத்திரர் எழுபத்துநாலுபேர்.

நெகே 7:44. பாடகரானவர்கள்: ஆசாபின் புத்திரர் நூற்று நாற்பத்தெட்டுப்பேர்.

நெகே 7:45. வாசல் காவலாளரானவர்கள்: சல்லூமின் புத்திரர், அதேரின் புத்திரர், தல்மோனின் புத்திரர், அக்கூபின் புத்திரர், அதிதாவின் புத்திரர், சோபாயின் புத்திரர், ஆக நூற்று முப்பத்தெட்டுப்பேர்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த லேவியர்களின் வம்ச அட்டவணை எஸ்றா 2:40-42 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் எல்லோரும் தங்கள் பூர்வோத்திரத்தை சொல்ல முடிந்தவர்கள்.

நிதினீமியர்கள்
நெகே 7:46-56

நெகே 7:46. நிதினீமியரானவர்கள்: சீகாவின் புத்திரர், அசுபாவின் புத்திரர், தபாகோத்தின் புத்திரர்,

நெகே 7:47. கேரோசின் புத்திரர், சீயாவின் புத்திரர், பாதோனின் புத்திரர்,

நெகே 7:48. லெபானாவின் புத்திரர், அகாபாவின் புத்திரர், சல்மாயின் புத்திரர்,

நெகே 7:49. ஆனானின் புத்திரர், கித்தேலின் புத்திரர், காகாரின் புத்திரர்,

நெகே 7:50. ராயாகின் புத்திரர், ரேத்சீனின் புத்திரர், நெகோதாவின் புத்திரர்,

நெகே 7:51. காசாமின் புத்திரர், ஊசாவின் புத்திரர், பாசெயாகின் புத்திரர்,

நெகே 7:52. பேசாயின் புத்திரர், மெயுநீமின் புத்திரர், நெபிஷசீமின் புத்திரர்,

நெகே 7:53. பக்பூக்கின் புத்திரர், அகுபாவின் புத்திரர், அர்கூரின் புத்திரர்,

நெகே 7:54. பஸ்லீதின் புத்திரர், மெகிதாவின் புத்திரர், அர்ஷாவின் புத்திரர்,

நெகே 7:55. பர்கோசின் புத்திரர், சிசெராவின் புத்திரர், தாமாவின் புத்திரர்,

நெகே 7:56. நெத்சியாவின் புத்திரர், அதிபாவின் புத்திரர்.

செருபாபேலோடு 392 நிதனீமியரும் (நெகே 7:60; எஸ்றா 2:58), எஸ்றாவோடு 220 நிதனீமியரும் (நெகே 11:21; எஸ்றா 8:20) பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பி வருகிறார்கள். இவர்கள் ஒருவேளை கிபியோனியரின் சந்ததியாராக இருக்கலாம். (யோசு 9:27)

சாலொமோனுடைய வேலைக்காரரின் புத்திரர்கள்
நெகே 7:57-60

நெகே 7:57. சாலொமோனுடைய வேலைக்காரரின் புத்திரரானவர்கள்: சோதாயின் புத்திரர், சொபெரேத்தின் புத்திரர், பெரிதாவின் புத்திரர்,

நெகே 7:58. யாலாவின் புத்திரர், தர்கோனின் புத்திரர், கித்தேலின் புத்திரர்,

நெகே 7:59. செபத்தியாவின் புத்திரர், அத்தீலின் புத்திரர், பொகெரேத் செபாயிமிலுள்ள புத்திரர், ஆமோனின் புத்திரர்.

நெகே 7:60. நிதனீமியரும், சாலொமோனுடைய வேலையாட்களின் புத்திரரும் ஏகத்துக்கு முந்நூற்றுத் தொண்ணூற்றிரண்டுபேர்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து சாலொமோனுடைய வேலைக்காரரின் புத்திரரும் வந்திருக்கிறார்கள். நிதனீமியரும், சாலொமோனுடைய வேலையாட்களின் புத்திரரும் ஏகத்துக்கு 392 பேர்.

பூர்வோத்திரம் சொல்லமாட்டாத ஜனங்கள் நெகே 7:61-65

நெகே 7:61. தெல்மெலாகிலும், தெல்அர்சாவிலும், கேருபிலும், ஆதோனிலும், இம்மேரிலும் இருந்துவந்தும், தாங்கள் இஸ்ரவேலர் என்று தங்கள் பிதாக்களின் வம்சத்தையும், தங்கள் பூர்வோத்தரத்தையும் சொல்லமாட்டமல் இருந்தவர்கள்:

நெகே 7:62. தெலாயாவின் புத்திரர், தொபியாவின் புத்திரர், நெகோதாவின் புத்திரர், ஆக அறுநூற்று நாற்பத்திரண்டு பேர்.

நெகே 7:63. ஆசாரியர்களில் அபாயாவின் புத்திரர், கோசின் புத்திரர், கிலேயாத்தியனான பர்சில்லாயின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்பண்ணி, அவர்கள் வம்ச நாமம்தரிக்கப்பட்ட பர்சில்லாயின் புத்திரர்.

நெகே 7:64. இவர்கள் தங்கள் வம்ச அட்டவணையைத் தேடி, அதைக் காணாமற்போய், ஆசாரிய ஊழியத்துக்கு விலக்கமானவர்கள் என்று எண்ணப்பட்டார்கள்.

நெகே 7:65. ஊரீம் தும்மீம் என்பவைகளுள்ள ஒரு ஆசாரியன் எழும்புமட்டும், அவர்கள் மகா பரிசுத்தமானதிலே புசிக்கத்தகாதென்று திர்ஷாதா அவர்களுக்குச் சொன்னான்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களில் சிலரால் தங்களுடைய பிதாக்களின் வம்சத்தையும், பூர்வோத்திரத்தையும் சொல்ல முடியவில்லை. ஆசாரியர்களில் தங்களுடைய பூர்வோத்திரத்தைச் சொல்லமாட்டாமல் இருந்தவர்கள் ஆசாரிய ஊழியத்துக்கு விலக்கமானவர்கள் என்று எண்ணப்பட்டார்கள் (நெகே 7:63-65).

ஒரு சில ஆசாரியர்கள் தங்கள் வம்ச அட்டவணையைத் தேடினார்கள். ஆனால் அவர்களால் அதைக் காணமுடியவில்லை. இப்படிப்பட்டவர்கள் ஆசாரிய ஊழியத்துக்கு விலக்கமானவர்கள் என்று எண்ணப்பட்டார்கள். ஊரீம், தும்மீம் ஆகியவற்றின் மூலமாக அவர்கள் ஆசாரியர்களா என்பது தீர்மானம் பண்ணப்படுகிறது.

"திர்ஷாதா" என்பது தேசாதிபதி என்னும் பட்டத்தைக் குறிக்கும் பெர்சியப் பெயர். இது செருபாபேலைக் குறிக்கிறது. இந்த வம்ச அட்டவணை எழுதப்படும்போது செருபாபேல் யூதா தேசத்தின் தேசாதிபதியாக இருந்தார் (எஸ்றா 2:63).

ஜனத்தின் மொத்த எண்ணிக்கை நெகே 7:66,67

நெகே 7:66. சபையார் எல்லாரும் ஏகத்துக்கு நாற்பத்தீராயிரத்து முந்நூற்று அறுபதுபேராயிருந்தார்கள்.

நெகே 7:67. அவர்களைத்தவிர ஏழாயிரத்து முந்நூற்று முப்பத்தேழுபேரான அவர்களுடைய வேலைக்காரரும் வேலைக்காரிகளும், இருநூற்று நாற்பத்தைந்து பாடகரும் பாடகிகளும் அவர்களுக்கு இருந்தார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த ஜனத்தின் மொத்த எண்ணிக்கை எஸ்றா 2:64-65 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. எஸ்றா புஸ்தத்தில் சொல்லப்பட்டிருக்கிற எண்ணிக்கைக்கும், நெகேமியா புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற எண்ணிக்கைக்கும் வித்தியாசமுள்ளது.

பொருட்களும் வெகுமதிகளும் நெகே 7:68-73

நெகே 7:68. அவர்களுடைய குதிரைகள் எழுநூற்று முப்பத்தாறு, அவர்கள் கோவேறு கழுதைகள் இருநூற்று நாற்பத்தைந்து.

நெகே 7:69. ஒட்டகங்கள் நானூற்று முப்பத்தைந்து, கழுதைகள் ஆறாயிரத்து எழுநூற்று இருபது.

நெகே 7:70. வம்சத்தலைவரில் சிலர் வேலைக்கென்று கொடுத்ததாவது: திர்ஷாதா ஆயிரம் தங்கக்காசையும், ஐம்பது கலங்களையும், ஐந்நூற்று முப்பது ஆசாரிய வஸ்திரங்களையும் பொக்கிஷத்துக்குக் கொடுத்தான்.

நெகே 7:71. வம்சத்தலைவரில் சிலர் வேலையின் பொக்கிஷத்துக்கு இருபதினாயிரம் தங்கக்காசையும், இரண்டாயிரத்து இருநூறு ராத்தல் வெள்ளியையும் கொடுத்தார்கள்.

நெகே 7:72. மற்ற ஜனங்கள் இருபதினாயிரம் தங்கக்காசையும், இரண்டாயிரம் ராத்தல் வெள்ளியையும், அறுபத்தேழு ஆசாரிய வஸ்திரங்களையும் கொடுத்தார்கள்.

நெகே 7:73. ஆசாரியரும், லேவியரும், வாசல் காவலாளரும், பாடகரும், ஜனங்களில் சிலரும், நிதனீமியரும், இஸ்ரவேலர் அனைவரும் தங்கள் தங்கள் பட்டணங்களில் குடியேறினார்கள்; ஏழாம் மாதமானபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பட்டணங்களில் இருந்தார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிறவர்கள் தங்களோடுகூட சில பொருட்களையும் வெகுமதிகளையும் யூதாதேசத்திற்கு கொண்டு வருகிறார்கள். இதன் விவரம் எஸ்றா 2:66-70 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு புஸ்தகங்களிலும் சொல்லப்பட்டிருக்கிற வெகுமதிகளின் அளவுகளில் வித்தியாசமுள்ளது.

வம்சத்தலைவரில் சிலர் தேவனுடைய வேலைக்காக வெகுமதிகளையும் காணிக்கைகளையும், கொடுத்திருக்கிறார்கள். எஸ்றா திர்ஷாதாவைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆகையினால், எஸ்றா புஸ்தகத்திலும் நெகேமியா புஸ்தகத்திலும் சொல்லப்பட்டிருக்கிற பொருட்களும் வெகுமதிகளும் ஒரே சமயத்தில் கொடுக்கப்பட்டதாக இருக்காது என்றும், அவை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கொடுக்கப்பட்டதாக இருக்கும் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

எஸ்றாவின் புஸ்தகத்திலும், நெகேமியாவின் புஸ்தகத்திலும் செருபாபேல் கொடுத்த காணிக்கையின் மொத்த அளவுகளில் சிறிது வேறுபாடு காணப்படுகிறது. தலைவர்களும், ஜனங்களும் கொடுத்ததை நெகேமியா எழுதியிருக்கிறார். எஸ்றாவோ தலைவர்கள் கொடுத்ததை மட்டுமே எழுதியிருக்கிறார். திர்ஷாதாவாகிய செருபாபேலும் ஜனங்களோடு தேவாலயத்திற்குத் தன் காணிக்கையைச் செலுத்துகிறார். (நெகே 7:70-72). இந்த விவரம் தவிர நெகே 7:71 ஆவது வசனத்தில் வம்ச தலைவர்கள் கொடுத்ததும், நெகே 7:72 ஆவது வசனத்தில் ஜனங்கள் கொடுத்ததும் கூறப்பட்டிருக்கிறது.

நம்முடைய நம்பிக்கையையும் விசுவாசத்தையும் காணிக்கைகளின்மீதும், வெகுமதிகளின்மீதும், மனுஷருடைய எண்ணிக்கையின்மீதும் கட்டியெழுப்புவதில்லை. வம்சவரலாற்றின் அடிப்படையிலும், பூர்வோத்திரத்தின் அடிப்படையிலும் நம்முடைய விசுவாசம் கட்டியெழுப்பப்படவில்லை. உலகப்பிரகாரமான பொருட்கள் நம்முடைய விசுவாசத்திற்கு ஆதாரமோ அல்லது அஸ்திபாரமோ அல்ல. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமும், அவருடைய வார்த்தையுமே நம்முடைய விசுவாசத்திற்கு ஆதாரமாய் உள்ளது.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களின் எண்ணிக்கையும், அவர்கள் கொண்டு வந்த வெகுமதிகள், பொருட்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையும் மாறுபட்டு இருந்தாலும், நாம் ஆராதிக்கிற கர்த்தர், நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார்.

8 அதிகாரம்

எஸ்றா பாபிலோன் தேசத்திலிருந்து எருசலேமுக்கு வந்து, பதிமூன்று வருஷங்களுக்கு பின்பு, நெகேமியா பாபிலோனிலிருந்து எருசலேமுக்கு வருகிறார். நெகேமியா யூதாதேசத்திற்கு வருவதற்கு முன்பாகவே, எஸ்றா மூலமாக யூதாதேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. எருசலேமில் ஒரு சில நல்ல வேலைகள் ஏற்கெனவே நடைபெற்றிருக்கிறது.

நெகேமியா உற்சாகமான ஆவியுள்ளவர். அவர் கர்த்தருடைய ஊழியத்தை சுறுசுறுப்பாக செய்கிறவர். அவர் கர்த்தர்மீது பக்திவைராக்கியமாயிருக்கிறார். எஸ்றா வேதபிரமாணத்தைக் கற்றுத்தேர்ந்தவர். நெகேமியாவின் பக்தி வைராக்கியத்தினால், எஸ்றாவின் வேதப்பிரமாண அறிவு ஜனங்களுக்கு பிரயோஜனமாக பயன்படுத்தப்படுகிறது.

எஸ்றா மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தை ஜனங்களுக்கு முன்பாக வாசிக்கிறார் (நெகே 8:1-8). ஜனங்கள் எல்லாரும் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளைக் கேட்டபோது அழுகிறார்கள். அவர்கள் துக்கப்படவும் வேண்டாம், அழவும் வேண்டாம், விசாரப்படவும் வேண்டாம் என்று அவர்களுக்கு ஆலோசனை சொல்லப்படுகிறது. கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே அவர்களுக்கு பெலன் என்று நெகேமியா துக்கப்படுகிற இஸ்ரவேல் புத்திரருக்கு புத்திசொல்லுகிறார் (நெகே 8:9-12).

இஸ்ரவேல் புத்திரர், நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி கூடாரப்பண்டிகையை ஆசரிக்கிறார்கள் (நெகே 8:13-18).

நியாயப்பிரமாண புஸ்தகம்
நெகே 8:1-8

நெகே 8:1. ஜனங்கள் எல்லாரும் தண்ணீர் வாசலுக்கு முன்னான வீதியிலே ஒரு மனப்பட்டுக் கூடி, கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கற்பித்த மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தைக் கொண்டுவர வேண்டுமென்று வேதபாரகனாகிய எஸ்றாவுக்குச் சொன்னார்கள்.

நெகே 8:2. அப்படியே ஏழாம் மாதம் முதல் தேதியில் ஆசாரியனாகிய எஸ்றா நியாயப்பிரமாணத்தைப் புருஷரும் ஸ்திரீகளும், கேட்டு அறியத்தக்க அனைவருமாகிய சபைக்கு முன்பாகக் கொண்டு வந்து,

நெகே 8:3. தண்ணீர் வாசலுக்கு முன்னான வீதிக்கு எதிரேயிருந்து காலமே தொடங்கி மத்தியானமட்டும் புருஷருக்கும் ஸ்திரீகளுக்கும், கேட்டு அறியத்தக்க மற்றவர்களுக்கும் முன்பாக அதை வாசித்தான்; சகல ஜனங்களும் நியாயப்பிரமாண புஸ்தகத்திற்குக் கவனமாய்ச் செவிகொடுத்தார்கள்.

நெகே 8:4. வேதபாரகனாகிய எஸ்றா அதற்கென்று மரத்தால் செய்யப்பட்ட ஒரு பிரசங்கபீடத்தின்மேல் நின்றான்; அவனண்டையில் அவனுக்கு வலதுபக்கமாக மத்தித்தியாவும், செமாவும், அனாயாவும், உரியாவும், இல்க்கியாவும், மாசெயாவும், அவனுக்கு இடதுபக்கமாகப் பெதாயாவும்,மீசவேலும், மல்கியாவும், அசூமும், அஸ்பதானாவும், சகரியாவும், மெசுல்லாமும் நின்றார்கள்.

நெகே 8:5. எஸ்றா சகல ஜனங்களுக்கும் உயர நின்று, சகல ஜனங்களும் காணப் புஸ்தகத்தைத் திறந்தான்; அவன் அதைத் திறந்தபோது, ஜனங்கள் எல்லாரும் எழுந்துநின்றார்கள்.

நெகே 8:6. அப்பொழுது எஸ்றா மகத்துவமுள்ள தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்திரித்தான்; ஜனங்களெல்லாரும் தங்கள் கைகளைக் குவித்து, அதற்கு மறுமொழியாக, ஆமென் ஆமென் என்று சொல்லி, குனிந்து, முகங்குப்புற விழுந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டார்கள்.

நெகே 8:7. யெசுவா, பானி, செரெபியா, யாமின், அக்கூப், சபெதாயி, ஒதியா, மாசெயா, கேலிதா, அசரியா, யோசபாத், ஆனான், பெலாயா என்பவர்களும், லேவியரும், நியாயப்பிரமாணத்தை ஜனங்களுக்கு விளங்கப்பண்ணினார்கள்; ஜனங்கள் தங்கள் நிலையிலே நின்றார்கள்.

நெகே 8:8. அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தை தீர்க்கமாக வாசித்து, அர்த்தஞ்சொல்லி, வாசித்ததை அவர்களுக்கு விளங்கப்பண்ணினார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும், எருசலேமிலே, தண்ணீர் வாசலுக்கு முன்னான வீதியிலே ஒருமனப்பட்டு கூடுகிறார்கள். அவர்கள் மோசேயின் நியாயப்பிரமாண வார்த்தைகளை செவிகொடுத்து கேட்பதற்காக கூடிவந்திருக்கிறார்கள். அவர்கள் அங்கே கூடிவந்திருக்கிற காலம் ஏழாம் மாதம் முதல் தேதியாகும் (நெகே 8:2). இது யூதர்களுடைய எக்காளங்களின் பண்டிகை நாள்.

ஒவ்வொரு ஏழாவது வருஷத்திலும் இஸ்ரவேல் புத்திரர் கூடி வரவேண்டும். (உபா 31:9-12). இது எக்காளங்கள் ஊதும் பண்டிகை என்று அழைக்கப்படுகிறது (லேவி 23:23-25). கர்த்தருடைய வார்த்தையை ஜனங்களுக்கு உபதேசிப்பது ஆசாரியரின் பணிவிடையாகும். (உபா 17:11; உபா 33:10; மல் 2:7).

எக்காளங்களின் பண்டிகை ஒய்வுநாள் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த ஒய்வுநாளிலே இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு ஒருமனப்பட்டு கூடிவருவது வழக்கம்.

"நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: உங்களுக்கு ஏழாம் மாதம் முதலாந்தேதி எக்காளச் சத்தத்தால் ஞாபகக்குறியாகக் கொண்டாடுகிற பண்டிகை என்கிற சபை கூடும் பரிசுத்த ஒய்வுநாளாய் இருப்பதாக" (லேவி 23:24).

"ஏழாம் மாதம் முதல்தேதி பரிசுத்த சபைகூடும் நாளாயிருக்கக்கடவது; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது; அது உங்களுக்கு எக்காளமூதும் நாளாயிருக்கவேண்டும்" (எண் 29:1).

யூதர்களுக்கு ஏழாம் மாதம் முதல் தேதியானது மிகவும் விசேஷித்த நாளாயிருக்கிறது. இந்த நாளில் தேவனுடைய ஆலயத்திலே பலிபீடம் கட்டி முடிக்கப்பட்டது. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேல் புத்திரர், இந்த நாளிலே, பலிபீடத்தின்மீது சர்வாங்க தகனபலிகளை செலுத்த ஆரம்பித்தார்கள். அவர்கள் கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும் நினைவுகூர்ந்து, இந்த நல்ல நாளிலே கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் எருசலேமிலே, தண்ணீர் வாசலுக்கு முன்னான வீதியிலே ஒருமனப்பட்டு கூடுகிறார்கள். இந்த வீதி அகலமாயிருக்கிறது. திரளான ஜனங்கள் இந்த வீதிக்கு கூடிவந்தாலும், இந்த வீதியில் எல்லோருக்கும் போதுமான இடவசதியிருக்கிறது.

கூடிவந்திருக்கிற ஜனங்கள் எல்லோரும், தேவாலயத்திற்குள் பிரவேசித்தால், ஆலயத்தின் பிரகாரத்திலே இவர்கள் எல்லோருக்கும் போதுமான இடம் இருக்காது. சாலொமோனுடைய காலத்திலே ஆலயத்தின் மண்டபம் பெரிதாய்க் கட்டப்பட்டது. இப்போது அந்த ஆலயம் புதுப்பித்துக் கட்டப்பட்டிருக்கிறது. மண்டபத்தின் அளவோ முன்புபோல பெரிதாயில்லாமல், சிறிதாயிருக்கிறது.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் ஆலயத்தின் வாசலிலே பலிகளை செலுத்துகிறார்கள். கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவது, கர்த்தரைத் துதிப்பது, கர்த்தருடைய வார்த்தைகளை பிரசங்கம்பண்ணுவது ஆகிய காரியங்கள் எல்லாமே ஊழியத்தின் ஒரு பகுதி. இந்த ஊழியத்தை ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் செய்யவேண்டும் என்னும் நிர்ப்பந்தம் எதுவுமில்லை. ஊழியத்தை எந்த இடத்தில் வேண்டுமானாலும் செய்யலாம்.

ஏழாம் மாதம் முதல் தேதியிலே ஜனங்கள் எல்லோரும் இஸ்ரவேலுக்கு வருகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திலே பிரவேசித்து, அங்கே கூடாமல், அவர்கள் எல்லோரும் தண்ணீர் வாசலுக்கு முன்னான வீதியிலே ஒருமனப்பட்டுக் கூடுகிறார்கள். எங்கே இரண்டுபேர், மூன்றுபேர் கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே கர்த்தரும் இருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் எருசலேமிலே வந்து கூடுமாறு யாரும் அவர்களை கட்டாயப்படுத்தவில்லை. அவர்கள் எல்லோரும் மனப்பூர்வமாக, சுயாதீனமாக, ஒருமனப்பட்டு அங்கே கூடிவந்திருக்கிறார்கள். அவர்கள் அநேகராயிருந்தாலும், அவர்களுடைய ஆவி ஒன்றாயும், ஒருமனப்பட்டும் இருக்கிறது.

இந்தப் பண்டிகை நாளிலே எருசலேமுக்கு புருஷர்கள் மாத்திரம் என்று கூடிவராமல், அவர்களுடைய ஸ்திரீகளும், பிள்ளைகளும் கூடிவந்திருக்கிறார்கள். சிறுபிள்ளைகள் ஏராளமான காரியங்களை அறிந்துகொள்ளவேண்டுமென்று ஆவலாயிருப்பார்கள். அவர்களுக்கு ஆவிக்குரிய சத்தியத்தை உபதேசம்பண்ணவேண்டும். அவர்களுடைய சிறுபிராயத்திலேயே அவர்களுக்கு ஆவிக்குரிய பயிற்சியை கொடுக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் எருசலேமிலே கூடிவந்திருக்கும்போது, அந்த சபையாருக்கு எஸ்றா தலைவராயிருக்கிறார். அவர்கள் வேதபாரகனாகிய எஸ்றாவினிடத்தில், "கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கற்பித்த மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தைக் கொண்டுவர வேண்டும்" (நெகே 8:1) என்று சொல்லுகிறார்கள்.

எஸ்றா ஒரு வேதபாரகர். அவர் ஒரு ஆசாரியர். அவருக்கு மோசேயின் நியாயப்பிரமாணத்தில் நல்ல பயிற்சி இருக்கிறது. ஆகையினால் மோசேயின் நியாயப்பிரமாணத்தை தங்களுக்கு வாசிக்கவேண்டுமென்று ஜனங்கள் எஸ்றாவிடம் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் கேட்டுக்கொண்ட பிரகாரம் ஏழாம் மாதம் முதல் தேதியில் ஆசாரியனாகிய எஸ்றா நியாயப்பிரமாணத்தைப் புருஷரும் ஸ்திரீகளும், கேட்டு அறியத்தக்க அனைவருமாகிய சபைக்கு முன்பாகக் கொண்டு வருகிறார் (நெகே 8:2).

எஸ்றா கூடியிருக்கிற ஜனங்களுக்கு மோசேயின் நியாயப்பிரமாணத்தை வாசிக்கிறார். வேதபாரகனாகிய எஸ்றா, பிரமாணத்தை வாசிப்பதற்கென்று, மரத்தால் செய்யப்பட்ட ஒரு பிரசங்க பீடத்தின்மேல் நிற்கிறார் (நெகே 8:6). ஜனங்கள் எல்லோரும் தண்ணீர் வாசலுக்கு முன்னான வீதியிலே ஒருமனப்பட்டு கூடியிருக்கிறார்கள். எஸ்றா அவர்களுக்கு முன்பாக வந்து காலமே தொடங்கி, மத்தியானம் மட்டும், நியாயப்பிரமாண புஸ்தகத்தை வாசிக்கிறார்.

அங்கே புருஷர்களும், ஸ்திரீகளும், நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை கேட்டு அறியத்தக்க மற்றவர்களும் கூடிவந்திருக்கிறார்கள். எஸ்றா அவர்களுக்கு முன்பாக மோசேயின் நியாயப்பிரமாணத்தை வாசிக்கிறார். சகல ஜனங்களும் நியாயப்பிரமாண புஸ்தகத்திற்கு கவனமாய் செவிகொடுக்கிறார்கள் (நெகே 8:3).

எஸ்றா ஜனங்களுக்கு கர்த்தருடைய வாயாக பயன்படுகிறார். அவர் கர்த்தருடைய வார்த்தையை ஜனங்களுக்கு முன்பாக வாசிக்கிறார். எஸ்றா சகல ஜனங்களுக்கும் முன்பாக, மரத்தால் செய்யப்பட்ட பிரசங்க பீடத்தின்மேல் நிற்கிறார். அவர் சகல ஜனங்களும் காண நியாயப்பிரமாண புஸ்தகத்தைத் திறக்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்கள், பிரசங்க பீடத்திற்கு போகும்போது, தங்கள் கைகளில் பரிசுத்த வேதாகமத்தை எடுத்து செல்லவேண்டும்.

"இவர்கள் யூதாவிலே உபதேசித்து, கர்த்தருடைய வேத புஸ்தகத்தை வைத்துக்கொண்டு, யூதாவின் பட்டணங்களிலெல்லாம் திரிந்து ஜனங்களுக்குப் போதித்தார்கள்" (2நாளா 17:9).

எஸ்றா சகல ஜனங்களும் காண, மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தை திறக்கிறார். அவர் அதைத் திறந்தபோது, ஜனங்கள் எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள் (நெகே 8:5). எஸ்றாவண்டையில், அவருக்கு வலதுபக்கமாக மத்தித்தியாவும், செமாவும், அனாயாவும், உரியாவும், இல்க்கியாவும், மாசெயாவும், அவருக்கு இடதுபக்கமாகப் பெதாயாவும், மீசவேலும், மல்கியாவும், அசூமும், அஸ்பதானாவும், சகரியாவும், மெசுல்லாமும் நிற்கிறார்கள் (நெகே 8:4).

எஸ்றாவிற்குப் பக்கத்தில் 13 ஆசாரியர்கள் நிற்கிறார்கள். (நெகே 8:4-5). எஸ்றா வேதபுஸ்தகத்தைத் திறந்தபோது, ஜனங்கள் எல்லோரும் எழுந்து நின்று, தங்கள் கைகளைக் குவித்து, "ஆமென், ஆமென்" என்று சொல்லி, குனிந்து, முகங்குப்புற விழுந்து, கர்த்தரைப் பணிந்துகொள்கிறார்கள் (நெகே 8:6).

எஸ்றா மிகுந்த பயபக்தியோடு, எல்லா ஜனங்களுக்கும் முன்பாக கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தை திறக்கிறார். எஸ்றா மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தை காலமே தொடங்கி மத்தியானம் மட்டும் வாசிக்கிறார். ஒருவேளை எஸ்றாவோடு கூடயிருக்கிறவர்களும், நியாயப்பிரமாண புஸ்தகத்தை வாசிப்பதில், அவருக்கு உதவிசெய்திருக்கலாம்.

அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தை தீர்க்கமாக வாசித்து, அர்த்தஞ்சொல்லி, வாசித்ததை அவர்களுக்கு விளங்கப்பண்ணுகிறார்கள் (நெகே 8:8). கர்த்தருடைய வார்த்தையை வாசிக்கிறவர்களும், அதைப் பிரசங்கம்பண்ணுகிறவர்களும் தீர்க்கமாக வாசிக்கவேண்டும். தெளிவாக பிரசங்கம்பண்ணவேண்டும்.

கர்த்தருடைய வார்த்தை நமக்குப் புரிந்தால்தான், அதன் அர்த்தத்தை நம்மால் மற்றவர்களுக்கு சொல்லி, அதை அவர்களுக்கு விளங்கப்பண்ண முடியும். பிரசங்கிக்கிறவர்களுக்கே வார்த்தையின் அர்த்தம் தெரியவில்லையென்றால், அவர்களால் தீர்க்கமாய் பிரசங்கம்பண்ண முடியாது.

கர்த்தருடைய வார்த்தை பரிசுத்தமானது. பரிசுத்தமானது எதையும் நாம் அசட்டைபண்ணக்கூடாது. கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு வார்த்தையையும், ஊழியத்தையும் அசட்டைபண்ணுகிற குணம் இருக்கக்கூடாது. வசனத்தை வாசித்தால், அந்த வசனத்திற்கு அர்த்தம் சொல்லி, நாம் வாசித்ததை ஜனங்களுக்கு விளக்கப்பண்ணவேண்டும்.

கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கிறவர்கள், அதைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் வசனத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், வார்த்தையை பிரசங்கம்பண்ணுகிறவர்கள், அதற்கு அர்த்தத்தையும் சொல்லவேண்டும்.

எஸ்றா மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தை எல்லோருக்கும் முன்பாக திறந்தபோது, ஜனங்கள் எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள்.

அப்பொழுது எஸ்றா மகத்துவமுள்ள தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறார்; ஜனங்களெல்லாரும் தங்கள் கைகளைக் குவித்து, அதற்கு மறுமொழியாக, ஆமென் ஆமென் என்று சொல்லி, குனிந்து, முகங்குப்புற விழுந்து, கர்த்தரைப் பணிந்துகொள்கிறார்கள் (நெகே 8:6).

எஸ்றா கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தை ஜனங்கள் எல்லோருக்கும் முன்பாக வாசிக்கிறார். அப்பொழுது யெசுவா, பானி, செரெபியா, யாமின், அக்கூப், சபெதாயி, ஒதியா, மாசெயா, கேலிதா, அசரியா, யோசபாத், ஆனான், பெலாயா என்பவர்களும், லேவியரும், நியாயப்பிரமாணத்தை ஜனங்களுக்கு விளங்கப்பண்ணுகிறார்கள்; ஜனங்கள் தங்கள் நிலையிலே நிற்கிறார்கள் (நெகே 8:7).

லேவியர் ஜனங்களுக்கு நியாயப் பிரமாணத்தை விளக்கிக்கூறி, அவர்கள் புரியும் விதத்தில் உபதேசம் பண்ணுகிறார்கள். இதனால் ஜனங்கள் நியாயப்பிரமாணத்தின் மெய்ப்பொருளைப் புரிந்துகொள்ள முடிகிறது. (நெகே 8:7-8).

லேவியர்கள் தாங்கள் வாசித்ததை ஜனங்களுக்கு விளங்கப்பண்ணுகிறார்கள். அவர்கள் தங்களுடைய சொந்தக் கருத்துக்களைக் கூறவில்லை. நியாயப்பிரமாணத்தில் எழுதப்பட்டிருப்பதை அவர்களுக்கு விளக்கிக் கூறுகிறார்கள். வேதவசனத்தில் கூறப்பட்டிருக்கும் சத்தியத்தை மட்டுமே நாம் ஜனங்களுக்கு விளக்கிக்கூறவேண்டும்.

தண்ணீர் வாசலுக்கு முன்னான வீதியிலே இஸ்ரவேல் ஜனங்கள் ஏராளமானோர் ஒருமனப்பட்டு கூடியிருக்கிறார்கள். எஸ்றா வாசிப்பது அவர்கள் எல்லோருடைய செவிகளிலும் ஒருவேளை கேட்காமல் இருந்திருக்கலாம். அவர்களில் ஒரு சிலர் தூரமாக நின்றுகொண்டிருக்கலாம். எஸ்றாவோடு கூடயிருக்கிற லேவியர்கள், வாசிக்கப்பட்ட நியாயப்பிரமாண வார்த்தைகளை ஜனங்களுக்கு விளங்கப்பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து "வாசித்து, புஸ்தகத்தைப் சுருட்டி, பணிவிடைக்காரனிடத்தில் கொடுத்து, உட்கார்ந்தார். ஜெப ஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமாயிருந்தது" (லூக் 4:20).

எஸ்றாவுக்கு முன்பாக எல்லா ஜனங்களும் எழும்பி நிற்கிறார்கள். அவர்கள் அவருக்கும், வாசிக்கப்போகிற கர்த்தருடைய வார்த்தைக்கும் மதிப்பு கொடுக்கும் வண்ணமாக எழுந்து நிற்கிறார்கள்.

கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பது நெகே 8:9-12

நெகே 8:9. ஜனங்கள் எல்லாரும் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளைக் கேட்ட போது, அழுதபடியால், திர்ஷாதா என்னப்பட்ட நெகேமியாவும், வேதபாரகனாகிய எஸ்றா என்னும் ஆசாரியனும், ஜனங்களுக்கு விளக்கிக்காட்டின லேவியரும் சகல ஜனங்களையும் நோக்கி: இந்த நாள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான நாள்; நீங்கள் துக்கப்படவும் அழவும் வேண்டாம் என்றார்கள்.

நெகே 8:10. பின்னும் அவன் அவர்களை நோக்கி: நீங்கள் போய்க் கொழுமையானதைப் புசித்து, மதுரமானதைக் குடித்து, ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புங்கள்; இந்த நாள் நம்முடைய ஆண்டவருக்குப் பரிசுத்தமான நாள், விசாரப்படவேண்டாம்; கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான்.

நெகே 8:11. லேவியரும் ஜனங்களையெல்லாம் அமர்த்தி: அழாதிருங்கள், இந்த நாள் பரிசுத்தமான நாள், விசாரப்படவேண்டாம் என்றார்கள்.

நெகே 8:12. அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் தங்களுக்கு அறிவிக்கப்பட்ட வார்த்தைகளை உணர்ந்துகொண்டபடியால், புசித்துக் குடிக்கவும், பங்குகளை அனுப்பவும், மிகுந்த சந்தோஷம் கொண்டாடவும் போனார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் நியாயப்பிரமாண புஸ்தகத்திற்கு கவனமாய்ச் செவிகொடுக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தை அவர்களுடைய இருதயத்தில் பேசுகிறது. அது அவர்களுடைய மனச்சாட்சியிலே உணர்த்துகிறது. இதனால் ஜனங்கள் எல்லோரும் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளைக் கேட்டு அழுகிறார்கள்.

நியாயப்பிரமாணம் மனுஷருடைய பாவங்களை அவர்களுக்கு உணர்த்துகிறது. தங்கள் பாவங்களின் நிமித்தமாக, தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் துயரங்களையும், ஆபத்துக்களையும் நினைத்து, இஸ்ரவேல் ஜனங்கள் வேதனையோடு அழுகிறார்கள் (நெகே 8:9).

நியாயப்பிரமாணப் புஸ்தகம் வாசிக்கப்படும் போது, நெகேமியா யூதா தேசத்தின் தேசாதிபதியாக இருக்கிறார். எஸ்றாவிற்கு இப்போது 90 வயதாயிற்று. 70 வருஷத்திற்கு முன்பாக எஸ்றா தன்னோடு சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களை எருசலேமிற்கு அழைத்து வந்தார். பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பிப் போனபோது அவருக்குச் சுமார் 21 வயதாக இருந்திருக்கவேண்டும். (எஸ்றா 8).

இஸ்ரவேல் ஜனத்தாருடைய இருதயம் கடினமாயிராமல் மென்மையாயிருக்கிறது. நியாயப்பிரமாண வார்த்தைகள் வாசிக்கப்பட்டதைக் கேட்டபோது யோசியா மனங்கசந்து அழுதான். அவனுடைய இருதயமும் மென்மையாயிருந்தது. அவன் தன்னுடைய பாவங்களை உணர்ந்தான். தங்களுடைய பாவங்களினால், தாங்கள் கர்த்தருக்கு விரோதமாகத் தீங்கு செய்ததை நினைத்து, இஸ்ரவேல் ஜனங்கள் அழுகிறார்கள்.

அழுகிற ஜனங்களுக்கு ஆறுதலான வார்த்தைகள் சொல்லப்படுகிறது. அவர்களுக்கு சமாதானத்தின் வார்த்தைகள் அறிவிக்கப்படுகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய நியாயப்பிரமாண வார்த்தைகளைக் கேட்டு அழுகிறார்கள். அழுகிற அவர்களுக்கு கர்த்தருடைய சமாதானமான வார்த்தைகள், அவர்களுடைய காயங்களைக் கட்டும் ஔஷதமாக இருக்கிறது. திர்ஷாதா என்னப்பட்ட நெகேமியாவும், வேதபாரகனாகிய எஸ்றா என்னும் ஆசாரியனும், ஜனங்களுக்கு விளக்கிக்காட்டின லேவியரும் சகல ஜனங்களுக்கும் ஆறுதலான வார்த்தைகளையும், சமாதான வார்த்தைகளையும் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் பண்டிகை நாளிலே அங்கே கூடிவந்திருக்கிறார்கள். ஏழாம் மாதம் முதல் தேதி என்பது இஸ்ரவேல் ஜனத்தாருக்கு எக்காளங்களின் பண்டிகை நாள். இந்த நாளிலே அவர்கள் மிகுந்த சந்தோஷத்தோடு எக்காளங்களை ஊதவேண்டும். கர்த்தரை மிகுந்த ஆனந்தத்தோடு துதிக்கவேண்டும். அவர்களிடத்தில் தங்களுடைய பாவத்திற்கான துக்கம் காணப்பட்டாலும், அவர்களுடைய துக்கம், அவர்கள் கர்த்தருக்குள் சந்தோஷமாகயிருப்பதற்கு தடையாயிருக்கக்கூடாது.

நம்முடைய மனதிலே பாவத்திற்கேதுவான துக்கம் காணப்பட்டாலும், அந்த துக்கம் நம்மை கர்த்தருக்குள் சந்தோஷமாகயிருக்க வழிநடத்தவேண்டும். எஸ்றாவும், நெகேமியாவும், லேவியரும் ஜனங்களை நோக்கி, "இந்த நாள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான நாள்; நீங்கள் துக்கப்படவும் அழவும் வேண்டாம்" (நெகே 8:9) என்று சொல்லுகிறார்கள்.

நியாயப்பிரமாண வார்த்தைகளைக் கேட்டு ஜனங்கள் அழுவதை எஸ்றா பார்க்கிறார். எஸ்றாவின் இருதயத்தில் ஜனங்களுடைய அழுகையைப் பார்க்கும்போது சந்தோஷமுண்டாயிற்று. கர்த்தருடைய வார்த்தை அவர்களுடைய இருதயத்தைத் தொட்டிருக்கிறது என்பதற்கு, அவர்களுடைய அழுகை அடையாளம்.

ஆனால் நெகேமியாவோ, இந்த நாளிலே இஸ்ரவேல் ஜனங்கள் அழுவதை விரும்பவில்லை. இது அழக்கூடிய நாளோ அல்லது துக்கப்படுகிற நாளோ அல்ல. இந்த நாளில் அவர்கள் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்கவேண்டும் என்று நெகேமியா விரும்புகிறார். இது பரிசுத்தமான நாள். இந்த நாளிலே இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கர்த்தரை சந்தோஷத்தோடு துதிக்கவேண்டும். இந்த நாள் அவர்களை துக்கப்படுத்துகிற நாளோ அல்லது வேதனைப்படுத்துகிற நாளோ அல்ல.

எஸ்றாவும், நெகேமியாவும், லேவியரும் அழுகிற ஜனங்களைப் பார்த்து, "நீங்கள் துக்கப்படவும் அழவும் வேண்டாம்" என்றும், லேவியர் ஜனங்களையெல்லாம் அமர்த்தி, "அமர்ந்திருங்கள், இந்த நாள் பரிசுத்தமான நாள், விசாரப்படவேண்டாம்" (நெகே 8:11) என்றும் சொல்லுகிறார்கள்.

நெகேமியாவோ ஜனங்களை நோக்கி, "இந்த நாள் நம்முடைய ஆண்டவருக்கு பரிசுத்தமான நாள், விசாரப்படவேண்டாம், கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுக்கு பெலன்" (நெகே 8:10) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் துக்கப்படாமல், அழாமல், கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவேண்டும். தங்கள் சந்தோஷத்தை அவர்கள் சாட்சியாய் வெளிப்படுத்தவேண்டும். அவர்கள் துக்கத்தின் வஸ்திரத்தைக் களைந்துபோட்டு, துதியின் வஸ்திரங்களை தரித்துக்கொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர், தங்களுடைய சந்தோஷத்திற்கு அடையாளமாக கொழுமையானதை புசிக்கவேண்டும் என்றும், மதுரமானதை குடிக்கவேண்டும் என்றும் நெகேமியா சொல்லுகிறார். அவர்கள் புசித்து குடித்து திருப்தியாயிருந்தாலும், தரித்திரரையும் நினைவுகூரவேண்டும் என்று நெகேமியா அவர்களுக்கு கட்டளையிடுகிறார். "ஒன்றுமில்லாதவர்களுக்கு பங்குகளை அனுப்புங்கள்" (நெகே 8:10) என்று நெகேமியா அவர்களுக்கு கட்டளையிடுகிறார்.

புசித்து குடிக்கிறவர்களிடத்தில் கொழுமையான பதார்த்தங்கள் ஏராளமாயிருக்கிறது. தரித்திரரோ ஒன்றுமில்லாதவர்களாயிருக்கிறார்கள். புசித்து குடிக்கிறவர்கள் ஒன்றுமில்லாத தரித்திரருக்கு பங்குகளை அனுப்பி உதவிசெய்யும்போது, அவர்களும் இவர்களோடு சேர்ந்து சந்தோஷப்படுவார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பண்டிகையை ஆசரிக்கும்போது பயபக்தியோடும், பரிசுத்தத்தோடும் ஆசரிக்கவேண்டும். இதை உணர்த்தும் வண்ணமாக நெகேமியா அவர்களிடத்தில், "கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்" என்று சொல்லுகிறார். பரிசுத்தமான சந்தோஷம், நம்முடைய கீழ்ப்படிதலுக்கு உதவியாயிருக்கும்.

லேவியரும் அழுகிற ஜனங்களையெல்லாம் அமர்த்துகிறார்கள். அவர்களுடைய அழுகை நிறுத்தப்படுகிறது. அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் தங்களுக்கு அறிவிக்கப்பட்ட வார்த்தைகளை உணர்ந்துகொண்டபடியால், புசித்துக் குடிக்கவும், பங்குகளை அனுப்பவும், மிகுந்த சந்தோஷம் கொண்டாடவும் போகிறார்கள் (நெகே 8:12).

இப்பொழுது கண்ணீரோடே விதைக்கிறவர்கள், கெம்பீரத்தோடே அறுவடை செய்வார்கள். கர்த்தருடைய வார்த்தை உணர்த்துவதினால் தங்களுடைய இருதயங்களில் பயந்து நடுங்குகிறவர்கள், அந்த வார்த்தையினால் வரும் ஆறுதல் மூலமாக ஆனந்த சந்தோஷமடைவார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய சந்தோஷத்திற்கு கொழுமையானதை புசிப்பதோ அல்லது மதுரமானதை குடிப்பதோ காரணமல்ல. ஏராளமான இஸ்ரவேல் ஜனத்தார் அங்கே ஒருமனப்பட்டு கூடிவந்திருப்பதினால் அவர்களுக்கு சந்தோஷமுண்டாகவில்லை. அவர்கள் தங்களுக்கு அறிவிக்கப்பட்ட வார்த்தைகளை உணர்ந்துகொண்டபடியால் மிகவும் சந்தோஷம் கொண்டாடுகிறார்கள்.

பிரச்சனையின் இருள், அறியாமையின் இருள் மூலமாகவே வருகிறது. கர்த்தருடைய வார்த்தையை சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்றால், அறியாமை என்னும் இருள் நம்மை ஆளுகை செய்யும். மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு வாசிக்கப்பட்டபோது, அவர்கள் முதலாவதாக அழுதார்கள். தங்களுக்கு அறிவிக்கப்பட்ட வார்த்தைகளை உணர்ந்துகொண்டபோதோ, அவர்கள் மிகுந்த சந்தோஷம் கொண்டாடுகிறார்கள்.

தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புகிறவர்களுக்கும், தங்களுடைய இருதயம் புதுப்பிக்கப்பட்டவர்களுக்கும் கர்த்தர் நியமித்திருக்கிற வாக்குத்தத்தங்களை நினைத்து இஸ்ரவேல் ஜனத்தார் மிகுந்த சந்தோஷம் கொண்டாடுகிறார்கள். இஸ்ரவேலிலே கர்த்தர் மூலமாக நம்பிக்கை உண்டு.

கூடாரப்பண்டிகை
நெகே 8:13-18

நெகே 8:13. மறுநாளில் ஜனத்தின் சகல வம்சத்தலைவரும், ஆசாரியரும், லேவியரும், நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை அறிந்துகொள்ளவேண்டும் என்று வேதபாரகனாகிய எஸ்றாவினிடத்தில் கூடிவந்தார்கள்.

நெகே 8:14. அப்பொழுது நியாயப்பிரமாணத்திலே, இஸ்ரவேல் புத்திரர் ஏழாம் மாதத்தின் பண்டிகையிலே கூடாரங்களில் குடியிருக்கவேண்டும் என்று கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்பித்த காரியம் எழுதியிருக்கிறதைக் கண்டார்கள்.

நெகே 8:15. ஆகையால் எழுதியிருக்கிறபடி கூடாரங்களைப் போடும்படிக்கு, நீங்கள் மலைகளுக்குப் புறப்பட்டுப் போய் ஒலிவக்கிளைகளையும், காட்டு ஒலிவக்கிளைகளையும், மிருதுச் செடிகளின் கிளைகளையும், பேரீச்சமட்டைகளையும், அடர்ந்த மரக்கிளைகளையும் கொண்டுவாருங்கள் என்று தங்களுடைய சகல பட்டணங்களிலும், எருசலேமிலும் கூறிப் பிரசித்தப்படுத்தினார்கள்.

நெகே 8:16. அப்படியே ஜனங்கள் வெளியே போய் அவைகளைக் கொண்டுவந்து, அவரவர் தங்கள் வீடுகள்மேலும், தங்கள் முற்றங்களிலும், தேவனுடைய ஆலயப்பிராகாரங்களிலும், தண்ணீர் வாசல் வீதியிலும், எப்பிராயீம் வாசல் வீதியிலும் தங்களுக்குக் கூடாரங்களைப் போட்டார்கள்.

நெகே 8:17. இந்தப்பிராகாரமாகச் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களின் சபையார் எல்லாரும் கூடாரங்களைப் போட்டு, கூடாரங்களில் குடியிருந்தார்கள்; இப்படியே நூனின் குமாரனாகிய யோசுவாவின் நாட்கள்முதல் அந்நாள் மட்டும் இஸ்ரவேல் புத்திரர் செய்யாதிருந்து இப்பொழுது செய்தபடியால், மிகுந்த சந்தோஷமுண்டாயிருந்தது.

நெகே 8:18. முதலாம் நாள்தொடங்கிக் கடைசி நாள்மட்டும், தினம்தினம் தேவனுடைய நியாயப்பிரமாண புஸ்தகம் வாசிக்கப்பட்டது; ஏழுநாள் பண்டிகையை ஆசரித்தார்கள்; எட்டாம்நாளோவெனில், முறைமையின்படியே விசேஷித்த ஆசரிப்பு நாளாயிருந்தது.

இஸ்ரவேல் ஜனத்தார் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக மறுபடியுமாக ஒருமனப்பட்டு கூடிவருகிறார்கள். மறுநாளில் ஜனத்தின் சகல வம்சத்தலைவரும், ஆசாரியரும், லேவியரும், நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை அறிந்துகொள்ளவேண்டும் என்று வேதபாரகனாகிய எஸ்றாவினிடத்தில் கூடிவருகிறார்கள் (நெகே 8:13).

ஏற்கெனவே நியாயப்பிரமாண வார்த்தைகளைக் கேட்பதற்குக் கூடிவந்த ஜனங்கள் மறுநாளிலும் கூடிவருகிறார்கள். இவ்வாறாகத் தினந்தோறும் ஜனங்கள் எஸ்றாவிடம் கூடிவருகிறார்கள். அவர்களுக்குத் தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகம் அநுதினமும் வாசிக்கப்படுகிறது (நெகே 8:18).

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இது பண்டிகை காலமல்ல. ஆனாலும் சகல வம்சத்தலைவரும், வேதபாரகனாகிய எஸ்றாவினிடத்தில் கூடிவருகிறார்கள். அவர் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை தங்களுக்கு உணர்த்தவேண்டும் என்றும், தாங்கள் நியாயப்பிரமாணத்தின் சத்தியங்களை அறிந்துகொள்ளவேண்டும் என்று விரும்பி அவர்கள் எல்லோரும் எஸ்றாவினிடத்தில் கூடிவருகிறார்கள். ஜனத்தின் சகல வம்சத்தலைவரோடு, ஆசாரியரும் லேவியரும் அவரிடத்தில் கூடிவருகிறார்கள்.

ஆசாரியருக்கும் லேவியருக்கும் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகள் ஏற்கெனவே தெரியும். ஆனாலும் அவர்களும் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை அறிந்துகொள்ளவேண்டும் என்று விரும்புகிறார்கள். வார்த்தைகளை அறிந்துகொண்டால்தான், அவர்களால் அந்த வார்த்தைகளை மற்றவர்களுக்கு போதிக்க முடியும்.

முந்தின நாளிலே எஸ்றா நியாயப்பிரமாணத்தை வாசித்தபோது, லேவியரில் சிலர் ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தை விளங்கப் பண்ணினார்கள் (நெகே 8:7,8). இப்போதோ லேவியர்களும் ஆசாரியர்களும், தங்களை தாழ்த்துகிறார்கள். ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தை விளங்கப்பண்ண, வார்த்தையிலே தங்களுக்கு போதுமான அளவு தெளிவு இல்லை என்றும், நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை இன்னும் அதிகமாய் அறிந்துகொள்ளவேண்டும் என்றும் விரும்பி, அவர்கள் எஸ்றாவின் பாதபடியில் அமர்ந்து, வார்த்தைகளைக் கற்றுக்கொள்ள வந்திருக்கிறார்கள்.

எஸ்றா ஜனங்களுக்கு நியாயப்பிரமாண வார்த்தைகளை அறிவித்தபோது, அவர்கள் அந்த வார்த்தைகளின் அர்த்தத்தையும், தாற்பரியத்தையும் அறிந்துகொள்கிறார்கள். நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவேண்டும் என்னும் உணர்வு அவர்களுடைய இருதயத்தில் உண்டாயிற்று. இஸ்ரவேல் ஜனத்தார் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிராகரம், தங்களுடைய கடமைகளை நிறைவேற்ற ஆயத்தமாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஏழாம் மாதத்தின் பண்டிகையிலே கூடாரங்களில் குடியிருக்கவேண்டும் என்று கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்பித்த காரியம் நியாயப்பிரமாணத்திலே, எழுதியிருக்கிறதைக் காண்கிறார்கள் (நெகே 8:14).

"பின்னும் நதிக்கு அப்புறத்திலிருந்து உன் தேவனுடைய நியாயப்பிரமாணங்களை அறிந்த சகல ஜனங்களையும் நியாயம் விசாரிக்கத்தக்க துரைகளையும், நியாயாதிபதிகளையும், எஸ்றாவாகிய நீ உன்னிலுள்ள உன் தேவனுடைய ஞானத்தின்படியே ஏற்படுத்துவாயாக; அந்தப் பிரமாணங்களை அறியாதவர்களுக்கு அவைகளை உபதேசிக்கவுங்கடவாய்" (எஸ்றா 7:25).

எஸ்றாவினிடத்தில் தேவனுடைய ஞானம் தங்கியிருக்கிறது. எஸ்றா ஜனங்களுக்கு நியாயப்பிரமாண வார்த்தைகளை அறிவிக்கும்போது, அவற்றை தேவனுடைய ஞானத்தோடு அறிவிக்கிறார். ஆகையினால் ஜனங்கள் கூடாரப்பண்டிகையை ஆசரிக்கவேண்டுமென்று தங்களுடைய இருதயங்களில் உணர்த்தப்படுகிறார்கள்.

"நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: அந்த ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் ஏழுநாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப்பண்டிகையாயிருப்பதாக" (லேவி 23:34).

"நீ உன் களத்தின் பலனையும் உன் ஆலையின்பலனையும் சேர்த்தபின்பு, கூடாரப்பண்டிகையை ஏழுநாள் ஆசரித்து, உன் பண்டிகையில் நீயும், உன் குமாரனும், உன் குமாரத்தியும், உன் வேலைக்காரனும், உன் வேலைக்காரியும், உன் வாசல்களில் இருக்கிற லேவியனும், பரதேசியும், திக்கற்ற பிள்ளையும், விதவையும் சந்தோஷப்படக்கடவீர்கள்" (உபா 16:13,14).

இஸ்ரவேல் புத்திரர் கூடாரப்பண்டிகையை ஆசரிக்கவேண்டும் என்பது தேவனுடைய தெய்வீக நியமனம். இஸ்ரவேல் ஜனத்தார் தேவனுடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் ஏழாம் மாதத்தின் பண்டிகையிலே கூடாரங்களில் குடியிருக்கவேண்டும் என்று மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறது.

ஆகையால் எழுதியிருக்கிறபடி கூடாரங்களைப் போடும்படிக்கு, தாங்கள் மலைகளுக்குப் புறப்பட்டுப் போய் ஒலிவக்கிளைகளையும், காட்டு ஒலிவக்கிளைகளையும், மிருதுச் செடிகளின் கிளைகளையும், பேரீச்சமட்டைகளையும், அடர்ந்த மரக்கிளைகளையும் கொண்டுவரவேண்டும் என்று தங்களுடைய சகல பட்டணங்களிலும், எருசலேமிலும் கூறிப் பிரசித்தப்படுத்துகிறார்கள் (நெகே 8:15).

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் கூடாரங்களின் பண்டிகையை ஆசரிக்கிறார்கள். அதற்காக எல்லாவிதமான கிளைகளையும் சேகரித்து, தங்களுக்குக் கூடாரங்களைப் போட்டு, அவற்றில் குடியிருக்கிறார்கள் (நெகே 8:15-17).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, வனாந்தரத்தின் வழியாக கடந்து வந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் தங்கியிருந்ததை நினைவுகூரும் வண்ணமாக கூடாரப்பண்டிகை கொண்டாடப்படுகிறது. நமக்கு இந்த உலகம் நித்திய வாசஸ்தலமல்ல. பரலோகமே நம்முடைய வாசஸ்தலம். இந்தப் பூமியானது, நாம் பரதேசிகளாக சிறிதுகாலம் தங்கியிருக்கும் கூடாரத்தைப்போல இருக்கிறது.

ஜனங்கள் விசுவாசத்தோடு கர்த்தரிடத்தில் வருவார்கள். இதற்கு அடையாளமாகவும் கூடாரப்பண்டிகை கொண்டாடப்படுகிறது.

"பின்பு, எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லா ஜாதிகளிலும் மீதியான யாவரும் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ளும்படிக்கும், கூடாரப்பண்டிகையை ஆசரிக்கும்படிக்கும், வருஷாவருஷம் வருவார்கள்" (சக 14:16).

கூடாரம் போடுவதற்கு தேவையான ஒலிவக்கிளைகளையும் மற்ற பொருட்களையும் இஸ்ரவேல் ஜனங்களே ஆயத்தம்பண்ணுகிறார்கள். மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி கூடாரங்களைப் போடும்படிக்கு, அவர்கள் மலைகளுக்குப் புறப்பட்டுப் போய் ஒலிவக்கிளைகளையும், காட்டு ஒலிவக்கிளைகளையும், மிருதுச் செடிகளின் கிளைகளையும், பேரீச்சமட்டைகளையும், அடர்ந்த மரக்கிளைகளையும் கொண்டுவாருகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மலைகளிலிருந்து கொண்டு வந்த கிளைகளை, அவரவர் தங்கள் வீடுகள்மேலும், தங்கள் முற்றங்களிலும், தேவனுடைய ஆலயப்பிராகாரங்களிலும், தண்ணீர் வாசல் வீதியிலும், எப்பிராயீம் வாசல் வீதியிலும் தங்களுக்குக் கூடாரங்களைப் போடுகிறார்கள் (நெகே 8:16).

இஸ்ரவேல் புத்திரர் எல்லா பண்டிகைகளையும் சந்தோஷமாய் ஆசரிக்கவேண்டும். அதிலும் விசேஷமாக, கூடாரப்பண்டிகையை அவர்கள் மிகுந்த சந்தோஷத்தோடு ஆசரிக்கவேண்டும். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த சபையார் எல்லாரும் தங்களுக்கு கூடாரங்களைப் போட்டு, அந்தக் கூடாரங்களில் குடியிருக்கிறார்கள்.

இப்படியே நூனின் குமாரனாகிய யோசுவாவின் நாட்கள்முதல் அந்நாள் மட்டும் இஸ்ரவேல் புத்திரர் செய்யாதிருந்து இப்பொழுது செய்தபடியால், மிகுந்த சந்தோஷமுண்டாயிருக்கிறது. முதலாம் நாள்தொடங்கிக் கடைசி நாள்மட்டும், தினம்தினம் தேவனுடைய நியாயப்பிரமாண புஸ்தகம் வாசிக்கப்படுகிறது; ஏழுநாள் பண்டிகையை ஆசரிக்கிறார்கள்; எட்டாம்நாளோவெனில், முறைமையின்படியே விசேஷித்த ஆசரிப்பு நாளாயிருக்கிறது (நெகே 8:17,18).

கூடாரங்களில் குடியிருப்பது இஸ்ரவேல் புத்திரரின் வனாந்திரப் பிரயாணத்தை நினைவுகூருகிறது. (லேவி 23:39-43; உபா 16:13-15). எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்த இஸ்ரவேல் புத்திரரைக் கர்த்தர் கானான் தேசத்திற்கு அழைத்துச் செல்கிறார். வனாந்தரத்தின் வழியாக 40 வருஷக்காலத்திற்கு இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணுகிறார்கள். இந்த 40 வருஷக்காலத்தில் அவர்களில் யாரும் மச்சுப்பாவப்பட்ட வீடுகளில் குடியிருக்கவில்லை. கூடாரங்களில் குடியிருந்தார்கள்.

தங்களுடைய முன்னோர் கூடாரங்களில் குடியிருந்ததை நினைவுகூரும் விதமாக, இஸ்ரவேல் புத்திரர் கூடாரங்களின் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். இந்தப் பண்டிகைக் காலத்தில் ஜனங்கள் கர்த்தரை தியானித்து, அவரை ஆராதிப்பது வழக்கம்.

யோனா ஒரு சூரைச் செடியின்கீழ் அமர்ந்திருந்தான். கர்த்தர் நினிவே பட்டணத்தாருக்கு என்ன செய்யப்போகிறார் என்பதைக் காண்பதற்கு வாஞ்சையோடு இருந்தான். (யோனா 4:5) இஸ்ரவேல் புத்திரரும் வருஷத்திற்கு ஒருதரம் கூடாரங்களில் அமர்ந்திருந்து கர்த்தர் தங்களுக்குச் செய்திருக்கும் நன்மைகளையும், கர்த்தர் நிறைவேற்றப் போகும் வாக்குத்தத்தங்களையும் தியானிக்கிறார்கள்.

இக்காலத்தில் கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் புத்திரருக்குப் பல காரியங்களை முன்னறிவித்திருக்கிறார்கள். கர்த்தருக்குக் காத்திருப்பது, கர்த்தருடைய வார்த்தையைத் தியானிப்பது, தங்களுடைய முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் தங்களை ஒப்புக் கொடுப்பது ஆகிய காரியங்களில் இஸ்ரவேல் புத்திரர் கவனம் செலுத்துகிறார்கள்.

கூடாரங்களின் பண்டிகையில் வருஷத்திற்கு ஒருதரம் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாகும். இதுபோன்ற ஒரு பண்டிகையில்தான் இயேசு கிறிஸ்து தாகமாக இருக்கிறவர்களுக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். (யோவான் 7:37-39). கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை நம்பி, அவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் வாஞ்சையுள்ள அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கூடாரப்பண்டிகையை ஆசாரியாமலிருந்து, இப்பொழுது ஆசரிக்கிறபடியினால், அவர்கள் மத்தியிலே மிகுந்த சந்தோஷமுண்டாயிருக்கிறது. பல வருஷங்களாக இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியவில்லை. மோசேயின் பிரமாணத்தில் கூறப்பட்டிருக்கும் பண்டிகைகளையும், சடங்குகளையும் இஸ்ரவேல் புத்திரர் ஆசரிக்கவில்லை. யோசுவாவின் காலத்திற்குப் பின்பு இப்போதுதான் கூடாரங்களின் பண்டிகையை இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் ஆசரிக்கிறார்கள். சில இடங்களில் பஸ்கா பண்டிகையைக்கூட இஸ்ரவேல் புத்திரர் பல வருஷங்களாக ஆசரிக்காமல் இருந்திருக்கிறார்கள். (2நாளா 30:5,26; 2நாளா 35:18).

கூடாரப்பண்டிகையின் கடைசி நாள் மிகவும் ஆசீர்வாதமானது. கடைசி நாள் எப்போதுமே விசேஷ நாளாக இருக்கும். இயேசு கிறிஸ்து கூடாரப் பண்டிகையின் கடைசி நாளில்தான் "தம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்று வாக்குப்பண்ணினார். (யோவான் 7:37-39).

9 அதிகாரம்

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சமுகத்திலே தங்களைத் தாழ்த்தி உபவாசம்பண்ணுகிறார்கள். அவர்கள் உபவாசம்பண்ணுகிற விதம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது (நெகே 9:1-3).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதாக உறுதியான உடன்படிக்கை பண்ணுகிறார்கள் (நெகே 9:4-38).

உபவாசமும் ஜெபமும் நெகே 9:1-3

நெகே 9:1. அந்த மாதம் இருபத்துநாலாந்தேதியிலே இஸ்ரவேல் புத்திரர் உபவாசம்பண்ணி, இரட்டுடுத்தி, தங்கள்மேல் புழுதியைப் போட்டுக் கொண்டவர்களாய்க் கூடிவந்தார்கள்.

நெகே 9:2. இஸ்ரவேல் சந்ததியார் மறுஜாதியாரையெல்லாம் விட்டுப்பிரிந்து வந்து நின்று, தங்கள் பாவங்களையும், தங்கள் பிதாக்களின் அக்கிரமங்களையும் அறிக்கையிட்டார்கள்.

நெகே 9:3. அவர்கள் எழுந்திருந்து, தங்கள் நிலையில் நின்றார்கள்; அப்பொழுது ஒரு ஜாமமட்டும் அவர்களுடைய தேவனாகிய கர்த்தரின் நியாயப்பிரமாணப் புஸ்தகம் வாசிக்கப்பட்டது; பின்பு ஒரு ஜாமமட்டும் அவர்கள் பாவ அறிக்கை பண்ணி, தங்கள் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஏழாம் மாதம் இருபத்துநாலாந்தேதியிலே உபவாசம்பண்ணி, இரட்டுடுத்தி, தங்கள்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டவர்களாய்க் கூடிவருகிறார்கள் (நெகே 9:1). இவர்கள் ஒருவேளை நெகேமியாவின் உத்தரவு பிரகாரம் உபவாசம்பண்ண கூடிவந்திருக்கலாம். இந்த உபவாசம் மனுஷரால் நியமிக்கப்பட்டிருக்கிறது. இது கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட உபவாசமாயிருக்கிறது.

நியாயப்பிரமாணத்தின்படி கூடாரங்களின் பண்டிகை ஏழாவது மாதம் 15 ஆம் தேதியிலிருந்து 22 ஆம் தேதி வரையிலும் நடைபெறும். இங்கு 24 ஆம் தேதி வரையிலும் பண்டிகை ஆசரிக்கப் படுகிறது. நியாயப்பிரமாணத்தை வாசிப்பதற்கும், கர்த்தருடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதாக ஜனங்கள் தங்களை ஒப்புக்கொடுப்பதற்கும் மேலும் இரண்டு நாட்களாயிற்று.

"மனுஷன் தன் ஆத்துமாவை ஒடுக்குகிறதும், தலைவணங்கி நாணலைப்போல் இரட்டிலும் சாம்பலிலும் படுத்துக்கொள்ளுகிறதும், எனக்கு பிரியமான உபவாச நாளாயிருக்குமோ? இதையா உபவாசமென்றும் கர்த்தருக்குப் பிரியமான நாளென்றும் சொல்லுவாய்?" (ஏசா 58:5).

உபவாசம்பண்ண கூடிவந்திருக்கிற இஸ்ரவேல் புத்திரர் ஒருவேளை தேவனுடைய ஆலயத்தின் பிரகாரங்களில் கூடிவந்திருக்கலாம். அவர்கள் எல்லோரும் இரட்டுடுத்தினவர்களாகவும், தங்கள்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டவர்களாகவும் கூடிவந்திருக்கிறார்கள். இரட்டுடுத்துவதும், தங்கள்மேல் புழுதியைப் போட்டுக்கொள்வதும், துக்கத்திற்கும், புலம்பலுக்கும் அடையாளம்.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு முன்பாக மோசேயின் நியாயப்பிரமாணம் வாசிக்கப்பட்டபோது, ஜனங்கள் மிகவும் அழுதார்கள். அப்போது எஸ்றாவும் நெகேமியாவும், லேவியரும் ஜனங்களைப் பார்த்து "நீங்கள் துக்கப்படவும் அழவும் வேண்டாம்" (நெகே 8:9) என்று சொன்னார்கள். ஆனால் இப்போதோ அவர்கள் துக்கப்பட்டு அழவேண்டிய காலம் வந்திருக்கிறது. நெகேமியா அவர்களை உபவாசம்பண்ணி துக்கப்பட்டு அழச்சொல்லுகிறார்.

உபவாச நாளிலே இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் விட்டு விலகவேண்டும். இதுவே கர்த்தருக்கு பிரியமான உபவாசம்.

"அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்" (ஏசா 58:6,7).

பாவத்தையும் அக்கிரமத்தையும் விட்டு விலகாமல் இரட்டுடுத்துவதினாலோ, தங்கள்மேல் புழுதியைப் போட்டுக்கொள்வதினாலோ ஒரு பிரயோஜனமுமில்லை. பாவத்தை விட்டு விலகாத உபவாசம் மெய்யான உபவாசமல்ல. அது மாய்மாலமான உபவாசம்.

இஸ்ரவேல் புத்திரர் இப்போது மெய்யாகவே உபவாசம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் சந்ததியார் மறுஜாதியாரையெல்லாம் விட்டுப்பிரிந்து வந்து நின்று, தங்கள் பாவங்களையும், தங்கள் பிதாக்களின் அக்கிரமங்களையும் அறிக்கையிடுகிறார்கள் (நெகே 9:2).

உபவாச நாளிலே இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்கள். அவர்கள் கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கிறார்கள்.

"நீ தேசத்தின் எல்லா ஜனத்தோடும் ஆசாரியர்களோடும் சொல்லவேண்டியது என்னவென்றால், நீங்கள் இந்த எழுபது வருஷமாக ஐந்தாம் மாதத்திலும் ஏழாம் மாதத்திலும் உபவாசம்பண்ணி துக்கங்கொண்டாடினபோது நீங்கள் எனக்கென்றுதானா உபவாசம் பண்ணினீர்கள்?" (சக 7:5).

இஸ்ரவேல் சந்ததியார் கர்த்தரோடு ஐக்கியமாயிருப்பதற்காக, அவரோடு ஜெபத்திலே பேசுகிறார்கள். ஜெபமில்லாத உபவாசம், ஆத்துமா இல்லாத சரீரம் போன்றது. அது செத்துப்போன பிரேதம் போன்றது. உபவாசத்தில் ஜெபம் கலந்திருக்கவேண்டும். இதுவே ஜீவனுள்ள உபவாசம்.

இஸ்ரவேல் ஜனத்தார் உபவாச நாளிலே கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலமாக அவர்களோடு பேசுகிறார். கர்த்தரின் நியாயப்பிரமாண புஸ்தகம் அவர்களுக்கு வாசிக்கப்படுகிறது. நியாயப்பிரமாண புஸ்தகம் ஒரு கண்ணாடியைப் போன்றது. கண்ணாடியில் நம்முடைய முகத்தைப் பார்ப்பதுபோல, நியாயப்பிரமாண புஸ்தகத்திலே நம்முடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் பார்க்கலாம்.

நம்முடைய பாவங்களை அங்கீகரிப்பதற்கும், நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு விலகி வருவதற்கும், நியாயப்பிரமாண புஸ்தகம் ஒரு கண்ணாடியைப்போல உதவி செய்யும்.

இஸ்ரவேல் ஜனத்தார் உபவாசம்பண்ணும் காலத்தை இரண்டாகப் பிரிக்கிறார்கள். அவர்கள் மூன்று மணி நேரம் தேவனாகிய கர்த்தரின் வேதப்புஸ்தகத்தை வாசித்து தியானிக்கிறார்கள். அதன் பின்பு மேலும் மூன்று மணி நேரம் தங்கள் பாவங்களை அறிக்கை செய்து ஜெபம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் சந்ததியார் எழுந்திருந்து, தங்கள் நிலையில் நிற்கிறார்கள்; அப்பொழுது ஒரு ஜாமமட்டும் அவர்களுடைய தேவனாகிய கர்த்தரின் நியாயப்பிரமாணப் புஸ்தகம் வாசிக்கப்படுகிறது; பின்பு ஒரு ஜாமமட்டும் அவர்கள் பாவ அறிக்கை பண்ணி, தங்கள் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொள்கிறார்கள் (நெகே 9:3).

அவர்கள் மொத்தம் ஆறுமணி நேரம் உபவாசம்பண்ணுகிறார்கள். இந்த ஆறுமணி நேரத்தில் அவர்கள் கொஞ்ச நேரத்தைக்கூட வீணாக்கவில்லை. அவர்களுடைய உபவாசம் கர்த்தருக்கு பிரியமான உபவாசமாயிருக்கிறது. அவர்கள் ஆறுமணி நேரமாக கர்த்தருடைய சமுகத்திலே காத்திருக்கிறார்கள். தாங்கள் களைப்படைந்து விட்டதாகவோ, சோர்ந்துபோய்விட்டதாகவோ அவர்கள் முறையிடவில்லை.

கர்த்தருக்கு ஸ்தோத்திரம் நெகே 9:4-6

நெகே 9:4. யெசுவா, பானி, கத்மியேல், செப்பனியா, புன்னி, செரேபியா, பானி, கெனானி என்பவர்கள் லேவியருடைய படிகளின்மேல் நின்று, தங்கள் தேவனாகிய கர்த்தரை நோக்கி மகா சத்தமாய் ஓலமிட்டார்கள்.

நெகே 9:5. பின்பு லேவியரான யெசுவா, கத்மியேல், பானி, ஆசாப்நெயா, செரேபியா, ஒதியா, செபனியா, பெத்தகியா என்பவர்கள் ஜனங்களைப் பார்த்து: நீங்கள் எழுந்திருந்து, அநாதியாய் என்றென்றைக்குமிருக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள் என்று சொல்லி, கர்த்தரை நோக்கி: எந்த ஸ்துதி ஸ்தோத்திரத்துக்கும் மேலான உம்முடைய மகிமையுள்ள நாமத்துக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

நெகே 9:6. நீர் ஒருவரே கர்த்தர்; நீர் வானங்களையும், வானாதி வானங்களையும், அவைகளுடைய சர்வ சேனைகளையும், பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும், சமுத்திரங்களையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர்; அவைகளையெல்லாம் நீர் காப்பாற்றுகிறீர்; வான சேனைகள் உம்மைப் பணிந்துகொள்ளுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் உபவாசம்பண்ணின விதம் இந்த வசனப்பகுதியில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சமுகத்திலே உபவாசம்பண்ணுவதற்கு, ஒரு சில ஊழியக்காரர்கள் உதவி செய்கிறார்கள். அவர்களுடைய பெயர்கள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

"யெசுவா, பானி, கத்மியேல், செப்பனியா, புன்னி, செரேபியா, பானி, கெனானி என்பவர்கள்" (நெகே 9:4), "யெசுவா, கத்மியேல், பானி, ஆசாப்நெயா, செரேபியா, ஒதியா, செபனியா, பெத்தகியா என்பவர்கள்" (நெகே 9:5) உபவாச ஜெபத்திற்கு உதவியாயிருக்கிறார்கள்.

இந்த லேவியர்கள் எல்லோரும் தங்கள் தேவனாகிய கர்த்தரை நோக்கி மகாசத்தமாய் ஓலமிடுகிறார்கள். அவர்கள் உபவாசம்பண்ண கூடிவந்திருக்கிற ஜனங்களை ஜெபத்திலே வழிநடத்துகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் ஒருவேளை எட்டு வெவ்வேறு சபையாராக கூடி வந்திருக்கலாம் என்றும், ஒவ்வொரு சபையாருக்கும் ஒரு லேவியர் வீதமாக, அவர்களை ஜெபத்தில் வழிநடத்துகிறார்கள் என்றும் வேதபண்டிதர்களில சிலர் கருத்து சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ண கூடிவந்திருக்கும்போது என்னென்ன காரியங்களை செய்கிறார்கள் என்னும் விவரமும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் தாமே தமது கிருபையினால் இஸ்ரவேலின் பாவங்களை மன்னிக்கவேண்டும் என்றும், கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் தங்களுக்கு கிடைக்கவேண்டும் என்றும் இஸ்ரவேல் புத்திரர் ஜெபம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் உபவாசம்பண்ணும்போது கர்த்தரைத் துதிக்கிறார்கள். நாம் உபவாசம்பண்ணினாலும், கர்த்தரைத் துதிப்பதற்கு தடையேதுமில்லை. நாம் கர்த்தருடைய சமுகத்தில் வரும் எல்லா வேளையிலும், அவரை நன்றியோடு துதிக்கலாம். நம்முடைய நாவிலே கர்த்தரைத் துதிக்கும் துதி எப்போதும் நிரம்பியிருக்கவேண்டும்.

உபவாச ஜெபத்திற்கு தலைமை தாங்கி நடத்துகிற லேவியர்கள், இஸ்ரவேல் ஜனத்தாரை நோக்கி, "நீங்கள் எழுந்திருந்து, அநாதியாய் என்றென்றைக்குமிருக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்" (நெகே 9:5) என்று சொல்லுகிறார்கள்.

லேவியர் இஸ்ரவேல் ஜனங்களை துதிக்க சொல்லிவிட்டு, அவர்களும் கர்த்தரைத் துதிக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை நோக்கி, "எந்த ஸ்துதி ஸ்தோத்திரத்துக்கும் மேலான உம்முடைய மகிமையுள்ள நாமத்துக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. நீர் ஒருவரே கர்த்தர்: நீர் வானங்களையும், வானாதி வானங்களையும், அவைகளுடைய சர்வ சேனைகளையும், பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும், சமுத்திரங்களையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர்; அவைகளையெல்லாம் நீர் காப்பாற்றுகிறீர்; வான சேனைகள் உம்மைப் பணிந்துகொள்ளுகிறது" (நெகே 9:5,6) என்று சொல்லி துதிக்கிறார்கள்.

கர்த்தரே எல்லாவற்றையும் உண்டாக்கினவர். அவரே சர்வசிருஷ்டிகர். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைத் துதிக்கும்போது எழுந்திருந்து துதிக்கவேண்டும் என்று லேவியர்கள் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் ஒருவரே. அவர் ஒருவரே கர்த்தர். அவரே எல்லாவற்றையும் உண்டாக்கினவர். கர்த்தர் சர்வசிருஷ்டிகளையும் காப்பாற்றுகிறார். ஆகையினால் சர்வசிருஷ்டிகளும் கர்த்தரைப் பணிந்துகொள்கிறது. கர்த்தருடைய நாமமே எல்லா நாமத்திற்கும் மேலான நாமம்.

கர்த்தருடைய கிருபை நெகே 9:7-31

நெகே 9:7. ஆபிராமைத் தெரிந்துகொண்டு, அவனை ஊர் என்னும் கல்தேயரின் பட்டணத்திலிருந்து புறப்படப்பண்ணி, அவனுக்கு ஆபிரகாம் என்னும் பேரிட்ட தேவனாகிய கர்த்தர் நீர்.

நெகே 9:8. அவன் இருதயத்தை உமக்கு முன்பாக உண்மையுள்ள தாகக்கண்டு, கானானியர், ஏத்தியர், எமோரியர், பெரிசியர், எபூசியர், கிர்காசியருடைய தேசத்தை அவன் சந்ததிக்குக் கொடுக்கும்படி, அவனோடு உடன்படிக்கைபண்ணி, உம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றினீர்; நீர் நீதியுள்ளவர்.

நெகே 9:9. எகிப்திலே எங்கள் பிதாக்கள் அநுபவித்த சிறுமையை நீர் கண்டு, சிவந்த சமுத்திரத்தில் அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டீர்.

நெகே 9:10. பார்வோனிடத்திலும், அவனுடைய எல்லா ஊழியக்காரரிடத்திலும், அவன் தேசத்தின் சகல ஜனத்தினிடத்திலும், அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தீர்; அவர்கள் உமது ஜனங்களை அகந்தையாய் நடத்தினார்கள் என்பதை அறிந்திருந்தீர்; இப்படியே இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி உமக்குக் கீர்த்தியை உண்டாக்கினீர்.

நெகே 9:11. நீர் அவர்களுக்கு முன்பாகச் சமுத்திரத்தைப் பிரித்ததினால், கடலின் நடுவாகக் கால்நனையாமல் நடந்தார்கள்; வலுவான தண்ணீர்களிலே கல்லைப் போடுகிறதுபோல, அவர்களைத் தொடர்ந்தவர்களை ஆழங்களிலே போட்டுவிட்டீர்.

நெகே 9:12. நீர் பகலிலே மேகஸ்தம்பத்தினாலும், அவர்கள் நடக்கவேண்டிய வழியை அவர்களுக்கு வெளிச்சமாக்க இரவிலே அக்கினிஸ்தம்பத்தினாலும், அவர்களை வழிநடத்தினீர்.

நெகே 9:13. நீர் சீனாய்மலையிலிறங்கி, வானத்திலிருந்து அவர்களோடே பேசி, அவர்களுக்குச் செம்மையான நீதிநியாயங்களையும், நல்ல கட்டளைகளும் கற்பனைகளுமாகிய உண்மையான பிரமாணங்களையும் கொடுத்தீர்.

நெகே 9:14. உமது பரிசுத்த ஓய்வுநாளை அவர்களுக்குத் தெரியப்படுத்தி, உமது தாசனாகிய மோசேயைக்கொண்டு, அவர்களுக்குக் கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயப்பிரமாணங்களையும் கற்பித்தீர்.

நெகே 9:15. அவர்கள் பசிக்கு வானத்திலிருந்து அப்பம் கொடுத்து, அவர்கள் தாகத்துக்குக் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணி, நீர் அவர்களுக்குக் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளப் பிரவேசியுங்கள் என்று அவர்களுக்குச் சொன்னீர்.

நெகே 9:16. எங்கள் பிதாக்களாகிய அவர்களோ அகங்காரமாய் நடந்து, தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி, உம்முடைய கற்பனைகளுக்குச் செவிகொடாதே போனார்கள்.

நெகே 9:17. அவர்கள் செவிகொடுக்க மனதில்லாமலும், அவர்களிடத்திலே நீர் செய்த உம்முடைய அற்புதங்களை நினையாமலும் போய், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி, தங்கள் அடிமைத்தனத்துக்குத் திரும்பும்படிக்கு அவர்கள் கலகம்பண்ணி, ஒரு தலைவனை ஏற்படுத்தினார்கள்; ஆகிலும் வெகுவாய் மன்னிக்கிறவரும், இரக்கமும் மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மகா கிருபையுமுள்ளவருமான தேவனாகிய நீர் அவர்களைக் கைவிடவில்லை.

நெகே 9:18. அவர்கள் வார்ப்பிக்கப்பட்ட ஒரு கன்றுக்குட்டியைத் தங்களுக்கு உண்டாக்கி: இது உன்னை எகிப்திலிருந்து கொண்டுவந்த உன் தெய்வம் என்று சொல்லி, கோபமூட்டத்தக்க பெரிய அக்கிரமங்களைச் செய்திருந்தாலும்,

நெகே 9:19. நீர் உம்முடைய மிகுந்த மனஉருக்கத்தின்படியே, அவர்களை வனாந்தரத்திலே கைவிடவில்லை; அவர்களை வழிநடத்தப் பகலிலே மேகஸ்தம்பமும், அவர்களுக்கு வெளிச்சத்தையும் அவர்கள் நடக்கவேண்டிய வழியையும் காட்ட இரவிலே அக்கினிஸ்தம்பமும், அவர்களை விட்டு விலகவில்லை.

நெகே 9:20. அவர்களுக்கு அறிவை உணர்த்த உம்முடைய நல் ஆவியைக் கட்டளையிட்டீர்; அவர்கள் வாய்க்கு உம்முடைய மன்னாவை அருளி, அவர்கள் தாகத்துக்குத் தண்ணீரைக் கொடுத்தீர்.

நெகே 9:21. இப்படி நாற்பது வருஷமாக வனாந்தரத்தில் அவர்களுக்கு ஒன்றும் குறைவுபடாதபடிக்கு, அவர்களைப் பராமரித்துவந்தீர்; அவர்கள் வஸ்திரங்கள் பழமையாய்ப் போகவுமில்லை, அவர்கள் கால்கள் வீங்கவுமில்லை.

நெகே 9:22. அவர்களுக்கு ராஜ்யங்களையும் ஜனங்களையும் ஒப்புக்கொடுத்து, அவைகளை எல்லை எல்லையாக அவர்களுக்குப் பங்கிட்டீர்; எஸ்போனின் ராஜாவாகிய சீகோனின் தேசத்தையும், பாசானின் ராஜாவாகிய ஓகின் தேசத்தையும் கட்டிக்கொண்டார்கள்.

நெகே 9:23. அவர்கள் பிள்ளைகளை வானத்து நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணி, சுதந்தரித்துக் கொள்ளும்படி நீர் அவர்கள் பிதாக்களுக்குச் சொன்ன தேசத்திலே அவர்களை அழைத்துவந்தீர்.

நெகே 9:24. அப்படியே பிள்ளைகள் உட்பிரவேசித்து, தேசத்தைச் சுதந்தரித்துக் கொண்டார்கள்; நீர் அவர்களுக்கு முன்பாக தேசத்தின் குடிகளாகிய கானானியரைத் தாழ்த்தி, அவர்களையும் அவர்கள் ராஜாக்களையும், தேசத்தின் ஜனங்களையும், தங்கள் இஷ்டப்படி செய்ய, அவர்கள் கையிலே ஒப்புக்கொடுத்தீர்.

நெகே 9:25. அவர்கள் அரணான பட்டணங்களையும், செழுமையான பூமியையும் கட்டிக்கொண்டு, சகலவித உடமைகள் நிறைந்த வீடுகளையும், வெட்டப்பட்ட துரவுகளையும், ஏராளமான திராட்சத் தோட்டங்களையும், ஒலிவத்தோப்புகளையும், கனிகொடுக்கும் விருட்சங்களையும் சுதந்தரித்துக் கொண்டு, புசித்துத் திருப்தியாகிக் கொழுத்து, உம்முடைய பெரிய தயையினால் செல்வமாய் வாழ்ந்தார்கள்.

நெகே 9:26. ஆனாலும் அவர்கள் கீழ்ப்படியாதவர்களாகி, உமக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, உம்முடைய நியாயப்பிரமாணத்தைத் தங்களுக்குப் புறம்பே எறிந்துவிட்டு, தங்களை உம்மிடத்தில் திருப்பும்படி அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்ட உம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோட்டு, கோபமூட்டுகிற பெரிய அக்கிரமங்களைச் செய்தார்கள்.

நெகே 9:27. ஆகையால் அவர்களை நெருக்குகிற அவர்கள் சத்துருக்களின் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்தீர்; அவர்கள் நெருக்கம் அநுபவிக்கிற காலத்தில் அவர்கள் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறபோதோ, நீர் பரலோகத்திலிருந்து கேட்டு, உம்முடைய மிகுந்த இரக்கத்தினால் அவர்களை அவர்கள் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கிவிடுகிற இரட்சகர்களை அவர்களுக்குக் கொடுத்தீர்.

நெகே 9:28. அவர்களுக்கு இளைப்பாறுதல் உண்டானபோதோ, உமக்குமுன்பாக மறுபடியும் பொல்லாப்புச் செய்யத் தொடங்கினார்கள்; ஆகையால், அவர்கள் சத்துருக்கள் அவர்களை ஆளும்படிக்கு, அவர்கள் கையிலே ஒப்புவித்தீர்; அவர்கள் மனந்திரும்பி, உம்மை நோக்கிக் கூப்பிட்டபோதோ, நீர் பரலோகத்திலிருந்துகேட்டு, அவர்களை உம்முடைய இரக்கங்களின்படியே அநேகந்தரம் விடுதலையாக்கிவிட்டீர்.

நெகே 9:29. அவர்களை உம்முடைய நியாயப்பிரமாணத்துக்குத் திருப்ப அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டீர்; ஆனாலும் அவர்கள் அகங்காரங்கொண்டு, உம்முடைய கற்பனைகளுக்குச் செவிகொடாமல், கீழ்ப்படிந்து நடக்கிற மனுஷன் செய்து பிழைக்கிற உம்முடைய நீதிநியாயங்களுக்கு விரோதமாகப் பாவஞ்செய்து, தங்கள் தோளை முரண்டுத்தனமாய் விலக்கி, செவிகொடாமல், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்திக்கொண்டார்கள்.

நெகே 9:30. நீர் அநேக வருஷமாக அவர்கள் மேல் பொறுமையாயிருந்து, உம்முடைய ஆவியினால் பேசின உம்முடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டு அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டாலும், அவர்கள் செவிகொடாதபடியினாலே, அவர்களை அந்நிய தேசஜனங்களின் கையில் ஒப்புக்கொடுத்தீர்.

நெகே 9:31. ஆகிலும் உம்முடைய மிகுந்த இரக்கங்களின்படியே, அவர்களை நிர்மூலமாக்காமலும் அவர்களை கைவிடாமலும் இருந்தீர்; நீர் கிருபையும் இரக்கமுமுள்ள தேவன்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இதுவரையிலும் ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். லேவியரும் இஸ்ரவேல் ஜனத்தாரும் கர்த்தருடைய கிருபைகளையும், இரக்கங்களையும் நன்றியுள்ள இருதயத்தோடு அங்கீகரிக்கிறார்கள். கர்த்தர் தங்களுக்கும், தங்களுடைய முற்பிதாக்களுக்கும் இதுவரையிலும் செய்து வந்த நன்மைகளை, அவர்கள் ஒவ்வொன்றாக நினைவுகூருகிறார்கள்.

கர்த்தர் ஆபிராமைத் தெரிந்துகொண்டார். அவரை ஊர் என்னும் கல்தேயருடைய பட்டணத்திலிருந்து புறப்படப்பண்ணினார். கர்த்தர் ஆபிராமை ஆபிரகாம் என்று பேரிட்டு அழைத்தார் (நெகே 9:7).

ஆபிரகாமின் இருதயம் கர்த்தருக்கு முன்பாக உண்மையுள்ளதாகயிருக்கிறது. மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தர் மனுஷருடைய இருதயத்தைப் பார்க்கிறார். ஆபிரகாமின் இருதயம் தமக்கு முன்பாக உண்மையுள்ளதாகயிருப்பதை கர்த்தர் காண்கிறார்.

கர்த்தர் ஆபிரகாமோடு உடன்படிக்கை பண்ணுகிறார். ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததியாருக்கும் கானான் தேசத்தைக் கொடுப்பதாக கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். கானான் தேசமானது நல்ல தேசத்திற்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தர் ஆபிரகாமோடு உடன்படிக்கை பண்ணியது மாத்திரமல்ல, அவர் தம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றியிருக்கிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர். அவர் நீதியுள்ளவர் (நெகே 9:8).

ஆபிரகாமின் இருதயம் கர்த்தருக்கு முன்பாக உண்மையுள்ளதாக இருக்கிறது. (ஆதி 22:12). "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும், மகாகேடுள்ளதுமாயிருக்கிறது" (எரே 17:9). ஆனாலும் மனுஷனுடைய இருதயத்தைக் கர்த்தர் அறிகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருந்தார்கள். கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினாலே, இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ணினார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சமுகத்திலே, அவர் தங்களுடைய முற்பிதாக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்ததை, நன்றியுள்ள இருதயத்தோடு நினைவுகூருகிறார்கள்.

"எகிப்திலே எங்கள் பிதாக்கள் அநுபவித்த சிறுமையை நீர் கண்டு, சிவந்த சமுத்திரத்தில் அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டீர்.

பார்வோனிடத்திலும், அவனுடைய எல்லா ஊழியக்காரரிடத்திலும், அவன் தேசத்தின் சகல ஜனத்தினிடத்திலும், அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தீர்; அவர்கள் உமது ஜனங்களை அகந்தையாய் நடத்தினார்கள் என்பதை அறிந்திருந்தீர்; இப்படியே இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி உமக்குக் கீர்த்தியை உண்டாக்கினீர்.

நீர் அவர்களுக்கு முன்பாகச் சமுத்திரத்தைப் பிரித்ததினால், கடலின் நடுவாகக் கால்நனையாமல் நடந்தார்கள்; வலுவான தண்ணீர்களிலே கல்லைப் போடுகிறதுபோல, அவர்களைத் தொடர்ந்தவர்களை ஆழங்களிலே போட்டுவிட்டீர்" (நெகே 9:9-11) என்று இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்கள். அவர் செய்த நன்மைகளுக்காக அவர்கள் கர்த்தரைத் துதிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் இப்போது பாபிலோன் தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். கர்த்தர் பூர்வகாலத்திலே தங்கள் முற்பிதாக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்ததுபோல, இப்போது தங்களை பாபிலோன் தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்திருக்கிறார் என்று சொல்லி, இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை நன்றியோடு துதிக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, அவர்களை வனாந்தர பாதை வழியாக வழிநடத்தினார். கர்த்தர் அவர்களை பகலிலே மேகஸ்தம்பத்தினாலும், அவர்கள் நடக்கவேண்டிய வழியை அவர்களுக்கு வெளிச்சமாக்க இரவிலே அக்கினிஸ்தம்பத்தினாலும், வழிநடத்தினார் (நெகே 9:12).

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, பகல் வேளையிலே மேகஸ்தம்பம் அவர்களுக்கு நிழலைக் கொடுத்தது. இரவு வேளையிலே அக்கினி ஸ்தம்பம் அவர்களுக்கு வெளிச்சத்தைக் கொடுத்தது. கர்த்தரே அவர்களை நடக்க வேண்டிய வழியிலே வழிநடத்தினார். அவர்கள் எங்கே தங்கவேண்டும் என்றும், எப்போது பிரயாணம் பண்ணவேண்டும் என்றும் கர்த்தருக்கு தெரியும். கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவும், வழிநடத்துதலின் பிரகாரமாகவும் அவர்களை வழிநடத்தினார்.

அக்கினி ஸ்தம்பமும் மேகஸ்தம்பமும் கர்த்தருடைய பிரசன்னத்திற்கு பிரத்தியட்சமான அடையாளமாயிருக்கிறது. கர்த்தர் அவர்களை வழிநடத்துகிறார் என்பதற்கும், அவர்களைப் பாதுகாக்கிறார் என்பதற்கும், அக்கினி ஸ்தம்பமும் மேஸ்தம்பமும் சாட்சியாய் அறிவிக்கிறது.

எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரவேல் புத்திரர் திரளான எண்ணிக்கையிலிருக்கிறார்கள். அவர்கள் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணும்போது, அவர்களுக்கு போதுமான அளவு போஜனமும் தண்ணீரும் தேவை. போஜனம் இல்லாவிட்டால் அவர்கள் பட்டினியினால் செத்துப்போவார்கள். கர்த்தரோ அவர்கள் பசிக்கு வானத்திலிருந்து அப்பம் கொடுத்து அவர்கள் தாகத்திற்கு கன்மலையிலிருந்து தண்ணீரைப் புறப்படப்பண்ணினார் (நெகே 9:15).

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, அவர்களுக்கு எங்கு போகிறோம் என்பதுகூட தெரியாது. அவர்கள் நிச்சயமில்லாதவர்களாக தங்கள் இருதயத்தில் கலங்கிப்போயிருந்தார்கள். கர்த்தரோ தம்முடைய வார்த்தையினாலும், வாக்குத்தத்தினாலும், தம்முடைய தெய்வீக சித்தத்தை அவர்களுக்கு உறுதிபண்ணினார்.

கர்த்தர் அவர்களுக்கு கானான் தேசத்தைக் கொடுப்பதாக வாக்குப்பண்ணினார். கர்த்தர் ஆணையிட்ட தேசத்தை சுதந்தரித்துக்கொள்ள, அவர்கள் பிரவேசிக்கவேண்டும் என்று, கர்த்தர் அவர்களுக்கு சொன்னார் (நெகே 9:15).

கர்த்தர் அவர்களுக்கு அறிவை உணர்த்த தம்முடைய நல் ஆவியைக் கட்டளையிட்டார்; அவர்கள் வாய்க்கு தம்முடைய மன்னாவை அருளி, அவர்கள் தாகத்துக்குத் தண்ணீரைக் கொடுத்தார்.

இப்படி நாற்பது வருஷமாக வனாந்தரத்தில் அவர்களுக்கு ஒன்றும் குறைவுபடாதபடிக்கு, அவர்களைப் பராமரித்துவந்தார்; அவர்கள் வஸ்திரங்கள் பழமையாய்ப்போகவுமில்லை, அவர்கள் கால்கள் வீங்கவுமில்லை (நெகே 9:20,21).

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். அவர்கள் அகங்காரமாய் நடந்து, தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தினார்கள். ஆகிலும் வெகுவாய் மன்னிக்கிறவரும், இரக்கமும் மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மகா கிருபையுமுள்ளவருமான தேவனாகிய கர்த்தர் அவர்களைக் கைவிடவில்லை (நெகே 9:17).

கர்த்தரே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். அவர் சீனாய்மலையிலிறங்கி, வானத்திலிருந்து அவர்களோடே பேசினார். கர்த்தர் அவர்களுக்குச் செம்மையான நீதிநியாயங்களையும், நல்ல கட்டளைகளும் கற்பனைகளுமாகிய உண்மையான பிரமாணங்களையும் கொடுத்தார் (நெகே 9:13). நியாயப்பிரமாணத்தைக் கொடுத்த கர்த்தர் மகிமையுள்ளவர்.

"அக்கினியின் நடுவிலிருந்து பேசுகிற தேவனுடைய சத்தத்தை நீ கேட்டது போல, யாதொரு ஜனமாவது கேட்டதும் உயிரோடிருந்ததும் உண்டோ" (உபா 4:33)

"இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதியும் எது?" (உபா 4:8).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பரிசுத்த ஓய்வுநாளை தெரியப்படுத்தினார். அவர் தமது தாசனாகிய மோசேயைக்கொண்டு, அவர்களுக்குக் கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயப்பிரமாணங்களையும் கற்பித்தார். அவர்களுக்கு அறிவை உணர்த்த தம்முடைய நல்ஆவியைக் கட்டளையிட்டார் (நெகே 9:14,20).

கர்த்தர் சீனாய் மலையில் இறங்கி இஸ்ரவேல் ஜனத்தாருக்கு உண்மையான பிரமாணத்தைக் கொடுத்தார். மோசே பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, கர்த்தர் கொடுத்த உண்மையான பிரமாணங்களை, பஞ்சாகமம் புஸ்தகமாக எழுதினார்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தர பிரயாணத்தை முடித்துவிட்டு கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய உதவியும், ஒத்தாசையுமில்லாமல் அவர்களால் அந்த தேசத்தை சுதந்தரிக்க முடியாது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கானான் தேசத்தை ஒப்புக்கொடுத்தார்.

கர்த்தர் அவர்களுக்கு ராஜ்யங்களையும் ஜனங்களையும் ஒப்புக்கொடுத்து, அவைகளை எல்லை எல்லையாக அவர்களுக்குப் பங்கிட்டார்; இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கிருபையினால் எஸ்போனின் ராஜாவாகிய சீகோனின் தேசத்தையும், பாசானின் ராஜாவாகிய ஓகின் தேசத்தையும் கட்டிக்கொண்டார்கள்.

கர்த்தர் அவர்களுடைய பிள்ளைகளை வானத்து நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணினார். சுதந்தரித்துக் கொள்ளும்படி கர்த்தர் அவர்கள் பிதாக்களுக்குச் சொன்ன தேசத்திலே அவர்களை அழைத்துவந்தார் (நெகே 9:22,23).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருந்தார். கர்த்தருடைய கிருபையினாலும், அவருடைய தெய்வீக வல்லமையினாலும், அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு உதவிசெய்ததினாலும், அவர்கள் கானான் தேசத்திலே உட்பிரவேசித்து, தேசத்தைச் சுதந்தரித்துக் கொண்டார்கள்; கர்த்தர் அவர்களுக்கு முன்பாக தேசத்தின் குடிகளாகிய கானானியரைத் தாழ்த்தி, அவர்களையும் அவர்கள் ராஜாக்களையும், தேசத்தின் ஜனங்களையும், தங்கள் இஷ்டப்படி செய்ய, அவர்கள் கையிலே ஒப்புக்கொடுத்தார் (நெகே 9:24).

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலே அரணான பட்டணங்களையும், செழுமையான பூமியையும் கட்டிக்கொண்டு, சகலவித உடமைகள் நிறைந்த வீடுகளையும், வெட்டப்பட்ட துரவுகளையும், ஏராளமான திராட்சத்தோட்டங்களையும், ஒலிவத்தோப்புகளையும், கனிகொடுக்கும் விருட்சங்களையும் சுதந்தரித்துக்கொண்டு, புசித்துத் திருப்தியாகிக் கொழுத்து, கர்த்தருடைய பெரிய தயையினால் செல்வமாய் வாழ்ந்தார்கள் (நெகே 9:25).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏராளமான நன்மைகளை செய்திருந்தாலும், அவர்கள் அகங்காரமாய் நடந்து, தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி, கர்த்தருடைய கற்பனைகளுக்குச் செவிகொடாதே போனார்கள். கர்த்தர் அவர்களுக்கு செய்த அற்புதங்களை அவர்கள் நினையாமற்போனார்கள். அவர்கள் தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி, தங்கள் அடிமைத்தனத்துக்குத் திரும்பும்படிக்கு அவர்கள் கலகம்பண்ணி, ஒரு தலைவனை ஏற்படுத்தினார்கள் (நெகே 9:16,17).

கர்த்தரோ இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவங்களுக்குத்தக்கதாக, அவர்களை வனாந்தரத்தில் தண்டித்தார். ஆனாலும் கர்த்தர் அவர்களை மொத்தமாய் அழித்துப்போடவில்லை. கர்த்தர் அவர்களுடைய பாவங்களை வெகுவாய் மன்னிக்கிறவர். அவர் இரக்கமும், மனஉருக்கமும், நீடியசாந்தமும், மகாகிருபையுமுள்ளவர். கர்த்தர் தம்முடைய தயவினாலே இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களை மன்னித்தார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திலே உட்பிரவேசித்து அந்த தேசத்தை சுதந்தரித்துக்கொண்டார்கள். கானான் தேசம் கர்த்தருக்கு பரிசுத்தமான தேசம். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு பரிசுத்தமானவர்கள். கானான் தேசத்திலே, ஏத்தியர், எமோரியர், பெரிசியர், எபூசியர், கிர்காசியர், கானானியர் ஆகியோர் குடியிருந்தார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் இந்த ஜாதியாருக்கு முன்பாக பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். அவர்கள் புறஜாதியார் மத்தியிலே கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும்.

ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ கர்த்தருக்கு பரிசுத்தமாய் ஜீவிக்கவில்லை. அவர்கள் கானான் தேசத்தை சுதந்தரித்த பின்பு மறுபடியுமாய் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். அவர்கள் தங்களுடைய பாவங்களினால், சத்துருக்களின் கைகளில் தங்களை விற்றுப்போட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு கீழ்ப்படியாதவர்களாகி, அவருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள். அவர்கள் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தைத் தங்களுக்குப் புறம்பே எறிந்துவிட்டார்கள். கர்த்தரிடத்தில் திருப்பும்படி அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்ட கர்த்தருடைய தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோட்டு, கோபமூட்டுகிற பெரிய அக்கிரமங்களைச் செய்தார்கள் (நெகே 9:26).

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களினாலும் அக்கிரமங்களினாலும் கர்த்தருக்கு கோபமூட்டினார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களை நெருக்குகிற அவர்கள் சத்துருக்களின் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்தார்; அவர்கள் நெருக்கம் அநுபவிக்கிற காலத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். அப்போது, கர்த்தர் பரலோகத்திலிருந்து கேட்டு, தம்முடைய மிகுந்த இரக்கத்தினால் அவர்களை சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கிவிடுகிற இரட்சகர்களை அவர்களுக்குக் கொடுத்தார் (நெகே 9:27).

நியாயாதிபதிகளின் காலத்தில் ஏராளமான சத்துருக்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக வந்து அவர்களை ஒடுக்கினார்கள். கர்த்தர் அந்தக் காலங்களில், அவர்கள் மத்தியிலே நியாயாதிபதிகளை எழுப்பினார். அவர்கள் இஸ்ரவேல் புத்திரரை அவர்களுடைய சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி விடுவித்தார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இரட்சகர்களைக் கொடுத்திருக்கவில்லையென்றால், அவர்கள் அந்தக்காலத்திலே மொத்தமாக அழிந்துபோயிருப்பார்கள். அழிவின் விழிம்பில் இருந்த இஸ்ரவேல் புத்திரரை, கர்த்தர் தம்முடைய மகாபெரிய தயவினாலும் இரக்கத்தினாலும் பாதுகாத்தார். அவர்களை அழிவுக்கு தப்புவித்தார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு கீழ்ப்படியாதவர்களானார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். அவர்கள் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை தங்களுக்கு புறம்பே எரிந்துவிட்டார்கள். அவர்களை தம்முடைய நியாயப்பிரமாணத்திற்கு திருப்ப, கர்த்தர் அவர்களை திடசாட்சியாய் கடிந்துகொண்டார்.

இஸ்ரவேல் ஜனத்தாரை கர்த்தரிடத்தில் திரும்பும்படி அவருடைய தீர்க்கதரிசிகளும் அவர்களை திடசாட்சியாய்க் கடிந்துகொண்டார்கள். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ தங்களைக் கடிந்துகொண்ட கர்த்தருடைய தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோட்டார்கள். இதனால் கர்த்தருக்கு கோபமூட்டுகிற பெரிய அக்கிரமங்களை செய்தார்கள்.

தங்களுக்கு இளைப்பாறுதல் உண்டானபோதோ, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு முன்பாக மறுபடியும் பொல்லாப்புச் செய்யத் தொடங்கினார்கள்; ஆகையால், அவர்கள் சத்துருக்கள் அவர்களை ஆளும்படிக்கு, கர்த்தர் அவர்களை அவர்களுடைய சத்துருக்கள் கையிலே ஒப்புவித்தார்; அவர்கள் மனந்திரும்பி, கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள். அப்போது கர்த்தர் பரலோகத்திலிருந்துகேட்டு, அவர்களை தம்முடைய இரக்கங்களின்படியே அநேகந்தரம் விடுதலையாக்கிவிட்டார் (நெகே 9:28).

கர்த்தர் அவர்களை தம்முடைய நியாயப்பிரமாணத்துக்குத் திருப்ப அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டார்; ஆனாலும் அவர்கள் அகங்காரங்கொண்டு, கர்த்தருடைய கற்பனைகளுக்குச் செவிகொடாமல், போனார்கள். அவர்கள் கீழ்ப்படிந்து நடக்கிற மனுஷன் செய்து பிழைக்கிற கர்த்தருடைய நீதி நியாயங்களுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தார்கள். தங்கள் தோளை முரண்டுத்தனமாய் விலக்கி, செவிகொடாமல், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்திக்கொண்டார்கள் (நெகே 9:29).

தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும் என்னும் எண்ணம் இஸ்ரவேல் புத்திரருடைய மனதில் இல்லை. அவர்களுடைய பாவங்களும் அக்கிரமங்களும் அதிகமாயிருக்கிறது. கர்த்தர் தங்களுக்கு இதுவரையிலும் செய்த நன்மைகளை மறந்துவிட்டு, அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக தொடர்ந்து பாவம் செய்தார்கள். அவர்களை திடசாட்சியாய்க் கடிந்துகொண்ட தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கும் அவர்கள் செவிகொடுக்கவில்லை.

தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய ஆவியானவரால் பேசுகிறார்கள். "உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துக் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்" (1பேது 1:10,11).

கர்த்தர் அநேக வருஷமாக அவர்கள் மேல் பொறுமையாயிருந்தார். கர்த்தர் தம்முடைய ஆவியினால் பேசின தீர்க்கதரிசிகளைக்கொண்டு அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டார். ஆனாலும், அவர்கள் செவிகொடாத படியினாலே, அவர்களை அந்நிய தேசஜனங்களின் கையில் ஒப்புக்கொடுத்தார் (நெகே 9:30).

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு வந்த தண்டனைக்கு அவர்களுடைய பாவங்களே காரணம். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்று கர்த்தர் பொறுமையோடு காத்திருந்தார். ஆனால் அவர்களோ மனந்திரும்பவில்லை. கர்த்தர் அவர்களைத் தண்டித்தாலும், அவர்களை மொத்தமாக அழிந்துவிடவில்லை.

கர்த்தர் தம்முடைய மிகுந்த இரக்கங்களின்படியே, அவர்களை நிர்மூலமாக்காமலும் அவர்களை கைவிடாமலும் இருந்தார்; கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ள தேவன் (நெகே 9:30,31).

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தாவீது ஆகியோரோடு கர்த்தர் நித்திய உடன்படிக்கை செய்திருக்கிறார். தம்முடைய உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காகவும், இஸ்ரவேலை ஒரு தேசமாகப் பாதுகாப்பதற்காகவும், கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை முழுவதுமாக நிர்மூலமாக்காமல் தம்முடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அவர்களில் சிலரை மீதியாக வைத்திருக்கிறார்.

பாவ அறிக்கை
நெகே 9:32-35

நெகே 9:32. இப்பொழுதும் உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற வல்லமையும் பயங்கரமுமுள்ள மகா தேவனாகிய எங்கள் தேவனே, அசீரியா ராஜாக்களின் நாட்கள் முதற்கொண்டு இந்நாள்வரைக்கும் எங்களுக்கும், எங்கள் ராஜாக்களுக்கும், எங்கள் பிரபுக்களுக்கும், எங்கள் ஆசாரியர்களுக்கும், எங்கள் தீர்க்கதரிசிகளுக்கும், எங்கள் பிதாக்களுக்கும், உம்முடைய ஜனங்கள் அனைவருக்கும் நேரிட்ட சகல வருத்தமும் உமக்கு முன்பாக அற்பமாய்க் காணப்படாதிருப்பதாக.

நெகே 9:33. எங்களுக்கு நேரிடப்பண்ணின எல்லாவற்றிலும் நீர் நீதியுள்ளவர்; நீர் உண்மையாய் நடப்பித்தீர்; நாங்களோ ஆகாமியம்பண்ணினோம்.

நெகே 9:34. எங்கள் ராஜாக்களும், எங்கள் பிரபுக்களும், எங்கள் ஆசாரியர்களும், எங்கள் பிதாக்களும், உம்முடைய நியாயப்பிரமாணத்தின்படி செய்யாமலும், உம்முடைய கற்பனைகளையும், நீர் அவர்களைக் கடிந்துகொண்ட உம்முடைய சாட்சிகளையும் கவனியாமலும் போனார்கள்.

நெகே 9:35. அவர்கள் தங்கள் ராஜ்யத்திலும், நீர் அவர்களுக்குக் கொடுத்த உம்முடைய பெரிய தயையிலும், நீர் அவர்களுக்கு முன்பாகத் திறந்துவைத்த விசாலமும் செழிப்புமான தேசத்திலும் உமக்கு ஊழியஞ்செய்யாமலும், தங்கள் துர்க்கருமங்களை விட்டுத் திரும்பாமலும் போனார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பாவங்களையும், தங்கள் முன்னோர்களுடைய பாவங்களையும் கர்த்தருடைய சமுகத்திலே அறிக்கை பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர், தங்களுடைய முற்பிதாக்களின் பாவங்களைப்பற்றி அறிக்கை செய்தபோது, "எங்கள் பிதாக்களாகிய அவர்களோ அகங்காரமாய் நடந்து, தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி, உம்முடைய கற்பனைகளுக்குச் செவிகொடாதே போனார்கள்" (நெகே 9:16) என்று சொன்னார்கள்.

மனுஷருடைய அகந்தையும், அகங்காரமும், அவர்களுடைய கீழ்ப்படியாமைக்கும், அவர்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போவதற்கும் அடிப்படை காரணமாயிருக்கிறது. மனுஷர் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும். அவருடைய தெய்வீக பராமரிப்புக்களை பயபக்தியோடு பயன்படுத்த வேண்டும். கர்த்தருக்கு கீழ்ப்படியவில்லையென்றால், அவருடைய ஆசீர்வாதங்களை எதிர்பார்க்க முடியாது.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, அவர்கள் கர்த்தருக்கு செவிகொடுக்க மனதில்லாதிருந்தார்கள். கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால், இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். ஆனால் விடுவிக்கப்பட்ட இஸ்ரவேல் புத்திரரோ, மறுபடியும் எகிப்து தேசத்திற்கு போகவேண்டும் என்று ஆசைப்பட்டார்கள்.

கர்த்தர் வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரருடைய வாய்க்கு தம்முடைய மன்னாவை அருளினார். அவர்கள் தாகத்திற்கு தண்ணீரைக் கொடுத்தார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய மன்னாவில் திருப்தியடையாமல், எகிப்து தேசத்தின் வெங்காயங்கள்மீதும், வெள்ளைப்பூடுகள்மீதும், கொம்மட்டிக்காய்கள்மீதும் ஆசைப்பட்டார்கள். அவர்கள் மறுபடியும் எகிப்தியரின் அடிமை நுகத்திற்கு தங்களை உட்படுத்த ஆயத்தமாயிருந்தார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு மகிமையான விடுதலையைக் கொடுத்தார். அவர்கள் விடுதலை பெற்றாலும், கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ கர்த்தருடைய பிரமாணத்திற்கும், கற்பனைகளுக்கும் கீழ்ப்படிய பிரியமில்லாதவர்களாயிருந்தார்கள்.

அவர்கள் வார்ப்பிக்கப்பட்ட ஒரு கன்றுக்குட்டியைத் தங்களுக்கு உண்டாக்கினார்கள். அந்தக் கன்றுக்குட்டி தங்களை எகிப்திலிருந்து கொண்டுவந்த தங்கள் தெய்வம் என்று சொல்லி, கோபமூட்டத்தக்க பெரிய அக்கிரமங்களைச் செய்தார்கள் (நெகே 9:18).

கர்த்தர் தம்முடைய கிருபையினாலும், தம்முடைய மனஉருக்கத்தினாலும், அவர்களை வனாந்தரத்திலே கைவிடவில்லை. அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தார். அவர்களும் தேசத்தை சுதந்தரித்துக்கொண்டார்கள். அவர்கள் கானான் தேசத்திலே கர்த்தருடைய பெரிய தயையினால் செல்வமாய் வாழ்ந்தார்கள்.

அவர்களுக்கு இளைப்பாறுதல் உண்டானபோதோ, அவர்கள் கர்த்தருக்கு முன்பாக மறுபடியும் பொல்லாப்பு செய்ய தொடங்கினார்கள்.

ஆகையால், அவர்கள் சத்துருக்கள் அவர்களை ஆளும்படிக்கு, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை, அவர்களுடைய சத்துருக்கள் கையிலே ஒப்புவித்தார்; அவர்கள் மனந்திரும்பி, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். அப்போது கர்த்தர் பரலோகத்திலிருந்துகேட்டு, அவர்களை தம்முடைய இரக்கங்களின்படியே அநேகந்தரம் விடுதலையாக்கிவிட்டார் (நெகே 9:28).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சமுகத்திலே தங்களுடைய பாவங்களையும், தங்கள் முன்னோர்களின் பாவங்களையும் அறிக்கை பண்ணுகிறார்கள்.

அவர்கள் கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, "உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற வல்லமையும் பயங்கரமுமுள்ள மகா தேவனாகிய எங்கள் தேவனே" (நெகே 9:32) என்று சொல்லுகிறார்கள்.

அசீரியா ராஜாக்களின் நாட்கள் முதற்கொண்டு இந்நாள்வரைக்கும் தங்களுக்கும், தங்கள் ராஜாக்களுக்கும், தங்கள் பிரபுக்களுக்கும், தங்கள் ஆசாரியர்களுக்கும், தங்கள் தீர்க்கதரிசிகளுக்கும், தங்கள் பிதாக்களுக்கும், தங்கள் ஜனங்கள் அனைவருக்கும் நேரிட்ட சகல வருத்தமும் கர்த்தருக்கு முன்பாக அற்பமாய்க் காணப்படாதிருப்பதாக என்று இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சமுகத்திலே பணிவோடு சொல்லுகிறார்கள்.

தங்களுக்கு நேரிடப்பண்ணின எல்லாவற்றிலும் கர்த்தர் நீதியுள்ளவர் என்றும், கர்த்தர் எல்லா காரியங்களையும் உண்மையாய் நடப்பித்தார் என்றும், தாங்களோ ஆகாமியம்பண்ணினதாகவும் இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சமுகத்திலே, தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்கிறார்கள் (நெகே 9:33).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் தங்களுடைய பாவங்களையும், தங்கள் முன்னோர்களின் பாவங்களையும், தாங்கள் அனுபவிக்கிற பாடுகளையும், அதற்கான காரணங்களையும் பற்றிச் சொல்லும்போது, அவர்கள் இரண்டு காரியங்களை அறிக்கை செய்கிறார்கள். அவையாவன : 1. அவர்கள் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை அசட்டை செய்தார்கள். 2. அவர்கள் கர்த்தர் கொடுத்த கானான் தேசத்தை அசட்டை செய்தார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சமுகத்திலே, தங்கள் முற்பிதாக்களின் பாவங்களை அறிக்கை பண்ணும்போது, "எங்கள் ராஜாக்களும், எங்கள் பிரபுக்களும், எங்கள் ஆசாரியர்களும், எங்கள் பிதாக்களும், உம்முடைய நியாயப்பிரமாணத்தின்படி செய்யாமலும், உம்முடைய கற்பனைகளையும், நீர் அவர்களைக் கடிந்துகொண்ட உம்முடைய சாட்சிகளையும் கவனியாமலும் போனார்கள்" (நெகே 9:34) என்று சொல்லி ஜெபம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய முற்பிதாக்களின் பாவங்களைப்பற்றி கர்த்தரிடத்தில் மேலும் சொல்லும்போது, "அவர்கள் தங்கள் ராஜ்யத்திலும், நீர் அவர்களுக்குக் கொடுத்த உம்முடைய பெரிய தயையிலும், நீர் அவர்களுக்கு முன்பாகத் திறந்துவைத்த விசாலமும் செழிப்புமான தேசத்திலும் உமக்கு ஊழியஞ்செய்யாமலும், தங்கள் துர்க்கருமங்களை விட்டுத் திரும்பாமலும் போனார்கள்" (நெகே 9:35) என்றும் சொல்லுகிறார்கள்.

உறுதியான உடன்படிக்கை
நெகே 9:36-38

நெகே 9:36. இதோ, இன்றையதினம் நாங்கள் அடிமைகளாயிருக்கிறோம்; இதோ, பலனையும் நன்மையையும் அனுபவிக்கும்படி நீர் எங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த இந்தத் தேசத்தில்தானே நாங்கள் அடிமைகளாயிருக்கிறோம்.

நெகே 9:37. அதின்வருமானம் எங்கள் பாவங்களினிமித்தம் நீர் எங்கள்மேல் வைத்த ராஜாக்களுக்குத் திரளாகப்போகிறது; அவர்கள் தங்களுக்கு இஷ்டமானபடியே எங்கள் சரீரங்களையும் எங்கள் மிருகஜீவன்களையும் ஆளுகிறார்கள்; நாங்கள் மகா இக்கட்டில் அகப்பட்டிருக்கிறோம்.

நெகே 9:38. இவையெல்லாம் இப்படி இருக்கிறபடியால், நாங்கள் உறுதியான உடன்படிக்கைபண்ணி அதை எழுதிவைக்கிறோம்; எங்கள் பிரபுக்களும், எங்கள் லேவியரும், எங்கள் ஆசாரியரும் அதற்கு முத்திரைபோடுவார்கள் என்றார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். அவர்கள் அந்த தேசத்திலே நன்மையை அனுபவிக்கவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ, கர்த்தர் தங்களுக்கு கிருபையாகக் கொடுத்த கானான் தேசத்திலே அடிமைகளாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சமுகத்திலே மிகுந்த மனவேதனையோடு, தங்களுடைய துக்கங்களையும், நெருக்கங்களையும், பாடுகளையும், வேதனைகளையும் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சமுகத்திலே, "இதோ, இன்றையதினம் நாங்கள் அடிமைகளாயிருக்கிறோம்; இதோ, பலனையும் நன்மையையும் அனுபவிக்கும்படி நீர் எங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த இந்தத் தேசத்தில்தானே நாங்கள் அடிமைகளாயிருக்கிறோம்" (நெகே 9:36) என்று தங்களுடைய வேதனைகளை வருத்தத்தோடு சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரை அடிமைப்படுத்தி உபத்திரவப்படுத்த வேண்டுமென்பது கர்த்தருடைய சித்தமல்ல. அவர்கள் தங்களுடைய பாவங்களின் நிமித்தமாக அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்குப் போனார்கள்.

தங்களுக்கு வந்த பிரச்சனைகளுக்கு என்ன காரணம் என்பதை லேவியரும், கோத்திரத்துப் பிதாக்களும் புரிந்து கொள்கிறார்கள். தங்களுடைய தோல்விகளுக்கும், சாபங்களுக்கும் தங்களுடைய பாவங்களே காரணமென்று இஸ்ரவேல் புத்திரர் அங்கிகரிக்கிறார்கள்.

தங்கள் சொந்த தேசத்தில் கர்த்தரை சேவிக்காத ஜனங்கள், அந்நிய தேசத்திலே தங்கள் சத்துருக்களை சேவிப்பார்கள்.

"சகலமும் பரிபூரணமாயிருக்கையில், நீ மனமகிழ்ச்சியோடும் களிப்போடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவியாமற்போனதினிமித்தம், சகலமும் குறைவுபட்டு, பட்டினியோடும் தாகத்தோடும் நிர்வாணத்தோடும், கர்த்தர் உனக்கு விரோதமாய் அனுப்பும் சத்துருக்களைச் சேவிப்பாய்; அவர்கள் உன்னை அழித்துத் தீருமட்டும், இரும்பு நுகத்தடியை உன் கழுத்தின்மேல் போடுவார்கள்" (உபா 28:47,48).

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் சொந்த தேசத்திலே கர்த்தரை சேவியாமல், அந்நிய தெய்வங்களை சேவித்தார்கள். இதனால் கர்த்தர் அவர்களை பாபிலோன் தேசத்தாருடைய கைகளிலே ஒப்புக்கொடுத்தார். கர்த்தரை சேவியாத இஸ்ரவேல் ஜனத்தார், கல்தேயரை சேவித்தார்கள்.

கர்த்தர் தம்முடைய பெரிதான கிருபையினால், இஸ்ரவேல் ஜனத்தாரை பாபிலோன் தேசத்து அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்திருக்கிறார். பெர்சியா தேசத்தார் இஸ்ரவேல் ஜனத்தாரை விடுதலை செய்து, அவர்களை யூதாதேசத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். யூதர்கள் இப்போது யூதாதேசத்திலே இருக்கிறார்கள். யூதர்களுக்கு தனியாக ராஜா இல்லை. அவர்கள் தங்கள் சொந்த தேசத்திலிருந்தாலும், பெர்சியா தேசத்து ராஜாவின் ஆளுகைக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கிறார்கள்.

கானான் தேசத்தின் வருமானம், இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களினிமித்தம், கர்த்தர் அவர்கள்மேல் வைத்த ராஜாக்களுக்குத் திரளாகப்போகிறது; அவர்கள் தங்களுக்கு இஷ்டமானபடியே யூதர்களுடைய சரீரங்களையும், அவர்களுடைய மிருக ஜீவன்களையும் ஆளுகிறார்கள்; இஸ்ரவேல் ஜனத்தார் மகா இக்கட்டில் அகப்பட்டிருக்கிறார்கள் (நெகே 9:37).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல், அவருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணுவது புதிய காரியமல்ல. அவர்கள் ஏற்கெனவே பல சந்தர்ப்பங்களில், கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார்கள். கர்த்தரும் அவர்களைத் தண்டிக்கும் வண்ணமாக, அவர்களை நெருக்குகிற அவர்களுடைய சத்துருக்களின் கையில் பல சமயங்களில் ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

அவர்கள் நெருக்கம் அநுபவிக்கிற காலத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவார்கள். கர்த்தர் பரலோகத்திலிருந்து கேட்டு, தம்முடைய மிகுந்த இரக்கத்தினால் அவர்களை சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கிவிடுகிற இரட்சகர்களை அவர்களுக்குக் கொடுப்பார் (நெகே 9:27).

இஸ்ரவேல் ஜனத்தார் நியாயாதிபதிகளின் காலத்தில் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களைத் தண்டித்தார். ஆனால் அவர்களோ, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. அவர்கள் மறுபடியும் மறுபடியுமாக கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். கர்த்தரும் அவர்களை மறுபடியுமாக, அவர்களுடைய சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுத்தார். சத்துருக்கள் அவர்களை மறுபடியும் அதிகமாய் நெருக்கினார்கள்.

இன்றையதினம், இஸ்ரவேல் ஜனத்தார் அடிமைகளாயிருக்கிறார்கள். சுயாதீனமாகப் பிறந்த இஸ்ரவேலர்கள் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்தார். ஆனால் அந்த தேசத்தின் வருமானத்தை அவர்களால் அனுபவிக்க முடியவில்லை. அதன் வருமானம் பெர்சியா தேசத்து ராஜாக்களுக்கு திரளாய்ப்போகிறது. யூதாதேசம் பெர்சியா தேசத்திற்கு கீழ்ப்பட்ட தேசமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் இப்போது கர்த்தருக்கு முன்பாக தங்கள் தோளை முரட்டுத்தனமாய் விலக்கவில்லை. அவர்கள் தங்கள் கழுத்தைக் கடினப்படுத்திக் கொள்ளவில்லை. கர்த்தருக்கு விரோதமாக தாங்கள் செய்த பாவங்களை அவர்கள் அங்கீகரிக்கிறார்கள். தங்கள் தேசத்தின் வருமானம், தங்கள் பாவங்களினிமித்தம், பெர்சியா தேசத்து ராஜாக்களுக்கு போகிறது என்று இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்கள். தாங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கு, தங்களுடைய பாவங்களே காரணம் என்பதை இஸ்ரவேல் புத்திரர் அங்கீகரிக்கிறார்கள்.

பெர்சியா தேசத்து ராஜாக்கள், தங்களுக்கு இஷ்டமானபடியே இஸ்ரவேல் புத்திரருடைய சரீரங்களையும் அவர்களுடைய மிருக ஜீவன்களையும் ஆளுகிறார்கள்; இஸ்ரவேல் புத்திரர் மகா இக்கட்டில் அகப்பட்டிருக்கிறார்கள்.

தாங்கள் அனுபவிக்கும் பாடுகளும், வேதனைகளும், இக்கட்டுகளும், சத்துருக்கள் தங்களை ஒடுக்குவதும் கர்த்தருடைய பார்வையிலே அற்பமாய்க் காணப்படக்கூடாது என்று இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி, "இப்பொழுதும் உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற வல்லமையும் பயங்கரமுமுள்ள மகா தேவனாகிய எங்கள் தேவனே, அசீரியா ராஜாக்களின் நாட்கள் முதற்கொண்டு இந்நாள்வரைக்கும் எங்களுக்கும், எங்கள் ராஜாக்களுக்கும், எங்கள் பிரபுக்களுக்கும், எங்கள் ஆசாரியர்களுக்கும், எங்கள் தீர்க்கதரிசிகளுக்கும், எங்கள் பிதாக்களுக்கும், உம்முடைய ஜனங்கள் அனைவருக்கும் நேரிட்ட சகல வருத்தமும் உமக்கு முன்பாக அற்பமாய்க் காணப்படாதிருப்பதாக" (நெகே 9:32) என்று பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சமுகத்தில் நீண்ட ஜெபத்தை ஏறெடுத்தாலும், இந்தக் காரியத்தை மாத்திரமே, அவர்கள் கர்த்தரிடத்தில் விண்ணப்பமாகச் சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் தேசம் முழுவதும் இக்கட்டு வந்திருக்கிறது. அவர்களுடைய ராஜாக்களும், பிரபுக்களும், ஆசாரியர்களும், பிதாக்களும், யூதாஜனங்கள் அனைவரும் இக்கட்டுகளையும், வேதனைகளையும் அனுபவிக்கிறார்கள்.

தங்கள் இக்கட்டுக்கு தங்களுடைய பாவங்களே காரணம் என்பதையும் இஸ்ரவேல் புத்திரர் அங்கீகரிக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்திலே எல்லோரும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். ஆகையினால் இக்கட்டு எல்லோருக்கும் வந்தது.

இஸ்ரவேல் ஜனத்தார் யூதாதேசத்தின் மொத்த பாவத்தையும் கர்த்தருடைய சமுகத்திலே அறிக்கையிடும்போது, "எங்கள் ராஜாக்களும், எங்கள் பிரபுக்களும், எங்கள் ஆசாரியர்களும், எங்கள் பிதாக்களும், உம்முடைய நியாயப்பிரமாணத்தின்படி செய்யாமலும், உம்முடைய கற்பனைகளையும், நீர் அவர்களைக் கடிந்துகொண்ட உம்முடைய சாட்சிகளையும் கவனியாமலும் போனார்கள்" (நெகே 9:34) என்று சொல்லுகிறார்கள்.

எல்லோரும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை எல்லோரும் பகிர்ந்துகொள்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு இக்கட்டுக்கள் நீண்டகாலமாக இருக்கிறது. அசீரியா ராஜாக்களின் நாட்கள் முதற்கொண்டு, இந்நாள் வரைக்கும் அவர்கள் வருத்தங்களை அனுபவிக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் அனுபவிக்கிற வருத்தங்களை, கர்த்தர் அற்பமாய் எண்ணிவிடக்கூடாது என்றும், கர்த்தர் தமது கிருபையினால் தங்களுக்கு இரக்கம் காண்பித்து, தங்களுடைய வருத்தங்களை அகற்றிப்போடவேண்டும் என்றும், இஸ்ரவேல் புத்திரர் விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் வருத்தங்களையும் வேதனைகளையும், இக்கட்டுகளையும் அனுபவித்தாலும், அவர்கள் கர்த்தரை குறை சொல்லவில்லை. "எங்களுக்கு நேரிடப்பண்ணின எல்லாவற்றிலும் நீர் நீதியுள்ளவர்; நீர் உண்மையாய் நடப்பித்தீர்; நாங்களோ ஆகாமியம்பண்ணினோம்" (நெகே 9:33) என்று சொல்லி, அவர்கள் கர்த்தருடைய கிரியைகளையும், நீதியையும் நியாயப்படுத்துகிறார்கள்.

கர்த்தர் தங்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று சொல்லும் தகுதி தங்களிடத்தில் இல்லை என்பதை இஸ்ரவேல் ஜனத்தார் உணர்ந்திருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் கர்த்தருடைய கிருபைக்கும், தயவுள்ள சித்தத்திற்கும் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் நீண்ட ஜெபத்தை ஏறெடுத்துவிட்டு, ஜெபத்தின் முடிவிலே, "இவையெல்லாம் இப்படி இருக்கிறபடியால், நாங்கள் உறுதியான உடன்படிக்கைபண்ணி அதை எழுதிவைக்கிறோம்; எங்கள் பிரபுக்களும், எங்கள் லேவியரும், எங்கள் ஆசாரியரும் அதற்கு முத்திரைபோடுவார்கள்" (நெகே 9:38) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பல சந்தர்ப்பங்களில் கர்த்தரை விட்டு விலகிப்போயிருக்கிறார்கள். இனிமேல் கர்த்தரை விட்டு விலகிப்போகக்கூடாது என்று அவர்கள் தீர்மானம்பண்ணுகிறார்கள். இதற்காக அவர்கள் கர்த்தரிடத்தில் உறுதியான உடன்படிக்கை பண்ணுகிறார்கள். இந்த உறுதியான உடன்படிக்கையில், இஸ்ரவேல் ஜனத்தாருடைய பிரபுக்களும், லேவியரும், ஆசாரியரும் முத்திரை போடுகிறார்கள். இவர்கள் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே பிரதானமானவர்கள். இவர்கள் இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருடைய சார்பாகவும், உறுதியான உடன்படிக்கையிலே முத்திரைபோடுகிறார்கள்.

10 அதிகாரம்

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சமுகத்திலே உறுதியான உடன்படிக்கை பண்ணி, அதற்கு முத்திரைபோடுகிறார்கள். அந்த உடன்படிக்கையில் முத்திரை போட்டவர்களின் பெயர்கள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது (நெகே 10:1-27). உடன்படிக்கையின் ஷரத்துக்களைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது (நெகே 10:28-31). இஸ்ரவேல் ஜனத்தார் ஒரு சில காரியங்களை திட்டம்பண்ணுகிறார்கள். அதன் விவரமும் இந்தவசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது (நெகே 10:32-39).

முத்திரை போட்டவர்கள் நெகே 10:1-27

நெகே 10:1. முத்திரை போட்டவர்கள் யாரென்றால்: அகலியாவின் குமாரனாகிய திர்ஷாதா என்னும் நெகேமியா, சிதேகியா,

நெகே 10:2. செராயா, அசரியா, எரேமியா,

நெகே 10:3. பஸ்கூர், அமரியா, மல்கிஜா,

நெகே 10:4. அத்தூஸ், செபனியா, மல்லூக்,

நெகே 10:5. ஆரீம், மெரேமோத், ஒபதியா,

நெகே 10:6. தானியேல், கிநேதோன், பாருக்,

நெகே 10:7. மெசுல்லாம், அபியா, மீயாமின்,

நெகே 10:8. மாசியா, பில்காய், செமாயா என்னும் ஆசாரியர்களும்,

நெகே 10:9. லேவியராகிய அசனியாவின் குமாரன் யெசுவா, எனாதாதின் குமாரரில் ஒருவனாகிய பின்னூயி, கத்மியேல் என்பவர்களும்,

நெகே 10:10. அவர்கள் சகோதரராகிய செபனியா, ஒதியா, கேலிதா, பெலாயா, ஆனான்,

நெகே 10:11. மீகா, ரேகாப், அசபியா,

நெகே 10:12. சக்கூர், செரெபியா, செபனியா,

நெகே 10:13. ஒதியா, பானி, பெனினு என்பவர்களும்,

நெகே 10:14. ஜனத்தின் தலைவராகிய பாரோஷ், பாகாத்மோவாப், ஏலாம், சத்தூ, பானி,

நெகே 10:15. புன்னி, அஸ்காத், பெபாயி,

நெகே 10:16. அதோனியா, பிக்வாய், ஆதின்,

நெகே 10:17. ஆதேர், இஸ்கியா, அசூர்,

நெகே 10:18. ஒதியா, ஆசூம், பெத்சாய்,

நெகே 10:19. ஆரீப், ஆனதோத், நெபாய்,

நெகே 10:20. மக்பியாஸ், மெசுல்லாம், ஏசீர்,

நெகே 10:21. மெஷெசாபெயேல், சாதோக், யதுவா,

நெகே 10:22. பெலத்தியா, ஆனான், ஆனாயா,

நெகே 10:23. ஓசெயா, அனனியா, அசூப்,

நெகே 10:24. அல்லோகேஸ், பில்கா, சோபேக்,

நெகே 10:25. ரேகூம், அஷபனா, மாசெயா,

நெகே 10:26. அகியா, கானான், ஆனான்,

நெகே 10:27. மல்லூக், ஆரீம், பானா என்பவர்களுமே.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடு முதன்முதலாக உடன்படிக்கை பண்ணியபோது, பலிசெலுத்தி, அதன் இரத்தத்தை தெளித்து, உடன்படிக்கையை உறுதிபண்ணினார்கள் (யாத் 24-ஆவது அதிகாரம்).

இப்போது இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரோடு உறுதியான உடன்படிக்கை பண்ணுகிறார்கள். ஆனால் இங்கு பலிசெலுத்தப்படவில்லை. இரத்தம் தெளிக்கப்படவில்லை. அதற்கு பதிலாக உடன்படிக்கையின் ஷரத்துக்களை ஒரு ஆவணமாக எழுதி அதிலே முத்திரையிட்டு தங்கள் கையெழுத்துக்களைப் போடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் பிரபுக்களும், லேவியரும், ஆசாரியரும் உடன்படிக்கை பத்திரத்தில் முத்திரை போடுகிறார்கள். இவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தலைவர்களாயிருக்கிறவர்கள். இவர்கள் ஒருவேளை இஸ்ரவேல் புத்திரருடைய குடும்பத்தலைவர்களாகவும், கோத்திரத்தலைவர்களாகவும் இருக்கலாம்.

யூதாதேசத்தின் அதிபதியாகிய நெகேமியா இந்த உடன்படிக்கையில் முதலாவது நபராக முத்திரைபோடுகிறார். அதன் பின்பு இருபத்திரண்டு ஆசாரியர்கள் உடன்படிக்கையில் முத்திரைபோடுகிறார்கள். ஆசாரியருக்கு பின்பு பதினேழு லேவியர்கள் இந்த உடன்படிக்கையில் முத்திரைபோடுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணியபோது, இந்த லேவியர்களில் அநேகர் ஜெபத்தை வழிநடத்தினவர்கள் (நெகே 9:4,5). ஜெபத்தை வழிநடத்துகிறவர்கள் மற்ற நல்ல காரியங்களிலும் முன்மாதிரியாயிருக்க வேண்டும்.

லேவியருக்கு பின்பு யூதாஜனத்தின் தலைவர்களில் நாற்பத்திநான்கு பேர் முத்திரையிடுகிறார்கள். இவர்கள் தங்களுக்காகவும், தங்களோடு கூடயிருக்கிற யூதாஜனங்களுக்காகவும் முத்திரையிடுகிறார்கள்.

ஆணையிட்டு பிரமாணம் பண்ணியவர்கள் நெகே 10:28-31

நெகே 10:28. ஜனங்களில் மற்றவர்களாகிய ஆசாரியரும், லேவியரும், வாசல் காவலாளரும், பாடகரும், நிதனீமியரும், தேசங்களின் ஜனங்களைவிட்டுப் பிரிந்து விலகி தேவனுடைய நியாயப் பிரமாணத்துக்குத் திரும்பின அனைவரும், அவர்கள் மனைவிகளும், அவர்கள் குமாரரும், அவர்கள் குமாரத்திகளுமாகிய அறிவும் புத்தியும் உள்ளவர்களெல்லாரும்,

நெகே 10:29. தங்களுக்குப் பெரியவர்களாகிய தங்கள் சகோதரரோடே கூடிக்கொண்டு: தேவனுடைய தாசனாகிய மோசேயைக் கொண்டு கொடுக்கப்பட்ட தேவனுடைய நியாயப் பிரமாணத்தின்படி நடந்துகொள்வோம் என்றும், எங்கள் ஆண்டவராகிய கர்த்தரின் கற்பனைகளையும் சகல நீதிநியாயங்களையும், கட்டளைகளையும் எல்லாம் கைக்கொண்டு, அவைகளின்படி செய்வோம் என்றும்,

நெகே 10:30. நாங்கள் எங்கள் குமாரத்திகளை தேசத்தின் ஜனங்களுக்குக் கொடாமலும், எங்கள் குமாருக்கு அவர்கள் குமாரத்திகளைக் கொள்ளாமலும் இருப்போம் என்றும்,

நெகே 10:31. தேசத்தின் ஜனங்கள் ஓய்வு நாளிலே சரக்குகளையும், எந்தவிதத் தானியதவசத்தையும் விற்கிறதற்குக் கொண்டுவந்தால், நாங்கள் அதைஓய்வு நாளிலும் பரிசுத்தநாளிலும் அவர்கள் கையில் கொள்ளாதிருப்போம் என்றும், நாங்கள் ஏழாம் வருஷத்தை விடுதலை வருஷமாக்கிச் சகல கடன்களையும் விட்டுவிடுவோம் என்றும் ஆணையிட்டுப் பிரமாணம் பண்ணினார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாரில் அநேகர் உடன்படிக்கையில் முத்திரைபோடுகிறார்கள். உடன்படிக்கையில் முத்திரைபோடாத மற்ற ஜனங்கள் அநேகர் இருக்கிறார்கள்.

ஜனங்களில் மற்றவர்களாகிய ஆசாரியரும், லேவியரும், வாசல் காவலாளரும், பாடகரும், நிதனீமியரும், தேசங்களின் ஜனங்களைவிட்டுப் பிரிந்து விலகி தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குத் திரும்பின அனைவரும், அவர்கள் மனைவிகளும், அவர்கள் குமாரரும், அவர்கள் குமாரத்திகளுமாகிய அறிவும் புத்தியும் உள்ளவர்களெல்லாரும், தங்களுக்குப் பெரியவர்களாகிய தங்கள் சகோதரரோடே கூடிக்கொண்டு, அவர்களோடுகூட உறுதியான உடன்படிக்கைக்கு கீழ்ப்படிவதாக ஆணையிட்டு பிரமாணம் பண்ணுகிறார்கள் (நெகே 10:28,29).

ஆசாரியரும், லேவியரும், வாசல் காவலாளரும், பாடகரும், நிதனீமியரும் ஆணையிட்டு பிரமாணம் பண்ணும்போது, அவர்களுடைய மனைவிகளும், அவர்களுடைய குமாரரும், அவர்களுடைய குமாரத்திகளும், அவர்களோடு சேர்ந்து ஆணையிட்டு பிரமாணம் பண்ணுகிறார்கள்.

தேசங்களின் ஜனங்களை விட்டுப் பிரிந்து விலகி, தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு திரும்பினவர்கள், ஒரு காலத்தில் புறஜாதியாராயிருந்தவர்கள். இப்போது அவர்கள் யூதமார்க்கத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களும் ஆணையிட்டு பிரமாணம் பண்ணுகிறார்கள். கர்த்தருடைய நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதாக வாக்குப்பண்ணுகிறார்கள்.

யூதமார்க்கத்திற்கு திரும்பினவர்கள் உலகப்பிரகாரமான காரியங்களை விட்டுப் பிரிந்து விலகி வந்தவர்கள் அவர்கள் புறஜாதியாரின் பழக்க வழக்கங்களுக்கு விலகி, கர்த்தருக்கு பிரியமான பழக்க வழக்கங்களை ஏற்றுக்கொண்டவர்கள். கர்த்தருடைய ஜனமாகிய நாமோ உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், உலகத்தை விட்டுப் பிரிந்து விலகி, தேவனுக்கு பிரியமானவர்களாகவும், பிரயோஜனமானவர்களாகவும் ஜீவிக்க வேண்டும்.

யூதருக்கும், யூதமார்க்கத்தை ஏற்றுக்கொண்ட புறஜாதியாருக்கும் ஒரே பிரமாணமே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரே உடன்படிக்கையும், ஒரே ஞானஸ்நானமும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் யூதாதேசத்தில் பிறந்தவர்களாகயிருந்தாலும், அந்நிய தேசத்தில் பிறந்து கர்த்தரை ஏற்றுக்கொண்டவர்களாகயிருந்தாலும், அவர்கள் எல்லோருமே கர்த்தருடைய பிள்ளைகளாக இருக்கிறார்கள். கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை.

உடன்படிக்கையில் முத்திரைபோடாதவர்கள், தங்களுடைய விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும், வார்த்தையினால் ஆணையிட்டு பிரமாணம் பண்ணுகிறார்கள். அவர்கள் எல்லோரும் தங்களுக்கு பெரியவர்களாகிய தங்கள் சகோதரரோடே ஒருமனப்பட்டு கூடியிருக்கிறார்கள்.

முத்திரைபோடப்பட்ட உறுதியான உடன்படிக்கையின் ஷரத்துக்கள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் தேவையில்லாத பாரமான காரியங்களை தங்களைவிட்டு இறக்கி வைத்துவிடலாம். கர்த்தர் எதை எதிர்பார்க்கிறாரோ அதை மாத்திரம் ஜனங்கள் செய்தால் போதுமானது.

இஸ்ரவேல் ஜனத்தார் ஆணையிட்டு பிரமாணம் பண்ணின ஷரத்துக்களின் விவரம் வருமாறு:

1. தேவனுடைய தாசனாகிய மோசேயைக் கொண்டு கொடுக்கப்பட்ட தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி நடந்துகொள்வோம்

2. எங்கள் ஆண்டவராகிய கர்த்தரின் கற்பனைகளையும் சகல நீதிநியாயங்களையும், கட்டளைகளையும் எல்லாம் கைக்கொண்டு, அவைகளின்படி செய்வோம்.

3. நாங்கள் எங்கள் குமாரத்திகளை தேசத்தின் ஜனங்களுக்குக் கொடாமலும், எங்கள் குமாரருக்கு அவர்கள் குமாரத்திகளைக் கொள்ளாமலும் இருப்போம்.

4. தேசத்தின் ஜனங்கள் ஓய்வு நாளிலே சரக்குகளையும், எந்தவிதத் தானியதவசத்தையும் விற்கிறதற்குக் கொண்டுவந்தால், நாங்கள் அதை ஓய்வு நாளிலும் பரிசுத்தநாளிலும் அவர்கள் கையில் கொள்ளாதிருப்போம்.

5. நாங்கள் ஏழாம் வருஷத்தை விடுதலை வருஷமாக்கிச் சகல கடன்களையும் விட்டுவிடுவோம்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து ஜீவியத்தாலும், சிலரிடத்தில் கர்த்தருக்கு பிரியமில்லாத காரியங்களும் காணப்படுகிறது. அவர்கள் எந்தெந்த காரியங்களில் சோதிக்கப்படுகிறார்களோ, அந்தக் காரியங்களைக் குறித்து இங்கு ஆணையிட்டு பிரமாணம் பண்ணுகிறார்கள்.

திட்டம்பண்ணின காரியங்கள் நெகே 10:32-39

நெகே 10:32. மேலும்: நாங்கள் எங்கள் தேவனுடைய ஆலயத்தின் ஆராதனைக்காக சமுகத்தப்பங்களுக்கும், நித்திய போஜனபலிக்கும், ஓய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும் செலுத்தும் நித்திய சர்வாங்க தகனபலிகளுக்கும், பண்டிகைகளுக்கும், பிரதிஷ்டையான பொருள்களுக்கும், இஸ்ரவேலுக்காகப் பாவநிவிர்த்தி உண்டாக்கும் பலிகளுக்கும்,

நெகே 10:33. எங்கள் தேவனுடைய ஆலயத்தின் சகல வேலைக்கும், வருஷந்தோறும் நாங்கள் சேக்கலில் மூன்றில் ஒரு பங்கைக் கொடுப்போம் என்கிற கடனை எங்கள்மேல் ஏற்றுக்கொண்டோம்.

நெகே 10:34. நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடியே எங்கள் தேவனாகிய கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் எரிகிறதற்காக, குறிக்கப்பட்ட காலங்களில் வருஷாவருஷம் எங்கள் பிதாக்களுடைய குடும்பங்களின்படியே, எங்கள் தேவனுடைய ஆலயத்துக்குக் கொண்டுவரவேண்டிய விறகு காணிக்கைக்காகவும், ஆசாரியருக்கும், லேவியருக்கும், ஜனத்துக்கும் சீட்டுப்போட்டோம்.

நெகே 10:35. நாங்கள் வருஷந்தோறும் எங்கள் தேவனுடைய ஆலயத்துக்கு எங்கள் தேசத்தின் முதற்பலனையும், சகலவித விருட்சங்களின் எல்லா முதற்கனிகளையும் கொண்டுவரவும்,

நெகே 10:36. நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடியே, எங்கள் குமாரரில் முதற்பேறுகளையும், எங்கள் ஆடுமாடுகளாகிய மிருகஜீவன்களின் தலையீற்றுகளையும், எங்கள் தேவனுடைய ஆலயத்துக்கும் எங்கள் தேவனுடைய ஆலயத்திலே ஊழியஞ்செய்கிற ஆசாரியரிடத்துக்கும் கொண்டுவரவும்,

நெகே 10:37. நாங்கள் எங்கள் பிசைந்தமாவில் முதற்பாகத்தையும், எங்கள் படைப்புகளையும், சகல மரங்களின் முந்தின பலனாகிய திராட்சப்பழரசத்தையும், எண்ணெயையும், எங்கள் தேவனுடைய ஆலயத்தின் அறைகளில் வைக்கும்படி, ஆசாரியரிடத்துக்கும், எங்கள் நிலப்பயிர்களில் தசமபாகம் லேவியரிடத்துக்கும் கொண்டுவரவும், லேவியராகிய இவர்கள் எங்கள் வெள்ளாண்மையின் பட்டணங்களிலெல்லாம் தசமபாகம் சேர்க்கவும்,

நெகே 10:38. லேவியர் தசமபாகம் சேர்க்கும்போது ஆரோனின் குமாரனாகிய ஒரு ஆசாரியன் லேவியரோடேகூட இருக்கவும், தசமபாகமாகிய அதிலே லேவியர் பத்தில் ஒரு பங்கை எங்கள் தேவனுடைய ஆலயத்திலுள்ள பொக்கிஷ அறைகளில் கொண்டுவரவும் திட்டம் பண்ணிக்கொண்டோம்.

நெகே 10:39. பரிசுத்தஸ்தலத்தின் பணிமுட்டுகளும், ஊழியஞ்செய்கிற ஆசாரியரும், வாசல் காவலாளரும், பாடகரும் இருக்கிற அந்த அறைகளிலே இஸ்ரவேல் புத்திரரும் லேவிபுத்திரரும் தானியம் திராட்சரசம் எண்ணெய் என்பவைகளின் படைப்புகளைக் கொண்டுவரவேண்டியது; இவ்விதமாய் நாங்கள் எங்கள் தேவனுடைய ஆலயத்தைப் பராமரியாமல் விடுவதில்லையென்று திட்டம்பண்ணிக் கொண்டோம்.

இஸ்ரவேல் ஜனத்தார் இதுவரையிலும், தங்கள் சொந்த ஜீவியத்திலும், குடும்பத்திலும், சமுதாயத்திலும் எதைச் செய்யவேண்டும் என்றும், எதை செய்யக்கூடாது என்றும் தீர்மானம்பண்ணி ஆணையிட்டு பிரமாணம் பண்ணியிருக்கிறார்கள். கர்த்தருடைய ஜனம் பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருக்காக ஊழியம் செய்யவும் வேண்டும்.

எருசலேமிலே கர்த்தருடைய ஆலயம் புதுப்பித்துக் கட்டப்பட்டிருக்கிறது. அந்த ஆலயத்தில் கர்த்தருடைய ஆராதனைகள் தொடர்ந்து நடைபெறவேண்டும். கர்த்தருடைய ஆலயத்தை முறைப்படி பராமரிக்கவேண்டும். நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரமாக, அந்தந்த காலங்களில், பலிபீடத்தில் பலி செலுத்தப்படவேண்டும். பண்டிகைகள் ஆசரிக்கப்படவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் தேவனுடைய ஆலயத்தின் சகல வேலைக்கும், வருஷந்தோறும் சேக்கலில் மூன்றில் ஒரு பங்கைக் கொடுப்போம் என்கிற கடனை தங்கள்மேல் ஏற்றுக்கொள்கிறார்கள் (நெகே 10:33).

நாம் கர்த்தருடைய வீட்டின் காரியத்தை கவனிக்கும்போது, கர்த்தர் நம்முடைய வீட்டின் காரியத்தைக் கவனித்துக்கொள்வார். இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய குடும்பத்தைக் கவனிக்கும்போது, கர்த்தருடைய ஆலயத்தை கவனிக்காமல் புறக்கணித்துவிடக்கூடாது. இதனால் அவர்கள் தேவனுடைய ஆலயத்தை பராமரியாமல் விடுவதில்லை என்று திட்டம்பண்ணிக்கொள்கிறார்கள் (நெகே 10:39).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். அவர்கள் கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களை ஆராதிக்கப்போய்விடக்கூடாது. அவர்கள் தேவனுடைய ஆலயத்தைப் பராமரிக்காமல், விக்கிரகங்களின் மேடைகளை பராமரிக்கப்போய்விடக்கூடாது.

கர்த்தருடைய ஊழியக்காரியங்களில் சிறிதும் கவனம் செலுத்தாமல், எப்போதும் தங்கள் சொந்தக்காரியங்களை கவனித்துக் கொண்டிருப்பது, விசுவாசிகளாகிய நமக்கு பாவமாகவே இருக்கும். நாம் தொழில்களையும், உத்தியோகங்களையும், வியாபாரங்களையும் பார்க்கவேண்டும். அதே சமயத்தில் கர்த்தருடைய ஊழியத்திலும் பங்குபெறவேண்டும். கர்த்தருடைய ஆராதனையை அசட்டை செய்கிறவர்கள், கர்த்தரையே அசட்டை செய்கிறார்கள்.

தேவனுடைய ஆலயத்தில் ஆராதனைகளை நடத்துவதற்கு ஒரு சில பொருட்கள் தேவைப்படுகிறது. ஜனங்கள் தங்களுடைய பங்கை தேவாலயத்திற்கு கொடுக்கும்போது, ஆலயத்தின் ஆராதனையில் ஒரு குறைவும் இருக்காது. தேவனுடைய ஆலயத்தின் ஆராதனைக்காக தேவைப்படும் பொருட்களை கொடுப்பதாக இஸ்ரவேல் ஜனத்தார் ஆணையிட்டு பிரமாணம் பண்ணுகிறார்கள்.

தேவனுடைய ஆலயத்தின் ஆராதனைக்காக சமுகத்தப்பங்களுக்கும், நித்திய போஜனபலிக்கும், ஓய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும் செலுத்தும் நித்திய சர்வாங்க தகனபலிகளுக்கும், பண்டிகைகளுக்கும், பிரதிஷ்டையான பொருள்களுக்கும், இஸ்ரவேலுக்காகப் பாவநிவிர்த்தி உண்டாக்கும் பலிகளுக்கும், தேவையான பொருட்களை கொடுக்கும் பொறுப்பை இஸ்ரவேல் புத்திரர் தங்கள்மேல் ஏற்றுக்கொள்கிறார்கள் (நெகே 10:32).

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்கு பிடித்தமான ஏதாவது ஒரு நாளில், ஏதாவது ஒரு பொருளை ஆலயத்திற்கு கொடுத்தால், அது போதாது. அவர்கள் கிரமமாகவும் கொடுக்கவேண்டும். தாராளமாகவும் கொடுக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் தேவனுடைய ஆலயத்தின் ஆராதனைக்கு என்னென்ன காரியங்கள் தேவைப்படுகிறது என்பதை அறிந்திருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் தேவனுடைய ஆலயத்தின் சகல வேலைக்கும், வருஷந்தோறும் சேக்கலில் மூன்றில் ஒரு பங்கைக் கொடுப்போம் என்கிற கடனை தங்கள்மேல் ஏற்றுக்கொள்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியத்திற்கு எல்லோரும் கொடுக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியம் நல்ல வேலை. கொடுக்கிறவர்கள் தங்களுடைய திராணிக்குத்தக்கதாகவும், அதற்கு மேலும், தாராளமாய்க் கொடுக்கவேண்டும். அப்போதுதான் ஊழியத்தின் தேவைகள் குறைவில்லாமல் சந்திக்கப்படும்.

கர்த்தருடைய ஆலயத்திற்கு இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் வரிசெலுத்தவேண்டும் என்று நெகேமியா அவர்களை கட்டாயம்பண்ணவில்லை. ஆனாலும் தேவனுடைய ஆலயத்தின் சகல வேலைகளுக்கும் தாங்கள் கொடுப்பதாக இஸ்ரவேல் ஜனங்கள் மனப்பூர்வமாக சம்மதிக்கிறார்கள்.

தேவனுடைய ஆலயத்தில் சர்வாங்க தகனபலியை செலுத்துவதற்கு விறகுகள் தேவைப்படுகிறது. இதற்காக அவர்கள், நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடியே தேவனாகிய கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் எரிகிறதற்காக, குறிக்கப்பட்ட காலங்களில் வருஷாவருஷம் தங்கள் பிதாக்களுடைய குடும்பங்களின்படியே, தேவனுடைய ஆலயத்துக்குக் கொண்டுவரவேண்டிய விறகு காணிக்கைக்காகவும், ஆசாரியருக்கும், லேவியருக்கும், ஜனத்துக்கும் சீட்டுப்போடுகிறார்கள் (நெகே 10:34).

இஸ்ரவேல் ஜனத்தார் வருஷந்தோறும் தேவனுடைய ஆலயத்துக்கு தங்கள் தேசத்தின் முதற்பலனையும், சகலவித விருட்சங்களின் எல்லா முதற்கனிகளையும் கொண்டுவரவும் திட்டம்பண்ணிக் கொள்கிறார்கள் (நெகே 10:35).

தேவனுடைய ஆலயத்திலே ஆசாரியரும் லேவியரும் ஊழியம் செய்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கும் தேவைகள் உள்ளது. அவர்களுக்கும் குடும்பம் உள்ளது. அவர்களுடைய குடும்பத்தின் தேவைகள் சந்திக்கப்படவேண்டும். ஊழியக்காரரின் குடும்பத்தேவைகள் சரியாக சந்திக்கப்படவில்லையென்றால், அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தில் கவனம் செலுத்தாமல், தங்களுடைய குடும்பத்தின் தேவைகளை சந்திப்பதற்காக, வேறு வேலைகளை பார்க்கப்போய்விடுவார்கள். அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தில் கவனம் செலுத்தாமல், உலகப்பிரகாரமான வேலைகளில் கவனம் செலுத்துவார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் ஆசாரியரையும், லேவியரையும் பராமரிப்பதற்கு திட்டம் பண்ணுகிறார்கள். நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடியே, தங்கள் குமாரரில் முதற்பேறுகளையும், தங்கள் ஆடுமாடுகளாகிய மிருகஜீவன்களின் தலையீற்றுகளையும், தங்கள் தேவனுடைய ஆலயத்துக்கும் தங்கள் தேவனுடைய ஆலயத்திலே ஊழியஞ்செய்கிற ஆசாரியரிடத்துக்கும் கொண்டுவரவும், இஸ்ரவேல் ஜனத்தார் திட்டம்பண்ணிக் கொள்கிறார்கள் (நெகே 10:36).

"இதோ, லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக்குள்ளவை எல்லாவற்றிலும் தசம பாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன். இஸ்ரவேல் புத்திரர் குற்றஞ்சுமந்து சாகாதபடிக்கு, இனி ஆசரிப்புக் கூடாரத்தைக் கிட்டாதிருக்கக்கடவர்கள். லேவியர்மாத்திரம் ஆசரிப்புக் கூடாரத்துக்கடுத்த வேலைகளைச் செய்யவேண்டும்; அவர்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்; இஸ்ரவேல் புத்திரர் நடுவே அவர்களுக்குச் சுதந்தரம் இல்லை என்பது உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகிய தசமபாகத்தை லேவியருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்; ஆகையால் இஸ்ரவேல் புத்திரரின் நடுவே அவர்களுக்குச் சுதந்தரமில்லையென்று அவர்களுக்குச் சொன்னேன் என்றார்".

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ லேவியரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கிக்கொள்ளும்படி நான் உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்த தசமபாகத்தை நீங்கள் அவர்கள் கையில் வாங்கும்போது, தசமபாகத்தில் பத்தில் ஒரு பங்கைக் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகச் செலுத்தவேண்டும். நீங்கள் ஏறெடுத்துப் படைக்கும் இந்தப் படைப்பு களத்தின் தானியத்தைப் போலும், ஆலையின் இரசத்தைப்போலும் உங்களுக்கு எண்ணப்படும். இப்படியே நீங்கள் இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கும் தசமபாகமாகிய உங்கள் பங்குகளிலெல்லாம் நீங்களும் கர்த்தருக்கு என்று ஒரு படைப்பை ஏறெடுத்துப் படைத்து, அந்தப் படைப்பை ஆசாரியனாகிய ஆரோனுக்குக் கொடுக்க வேண்டும்" (எண் 18:21-28).

இஸ்ரவேல் ஜனத்தார் மோசேயின் பிரமாணத்தில் சொல்லப்பட்ட பிரகாரம் கர்த்தருடைய ஆலயத்திற்கு தங்களுடைய பங்குகளை கொடுக்கவில்லை. அவர்கள் கொடுப்பதை குறைத்துவிடுகிறார்கள். அல்லது நிறுத்திவிடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கர்த்தரை வஞ்சிக்கிறார்கள் என்று மல்கியா தீர்க்கதரிசி சொல்லுகிறார்.

"மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலும்தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள். என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (மல் 3:8-10).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய ஆலயத்திற்காக மேலும் சில காரியங்களை திட்டம்பண்ணுகிறார்கள். தங்கள் பிசைந்தமாவில் முதற்பாகத்தையும், தங்கள் படைப்புகளையும், சகல மரங்களின் முந்தின பலனாகிய திராட்சப்பழரசத்தையும், எண்ணெயையும், தேவனுடைய ஆலயத்தின் அறைகளில் வைக்கும்படி, ஆசாரியரிடத்துக்கும், எங்கள் நிலப்பயிர்களில் தசமபாகம் லேவியரிடத்துக்கும் கொண்டுவரவும், லேவியராகிய இவர்கள் தங்கள் வெள்ளாண்மையின் பட்டணங்களிலெல்லாம் தசமபாகம் சேர்க்கவும், திட்டம்பண்ணுகிறார்கள்.

மேலும் லேவியர் தசமபாகம் சேர்க்கும்போது ஆரோனின் குமாரனாகிய ஒரு ஆசாரியன் லேவியரோடேகூட இருக்கவும், தசமபாகமாகிய அதிலே லேவியர் பத்தில் ஒரு பங்கை எங்கள் தேவனுடைய ஆலயத்திலுள்ள பொக்கிஷ அறைகளில் கொண்டுவரவும் திட்டம் பண்ணிக்கொள்கிறார்கள் (நெகே 10:37,38).

இஸ்ரவேல் ஜனத்தார் பெர்சியா தேசத்து ராஜாக்களுக்கு அதிகமான பணத்தை வரியாக செலுத்துகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சொந்த தேசமாகிய யூதாதேசத்திலே வாசம்பண்ணினாலும், அவர்கள் இன்னும் பெர்சியா தேசத்திற்கு அடிமைகளாகவே இருக்கிறார்கள். இதனால் யூதாதேசத்தின் வருமானம் பெர்சியாவின் ராஜாக்களுக்கு போய்சேருகிறது. ஆனாலும் கர்த்தருடைய ஆலயத்திற்கு காணிக்கை கொடுப்பதை இஸ்ரவேல் ஜனத்தார் நிறுத்திவிடவில்லை. அவர்கள் தங்கள் காணிக்கைகளையும் தசமபாகங்களையும் கர்த்தருடைய ஆலயத்திற்கு தவறாமல் செலுத்துகிறார்கள்.

தேவனுடைய ஆலயத்தைப் பராமரிப்பது மிகவும் முக்கியமான ஊழியம். இதற்காக அவர்கள் பரிசுத்தஸ்தலத்தின் பணிமுட்டுகளும், ஊழியஞ்செய்கிற ஆசாரியரும், வாசல் காவலாளரும், பாடகரும் இருக்கிற அந்த அறைகளிலே இஸ்ரவேல் புத்திரரும் லேவிபுத்திரரும் தானியம் திராட்சரசம் எண்ணெய் என்பவைகளின் படைப்புகளைக் கொண்டுவரவேண்டியது என்று திட்டம்பண்ணிக்கொள்கிறார்கள் (நெகே 10:39). இவ்விதமாய் அவர்கள் தங்கள் தேவனுடைய ஆலயத்தைப் பராமரியாமல் விடுவதில்லையென்று திட்டம்பண்ணிக் கொள்கிறார்கள்.

11 அதிகாரம்

எருசலேம் நகரத்தைச் சுற்றிலும் அலங்கங்கள் கட்டியெழுப்பப்படுகிறது. ஆனால் நகரத்திற்குள்ளே இன்னும் போதுமான அளவு ஜனங்கள் குடியேறவில்லை. எருசலேம் அலங்கமுள்ள பட்டணமாகயிருந்தாலும், அது ஆளில்லாத பட்டணமாகவே இருக்கிறது. எருசலேம் நகரத்திற்குள்ளே இஸ்ரவேல் புத்திரரை அழைத்து வந்து குடியேற்றும் வேலையை நெகேமியா மேற்கொள்கிறார்.

இஸ்ரவேல் புத்திரரில் பத்துப்பேரில் ஒருவரை எருசலேம் நகரத்திலே குடியிருக்கப்பண்ண வேண்டுமென்று சீட்டுப்போடுகிறார்கள் (நெகே 11:1,2). யூதாபுத்திரரிலும், பென்யமீன் புத்திரரிலும் எருசலேம் நகரத்திலே குடியிருக்கிறவர்களின் விவரம் (நெகே 11:3-9). எருசலேமில் குடியிருக்கிற ஆசாரியரும் லேவியரும் (நெகே 11:10-19).

மற்ற பட்டணங்களில் குடியிருக்கிற யூதாவின் மனுஷரும் பென்யமீன் மனுஷரும் (நெகே 11:20-36).

எருசலேமில் குடியிருக்கிறவர்கள் நெகே 11:1-19

நெகே 11:1. ஜனத்தின் அதிகாரிகள் எருசலேமிலே குடியிருந்தார்கள்; மற்ற ஜனங்கள், தங்களுக்குள்ளே பத்துப்பேரில் ஒருவனை எருசலேமென்னும் பரிசுத்த நகரத்திலும் ஒன்பதுபேரை மற்றப் பட்டணங்களிலும் குடியிருக்கப்பண்ண, சீட்டுகளைப் போட்டார்கள்.

நெகே 11:2. ஆனாலும் எருசலேமிலே குடியிருக்க மனப்பூர்வமாய்ச் சம்மதித்த மனுஷர்களையெல்லாம் ஜனங்கள் வாழ்த்தினார்கள்.

நெகே 11:3. யூதாவின் பட்டணங்களில் இஸ்ரவேலரும், ஆசாரியரும், லேவியரும், நிதனீமியரும், சாலொமோனுடைய வேலைக்காரரின் புத்திரரும், அவரவர் தங்கள் பட்டணங்களிலுள்ள தங்கள் காணிபூமியிலே குடியிருந்தார்கள்; எருசலேமிலே குடியிருந்த நாடுகளின் தலைவர் யாரென்றால்:

நெகே 11:4. எருசலேமிலே யூதா புத்திரரில் சிலரும், பென்யமீன் புத்திரரில் சிலரும் குடியிருந்தார்கள்; யூதா புத்திரரிலே பேரேசின் புத்திரருக்குள் ஒருவனான மகலாலெயேலின் குமாரனாகிய செபதியாவின் குமாரன் அமரியாவுக்குப் பிறந்த சகரியாவுக்குக் குமாரனான உசியாவின் மகன் அத்தாயாவும்,

நெகே 11:5. சீலோனின் குமாரன் சகரியாவுக்குக் குமாரனாகிய யோயாரிபுக்குக் குமாரனான அதாயாவுக்குப் பிறந்த அசாயாவின் குமாரன் கொல்லோசே பெற்ற பாருக்கின் மகன் மாசெயாவுமே.

நெகே 11:6. எருசலேமிலே குடியிருக்கிற பேரேசின் புத்திரரெல்லாரும் நானூற்று அறுபத்தெட்டுப் பராக்கிரமசாலிகளாயிருந்தார்கள்.

நெகே 11:7. பென்யமீன் புத்திரரில் யாரென்றால், சல்லு என்பவன்; இவன் மெசுல்லாமுக்கும், இவன் யோவேதுக்கும், இவன் பெதாயாவுக்கும், இவன் கொலாயாவுக்கும், இவன் மாசெயாவுக்கும், இவன் இதியேலுக்கும், இவன் எசாயாவுக்கும் குமாரனானவன்.

நெகே 11:8. அவனுக்குப்பின் கப்பாய், சல்லாய் முதலானவர்கள் தொளாயிரத்து இருபத்தெட்டுப்பேர்.

நெகே 11:9. அவர்கள்மேல் விசாரிப்புக்காரனான சிக்ரியின் குமாரன் யோவேலும், பட்டணத்தின்மேல் இரண்டாவது விசாரிப்புக்காரனான செனுவாவின் குமாரன் யூதாவுமே.

நெகே 11:10. ஆசாரியர்களில் யோயாரிபின் குமாரன் யெதாயா, யாகின் என்பவர்களும்,

நெகே 11:11. அகிதூபின் குமாரன் மெராயோத்துக்குப் பிறந்த சாதோக்கின் குமாரன் மெசுல்லாம் பெற்ற இல்க்கியாவின் மகன் செராயா என்னும் தேவனுடைய ஆலயத்தின் விசாரணைக்கர்த்தனும்,

நெகே 11:12. ஆலயத்திலே பணிவிடை செய்கிற அவர்கள் சகோதரராகிய எண்ணூற்று இருபத்திரண்டுபேரும், மல்கியாவின் குமாரன் பஸ்கூருக்கு மகனான சகரியாவின் குமாரன் அம்சிக்குப் பிறந்த பெல்லியாவின் குமாரன் எரோகாமுக்குப் பிறந்த அதாயாவும்,

நெகே 11:13. பிதா வம்சத்தலைவராகிய அவனுடைய சகோதரர் இருநூற்று நாற்பத்திரண்டுபேரும், இம்மேரின் குமாரன் மெசில்லேமோத்தின் மகனாகிய அகசாய்க்குப் பிறந்த அசரெயேலின் மகன் அமாசாயும்,

நெகே 11:14. அவர்களுடைய சகோதரராகிய பராக்கிரமசாலிகள் நூற்று இருபத்தெட்டுப்பேருமே; இவர்கள்மேல் அகெதோலிமின் குமாரன் சப்தியேல் விசாரிப்புக்காரனாயிருந்தான்.

நெகே 11:15. லேவியரிலே புன்னியின் குமாரன் அசபியாவின் மகனாகிய அஸ்ரிக்காமின் குமாரனான அசூபின் மகன் செமாயாவும்,

நெகே 11:16. தேவனுடைய ஆலயத்தின் வெளிவேலையை விசாரிக்கிற லேவியரின் தலைவரிலே சபெதாயும், யோசபாத்தும்,

நெகே 11:17. ஆசாபின் குமாரன் சப்தியின் குமாரனாகிய மீகாவின் மகன் மத்தனியா ஜெபத்தில் ஸ்தோத்திரப்பாட்டைத் துவக்குகிற தலைவனும் அவன் சகோதரரில் இரண்டாவதான பக்பூக்கியா என்னும் ஒருவனும், எதுத்தூனின் குமாரன் காலாவின் மகனாகிய சமுவாவின் குமாரன் அப்தாவுமே.

நெகே 11:18. பரிசுத்த பட்டணத்திலிருந்த லேவியர் எல்லாரும் இருநூற்று எண்பத்துநாலுபேர்.

நெகே 11:19. வாசல் காவலாளர் அக்கூபும், தல்மோனும், வாசல்களில் காவல்காக்கிற அவர்கள் சகோதரரும் நூற்று எழுபத்திரண்டுபேர்.

எருசலேம் நகரம் "பரிசுத்த நகரம்" என்று அழைக்கப்படுகிறது (நெகே 11:1). இந்த நகரத்தில் தேவனுடைய ஆலயம் இருக்கிறது. கர்த்தர் தம்முடைய நாமம் விளங்குவதற்கு எருசலேம் நகரத்தைத் தெரிந்தெடுத்திருக்கிறார். கர்த்தருடைய பரிசுத்தமான வித்துக்களெல்லாம் எருசலேமிலே வாசம்பண்ணவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். ஆனால் எருசலேம் நகரத்திலே இப்போது கர்த்தருடைய ஜனங்கள் போதுமான எண்ணிக்கையில் குடியிருக்கவில்லை. எருசலேம் நகரத்தின் ஜனத்தொகை குறைவாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் எருசலேம் நகரத்தில் குடியிருப்பதற்கு பதிலாக, மற்ற பட்டணங்களிலும், அதைச் சுற்றிலுமுள்ள கிராமங்களிலும் குடியிருக்கிறார்கள். அவர்கள் எருசலேமில் குடியிருக்க விரும்பவில்லை. அதற்கு ஒரு சில காரணங்கள் உள்ளன. அவையாவன:

1. எருசலேமில் குடியிருக்கிறவர்கள் பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். மற்ற பட்டணங்களில் குடியிருக்கிற இஸ்ரவேல் புத்திரரைவிட, எருசலேமில் குடியிருக்கிற இஸ்ரவேல் புத்திரரிடத்தில் அதிகமான பரிசுத்தமும், அதிகமான கீழ்ப்படிதலும் எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இஸ்ரவேல் புத்திரர் தங்களைத் தாங்களே சோதித்துப் பார்த்து, தாங்கள் எருசலேம் பட்டணத்தில் குடியிருப்பதற்கு தகுதியில்லாதவர்கள் என்று தீர்மானித்து, மற்ற பட்டணங்களில் குடியிருக்கிறார்கள்.

2. எருசலேம் பட்டணத்தைச் சுற்றிலும் புறஜாதியாரின் பட்டணங்கள் இருக்கிறது. புறஜாதி ஜனத்தார் மற்ற பட்டணங்களை வெறுப்பதைவிட, எருசலேம் பட்டணத்தை அதிகமாய் வெறுக்கிறார்கள். எருசலேம் நகரத்திற்கு சத்துருக்கள் மூலமாக ஆபத்துக்கள் வருவதற்கு ஏராளமான வாய்ப்புக்கள் உள்ளன. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய சொந்த பாதுகாப்புக்காக எருசலேம் பட்டணத்தில் வாசம்பண்ணுவதைத் தவிர்த்துவிட்டு, மற்ற பட்டணங்களில் குடியிருக்கிறார்கள்.

எருசலேம் பட்டணத்தில் குடியிருந்தால் தங்களுக்கு நிந்தையும், உபத்திரவமும் வரும் என்று பயந்து இஸ்ரவேல் புத்திரர் எருசலேம் பட்டணத்தில் குடியிருக்காமல், மற்ற பட்டணங்களிலும், அதைச் சுற்றிலுமுள்ள கிராமங்களிலும் குடியிருக்கிறார்கள். அவர்கள் எருசலேமைவிட்டு விலகிப்போகும்போது, தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டும், அவருடைய வார்த்தைகளை விட்டும், அவருடைய வாக்குத்தத்தங்களை விட்டும் விலகிப்போகிறார்கள்.

எருசலேமுக்கு சத்துருக்கள் மூலமாக எவ்வளவு ஆபத்துக்கள் வருகிறதோ, அந்த அளவுக்கு கர்த்தர் மூலமாக எருசலேமுக்கு பாதுகாப்பும் வரும். கர்த்தருடைய சமுகத்திலே எருசலேம் என்பது "சமாதான நகரம்".

"நம்முடைய பண்டிகைகள் ஆசரிக்கப்படும் நகரமாகிய சீயோனை நோக்கிப்பார்; உன் கண்கள் எருசலேமை அமரிக்கையான தாபரமாகவும், பெயர்க்கப்படாத கூடாரமாகவும் காணும்; இனி அதின் முளைகள் என்றைக்கும் பிடுங்கப்படுவதுமில்லை, அதின் கயிறுகளில் ஒன்றும் அறுந்து போவதுமில்லை" *(ஏசா 33:20).*

"ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும். தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்" *(சங் 46:4,5).*

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பக்தி வைராக்கியமாய் ஜீவிக்கவேண்டும். அவர்கள் புறஜாதியார் மத்தியிலே கர்த்தருக்கு சாட்சியாயிருக்கவேண்டும். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, தங்கள் சத்துருக்களுக்கு பயந்து, கர்த்தரையும் நம்பாமல், எருசலேம் நகரத்தைவிட்டு விலகி, வேறு நகரங்களில் குடியிருக்கிறார்கள். எருசலேமை ஒதுக்கி தள்ளுகிறவர்கள், கர்த்தரையும், கர்த்தருடைய வார்த்தைகளையும், யூதமார்க்கத்தையும் ஒதுக்கி தள்ளுகிறார்கள்.

3. எருசலேம் நகரத்தில் குடியிருந்தால், அங்கே உலகப்பிரகாரமான நன்மைகள் எதுவும் கிடைக்காது. எருசலேம் நகரம் ஒரு வியாபார நகரமோ அல்லது தொழில் நகரமோ அல்ல. இந்த நகரத்தில் வியாபாரத்தின் மூலமாக பணப்புழக்கமும் அதிகமாய் இருக்காது. எருசலேமில் குடியிருக்கிறவர்களுக்கு உலகப்பிரகாரமான நன்மைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் எருசலேமில் குடியிருக்காமல், உலகப்பொருட்களின்மீது ஆசைப்பட்டு, மற்ற பட்டணங்களில் குடியிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் எருசலேமில் குடியிருக்காமல், மற்ற பட்டணங்களிலும் கிராமங்களிலும் குடியிருந்தாலும், ஜனத்தின் அதிகாரிகள் எருசலேமிலே குடியிருக்கிறார்கள் (நெகே 11:1). அதிகாரிகளின் நிர்வாக வசதிக்கு, எருசலேம் நகரமே சரியான வாசஸ்தலம்.

"அங்கே தாவீதின் வம்சத்தாருடைய சிங்காசனங்களாகிய நியாயாசனங்கள் வைக்கப்பட்டிருக்கிறது" *(சங் 122:5).*

எருசலேம் நகரத்திலே அதிகாரிகளும், நியாயாதிபதிகளும், பிரபுக்களும் குடியிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே பிரதானமானவர்கள் எருசலேமில் குடியிருக்கும்போது, அவர்களோடு சேர்ந்து, இஸ்ரவேல் புத்திரரில் சாதாரண ஜனங்களும் குடியிருக்கிறார்கள். இவர்களுடைய எண்ணிக்கை குறைவாகயிருந்தாலும், எருசலேம் நகரமானது ஆளே இல்லாமல் வெறுமையாயில்லை.

இஸ்ரவேல் ஜனத்தாரில் சிலர், தாங்களாகவே முன் வந்து, எருசலேமிலே மனப்பூர்வமாய்க் குடியிருக்க வருகிறார்கள். இவர்கள் தங்களுடைய சொந்த நன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், இஸ்ரவேல் ஜனத்தாரின் பொதுவான நன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்கள். எருசலேமிலே குடியிருக்க மனப்பூர்வமாய் சம்மதித்த மனுஷர்களையெல்லாம் ஜனங்கள் வாழ்த்துகிறார்கள் (நெகே 11:2).

தாவீது சாலொமோன் ஆகியோர் ராஜாக்களாக இருந்த காலத்தில் எருசலேமின் சிறப்புக்கும், இப்போதுள்ள எருசலேமிற்கும் பெரிய வித்தியாசமுண்டாயிற்று. சாலொமோனின் காலத்தில் ஜனங்கள் எருசலேம் பட்டணத்திற்குத் தேடிச் சென்று குடியேறினார்கள். ஆனால் இப்போதோ ஆட்களைத் தேடிப்பிடித்து,எருசலேம் பட்டணத்தில் குடியேற்றவேண்டிய சூழ்நிலை உண்டாயிற்று.

மேசியாவின் காலத்தில், ஜனங்கள் எருசலேமில் குடியேற விரும்புவார்கள். எருசலேம் இயேசு கிறிஸ்துவின் தலைநகரமாக இருக்கும். பூமியின் பல தேசங்களிலிருந்தும், ஜனங்கள் எருசலேம் பட்டணத்திற்கு வருவார்கள். கர்த்தருடைய உபதேசத்தைக் கேட்பதற்காகத் தேவாலயத்தின் பர்வதத்திற்கு உலகமெங்கிலுமுள்ள தேசத்தார் தேடி வருவார்கள். (ஏசா 2:2-4; ஏசா 52:7; சக 8:23; சக 14:16-21).

எருசலேமில் தேவனுடைய ஆலயம் இருக்கிறது. எருசலேமில் குடியிருக்கிறவர்கள், அதன் நன்மையை விரும்புகிறவர்கள். எருசலேமில் இஸ்ரவேல் புத்திரர் ஓரளவு எண்ணிக்கையில் குடியிருந்தாலும், அந்த நகரத்தில் இன்னும் அநேக பகுதிகளில் ஜனங்கள் குடியிருக்க வரவில்லை. வீடுகள் இருக்கிறது. ஆனால் வீடுகளில் குடியிருப்போர் இல்லை.

எருசலேம் நகரத்திலே இஸ்ரவேல் புத்திரரில் ஏராளமானோர் வந்து குடியேறவேண்டுமென்று அதிகாரிகளும் ஜனங்களும் விரும்புகிறார்கள். இதற்காக, மற்ற ஜனங்கள், தங்களுக்குள்ளே பத்துப்பேரில் ஒருவனை எருசலேமென்னும் பரிசுத்த நகரத்திலும் ஒன்பதுபேரை மற்றப் பட்டணங்களிலும் குடியிருக்கப்பண்ண, சீட்டுகளைப் போடுகிறார்கள் (நெகே 11:1).

எருசலேமில் குடியிருக்கும் ஜனங்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். இதற்காக ஒரு புதிய முறையை இஸ்ரவேல் புத்திரர் கையாளுகிறார்கள். பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து சுமார் 50,000பேர் யூதா தேசத்திற்குத் திரும்பி வந்தார்கள். இவர்களில் ஒருசிலரே எருசலேம் நகரத்தில் குடியேறுகிறார்கள். மற்றவர்கள் மற்ற பட்டணங்களில்போய் குடியேறினார்கள். இதனால் சீட்டுப்போட்டு, பத்துப் பேரில் ஒருவனை எருசலேமிலும், மற்ற ஒன்பதுபேரை மற்றப் பட்டணங்களிலும் குடியேற்றுவதற்கு ஒழுங்கு செய்கிறார்கள் (நெகே 11:1-2).

எருசலேமிலே யாரெல்லாம் குடியிருக்கவேண்டும் என்பதை ஜனங்கள் சீட்டுப்போட்டு தீர்மானம்பண்ணுகிறார்கள். அங்கே குடியிருக்க மனப்பூர்வமாய் சம்மதித்தவர்களை ஜனங்கள் வாழ்த்துகிறார்கள். எருசலேமிலே குடியிருக்க விருப்பமில்லாதவர்களையும், பத்துப்பேரில் ஒருவர் என்னும் வீதமாக சீட்டுப்போட்டு, அங்கே குடியிருக்கப்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ணி சீட்டுப்போட்டு, கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார்கள்.

எருசலேமிலே யூதாபுத்திரரில் சிலரும், பென்யமீன் புத்திரரில் சிலரும் குடியிருக்கிறார்கள். பூர்வகாலத்தில் எருசலேம் நகரத்தின் ஒரு பகுதி யூதாகோத்திரத்தாருக்கும், மற்றொரு பகுதி பென்யமீன் கோத்திரத்தாருக்கும் பங்குவீதமாயிருந்தது. ஆனாலும் எருசலேமின் பெரும்பகுதி பென்யமீன் கோத்திரத்தாரின் பங்கு வீதத்தில் அமைந்திருந்தது.

எருசலேமில் கூடியிருந்த யூதா புத்திரரின் எண்ணிக்கை 468 பேர். அங்கே குடியிருந்த பென்யமீன் புத்திரரின் எண்ணிக்கையோ 928 பேர்.

பென்யமீன் புத்திரரின் எண்ணிக்கை அதிகமாயிருந்தாலும்,யூதாபுத்திரர் எல்லோரும் பராக்கிரமசாலிகளாயிருக்கிறார்கள். "எருசலேமிலே குடியிருக்கிற பேரேசின் புத்திரரெல்லாரும் நானூற்று அறுபத்தெட்டுப் பராக்கிரமசாலிகளாயிருந்தார்கள்" (நெகே 11:6).

எருசலேமுக்கு விரோதமாக சத்துருக்கள் வந்தால், அவர்களை எதிர்த்து நிற்பதற்கும், அவர்களோடு யுத்தம்பண்ணுவதற்கும் யூதாவின் பராக்கிரமசாலிகள் ஆயத்தமாயிருக்கிறார்கள். பூர்வகாலம் முதற்கொண்டு யூதாவின் மனுஷர் பலமுள்ளவர்களாகவும், தைரியமுள்ளவர்களாகவும், பராக்கிரமசாலிகளாகவும் இருக்கிறார்கள்.

எருசலேமிலே குடியிருந்த பென்யமீன் புத்திரரின் விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. "பென்யமீன் புத்திரரில் யாரென்றால், சல்லு என்பவன்; இவன் மெசுல்லாமுக்கும், இவன் யோவேலுக்கும், இவன் பெதாயாவுக்கும், இவன் கொலாயாவுக்கும், இவன் மாசெயாவுக்கும், இவன் இதியேலுக்கும், இவன் எசாயாவுக்கும் குமாரனானவன். அவனுக்குப்பின் கப்பாய், சல்லாய் முதலானவர்கள் தொளாயிரத்து இருபத்தெட்டுப்பேர்" *(நெகே 11:7,8)*.

எருசலேமில் குடியிருந்த பென்யமீன் புத்திரரில் இரண்டுபேர் விசாரிப்புக்காரராயிருக்கிறார்கள். "அவர்கள்மேல் விசாரிப்புக்காரனான சிக்ரியின் குமாரன் யோவேலும், பட்டணத்தின்மேல் இரண்டாவது விசாரிப்புக்காரனான செனுவாவின் குமாரன் யூதாவுமே" *(நெகே 11:9)*.

இஸ்ரவேல் புத்திரர் எருசலேமில் குடியிருப்பதுபோலவே, யூதாவின் மற்ற பட்டணங்களிலும் குடியிருக்கிறார்கள். யூதாவின் பட்டணங்களில் இஸ்ரவேலரும், ஆசாரியரும், லேவியரும், நிதனீமியரும், சாலொமோனுடைய வேலைக்காரரின் புத்திரரும், அவரவர் தங்கள் பட்டணங்களிலுள்ள தங்கள் காணியாட்சியிலே குடியிருக்கிறார்கள் *(நெகே 11:3)*.

எருசலேமிலே குடியிருந்த நாடுகளின் தலைவர்களைப்பற்றிய விவரமும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களின் விவரம் வருமாறு:

1. அத்தாயா
2. மாசெயா
3. சல்லு
4. கப்பாய்
5. சல்லாய்
6. யோவேல்
7. யூதா
8. யெதாயா
9. யாகின்
10. செராயா
11. அதாயா
12. அமாசாய்
13. சப்தியேல்
14. செமாயா
15. சபெதாய்
16. யோசபாத்
17. மத்தனியா
18. பக்பூக்கியா
19. அப்தா
20. அக்கூப்
21. தல்மோன்
22. சீகா
23. கிஸ்பா
24. ஊசி
25. பெத்தகியா

"எருசலேமிலே யூதா புத்திரரில் சிலரும், பென்யமீன் புத்திரரில் சிலரும் குடியிருந்தார்கள்; யூதா புத்திரரிலே பேரேசின் புத்திரருக்குள் ஒருவனான மகலாலெயேலின் குமாரனாகிய செபதியாவின் குமாரன் அமரியாவுக்குப் பிறந்த சகரியாவுக்குக் குமாரனான உசியாவின் மகன் அத்தாயாவும், சீலோனின் குமாரன் சகரியாவுக்குக் குமாரனாகிய யோயாரிபுக்குக் குமாரனான அதாயாவுக்குப் பிறந்த அசாயாவின் குமாரன் கொல்லோசே பெற்ற பாருக்கின் மகன் மாசெயாவுமே" *(நெகே 11:4,5)*.

ஆசாரியர்களிலும் லேவியர்களிலும் அநேகர் எருசலேம் நகரத்திலே குடியிருக்கிறார்கள். ஆசாரியர்களில் யோயாரிபின் குமாரன் யெதாயா, யாகின் என்பவர்களும், அகிதூபின் குமாரன் மெராயோத்துக்குப் பிறந்த சாதோக்கின் குமாரன் மெசுல்லாம் பெற்ற இல்க்கியாவின் மகன் செராயா என்னும் தேவனுடைய ஆலயத்தின் விசாரணைக்கர்த்தனும், எருசலேமிலே குடியிருக்கிறார்கள் (நெகே 11:10,11).

எருசலேமில் குடியிருக்கிறவர்களின் விவரம் வருமாறு:

1. பேரேசின் புத்திரர் (நெகே 11:6) - 468 பேர்
2. பென்யமீன் புத்திரர் (நெகே 11:8) - 928 பேர்
3. ஆசாரியர் (நெகே 11:12) - 822
4. மேலும் ஆசாரியர் (நெகே 11:13) - 242 பேர்
5. மேலும் ஆசாரியர் (நெகே 11:14) - 128 பேர்
6. லேவியர் (நெகே 11:18) - 284 பேர்
7. வாசல்காவலாளர் (நெகே 11:19) - 172 பேர்

மொத்தம் - 3,044பேர்

ஆரம்பத்தில் எருசலேமில் இருந்த ஜனங்கள் கொஞ்சம்பேராயிருந்தார்கள். (நெகே 7:4) பத்துப்பேரில் ஒருவர் எருசலேமில் குடியேற வேண்டுமென்று சீட்டுப்போட்டு தெரிந்தெடுத்த பின்பு, அங்கு 3,044 பேர் குடியேறினார்கள். எருசலேமில் கொஞ்சப்பேர் இருந்தபோது, அதன் சத்துருக்கள் எருசலேமிற்கு எதிராக வரவில்லை. நெகேமியா வந்தபின்பு, இஸ்ரவேல் புத்திரர் அனைவரிலும் எருசலேமுக்கு வரவேண்டியவர்களைக் கூட்டிச் சேர்த்தார். அலங்கங்களைக் கட்டும் வேலைகளை அவர்கள் எல்லோரும் சேர்ந்து செய்தார்கள் (நெகே 1-6).

எருசலேமில் குடியிருக்கிற ஆசாரியரும் லேவியரும் தேவனுடைய ஆலயத்திலே பணிவிடை செய்கிறார்கள். இவர்களில் ஒரு குடும்பத்தில் 822 பேரும், மற்றொரு குடும்பத்தில் 242 பேரும், வேறொரு குடும்பத்தில் 128 பேரும் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் பராக்கிரமசாலிகள்.

ஆலயத்திலே பணிவிடை செய்கிற ஆசாரியரின் விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. "ஆலயத்திலே பணிவிடை செய்கிற அவர்கள் சகோதரராகிய எண்ணூற்று இருபத்திரண்டுபேரும், மல்கியாவின் குமாரன் பஸ்கூருக்கு மகனான சகரியாவின் குமாரன் அம்சிக்குப் பிறந்த பெல்லியாவின் குமாரன் எரோகாமுக்குப் பிறந்த அதாயாவும், பிதா வம்சத்தலைவராகிய அவனுடைய சகோதரர் இருநூற்று நாற்பத்திரண்டுபேரும், இம்மேரின் குமாரன் மெசில்லேமோத்தின் மகனாகிய அகசாய்க்குப் பிறந்த அசரெயேலின் மகன் அமாசாயும்" (நெகே 11:12,13).

அவர்களுடைய சகோதரராகிய பராக்கிரமசாலிகள் நூற்றுஇருபத்தெட்டுப்பேர். இவர்கள்மேல் அகெதோலிமின் குமாரன் சப்தியேல் விசாரிப்புக்காரனாயிருக்கிறான் (நெகே 11:14).

எருசலேமில் குடியிருக்கிற லேவியரின் விவரமும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. பரிசுத்த பட்டணத்திலிருந்த லேவியர் எல்லாரும் 284 பேர் மாத்திரமே (நெகே 11:18). எருசலேமில் குடியிருக்கிற ஆசாரியரின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் லேவியரின் எண்ணிக்கை குறைவாகயிருக்கிறது.

லேவியரில் சிலர் வாசல்காவலாளராயிருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கை 172 பேர். லேவியருடைய ஊழியத்தின் ஒரு பகுதி கர்த்தருடைய வார்த்தையை ஜனங்களுக்குப் போதிப்பது. தேவனைப்பற்றிய அறிவை ஜனங்களுக்கு உபதேசிப்பதும் லேவியரின் ஊழியமாகும். இதற்காக லேவியர்கள் யூதாதேசத்தின் எல்லா பட்டணங்களிலும், கிராமங்களிலும் குடியிருக்கிறார்கள்.

எருசலேமில் குடியிருக்கிற லேவியரைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களில் சிலர் தேவனுடைய ஆலயத்தின் வெளிவேலையை விசாரிக்கிறார்கள்.

"லேவியரிலே புன்னியின் குமாரன் அசபியாவின் மகனாகிய அஸ்ரிக்காமின் குமாரனான அசூபின் மகன் செமாயாவும், தேவனுடைய ஆலயத்தின் வெளிவேலையை விசாரிக்கிற லேவியரின் தலைவரிலே சபெதாயும், யோசபாத்தும், ஆசாபின் குமாரன் சப்தியின் குமாரனாகிய மீகாவின் மகன் மத்தனியா ஜெபத்தில் ஸ்தோத்திரப்பாட்டைத் துவக்குகிற தலைவனும் அவன் சகோதரரில் இரண்டாவதான பக்பூக்கியா என்னும் ஒருவனும், எதுத்தூனின் குமாரன் காலாவின் மகனாகிய சமுவாவின் குமாரன் அப்தாவுமே" (நெகே 11:15-17).

தேவாலயத்திற்குள்ளே ஆசாரியர்கள் எல்லா வேலைகளையும் விசாரிப்பார்கள். ஆலயத்தின் வெளி வேலையை லேவியர்கள் விசாரிக்கிறார்கள். ஜனங்கள் கொண்டு வருகிற காணிக்கைகளை சேகரிப்பது, தேவாலயத்தின் ஆராதனைக்கு தேவைப்படும் பொருட்களை சேகரித்து கொடுப்பது ஆகியவையெல்லாம் லேவியரின் பணிவிடையாகும்.

தேவனுடைய ஆலயத்திற்குள்ளேயும் ஊழியக்காரர்கள் தேவைப்படுகிறார்கள். அதற்கு வெளியேயும் ஊழியக்காரர்கள் தேவைப்படுகிறார்கள். சபையிலே கர்த்தர் நமக்கு எப்படிப்பட்ட ஊழியத்தைக் கொடுத்தாலும், அந்த ஊழியம் கர்த்தருடைய ஊழியம் என்பதை நினைவுகூர்ந்து, அதை பயபக்தியோடு செய்யவேண்டும். சபையிலே கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கம்பண்ணுவது முக்கியமான ஊழியம். அதுபோலவே சபையைக் கூட்டிப்பெருக்கி சுத்தம்பண்ணுவதும் முக்கியமான ஊழியமே. எல்லோரும் ஜெபம்பண்ணவேண்டும். எல்லோரும் ஊழியத்தில் பங்குபெறவேண்டும்.

லேவியரில் மத்தனியா என்பவன் ஜெபத்தில் ஸ்தோத்திரப்பாட்டைத் துவக்குகிற தலைவனாயிருக்கிறான் (நெகே 11:17). கர்த்தர் இவனுக்கு விசேஷித்த கீதஞானத்தைக் கொடுத்திருக்கிறார். இவனுடைய குரல் நன்றாயிருக்கிறது. இவன் கர்த்தரைத் துதித்து நன்றாய்ப் பாடுகிறான். இதனால் சங்கீதப்பாடல்களை பாடுகிற பொறுப்பு இவனிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. எல்லோரும் ஸ்தோத்திரப்பாட்டை பாடும்போது, மத்தனியா அந்தப் பாடலை சரியான இராகத்தில் துவக்குகிறான்.

மற்ற பட்டணங்களில் குடியிருக்கிறவர்கள்

நெகே 11:20-36

நெகே 11:20. மற்ற இஸ்ரவேலரும், ஆசாரியரும், லேவியரும், யூதாவின் சகல பட்டணங்களிலும், அவரவர் தங்கள் சுதந்தரத்திலிருந்தார்கள்.

நெகே 11:21. நிதனீமியர் ஓபேலிலே குடியிருந்தார்கள்; அவர்கள்மேல் சீகாவும் கிஸ்பாவும் விசாரிப்புக்காரராயிருந்தார்கள்.

நெகே 11:22. எருசலேமிலிருக்கிற லேவியரின் விசாரிப்புக்காரன் மீகாவின் குமாரன் மத்தனியாவின் மகனாகிய அசபியாவுக்குப் பிறந்த பானியின் குமாரன் ஊசி என்பவன் தேவனுடைய ஆலயத்தின் ஊழியத்துக்கு நிற்கிற பாடகராகிய ஆசாபின் குமாரரில் ஒருவன்.

நெகே 11:23. பாடகராகிய அவர்களுக்காக அன்றாடகப்படி கொடுக்கப்படும்படி ராஜாவினால் கட்டளையிடப்பட்டிருந்தது.

நெகே 11:24. யூதாவின் குமாரனாகிய சேராக்கின் புத்திரரில் மெசெசாபெயேலின் குமாரன் பெத்தகியா ஜனத்தின் காரியங்களுக்கெல்லாம் ராஜாவின் சமுகத்தில் நின்றான்.

நெகே 11:25. தங்கள் நாட்டுப்புறங்களான கிராமங்களில் இருக்கிறவர்களுக்குள்ளே யூதாவின் புத்திரரில் சிலர் கீரியாத்அர்பாவிலும் அதின் கிராமங்களிலும், தீபோனிலும் அதின் கிராமங்களிலும், எகாப்செயேலிலும் அதின் கிராமங்களிலும்,

நெகே 11:26. யெசுவாவிலும், மோலாதாகிலும், பெத்பெலேத்திலும்,

நெகே 11:27. ஆத்சார்சூகாவிலும், பெயெர்செபாவிலும் அதின் கிராமங்களிலும்,

நெகே 11:28. சிக்லாகிலும், மேகோனாகிலும் அதின் கிராமங்களிலும்,

நெகே 11:29. என்ரிம்மோனிலும், சாரேயாகிலும், யர்மூத்திலும்,

நெகே 11:30. சானோவாகிலும், அதுல்லாமிலும் அவைகளின் கிராமங்களிலும், லாகீசிலும் அதின் நாட்டுப்புறங்களிலும், அசெக்காவிலும் அதின் கிராமங்களிலும், பெயெர்செபா தொடங்கி இன்னோமின் பள்ளத்தாக்குமட்டும் குடியேறினார்கள்.

நெகே 11:31. கேபாவின் ஊராராயிருந்த பென்யமீன் புத்திரர், மிக்மாஸ், ஆயா, பெத்தேல் ஊர்களிலும் அதின் கிராமங்களிலும்,

நெகே 11:32. ஆனதோத், நோப், அனனியா,

நெகே 11:33. ஆத்சோர், ராமா, கித்தாயிம்,

நெகே 11:34. ஆதீத், செபோயிம், நெபலாத்,

நெகே 11:35. லோத், ஓனோ என்னும் ஊர்களிலும், சிற்பாசாரிகளின் பள்ளத்தாக்கிலும் குடியிருந்தார்கள்.

நெகே 11:36. லேவியரிலே சில வகுப்பார் யூதாவிலும், சிலர் பென்யமீனிலும் இருந்தார்கள்.

எருசலேமின் பட்டணத்தில் குடியிருக்கிறவர்களை தவிர யூதாவின் சகல பட்டணங்களிலும் குடியிருக்கிறவர்களைப் பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு தேசத்திலே அதன் ஜனங்கள் நகரத்திலும் குடியிருக்கவேண்டும். கிராமங்களிலும் குடியிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் எருசலேம் நகரத்திலே குடியிருந்து, கிராமத்தில் ஒருவரும் குடியிருக்கவில்லையென்றால், விவசாய வேலைகள் நடைபெறாது. ஜனங்களுக்கு தானியம் கிடைக்காது. தேசத்தில் தொழில் நடைபெறாது. ஆகையினால் நெகேமியா எருசலேமை கவனிப்பதுபோல, யூதாதேசத்தின் மற்ற பட்டணங்களையும் கவனிக்கிறார்.

மற்ற இஸ்ரவேலரும், ஆசாரியரும், லேவியரும், யூதாவின் சகல பட்டணங்களிலும், அவரவர் தங்கள் சுதந்தரத்திலிருக்கிறார்கள். நிதனீமியர் ஓபேலிலே குடியிருக்கிறார்கள்; அவர்கள்மேல் சீகாவும் கிஸ்பாவும் விசாரிப்புக்காரராயிருக்கிறார்கள் *(நெகே 11:20,21)*.

நிதானீமியர் என்பவர்கள் கிபியோனியரின் சந்ததியைச் சேர்ந்தவர்கள் இவர்கள் ஓபேலில் குடியிருக்கிறார்கள். இது எருசலேமின் அலங்கத்திற்கு மேலுள்ளது.

"ஓபேலிலே குடியிருக்கிற நிதனீமியரைச் சேர்ந்த மனிதரும் கிழக்கேயிருக்கிற தண்ணீர் வாசலுக்கு வெளிப்புறமான கொம்மைக்கு எதிரேயிருக்கிற இடமட்டும் கட்டினார்கள்" *(நெகே 3:26)*.

லேவியர்கள் யூதாவின் சகல பட்டணங்களிலும் குடியிருக்கிறார்கள். ஆனாலும் எருசலேமில் குடியிருக்கிறவர்களுக்கு லேவியர் விசாரிப்புக்காரராயிருக்கிறார்கள்.

நிதனீமியர் ஓபேலிலே குடியிருக்கிறார்கள்; அவர்கள்மேல் சீகாவும் கிஸ்பாவும் விசாரிப்புக்காரராயிருக்கிறார்கள். எருசலேமிலிருக்கிற லேவியரின் விசாரிப்புக்காரன் மீகாவின் குமாரன் மத்தனியாவின் மகனாகிய அசபியாவுக்குப் பிறந்த பானியின் குமாரன் ஊசி என்பவன் தேவனுடைய ஆலயத்தின் ஊழியத்துக்கு நிற்கிற பாடகராகிய ஆசாபின் குமாரரில் ஒருவன் *(நெகே 11:21,22)*.

லேவியரில் சிலர் பாடகர்களாயிருக்கிறார்கள். அதே வேளையில் தேவாலயத்தில் ஏற்படும் பழுதுகளையும் அவர்கள் சரிபண்ணுகிறார்கள். இவர்கள் தேவனுடைய ஆலயத்தின் ஊழியத்திற்காக நிற்கிறார்கள். பாடகராகிய அவர்களுக்காக அன்றாடகப்படி கொடுக்கப்படும்படி ராஜாவினால் கட்டளையிடப்பட்டிருக்கிறது (நெகே 11:23).

எருசலேமிலே ராஜாவின் பிரதிநிதியாக ஒருவன் இருக்கிறான். யூதாவின் குமாரனாகிய சேராக்கின் புத்திரரில் மெசெசாபெயேலின் குமாரன் பெத்தகியா ஜனத்தின் காரியங்களுக்கெல்லாம் ராஜாவின் சமுகத்தில் நிற்கிறான் (நெகே 11:24). இவன் ராஜாவின் அதிகாரிகளுக்குள்ளே ஏதாவது பிரச்சனைகள் ஏற்பட்டால், அவர்களுடைய பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பான்.

எருசலேமிலிருக்கிற ராஜாவின் பிரதிநிதி, பெர்சியா தேசத்து ராஜாவின் நன்மையை விசாரிக்கிறவன். யூதாதேசத்தார் பெர்சியா தேசத்து ராஜாவுக்கு செலுத்த வேண்டிய வரிகளை சரியாக செலுத்தகிறார்களா என்பதை இவன் மேற்பார்வை செய்கிறான். தேவனுடைய ஆலயத்திற்கு ராஜாவினால் நியமிக்கப்பட்ட படிகள் சரியாக கொடுக்கப்படுகிறதா என்பதையும் இவன் விசாரிக்கிறான்.

பெர்சியாவின் ராஜா, யூதாதேசத்திலே, தன்னுடைய விசாரிப்புக்காரனாக, ஒரு யூதரை எருசலேமிலே நியமித்திருக்கிறான். இது யூதருக்கு ஆறுதலாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறது.

யூதாதேசத்தின் பட்டணங்களிலே குடியிருக்கிறவர்களை தவிர அதன் நாட்டுப்புறங்களிலும், கிராமங்களிலும் குடியிருக்கிறவர்களைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

தங்கள் நாட்டுப்புறங்களான கிராமங்களில் இருக்கிறவர்களுக்குள்ளே யூதாவின் புத்திரரில் சிலர் கீரியாத்அர்பாவிலும் அதின் கிராமங்களிலும், தீபோனிலும் அதின் கிராமங்களிலும், எகாப்செயேலிலும் அதின் கிராமங்களிலும், குடியிருக்கிறார்கள் (நெகே 11:25-30).

நெகே 11:6 ஆவது வசனத்தில் குறிப்பிடாதவர்கள் யூதாவின் சகல பட்டணங்களிலும், அவரவர் தங்கள் சுதந்தரத்திலிருக்கிறார்கள். நெகே 11:20-34 ஆகிய வசனங்களில் அந்தப் பட்டணங்களின் பெயர்கள் கூறப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. கீரியாத்-அர்பா
2. தீபோன்
3. எகாப்செயேல்
4. யெகுவா (நெகே 11:26)
5. மோலாதா
6. பெத்பெலேத்
7. ஆத்சார்சூகா
8. பெயெர்செபா
9. சிக்லாக் (நெகே 11:28)
10. மேகோனா
11. என்ரிம்மோம் (நெகே 11:29)
12. சாரேயா
13. யர்மூத்
14. சானோவா (நெகே 11:30)
15. அதுல்லாம்
16. லாகீஸ்
17. அசெக்கா
18. கேபா (நெகே 11:31)
19. மிக்மாஸ்
20. ஆயா
21. பெத்தேல்
22. ஆனதோத் (நெகே 11:32)
23. நோப்
24. அனனியா

25. ஆத்சோர் (நெகே 11:33)

26. ராமா

27. கித்தாயிம்

28. ஆதீத் (நெகே 11:34)

29. செபோயிம்

30. நெபலாத்

31. லோத் (நெகே 11:35)

32. ஓனோ

பெயெர்செபா தொடங்கி இன்னோமின் பள்ளத்தாக்குமட்டும் மற்ற ஜாதியாரும் குடியேறினார்கள். (நெகே 11:30) சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த சுமார் 50,000 பேரும், பல பட்டணங்களில் குடியேறுகிறார்கள். ஆகையினால் எந்தப் பட்டணத்திலும் அதிக ஜனத்தொகை இல்லை.

இதற்காகவே சீட்டுப்போட்டு பத்தில் ஒரு நபரை எருசலேமில் குடியேறச் செய்கிறார்கள். குடியிருப்பதற்கு ஆட்கள் இல்லாததினால் பல வீடுகளையும் கட்டவில்லை (நெகே 11:1-2; நெகே 7:4).

பென்யமீன் புத்திரர் எந்தெந்த கிராமங்களிலெல்லாம் குடியிருக்கிறார்கள் என்னும் விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது (நெகே 11:31-35). லேவியரிலே சில வகுப்பார் யூதாவிலும், சிலர் பென்யமீனிலும் இருக்கிறார்கள் (நெகே 11:36).

12 அதிகாரம்

செருபாபேலோடு எருசலேமுக்கு திரும்பி வந்த ஆசாரியரின் தலைவர்களும் லேவியரின் தலைவர்களும் (நெகே 12:1-9). பிரதான ஆசாரியர்கள் (நெகே 12:10,11). ஆசாரியருடைய தலைவர்களின் சந்ததியார் (நெகே 12:12-21).

நெகேமியாவின் காலத்தில் ஊழியம் செய்த லேவியரில் பிரதானமானவர்கள் (நெகே 12:22-26). எருசலேமின் அலங்கம் பிரதிஷ்டைபண்ணப்படுகிறது (நெகே 12:27-43). தேவனுடைய ஆலயத்திலே ஆசாரியர் லேவியர் ஆகியோரின் ஊழியங்கள் திட்டம் பண்ணப்படுகிறது (நெகே 12:44-47).

ஆசாரியரும் லேவியரும் நெகே 12:1-26

நெகே 12:1. செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலோடும் யெசுவாவோடும் வந்த ஆசாரியரும் லேவியரும் யாரென்றால்: செராயா, எரேமியா, எஸ்றா,

நெகே 12:2. அமரியா, மல்லூக், அத்தூஸ்,

நெகே 12:3. செகனியா, ரேகூம், மெரேமோத்,

நெகே 12:4. இத்தோ, கிநேதோ, அபியா,

நெகே 12:5. மியாமின், மாதியா, பில்கா,

நெகே 12:6. செமாயா, யோயாரிப் யெதாயா,

நெகே 12:7. சல்லூ, ஆமோக், இல்க்கியா, யெதாயா என்பவர்கள்; இவர்கள் யெசுவாவின் நாட்களில், ஆசாரியருக்கும் தங்கள் சகோதரருக்கும் தலைவராயிருந்தார்கள்.

நெகே 12:8. லேவியர் யாரென்றால்: யெசுவா, பின்னூயி, கத்மியேல், செரெபியா, யூதா, மத்தனியா என்பவர்கள்; இவனும் இவன் சகோதரரும் துதிசெய்தலை விசாரித்தார்கள்.

நெகே 12:9. பக்புக்கியா, உன்னி என்கிற அவர்கள் சகோதரர் அவர்களுக்கு எதிரே காவல்காத்திருந்தார்கள்.

நெகே 12:10. யெசுவா யொயாகீமைப் பெற்றான், யொயாகீம் எலியாசிபைப் பெற்றான், எலியாசிப் யொயதாவைப் பெற்றான்.

நெகே 12:11. யொயதா யோனத்தானைப் பெற்றான், யோனத்தான் யதுவாவைப் பெற்றான்.

நெகே 12:12. யொயாகீமின் நாட்களிலே பிதா வம்சங்களின் தலைவரான ஆசாரியர்கள் யாரென்றால்: செராயாவின் சந்ததியில் மெராயா, எரேமியாவின் சந்ததியில் அனனியா,

நெகே 12:13. எஸ்றாவின் சந்ததியில் மெசுல்லாம், அமரியாவின் சந்ததியில் யோகனான்,

நெகே 12:14. மெலிகுவின் சந்ததியில் யோனத்தான், செபனியாவின் சந்ததியில் யோசேப்பு,

நெகே 12:15. ஆரீமின் சந்ததியில் அத்னா, மெராயோதின் சந்ததியில் எல்காய்,

நெகே 12:16. இத்தோவின் சந்ததியில் சகரியா, கிநெதோனின் சந்ததியில் மெசுல்லாம்,

நெகே 12:17. அபியாவின் சந்ததியில் சிக்ரி, மினியாமீன் மொவதியா என்பவர்களின் சந்ததியில் பில்தாய்.

நெகே 12:18. பில்காவின் சந்ததியில் சம்முவா, செமாயாவின் சந்ததியில் யோனத்தான்,

நெகே 12:19. யோயரிபின் சந்ததியில் மத்தனா, யெதாயாவின் சந்ததியில் ஊசி,

நெகே 12:20. சல்லாயின் சந்ததியில் கல்லாய், ஆமோக்கின் சந்ததியில் ஏபேர்,

நெகே 12:21. இல்க்கியாவின் சந்ததியில் அசபியா, யெதாயாவின் சந்ததியில் நெதனெயேல் என்பவர்கள்.

நெகே 12:22. எலியாசிபின் நாட்களில் யொயதா, யோகனான், யதுவா என்கிற லேவியர் பிதா வம்சங்களின் தலைவராக எழுதப்பட்டார்கள்; பெர்சியனாகிய தரியுவின் ராஜ்யபாரமட்டும் இருந்த ஆசாரியர்களும் அப்படியே எழுதப்பட்டார்கள்.

நெகே 12:23. லேவி புத்திரராகிய பிதா வம்சங்களின் தலைவர் எலியாசிபின் குமாரனாகிய யோகனானின் நாட்கள்மட்டும் நாளாகமப் புஸ்தகத்தில் எழுதப்பட்டார்கள்.

நெகே 12:24. லேவியரின் தலைவராகிய அசபியாவும், செரெபியாவும், கத்மியேலின் குமாரன் யெசுவாவும், அவர்களுக்கு எதிரே நிற்கிற அவர்கள் சகோதரரும், தேவனுடைய மனுஷனாகிய தாவீதினுடைய கற்பனையின்படியே துதிக்கவும் தோத்திரிக்கவும், ஒருவருக்கொருவர் எதிர்முகமாக முறைமுறையாயிருந்தார்கள்.

நெகே 12:25. மத்தனியா, பக்புக்கியா ஒபதியா, மெசுல்லாம், தல்மோன், அக்கூப் என்பவர்கள் வாசல்களிலிருக்கிற பொக்கிஷ அறைகளைக் காவல்காக்கிறவர்களாயிருந்தார்கள்.

நெகே 12:26. யோத்சதாக்கின் குமாரனாகிய யெசுவாவின் குமாரன் யொயாகீமின் நாட்களிலும், அதிபதியாகிய நெகேமியாவும், வேதபாரகனாகிய எஸ்றா என்னும் ஆசாரியனும் இருக்கிற நாட்களிலும் அவர்கள் இருந்தார்கள்.

சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு திரும்பி வந்த யூதர்களில் ஆசாரியரும் லேவியரும் இருக்கிறார்கள். அவர்களில் பிரதானமானவர்களின் பெயர்கள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பின்சந்ததியாரை உற்சாகப்படுத்தும் வண்ணமாகவும், அவர்களுடைய ஊழியத்தை பின்சந்ததியாரும் பொறுப்பாய் செய்யவேண்டும் என்பதற்காகவும், அவர்களுடைய பெயர்கள் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

பெர்சியா தேசத்திலிருந்து செருபாபேல் எருசலேமுக்கு திரும்பி வந்தபோது யெசுவா என்பவர் பிரதான ஆசாரியராயிருந்தார். செருபாபேலின் காலத்தில் கர்த்தருடைய ஆலயம் எடுப்பித்துக் கட்டப்பட்டது.

கிரேக்க பேரரசின் சக்கரவர்த்தியாகிய மகாஅலெக்சாண்டர் தீரு தேசத்தை ஜெயித்து, எருசலேமுக்கு வந்தார். அப்போது யத்துஸ் என்பவர் யூதருக்கு பிரதான ஆசாரியராயிருக்கிறார். தானியேல் தீர்க்கதரிசி கிரேக்க பேரரசின் வெற்றியை குறித்து ஏற்கெனவே தீர்க்கதரிசனமாக சொல்லியிருக்கிறார். பிரதான ஆசாரியனாகிய யத்துஸ், அலெக்சாண்டரிடம், அந்த தீர்க்கதரிசனத்தை பகிர்ந்து சொன்னார் என்று யூதமார்க்கத்து தலைவர்கள் சொல்லுகிறார்கள்.

செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேலோடும், யெசுவாவோடும் வந்த ஆசாரியர், லேவியர் ஆகியோரின் பெயர்கள் நெகே 12:1-11 ஆகிய வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் எல்லோரும் ஆசாரியர்கள், லேவியர்கள் ஆகியோர் மத்தியில் பிரதானமானவர்கள்.

யொயகீமின் நாட்களில் பிதா வம்சங்களின் தலைவரான ஆசாரியரைப்பற்றி நெகே 12:12-26 ஆகிய வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிற பெயர்களில், சிறிது மாற்றம் செய்து, அவர்களுடைய பெயர்கள் இங்கு மறுபடியுமாக சொல்லப்பட்டிருக்கிறது.

தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டபின்பு, செருபாபேலும், எஸ்றாவும் எருசலேமிற்குத் திரும்பி வந்த பின்பு, நெகேமியா எருசலேமின் தேசாதிபதியாக இருக்கிறார். நெகேமியா தேசாதிபதியாக இருந்த நாட்களில் யொயகீம் பிரதான ஆசாரியனாக இருக்கிறான். இவன் யெசுவாவின் குமாரன். செருபாபேலும், எஸ்றாவும் எருசலேமிற்குத் திரும்பி வந்த நாட்களில் யெசுவா பிரதான ஆசாரியனாக இருந்தான்.

ஆகையினால், தேவாலயம் கட்டப்படுவது யொயகீமிற்கும், நெகேமியாவிற்கும் முன்பு நடைபெற்ற சம்பவமாகும். செருபாபேல் தேவாலயத்தைக் கட்டிய போது யெசுவா பிரதான ஆசாரியனாக இருந்தான். (எஸ்றா 2:2; எஸ்றா 3:1-3; எஸ்றா 5:1-2; ஆகாய் 1:1-2; சக 3:1-7; சக 4:8-10). செருபாபேல், எஸ்றா ஆகியோரின் காலத்திற்குப் பின்பும், ஆசாரியனாகிய எஸ்றா உயிரோடு இருந்தார். இவர் நெகேமியாவின் காலத்திலும் இருந்தவர்.

எலியாசிபின் நாட்களில் யொயதா, யோகனான், யதுவா என்கிற லேவியர் பிதா வம்சங்களின் தலைவராக எழுதப்பட்டார்கள்; பெர்சியனாகிய தரியுவின் ராஜ்யபாரமட்டும் இருந்த ஆசாரியர்களும் அப்படியே எழுதப்பட்டார்கள் (நெகே 12:22). இக்காலத்தில் லேவியருடைய ஊழியமும் சிறப்பாக நடைபெறுகிறது.

எலியாசீப் என்னும் பிரதான ஆசாரியன் தொபியா என்பவனோடு சிநேகமாயிருக்கிறான். "இதற்குமுன்னே எங்கள் தேவனுடைய ஆலயத்தின் அறைகளை விசாரிக்க வைக்கப்பட்ட ஆசாரியனாகிய எலியாசிப் தொபியாவோடே சம்பந்தங்கலந்தவனாயிருந்தான்" (நெகே 13:4).

நெகேமியா ஆசாரியர் மத்தியிலே காணப்பட்ட குழப்பத்தை நீக்குகிறார். அவர் தேவாலயத்தை சுத்தம்பண்ணுகிறார். அதன் பின்பு லேவியர்கள் கர்த்தருக்கு பக்தி வைராக்கியமாய் ஊழியம் செய்கிறார்கள்.

இவர்களுக்கு பின்பு லேவியரே கர்த்தருடைய வார்த்தையை ஜனங்களுக்கு உபதேசம் பண்ணுகிறார்கள். லேவியர்களே ஜனங்களை ஜெபத்தில் வழிநடத்துகிறார்கள். இந்த ஊழியத்தை ஆசாரியர்களில் ஒருவரும் செய்யவில்லை.

"யெசுவா, பானி, செரெபியா, யாமின், அக்கூப், சபெதாயி, ஒதியா, மாசெயா, கேலிதா, அசரியா, யோசபாத், ஆனான், பெலாயா என்பவர்களும், லேவியரும், நியாயப்பிரமாணத்தை ஜனங்களுக்கு விளங்கப்பண்ணினார்கள்; ஜனங்கள் தங்கள் நிலையிலே நின்றார்கள்" (நெகே 8:7).

"யெசுவா, பானி, கத்மியேல், செப்பனியா, புன்னி, செரெபியா, பானி, கெனானி என்பவர்கள் லேவியருடைய படிகளின்மேல் நின்று, தங்கள் தேவனாகிய கர்த்தரை நோக்கி மகா சத்தமாய் ஓலமிட்டார்கள். பின்பு லேவியரான யெசுவா, கத்மியேல், பானி, ஆசாப்நெயா, செரெபியா, ஒதியா, செபனியா, பெத்தகியா என்பவர்கள் ஜனங்களைப் பார்த்து: நீங்கள் எழுந்திருந்து, அநாதியாய் என்றென்றைக்குமிருக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள் என்று சொல்லி, கர்த்தரை நோக்கி: எந்த ஸ்துதி ஸ்தோத்திரத்துக்கும் மேலான உம்முடைய மகிமையுள்ள நாமத்துக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக" (நெகே 9:4,5).

ஒருவர் ஆசாரியரா அல்லது லேவியரா என்னும் அடிப்படையில் அவர்களுக்கு ஊழியம் கொடுக்கப்படவில்லை. யாருக்கு திறமையும் தாலந்தும் இருக்கிறதோ, அவர்களுக்கு ஊழியம் கொடுக்கப்படுகிறது.

லேவியரின் தலைவராகிய அசபியாவும், செரெபியாவும், கத்மியேலின் குமாரன் யெசுவாவும், அவர்களுக்கு எதிரே நிற்கிற அவர்கள் சகோதரரும், தேவனுடைய மனுஷனாகிய தாவீதினுடைய கற்பனையின்படியே துதிக்கவும் தோத்திரிக்கவும், ஒருவருக்கொருவர் எதிர்முகமாக முறைமுறையாயிருக்கிறார்கள்.

மத்தனியா, பக்புக்கியா ஒபதியா, மெசுல்லாம், தல்மோன், அக்கூப் என்பவர்கள் வாசல்களிலிருக்கிற பொக்கிஷ அறைகளைக் காவல்காக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

யோத்சதாக்கின் குமாரனாகிய யெசுவாவின் குமாரன் யொயகீமின் நாட்களிலும், அதிபதியாகிய நெகேமியாவும், வேதபாரகனாகிய எஸ்றா என்னும் ஆசாரியனும் இருக்கிற நாட்களிலும் அவர்கள் இருக்கிறார்கள் (நெகே 12:24,26).

எருசலேமின் அலங்கம் பிரதிஷ்டைபண்ணப்படுகிறது நெகே 12:27-43

நெகே 12:27. எருசலேமின் அலங்கத்தைப் பிரதிஷ்டைபண்ணுகையில், துதியினாலும் பாடலினாலும், கைத்தாளம் தம்புரு சுரமண்டலம் முதலான கீதவாக்கியங்களினாலும், பிரதிஷ்டையை மகிழ்ச்சியோடே கொண்டாட எல்லா இடங்களிலும் இருக்கிற லேவியரை எருசலேமுக்கு வரும்படி தேடினார்கள்.

நெகே 12:28. அப்படியே பாடகரின் புத்திரர் எருசலேமின் சுற்றுப்புறங்களான சமபூமியிலும், நெத்தோபாத்தியரின் கிராமங்களிலும்,

நெகே 12:29. பெத்கில்காலிலும், கேபா, அஸ்மாவேத் ஊர்களின் நாட்டுப்புறங்களிலும் இருந்துவந்து கூடினார்கள்; பாடகர் எருசலேமைச் சுற்றிலும் தங்களுக்குக் கிராமங்களைக் கட்டியிருந்தார்கள்.

நெகே 12:30. ஆசாரியரும் லேவியரும் தங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு, ஜனத்தையும் பட்டண வாசல்களையும் அலங்கத்தையும் சுத்தம்பண்ணினார்கள்.

நெகே 12:31. அப்பொழுது நான் யூதாவின் பிரபுக்களை அலங்கத்தின்மேல் ஏறப்பண்ணி, துதிசெய்து நடந்துபோகும்படி இரண்டு பெரிய கூட்டத்தாரை நிறுத்தினேன்; அவர்களில் ஒரு கூட்டத்தார் அலங்கத்தின்மேல் வலதுபுறமாகக் குப்பைமேட்டு வாசலுக்குப் போனார்கள்.

நெகே 12:32. அவர்கள் பிறகாலே ஒசாயாவும், யூதாவின் பிரபுக்களில் பாதிப்பேரும்,

நெகே 12:33. அசரியா, எஸ்றா, மெசுல்லாம்,

நெகே 12:34. யூதா, பென்யமீன், செமாயா, எரேமியா என்பவர்களும்,

நெகே 12:35. பூரிகைகளைப் பிடிக்கிற ஆசாரியரின் புத்திரரில் ஆசாப்பின் குமாரன் சக்கூரின் மகனாகிய மிகாயாவுக்குக் குமாரனான மத்தனியாவின் மகன் செமாயாவுக்குப் பிறந்த யோனத்தானின் குமாரன் சகரியாவும்,

நெகே 12:36. தேவனுடைய மனுஷனாகிய தாவீதின் கீதவாத்தியங்களை வாசிக்கிற அவன் சகோதரரான செமாயா, அசரெயேல், மிலாலாய், கிலாலாய், மகாய், நெதனெயேல், யூதா, அனானி என்பவர்களும் போனார்கள்; வேதபாரகனாகிய எஸ்றா இவர்களுக்கு முன்பாக நடந்தான்.

நெகே 12:37. அங்கேயிருந்து அவர்கள் தங்களுக்கு எதிரான ஊருணிவாசலுக்கு வந்தபோது, அலங்கத்தைப்பார்க்கிலும் உயரமான தாவீது நகரத்தின் படிகளில் ஏறி, தாவீது வீட்டின்மேலாகக் கிழக்கேயிருக்கிற தண்ணீர் வாசல்மட்டும் போனார்கள்.

நெகே 12:38. துதிசெய்கிற இரண்டாம்கூட்டத்தார் எதிரேயிருக்கிற வழியாய் நடந்து போனார்கள், அவர்கள் பிறகாலே நான் போனேன்; ஜனத்தின் பாதிப்பேர் அலங்கத்தின்மேல்சூளைகளின் கொம்மையைக் கடந்து, அகழ் மதில்மட்டும் நெடுகப்போய்,

நெகே 12:39. எப்பிராயீம் வாசலையும், பழைய வாசலையும், மீன் வாசலையும், அனனெயேலின் கொம்மையையும், மேயா என்கிற கொம்மையையும் கடந்து, ஆட்டு வாசல்மட்டும் புறப்பட்டுக் காவல்வீட்டு வாசலிலே நின்றார்கள்.

நெகே 12:40. அதற்குப்பின்பு துதிசெய்கிற இரண்டு கூட்டத்தாரும் தேவனுடைய ஆலயத்திலே வந்து நின்றார்கள்; நானும் என்னோடேகூட இருக்கிற தலைவரில் பாதிப்பேரும்,

நெகே 12:41. பூரிகைகளைப் பிடிக்கிற எலியாக்கீம், மாசெயா, மினியாமீன், மிகாயா, எலியோனாய், சகரியா, அனானியா என்கிற ஆசாரியர்களும்,

நெகே 12:42. மாசெயா, செமாயா, எலெயாசார், ஊசி, யோகனான், மல்கியா, ஏலாம், ஏசேர் என்பவர்களும் நின்றோம்; பாடகரும், அவர்கள் விசாரிப்புக்காரனாகிய யெஷரகியாவும் சத்தமாய்ப் பாடினார்கள்.

நெகே 12:43. அந்நாளிலே மிகுதியான பலிகளைச் செலுத்தி, தேவன் தங்களுக்கு மகா சந்தோஷத்தை உண்டாக்கினதினால் மகிழ்ச்சியாயிருந்தார்கள்; ஸ்திரீகளும் பிள்ளைகளுங்கூடக் களிகூர்ந்தார்கள்; எருசலேமின் களிப்பு தூரத்திலே கேட்கப்பட்டது.

எருசலேமின் அலங்கம் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் அந்த அலங்கம் உடனே பிரதிஷ்டைபண்ணப்படவில்லை. அலங்கம் கட்டப்பட்டு முடிந்திருக்கிறது. ஆனால் எருசலேம் நகரத்திற்குள்ளே போதுமான ஜனங்கள் வந்து குடியிருக்கவில்லை. அலங்கத்தைப் பிரதிஷ்டைபண்ணுவதற்கு முன்பாக, எருசலேம் நகரத்தை ஜனங்களால் நிரப்பவேண்டும் என்று நெகேமியா விரும்புகிறார். இப்போது எருசலேம் நகரத்தில் இஸ்ரவேல் புத்திரர் போதுமான பேர் குடியிருக்கிறார்கள் (நெகே 11-ஆவது அதிகாரம்).

எருசலேமின் அலங்கம் கட்டி முடிக்கப்பட்டிருப்பது கர்த்தருடைய சுத்தக்கிருபை. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய கிருபைக்காகவும் இரக்கத்திற்காகவும் அவருக்கு துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கிறார்கள். அவர்கள் எருசலேம் நகரத்தையே கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய நாமமகிமைக்காக, கர்த்தருடைய நாமத்தினால், கர்த்தருக்காக, எருசலேம் நகரத்தை சுதந்தரித்துக்கொள்கிறார்கள்.

எருசலேம் நகரம் பரிசுத்தமான நகரம். அது மகாராஜாவின் நகரம்.

"வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும் சர்வபூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது, அதுவே மகாராஜாவின் நகரம்" (சங் 48:2).

"பூமியின்பேரிலும் சத்தியம்பண்ண வேண்டாம், அது அவருடைய பாதபடி; எருசலேமின்பேரிலும் சத்தியம்பண்ண வேண்டாம், அது மகாராஜாவினுடைய நகரம்" (மத் 5:35).

எருசலேம் நகரத்திற்கு அலங்கம் கட்டப்பட்டிருந்தாலும், அந்த நகரத்திற்கு கர்த்தருடைய தெய்வீக பாதுகாப்பு தேவைப்படுகிறது. கர்த்தர் நகரத்தை பாதுகாக்கவில்லையென்றால், அதன் அலங்கங்களால் ஒரு பிரயோஜனமும் இருக்காது. காவல் காக்கிறவர்களின் பிரயாசமும் விருதாவாயிருக்கும்.

நெகேமியாவின் ஆலோசனைப் பிரகாரமாக, இஸ்ரவேல் ஜனத்தார் எருசலேம் நகரத்தையும் அதன் அலங்கத்தையும், கர்த்தருடைய சமுகத்திலே பயபக்தியோடும், பரிசுத்தத்தோடும், பணிவோடும் பிரதிஷ்டைபண்ணுகிறார்கள்.

எருசலேமின் அலங்கத்தைப் பிரதிஷ்டைபண்ணுகையில், துதியினாலும் பாடலினாலும், கைத்தாளம் தம்புரு சுரமண்டலம் முதலான கீதவாக்கியங்களினாலும், பிரதிஷ்டையை மகிழ்ச்சியோடே கொண்டாட எல்லா இடங்களிலும் இருக்கிற லேவியரை எருசலேமுக்கு வரும்படி தேடுகிறார்கள் (நெகே 12:27).

நெகேமியா எருசலேமிற்குத் திரும்பி வந்த பின்பு அலங்கத்தைக் கட்டி முடிக்க 52 நாட்களாயிற்று. (நெகே 6:15) அதன் பின்பு, எருசலேமின் அலங்கம் பிரதிஷ்டை பண்ணப்படுகிறது. இஸ்ரவேல் தேசம் அனைத்திலிருந்தும் லேவியர்கள் எருசலேமிற்கு அழைத்து வரப்படுகிறார்கள். அவர்கள் அனைவரும் அலங்கத்தின் பிரதிஷ்டையில் உதவி புரிகிறார்கள். பாடகரும், இசைக்கருவிகளை இசைப்பவர்களும் லேவியராவர். (நெகே 12:27-29).

எருசலேமின் அலங்கத்தைப் பிரதிஷ்டைபண்ணும்போது, துதியும் பாடலும் நிரம்பியிருக்கவேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரர் விரும்புகிறார்கள். அதற்காக யூதாதேசத்தின் எல்லா இடங்களிலும் இருக்கிற லேவியரை எருசலேமுக்கு வருமாறு அழைக்கிறார்கள்.

பாடகரின் புத்திரர் எருசலேமின் சுற்றுப்புறங்களான சமபூமியிலும், நெத்தோபாத்தியரின் கிராமங்களிலும், பெத்கில்காலிலும், கேபா, அஸ்மாவேத் ஊர்களின் நாட்டுப்புறங்களிலும் இருந்துவந்து கூடுகிறார்கள்; பாடகர் எருசலேமைச் சுற்றிலும் தங்களுக்குக் கிராமங்களைக் கட்டியிருக்கிறார்கள் (நெகே 12:28,29).

ஆசாரியரும் லேவியரும் தங்களை சுத்தம்பண்ணிக்கொள்கிறார்கள். அவர்கள் ஜனத்தையும், பட்டண வாசல்களையும், அலங்கத்தையும் சுத்தம்பண்ணுகிறார்கள் (நெகே 12:30). சுத்தம்பண்ணுவதற்கு அவர்கள் தீட்டுக்கழிக்கும் ஜலத்தை தெளிக்கிறார்கள்.

"சுத்தமாயிருக்கிற ஒருவன் அந்தக் கிடாரியின் சாம்பலை வாரிக்கொண்டு, பாளயத்திற்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொட்டிவைக்கக்கடவன்; அது இஸ்ரவேல் புத்திரரின் சபைக்காகத் தீட்டுக்கழிக்கும் ஜலத்துக்கென்று காத்து வைக்கப்படவேண்டும்; அது பாவத்தைப் பரிகரிக்கும்" (எண் 19:9).

தீட்டுக்கழிக்கும் ஜலமானது இயேசுகிறிஸ்துவின் இரத்தத்திற்கு அடையாளமாயிருக்கிறது. ஆசாரியரும் லேவியரும் தீட்டுக்கழிக்கும் ஜலத்தை தங்கள் மேலும், ஜனங்கள்மேலும், பட்டண வாசல்கள் மேலும், அலங்கத்தின்மேலும் தெளிக்கிறார்கள்.

"நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!" (எபி 9:14).

வேதபாரகனாகிய எஸ்றா ஆசாரியரையும் லேவியரையும் வழிநடத்துகிறார் (நெகே 12:36). பிரபுக்களும், ஆசாரியர்களும் லேவியரும், இரண்டு பிரிவாக பிரிந்து அலங்கத்தின்மேல் நடந்துபோகிறார்கள்.

நெகேமியா யூதாவின் பிரபுக்களை அலங்கத்தின்மேல் ஏறப்பண்ணி, துதிசெய்து நடந்துபோகும்படி இரண்டு பெரிய கூட்டத்தாரை நிறுத்துகிறார். அவர்களில் ஒரு கூட்டத்தார் அலங்கத்தின்மேல் வலதுபுறமாகக் குப்பைமேட்டு வாசலுக்குப் போகிறார்கள் (நெகே 12:31).

எல்லோரும் சுத்தம் பண்ணிக் கொண்டபின்பு, யூதாவின் பிரபுக்கள் அலங்கத்தின்மேல் ஏறுகிறார்கள். துதிசெய்து நடந்துபோகும்படி இரண்டு பெரிய கூட்டத்தார் நிறுத்தப்படுகிறார்கள். அவர்களில் ஒரு கூட்டத்தார் அலங்கத்தின்மேல் வலதுபுறமாகக் குப்பைமேட்டு வாசலுக்குப் போகிறார்கள். துதிசெய்கிற இரண்டாம்கூட்டத்தார் எதிரேயிருக்கிற வழியாய் நடந்து போகிறார்கள். அதற்குப்பின் துதிசெய்கிற இரண்டு கூட்டத்தாரும் தேவனுடைய ஆலயத்திலே வந்து நின்று கர்த்தரைத் துதிக்கிறார்கள் (நெகே 12:38-43).

துதிசெய்கிற இரண்டாம்கூட்டத்தார் எதிரேயிருக்கிற வழியாய் நடந்து போகிறார்கள், அவர்கள் பிறகாலே நெகேமியா போகிறார்; ஜனத்தின் பாதிப்பேர் அலங்கத்தின்மேல்சூளைகளின் கொம்மையைக் கடந்து, அகழ் மதில்மட்டும் நெடுகப்போகிறார்கள் (நெகே 12:38).

முதலாவது கூட்டத்தார் அலங்கத்தின்மேல் வலதுபுறமாகக் குப்பைமேட்டு வாசலுக்குப் போகிறார்கள். இரண்டாவது கூட்டத்தார் ஆட்டுவாசல் மட்டும் புறப்பட்டு காவல் வீட்டு வாசலிலே நிற்கிறார்கள். அதற்கு பின்பு துதி செய்கிற இரண்டு கூட்டத்தாரும் தேவனுடைய ஆலயத்திலே வந்து நிற்கிறார்கள் (நெகே 12:40).

ஆசாரியரும் லேவியரும் பாடல்களைப் பாடி, கீதவாத்தியங்களை இசைத்து, அலங்கத்தின்மேல் நடந்துபோனபோது, இஸ்ரவேல் புத்திரரில் அநேகரும் அவர்களோடுகூட நடந்துபோகிறார்கள். நெகேமியாவும் அவரோடே கூடயிருக்கிற தலைவரின் பாதிப்பேரும், பூரிகைகளை பிடிக்கிறவர்களும் போகிறார்கள்.

பாடகரும், அவர்கள் விசாரிப்புக்காரனாகிய யெஷரகியாவும் சத்தமாய்ப் பாடுகிறார்கள். அந்நாளிலே மிகுதியான பலிகளைச் செலுத்தி, தேவன் தங்களுக்கு மகா சந்தோஷத்தை உண்டாக்கினதினால் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள்; ஸ்திரீகளும் பிள்ளைகளுங்கூடக் களிகூருகிறார்கள்; எருசலேமின் களிப்பு தூரத்திலே கேட்கப்படுகிறது (நெகே 12:42,43).

தேவாலயத்தில் ஆராதனை நெகே 12:44-47

நெகே 12:44. அன்றையதினம் பொக்கிஷங்களையும், படைப்புகளையும், முதல் கனிகளையும், தசமபாகங்களையும் வைக்கும் அறைகளின்மேல், ஆசாரியர்களுக்கும் லேவியர்களுக்கும் நியாயப் பிரமாணத்தின்படியே வரவேண்டிய பட்டணங்களுடைய நிலங்களின் பங்குகளை அவைகளில் சேர்க்கும் படிக்கு, சில மனுஷர் விசாரிப்புக்காரராக வைக்கப்பட்டார்கள்; ஊழியஞ்செய்து நிற்கிற ஆசாரியர்மேலும் லேவியர்மேலும் யூதா மனிதர் சந்தோஷமாயிருந்தார்கள்.

நெகே 12:45. பாடகரும், வாசல் காவலாளரும், தாவீதும் அவன் குமாரனாகிய சாலொமோனும் கற்பித்தபடியே தங்கள் தேவனுடைய காவலையும், சுத்திகரிப்பின் காவலையும் காத்தார்கள்.

நெகே 12:46. தாவீதும் ஆசாப்பும் இருந்த பூர்வநாட்களில் பாடகரின் தலைவரும் வைக்கப்பட்டு, தேவனுக்குத் துதியும் தோத்திரங்களும் செலுத்துகிற சங்கீதங்கள் திட்டம்பண்ணப்பட்டிருந்தது.

நெகே 12:47. ஆகையால் செருபாபேலின் நாட்களிலும், நெகேமியாவின் நாட்களிலும், இஸ்ரவேலர் எல்லாரும் பாடகருக்கும் வாசல் காவலாளருக்கும் அன்றாடகத் திட்டமாகிய பங்குகளைக் கொடுத்தார்கள்; அவர்கள் லேவியருக்கென்று பிரதிஷ்டைபண்ணிக் கொடுத்தார்கள்; லேவியர் ஆரோனின் புத்திரருக்கென்று அவர்கள் பங்கைப் பிரதிஷ்டைபண்ணிக்கொடுத்தார்கள்.

எருசலேமின் அலங்கம் பிரதிஷ்டை பண்ணப்படும்போது, மிகுதியான பலிகள் செலுத்தப்படுகிறது. ஜனங்கள் எல்லோரும் கர்த்தரைத் துதிக்கிறார்கள். அலங்கத்தின் பிரதிஷ்டை ஆராதனையைப் பார்த்து, இஸ்ரவேல்புத்திரர் எல்லோரும் கர்த்தரிடத்தில் பக்தி வைராக்கியமாயிருக்கிறார்கள்.

பாடகரும், வாசல் காவலாளரும், தாவீதும் அவன் குமாரனாகிய சாலொமோனும் கற்பித்தபடியே தங்கள் தேவனுடைய காவலையும், சுத்திகரிப்பின் காவலையும் காக்கிறார்கள் (நெகே 12:45).

கர்த்தருடைய ஆலயத்தில் பணிவிடை செய்கிற ஒவ்வொரு ஊழியக்காரரும், தங்களுடைய ஊழியப்பொறுப்புக்களை கவனமாயும், சந்தோஷமாயும், பயபக்தியாயும் செய்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய ஊழியங்களை அங்கீகரிக்கிறார்.

வாசல் காவலாளர் காலதாமதமில்லாமல், குறிப்பிட்ட வேளையில் தேவனுடைய ஆலயத்தை சுத்தம்பண்ணுகிறார்கள். ஜனங்களும் கர்த்தருடைய ஆலயத்திற்கு காணிக்கைகளையும் தசமபாகங்களையும் தவறாமல் செலுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் பொக்கிஷங்களையும், படைப்புகளையும், முதல் கனிகளையும், தசமபாகங்களையும் தேவனுடைய ஆலயத்தில் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். அவற்றை பராமரிப்பதற்காக விசாரிப்புக்காரர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த விசாரிப்புக்காரர்கள், அவற்றை வைக்கும் அறைகளின்மேல், ஆசாரியர்களுக்கும் லேவியர்களுக்கும் நியாயப்பிரமாணத்தின்படியே வரவேண்டிய பட்டணங்களுடைய நிலங்களின் பங்குகளை அவைகளில் சேர்க்கிறார்கள்.

ஊழியஞ்செய்து நிற்கிற ஆசாரியர்மேலும் லேவியர்மேலும் யூதா மனிதர் சந்தோஷமாயிருக்கிறார்கள் (நெகே 12:44). காணிக்கைகளை உற்சாகமாயும், தாராளமாயும் கொடுக்கிறார்கள். இதனால் தேவாலயத்தின் தேவைகளும், ஆலயத்தில் ஊழியம் செய்கிற ஊழியக்காரர்களின் தேவைகளும் குறைவில்லாமல் சந்திக்கப்படுகிறது.

அலங்கங்கள் பிரதிஷ்டை பண்ணப்பட்ட போது, தேவாலயத்தின் பொக்கிஷங்களைப் பாதுகாப்பதற்காக சில மனுஷரை விசாரிப்புக்காரராக வைத்திருக்கிறார்கள். இவர்கள் ஜனங்களுடைய காணிக்கைகளையும், தசமபாகங்களையும், பண்டகசாலைகளில் சேகரித்து வைக்கிறார்கள்.

தாவீதும் ஆசாப்பும் இருந்த பூர்வநாட்களில் பாடகரின் தலைவரும் வைக்கப்பட்டு, தேவனுக்குத் துதியும் தோத்திரங்களும் செலுத்துகிற சங்கீதங்கள் திட்டம்பண்ணப்பட்டிருந்தது (நெகே 12:46).

அதுபோலவே செருபாபேலின் நாட்களிலும், நெகேமியாவின் நாட்களிலும், இஸ்ரவேலர் எல்லாரும் பாடகருக்கும் வாசல் காவலாளருக்கும் அன்றாடகத் திட்டமாகிய பங்குகளைக் கொடுக்கிறார்கள்; அவர்கள் லேவியருக்கென்று பிரதிஷ்டைபண்ணிக் கொடுக்கிறார்கள்; லேவியர் ஆரோனின் புத்திரருக்கென்று அவர்கள் பங்கைப் பிரதிஷ்டைபண்ணிக்கொடுக்கிறார்கள் (நெகே 12:47).

நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் ஆசாரியருக்கும் லேவியருக்கும் பங்குகள் கொடுக்கப்படுகிறது.

13 அதிகாரம்

நெகேமியா எருசலேமின் அலங்கத்தைக் கட்டி முடித்திருக்கிறார். பரிசுத்த நகரத்திலே ஜனங்களை குடியிருக்கப்பண்ணியிருக்கிறார். அதன் பின்பு அவர் பெர்சியா தேசத்து ராஜாவினிடத்தில் திரும்பிப்போகிறார். நெகேமியாவை விட்டுப் பிரிய பெர்சியா ராஜாவுக்கு மனமில்லை. ஆனாலும் சிறிது காலத்திற்கு பின்பு, ராஜாவின் அனுமதியைப்பெற்று, நெகேமியா மறுபடியும் எருசலேமுக்கு திரும்பி வருகிறார்.

நெகேமியா எருசலேமில் இல்லாதபோது, யூதர்கள் மத்தியிலே அநேக சீர்கேடுகள் உண்டாயிற்று. ஜனங்களிடத்தில் கர்த்தர்மீது பக்தியும் பயமும் குறைந்துபோயிற்று. நெகேமியா எருசலேமுக்கு திரும்பி வந்து, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே ஆவிக்குரிய சீர்திருத்தங்களையும், சமுதாய சீர்திருத்தங்களையும் ஏற்படுத்துகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் பல ஜாதியான ஜனங்கள் இருக்கிறார்கள். மோவாபியர், அம்மோனியர் ஆகியோரை நெகேமியா யூதாதேசத்தை விட்டு வெளியேற்றுகிறார் (நெகே 13:1-3).

இக்காலத்தில் எலியாசிப் என்பவன் பிரதான ஆசாரியனாயிருக்கிறான். இவன் தொபியா என்னும் சத்துருவோடு சம்மந்தங்கலந்திருக்கிறான். தொபியா கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரத்திலுள்ள ஒரு அறையில் தங்கியிருக்கிறான். நெகேமியா தொபியாவை தேவனுடைய ஆலயத்தை விட்டு வெளியேற்றுகிறார் (நெகே 13:4-9).

ஆசாரியரையும் லேவியருரையும் பராமரிப்பதற்கு அவர்களுக்கு பங்குகள் கொடுக்கப்படவில்லை. நெகேமியா எருசலேமுக்கு திரும்பி வந்த பின்பு, அவர்களுக்கு பங்குகள் கொடுக்கப்பட திட்டம்பண்ணுகிறார் (நெகே 13:10-14).

எருசலேமின் குடிகள் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரியாமல், அதைப் பரிசுத்த குலைச்சலாக்குகிறார்கள். நெகேமியா எருசலேமிலே ஓய்வுநாளை பரிசுத்தம்பண்ணுகிறார் (நெகே 13:15-22).

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே அந்நிய ஜாதி ஸ்திரீகளை விவாகம்பண்ணினவர்கள் இருக்கிறார்கள். நெகேமியா அவர்களுக்கு இஸ்ரவேல் தேசத்தில் இடங்கொடுக்காமல், அவர்களை தேசத்தைவிட்டு துரத்துகிறார் (நெகே 13:23-31).

பல்ஜாதியான ஜனங்கள்
நெகே 13:1-3

நெகே 13:1. அன்றையதினம் ஜனங்கள் கேட்க, மோசேயின் புஸ்தகத்தை வாசித்தார்கள்; அதிலே அம்மோனியரும் மோவாபியரும், இஸ்ரவேல் புத்திரருக்கு அப்பமும் தண்ணீரும் கொடுக்க எதிர்கொண்டுவராமல், அவர்களைச் சபிக்க அவர்களுக்கு விரோதமாய்ப் பிலேயாமைக் கூலி பொருந்திக்கொண்டபடியினால்,

நெகே 13:2. அவர்கள் என்றைக்கும், அந்தச் சாபத்தை ஆசீர்வாதமாகத் திருப்பின எங்கள் தேவனுடைய சபைக்குட்படலாகாது என்று எழுதியிருக்கிறதாகக் காணப்பட்டது.

நெகே 13:3. ஆகையால் அவர்கள் அந்தக் கட்டளையைக் கேட்டபோது, பல ஜாதியான ஜனங்களையெல்லாம் இஸ்ரவேலை விட்டுப் பிரித்துவிட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பரிசுத்தமானவர்கள். அவர்கள் அந்நிய ஜாதியாரோடு கலந்து தங்களை தீட்டுப்படுத்திக்கொள்ளக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் அந்நிய ஜாதியாரை விட்டு விலகி பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும்.

அன்றையதினம் ஜனங்கள் கேட்க மோசேயின் புஸ்தகத்தை வாசிக்கிறார்கள் (நெகே 13:1). "அன்றையதினம்" என்பது எருசலேமின் அலங்கம் பிரதிஷ்டைபண்ணப்பட்ட நாளைக் குறிக்கிறது. மோசேயின் புஸ்தகத்தில் அம்மோனியரையும் மோவாபியரையும் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் மோவாபியரோடும் அம்மோனியரோடும் சம்மந்தங்கலக்கக்கூடாது. அவர்கள் தங்கள் மத்தியிலே குடியிருப்பதற்கு இஸ்ரவேல் ஜனத்தார் அனுமதிக்கவும் கூடாது. அது மாத்திரமல்ல, இஸ்ரவேல் புத்திரர் அந்த சத்துருக்களோடு ஐக்கியமாகவும் இருக்கக்கூடாது.

மோசேயின் புஸ்தகத்தில் அதற்கான காரணமும் சொல்லப்பட்டிருக்கிறது. "அம்மோனியரும் மோவாபியரும், இஸ்ரவேல் புத்திரருக்கு அப்பமும் தண்ணீரும் கொடுக்க எதிர்கொண்டுவராமல், அவர்களைச் சபிக்க அவர்களுக்கு விரோதமாய்ப் பிலேயாமைக் கூலிபொருந்திக்கொண்டபடியினால், அவர்கள் என்றைக்கும், அந்தச் சாபத்தை ஆசீர்வாதமாகத் திருப்பின எங்கள் தேவனுடைய சபைக்குட்படலாகாது" (நெகே 13:1,2) என்று மோசேயின் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

ரூத் மோவாபிய ஸ்திரீயாக இருந்தாலும் கர்த்தர் அவளை ஆசீர்வதித்து அங்கீகரித்திருக்கிறார். மோவாபியரைக் குறித்த கர்த்தருடைய பிரமாணத்திற்கு ரூத் விலக்கு பெற்றிருக்கிறாள் (உபா 23:3-6).

இது சம்பந்தமான பிரமாணம் உபாகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"அம்மோனியனும் மோவாபியனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது; பத்தாம் தலைமுறையிலும் என்றைக்கும் அவர்கள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது"

"நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே, அவர்கள் அப்பத்தோடும் தண்ணீரோடும் உங்களுக்கு எதிர்கொண்டு வராததினிமித்தமும், உன்னைச் சபிக்கும்படியாய் மெசொப்பொத்தாமியாவின் ஊராகிய பேத்தோரிலிருந்த பேயோரின் குமாரன் பிலேயாமுக்குக் கூலிபேசி அவனை அழைப்பித்ததினிமித்தமும் இப்படிச் செய்யவேண்டும்"

"உன் தேவனாகிய கர்த்தர் பிலேயாமுக்குச் செவிகொடுக்கச் சித்தமில்லாமல், உன் தேவனாகிய கர்த்தர் உன்மேல் அன்பு கூர்ந்தபடியினால், உன் தேவனாகிய கர்த்தர் அந்தச் சாபத்தை உனக்கு ஆசீர்வாதமாக மாறப்பண்ணினார்" (உபா 23:3-5).

இஸ்ரவேல் புத்திரர் மோசேயின் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற கட்டளைக்கு கீழ்ப்படிகிறார்கள். அவர்கள் அந்தக் கட்டளையைக் கேட்டபோது, பல ஜாதியான ஜனங்களையெல்லாம் இஸ்ரவேலை விட்டுப் பிரித்துவிடுகிறார்கள் (நெகே 13:3).

கர்த்தருடைய வார்த்தையை எல்லா ஜனங்களுக்கும் முன்பாக வாசிக்கும்போது, அவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதம் கிடைக்கும். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே மோசேயின் புஸ்தகம் வாசிக்கப்பட்டபோது, அவர்கள் தங்களுடைய பாவங்களையும், கடமைகளையும் உணருகிறார்கள். நன்மை தீமையை அறிகிறார்கள். தாங்கள் செய்த பாவங்களையும், மீறுதல்களையும் புரிந்துகொள்கிறார்கள்.

அந்நிய ஜாதியார் இஸ்ரவேல் புத்திரருக்கு கண்ணியாயிருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் மோசேயின் புஸ்தகத்தில், அந்தக் கட்டளையைக் கேட்டபோது, பல ஜாதியான ஜனங்களையெல்லாம், இஸ்ரவேலை விட்டுப் பிரித்துவிடுகிறார்கள்.

"பின்பு அவர்களுக்குள் இருந்த பல ஜாதியான அந்நிய ஜனங்கள் மிகுந்த இச்சையுள்ளவர்களானார்கள்; இஸ்ரவேல் புத்திரரும் திரும்ப அழுது, நமக்கு இறைச்சியைப் புசிக்கக்கொடுப்பவர் யார்?" (எண் 11:4).

தொபியா
நெகே 13:4-9

நெகே 13:4. இதற்குமுன்னே எங்கள் தேவனுடைய ஆலயத்தின் அறைகளை விசாரிக்க வைக்கப்பட்ட ஆசாரியனாகிய எலியாசிப் தொபியாவோடே சம்பந்தங்கலந்தவனாயிருந்து,

நெகே 13:5. முற்காலத்தில் காணிக்கைகளும், சாம்பிராணியும், பணிமுட்டுகளும், லேவியருக்கும் பாடகருக்கும் வாசல் காவலாளருக்கும் கட்டளைபண்ணப்பட்ட தானியம் திராட்சரசம் எண்ணெய் என்பவைகளிலே தசமபாகமும், ஆசாரியரைச் சேருகிற படைப்பான காணிக்கைகளும் வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஒரு பெரிய அறையை அவனுக்கு ஆயத்தம்பண்ணியிருந்தான்.

நெகே 13:6. இதெல்லாம் நடக்கும்போது நான் எருசலேமில் இல்லை; பாபிலோன் ராஜாவாகிய அர்தசஷ்டாவின் முப்பத்திரண்டாம் வருஷத்திலே நான் ராஜாவினிடத்திற்குப்போய், சில நாளுக்குப் பின்பு திரும்ப ராஜாவினிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு,

நெகே 13:7. எருசலேமுக்கு வந்தேன்; அப்பொழுது எலியாசிப் தொபியாவுக்கு தேவனுடைய ஆலயத்துப் பிராகாரங்களில் ஒரு அறையை ஆயத்தம்பண்ணினதினால், செய்த பொல்லாப்பை அறிந்துகொண்டேன்.

நெகே 13:8. அதினால் நான் மிகவும் மனமடிவாகி, தொபியாவின் வீட்டுத் தட்டுமுட்டுகளையெல்லாம் அந்த அறையிலிருந்து வெளியே எறிந்துவிட்டேன்.

நெகே 13:9. பின்பு நான் அறைவீடுகளைச் சுத்திகரிக்கச் சொல்லி, தேவனுடைய ஆலயப் பணிமுட்டுகளையும் காணிக்கைகளையும் சாம்பிராணிகளையும் அங்கே திரும்பக் கொண்டுவந்து வைத்தேன்.

இக்காலத்தில் நெகேமியா பெர்சியா தேசத்து ராஜாவினிடத்தில் போயிருக்கிறார். அவர் எருசலேமில் இல்லை. இப்போது, எலியாசிப் என்பவன் பிரதான ஆசாரியனாயிருக்கிறான். நெகேமியா இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் இல்லாததினால், ஜனங்கள் மத்தியிலே ஒழுக்க கட்டுப்பாடுகள் குறைந்துபோயிற்று.

எலியாசிப் என்பவன் தேவனுடைய ஆலயத்தின் அறைகளை விசாரிப்பதற்காக வைக்கப்பட்ட ஆசாரியன். இவன் ஆசாரியர்களுக்கு தலைவன். இவனோ அம்மோனியனாகிய தொபியாவோடே சம்பந்தங்கலந்திருக்கிறான் (நெகே 13:4).

இஸ்ரவேல் புத்திரர் அம்மோனியரையும் மோவாபியரையும் தங்களைவிட்டுப் பிரித்துவிட்டபோது, ஆசாரியனாகிய எலியாசிப்போ, அம்மோனியனாகிய தொபியாவோடே சம்பந்தங்கலக்கிறான்.

அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். தொபியாவின் முன்னோர்கள், எருசலேமின் அலங்கம் கட்டப்படுவதை எதிர்த்தவர்கள். சன்பல்லாத் இவர்களுடைய தலைவன். தொபியாவிடம் அம்மோன் புத்திரரின் சுபாவமும், தீயகுணமும் நிரம்பியிருக்கிறது.

"இதை ஓரானியனான சன்பல்லாத்தும், அம்மோனியனான தொபியா என்னும் ஊழியக்காரனும் கேட்டபோது, இஸ்ரவேல் புத்திரரின் நன்மையை விசாரிக்க ஒருவன் வந்தான் என்பது அவர்களுக்கு மிகவும் விசனமாயிருந்தது" (நெகே 2:10).

இஸ்ரவேல் புத்திரர் அம்மோனியரை தங்களை விட்டுப் பிரித்துவிடவேண்டும். ஆனால் ஆசாரியனாகிய எலியாசிப்போ, தொபியாவை தேவனுடைய ஆலயத்தில் தங்க வைக்கிறான். எலியாசிப் முதலாவதாக தொபியாவோடு விவாக சம்பந்தம் பண்ணினான். அதன் பின்பு அவனோடு சிநேகிதனான். எலியாசிப்பின் பேரன் சன்பல்லாத்தின் குமாரத்தியை விவாகம்பண்ணினவன் (நெகே 13:28).

எலியாசிப்பின் குடும்பத்தாரில் சிலர், தொபியாவின் குடும்பத்தாரோடு விவாக சம்பந்தம் செய்திருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரின் பிரதான ஆசாரியன், அந்நிய ஜாதி ஸ்திரீகளை விவாகம்பண்ணக்கூடாது. கர்த்தருடைய ஜனத்தார் அவருக்கு பரிசுத்த வித்தாகயிருக்கிறார்கள். ஆசாரியர் புறஜாதியாரை விவாகம்பண்ணி, கர்த்தருடைய வித்தை தீட்டுப்படுத்தக்கூடாது.

"விதவையையானாலும் தள்ளப்பட்டவளையானாலும் கற்புகுலைந்தவளையானாலும் வேசியையானாலும் விவாகம் பண்ணாமல், தன் ஜனங்களுக்குள்ளே ஒரு கன்னிகையை விவாகம் பண்ணக்கடவன். அவன் தன் வித்தைத் தன் ஜனங்களுக்குள்ளே பரிசுத்தக் குலைச்சலாக்காமல் இருப்பானாக; நான் அவனைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர் என்று சொல் என்றார்" (லேவி 21:14,15).

தேவனுடைய ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் பல அறைகள் உள்ளன. இந்த அறைகளில் காணிக்கைகளும், சாம்பிராணியும், பணிமுட்டுகளும், லேவியருக்கும்பாடகருக்கும் வாசல் காவலாளருக்கும் கட்டளைபண்ணப்பட்ட தானியம் திராட்சரசம் எண்ணெய் என்பவைகளிலே தசமபாகமும், ஆசாரியரைச் சேருகிற படைப்பான காணிக்கைகளும் வைக்கப்பட்டிருக்கும்.

ஆலயத்தின் பிரகாரத்தில் ஒரு பெரிய அறை உள்ளது. எலியாசிப் தேவனுடைய ஆலயத்தின் அறைகளை விசாரிப்பதற்காக வைக்கப்பட்ட ஆசாரியன். இவன் அந்த அறைகளில் ஒரு பெரிய அறையை தொபியாவுக்கு ஆயத்தம்பண்ணிக் கொடுக்கிறான் (நெகே 13:5).

அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் தேசத்திலே பிரவேசிப்பதற்கே அனுமதியில்லை. ஆனால் எலியாசிப்போ, அம்மோனியனாகிய தொபியாவை, தேவாலயத்திலேயே தங்க வைக்கிறான். அவனுக்காக ஒரு பெரிய அறையையும் ஆயத்தம்பண்ணிக்கொடுக்கிறான். எலியாசிப் அம்மோனியனுக்கு மதிப்பும் மரியாதையும் காண்பிக்கிறான்.

அம்மோனியனாகிய தொபியாவுக்கு கர்த்தருடைய ஆலயத்தில் இடங்கொடுத்தால், அவன் தங்கியிருக்கிற பெரிய அறையிலே, தன்னுடைய விக்கிரத்தைக் கொண்டு வந்து வைப்பான். ஆகையினால் இஸ்ரவேல் சபையார் மத்தியிலே அம்மோனியன் கலக்கக்கூடாது என்று கர்த்தர் தெளிவாக கட்டளையிட்டிருக்கிறார்.

எலியாசிப் தேவனுடைய ஆலயத்திலே தொபியாவுக்கு இடங்கொடுத்ததன் மூலமாக, அங்கே விக்கிரகாராதனை நடைபெறுவதற்கும் இடங்கொடுக்கிறான். இதெல்லாம் நடக்கும்போது நெகேமியாவும் எருசலேமில் இல்லை. அவர் பாபிலோன் ராஜாவாகிய அர்தசஷ்டாவின் முப்பத்திரண்டாம் வருஷத்திலே ராஜாவினிடத்திற்குப்போயிருக்கிறார் (நெகே 13:6).

நெகேமியா எருசலேமிலிருந்து மறுபடியும் பெர்சியாவிற்குப் போகிறார். பின்பு பெர்சியாவிலிருந்து இரண்டாம் முறையாக எருசலேமிற்கு வருகிறார். இது பாபிலோன் ராஜாவாகிய அர்தசஷ்டாவின் முப்பத்திரண்டாம் வருஷத்திலே நடைபெற்ற சம்பவம். (நெகே 13:6). நெகேமியா 12 வருஷங்களுக்குத் தேசாதிபதியாக இருந்தார். (நெகே 5:14) அவர் பெர்சியாவிற்குத் திரும்பிச் சென்றபோது அங்கு ஒருசில நாட்கள் மட்டுமே தங்கியிருந்தார். நெகேமியா இரண்டாம் முறையாக எருசலேமிற்கு வந்தபோது, எலியாசிப்பும், அவனுடைய மருமகனாகிய தொபியாவும் செய்த பொல்லாப்பை அறிந்து கொள்கிறார் (நெகே 13:7-9).

நெகேமியா எருசலேமில் இருந்திருந்தால், எலியாசிப் இதுபோன்ற தீயகாரியத்தை செய்திருக்கமாட்டான். நெகேமியா கர்த்தருக்கு பயப்படுகிறவர். அவர் எலியாசிப்பை துணிச்சலாக கண்டித்திருப்பார்.

பெர்சியா தேசத்திற்குப்போன நெகேமியா, அங்கே நிரந்தரமாக தங்கிவிடவில்லை. சில நாளுக்கு பின்பு, நெகேமியா ராஜாவினிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு எருசலேமுக்கு திரும்பி வருகிறார். எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தை, தொபியா தீட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறான். அவனுக்கு ஆசாரியனாகிய எலியாசிப் உடந்தையாயிருக்கிறான்.

நெகேமியா எருசலேமுக்கு திரும்பி வந்தபோது, பக்தியுள்ள யூதர்கள் எலியாசிப்பின் துர்க்குணத்தைப்பற்றியும், தொபியாவின் தீயகாரியங்களைக் குறித்தும் நெகேமியாவுக்கு சொல்லுகிறார்கள்.

அப்பொழுது எலியாசிப் தொபியாவுக்கு தேவனுடைய ஆலயத்துப் பிராகாரங்களில் ஒரு அறையை ஆயத்தம்பண்ணினதினால், செய்த பொல்லாப்பை நெகேமியா அறிந்துகொள்கிறார் (நெகே 13:7). இதனால் நெகேமியா மிகவும் மனமடிவாகிறார்.

தேவனுடைய ஆலயத்திலே இஸ்ரவேலின் பிரதான ஆசாரியரும், இஸ்ரவேலின் பிரதான சத்துருவும் சம்பந்தங்கலந்தவர்களாக, ஆலயத்தைத் தீட்டுப்படுத்துகிறார்கள். இதைப் பார்த்தபோது நெகேமியா மிகவும் மனமடிவாகிறார்.

நெகேமியா யூதாதேசத்திற்கு அதிபதியாயிருக்கிறார். அவரிடத்தில் அதிகாரமும் இருக்கிறது. வீரமும் இருக்கிறது. நெகேமியா தன்னுடைய வீரத்தை கர்த்தருடைய நாமமகிமைக்காக பயன்படுத்துகிறார்.

தொபியாவை தேவனுடைய ஆலயத்திலிருந்து வெளியேற்றவேண்டும். நெகேமியா தொபியாவின் வீட்டுத் தட்டுமுட்டுகளையெல்லாம் அந்த அறையிலிருந்து வெளியே எறிந்துவிடுகிறார் (நெகே 13:8). நெகேமியா எலியாசிப்புக்கோ, தொபியாவுக்கோ பயப்படவில்லை. எலியாசிப்பின் குடும்பத்தார் தனக்கு விரோதமாக கலகம்பண்ணுவார்களோ என்றும் நெகேமியா யோசிக்கவில்லை. தொபியாவின் வீட்டு தட்டுமுட்டுகளையெல்லாம், அந்த அறையிலிருந்து வெளியே எரிந்து, நெகேமியா தன்னுடைய பக்தி வைராக்கியத்தை வெளிப்படுத்துகிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் தேவாலயத்தை சுத்தம்பண்ணினார். தேவனுடைய ஆலயம் கள்ளர் குகையாக இருக்கக்கூடாது என்றும், அது எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடாக இருக்கவேண்டும் என்றும் இயேசு சொன்னார்.

இயேசுகிறிஸ்து தேவாலயத்தை சுத்தம்பண்ணியதுபோல, நெகேமியா தேவனுடைய ஆலயத்தின் அறைகளை சுத்தம்பண்ணியதுபோல, நாமும் நம்முடைய இருதயங்களிலிருந்து பாவங்களை வெளியேற்றி அதை சுத்தம்பண்ண வேண்டும். நாம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம்.

நெகேமியா தொபியாவின் வீட்டு தட்டுமுட்டுகளையெல்லாம், அந்த அறையிலிருந்து வெளியே எறிந்துவிட்ட பின்பு, அவர் அறைவீடுகளை சுத்திகரிக்கச் சொல்லுகிறார். அதன்பின்பு நெகேமியா தேவனுடைய ஆலயப் பணிமுட்டுகளையும் காணிக்கைகளையும் சாம்பிராணிகளையும் அங்கே திரும்பக் கொண்டுவந்து வைக்கிறார் (நெகே 13:9).

தேவனுடைய ஆலயப்பணிமுட்டுகளை, தொபியா தங்கியிருந்த அறையில் கொண்டு வந்து வைப்பதற்கு முன்பாக, அந்த அறைவீடுகளை சுத்திகரிப்பது அவசியமாயிருக்கிறது. இதற்காக நெகேமியா அந்த அறைவீடுகளில் தீட்டுக்கழிக்கும் ஜலத்தை தெளிக்கிறார்.

இதுபோலவே, மனந்திரும்புதல் மூலமாக, நம்முடைய இருதயத்திலிருந்து பாவங்கள் அகற்றப்படும்போது, நம்முடைய இருதயத்தின்மீது இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தை தெளித்து, அதை விசுவாசத்தினால் சுத்திகரிக்கவேண்டும். அப்போது தேவனுடைய ஆவியானவர் நம்முடைய இருதயத்தை நிரப்புவார். நம்முடைய இருதயத்திலிருந்து நல்ல சிந்தனைகளும், நம் மூலமாக நல்ல கிரியைகளும் நடைபெறுவதற்கு பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிசெய்வார்.

லேவியரின் பங்குகள் நெகே 13:10-14

நெகே 13:10. பின்னையும் லேவியருக்கு அவர்கள் பங்குகள் கொடுக்கப்படவில்லையென்பதையும், பணிவிடை செய்கிற லேவியரும் பாடகரும் அவரவர் தங்கள் வெளிநிலங்களுக்கு ஓடிப்போனார்கள் என்பதையும் நான் அறிந்துகொண்டேன்.

நெகே 13:11. அப்பொழுது நான் தலைமையானவர்களோடே வழக்காடி, தேவனுடைய ஆலயம் கைவிடப்பட்டுப்போவானேன் என்று சொல்லி, அவர்களைச் சேர்த்து, அவரவர் நிலையில் அவர்களை வைத்தேன்.

நெகே 13:12. அப்பொழுது யூதா எல்லாரும் தானியம் திராட்சரசம் எண்ணெய் என்பவைகளில் தசமபாகத்தைப் பொக்கிஷ அறைகளில் கொண்டுவந்தார்கள்.

நெகே 13:13. அப்பொழுது நான் ஆசாரியனாகிய செலேமியாவையும், வேதபாரகனாகிய சாதோக்கையும், லேவியரில் பெதாயாவையும், இவர்களுக்குக் கைத்துணையாக மத்தனியாவின் குமாரன் சக்கூரின் மகனாகிய ஆனானையும் பொக்கிஷ அறைகளின்மேல் விசாரிப்புக்காரராக வைத்தேன்; அவர்கள் உண்மையுள்ளவர்கள் என்று எண்ணப்பட்டார்கள்; ஆகையால் தங்கள் சகோதரருக்குப் பங்கிடுகிற வேலை அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டது.

நெகே 13:14. என் தேவனே, நான் என் தேவனுடைய ஆலயத்துக்காகவும் அதின் முறைமைகளுக்காகவும் செய்த நற்கிரியைகளைக் குலைத்துப்போடாமல், இந்தக் காரியத்திலே என்னை நினைத்தருளும்.

நெகேமியா தேவனுடைய ஆலயத்தின் அறைகளை சுத்திகரிக்கிறார். அப்போது மற்றொரு பிரச்சனை அவருடைய கவனத்துக்கு கொண்டு வரப்படுகிறது. லேவியருக்கு அவர்கள் பங்குகள் கொடுக்கப்படவில்லையென்பதையும், பணிவிடை செய்கிற லேவியரும் பாடகரும் அவரவர் தங்கள் வெளிநிலங்களுக்கு ஓடிப்போனார்கள் என்பதையும் நெகேமியா அறிந்துகொள்கிறார் (நெகே 13:10).

தங்களுக்கு பங்குகள் கொடுக்கப்படாவிட்டாலும், லேவியர்கள் அது குறித்து யாரிடத்திலும் முறையிடவில்லை. அவர்கள் யாரோடும் விவாதம்பண்ணவுமில்லை. அவர்கள் எல்லோரும் தங்கள் வெளிநிலங்களுக்கு ஓடிப்போகிறார்கள். கர்த்தருடைய ஆலயத்திலே பணிவிடை செய்யவேண்டியவர்கள், இப்போது வெளிநிலங்களிலே விவசாய வேலைகளை செய்கிறார்கள்.

லேவியருக்கு அவர்களுடைய பங்குகள் கொடுக்கப்படாமல் இருப்பதற்கு இரண்டு காரணங்களை சொல்ல முடியும். அவையாவன:

1. லேவியர்கள் எருசலேமில் தங்கியிராமல், தேவனுடைய ஆலயத்தின் பணிவிடைகளை செய்யாமல், அவரவர் தங்கள் வெளிநிலங்களுக்கு ஓடிப்போனார்கள். ஆகையினால் ஜனங்கள் லேவியரை பராமரிப்பதற்கு பங்குகளை கொடுக்க விரும்பவில்லை. லேவியர்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்யாமல், விவசாய வேலைகளை செய்வதினால், ஜனங்களுக்கு அவர்கள்மீது மதிப்பு மரியாதை குறைந்துபோயிற்று. லேவியரை பராமரிக்கவேண்டும் என்னும் எண்ணம் ஜனங்களுடைய உள்ளத்தில் ஏற்படவில்லை.

2. ஜனங்கள் தங்களுக்கு பங்குகளை கொடுக்காததினால், தங்களையும் தங்கள் குடும்பத்தாரையும் பராமரிப்பதற்காக, லேவியர்கள் தங்கள் வெளிநிலங்களுக்கு ஓடிப்போகிறார்கள். ஜனங்கள் அவர்களுக்கு பங்குகளை கொடுத்திருந்தால், அவர்கள் எங்கும் போகாமல், எருசலேமில் தங்கியிருந்து, தேவனுடைய ஆலயத்தின் பணிவிடைகளை செய்திருப்பார்கள்.

லேவியருக்கு பங்குகள் கொடுக்கப்படவில்லை, ஆகையினால் அவர்கள் தங்கள் வெளிநிலங்களுக்கு ஓடிப்போனார்கள் என்பதை நெகேமியா அறிந்துகொள்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களை நாம் சரியாக பராமரிக்கவில்லையென்றால், அவர்கள் மூலமாக பெரிய ஊழியங்களை எதிர்பார்க்க முடியாது. ஊழியக்காரர்கள் கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்யும்போது, அவர்களை பராமரிக்கும் காரியங்களில் ஜனங்களும் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

லேவியருக்கு பங்குகள் கொடுக்கப்படாமல் போனதற்கு, இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்களே காரணம் என்பதையும் நெகேமியா அறிந்துகொள்கிறார்.

இதற்காக நெகேமியா தலைமையானவர்களோடே வழக்காடுகிறார். "தேவனுடைய ஆலயம் கைவிடப்பட்டுப்போவானேன்" என்று நெகேமியா தலைவர்களோடே கேட்கிறார். நெகேமியா லேவியர்களை சேர்த்து, அவரவர் நிலையில் அவர்களை வைக்கிறார் (நெகே 13:11).

ஜனங்கள் தேவனுடைய ஆலயத்தைக் கைவிடும்போது, அவர்கள் லேவியரையும் கைவிடுகிறார்கள். தேவனுடைய ஆலயம் கைவிடப்பட்டு போகக்கூடாது என்பதற்காக, நெகேமியா வெளிநிலங்களுக்கு ஓடிப்போன லேவியர்களை எருசலேமிலே கூட்டிச்சேர்க்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் நெகேமியாவின் முயற்சிக்கு ஒத்துழைப்பு கொடுக்கிறார்கள்.

அப்பொழுது யூதா எல்லாரும் தானியம் திராட்சரசம் எண்ணெய் என்பவைகளில் தசமபாகத்தைப் பொக்கிஷ அறைகளில் கொண்டுவருகிறார்கள் (நெகே 13:12). ஜனங்கள் கொண்டு வருகிற தசமபாகமும் காணிக்கையும் திரளாயிருக்கிறது. பொக்கிஷ அறைகளின்மேல் விசாரிப்புக்காரரை வைக்கவேண்டிய தேவை உண்டாயிற்று.

நெகேமியா ஆசாரியனாகிய செலேமியாவையும், வேதபாரகனாகிய சாதோக்கையும், லேவியரில் பெதாயாவையும், இவர்களுக்குக் கைத்துணையாக மத்தனியாவின் குமாரன் சக்கூரின் மகனாகிய ஆனானையும் பொக்கிஷ அறைகளின்மேல் விசாரிப்புக்காரராக வைக்கிறார்; அவர்கள் உண்மையுள்ளவர்கள் என்று எண்ணப்பட்டவர்கள்; ஆகையால் தங்கள் சகோதரருக்குப் பங்கிடுகிற வேலை அவர்களுக்கு ஒப்புவிக்கப்படுகிறது (நெகே 13:13).

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்திலே தங்கள் தசமபாகங்களையும், காணிக்கைகளையும் கொண்டு வந்து சேர்த்தாலும், கர்த்தரே அவர்களுக்கு அந்த ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறவர். கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்களிலிருந்து, ஒரு பகுதியை கர்த்தருக்கு திரும்ப கொடுக்கிறோம். கர்த்தர் நமக்கு கொடுக்கவில்லையென்றால், கர்த்தருக்கு கொடுக்க நம்மிடத்தில் ஒன்றும் இருக்காது.

லேவியருக்கு பங்குகள் திட்டப்பண்ணப்பட்டாலும், கர்த்தரே அவர்களுக்கு பங்குகளை கொடுத்து ஆசீர்வதிக்கிறவர். எல்லா ஊழியக்காரர்களுக்கும் கர்த்தரே எஜமானராயிருக்கிறார்.

நெகேமியா கர்த்தருடைய மகத்துவத்தையும், அவருடைய ஆளுகைகையயும் நினைவுகூர்ந்து, அவரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். "என் தேவனே, நான் என் தேவனுடைய ஆலயத்துக்காகவும் அதின் முறைமைகளுக்காகவும் செய்த நற்கிரியைகளைக் குலைத்துப்போடாமல், இந்தக் காரியத்திலே என்னை நினைத்தருளும்" (நெகே 13:14) என்பதே நெகேமியாவின் ஜெபம்.

நெகேமியா கர்த்தரிடத்தில் ஜெபிக்கும்போது, "என்னை ஆசீர்வதித்தருளும்" என்றோ, அல்லது, "எனக்கு பிரதிபலனைத் தாரும்" என்றோ ஜெபம்பண்ணாமல், "என்னை நினைத்தருளும்" என்று ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் தமது கிருபையினால் நம்மை நினைவுகூருகிறார்.

பரிசுத்தமான ஓய்வுநாள்
நெகே 13:15-22

நெகே 13:15. அந்த நாட்களில் நான் யூதாவிலே ஓய்வுநாளில் சிலர் ஆலைகளை மிதிக்கிறதையும், சிலர் தானியப் பொதிகளைக் கழுதைகள்மேல் ஏற்றிக்கொண்டு வருகிறதையும், திராட்சரசம், திராட்சப்பழம், அத்திப்பழம் முதலானவைகளின் பற்பல சுமைகளை ஓய்வுநாளிலே எருசலேமுக்குக் கொண்டுவருகிறதையும் கண்டு, அவர்கள் தின்பண்டம் விற்கிற நாளைப்பற்றி அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டேன்.

நெகே 13:16. மீனையும் சகலவித சரக்குகளையும் கொண்டுவந்து, ஓய்வுநாளிலே யூதா புத்திரருக்கும் எருசலேமில் இருக்கிறவர்களுக்கும் விற்கிற சில தீரியரும் உள்ளே குடியிருந்தார்கள்.

நெகே 13:17. ஆகையால் நான் யூதாவின் பெரியவர்களைக் கடிந்துகொண்டு: நீங்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிற இந்தப் பொல்லாத செய்கையென்ன?

நெகே 13:18. உங்கள் பிதாக்கள் இப்படிச் செய்ததினாலல்லவா, நமது தேவன் நம்மேலும் இந்த நகரத்தின்மேலும் இந்தத் தீங்கையெல்லாம் வரப்பண்ணினார்; நீங்களோவென்றால் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறதினால், இஸ்ரவேலின்மேலிருக்கிற உக்கிரத்தை அதிகரிக்கப்பண்ணுகிறீர்கள் என்று அவர்களுக்குச் சொன்னேன்.

நெகே 13:19. ஆகையால் ஓய்வுநாளுக்கு முன்னே எருசலேமின் பட்டணவாசலில், மாலைமயங்கும்போது, கதவுகளைப் பூட்டவும், ஓய்வுநாள் முடியுமட்டும் அவைகளைத் திறவாதிருக்கவும் வேண்டுமென்று கட்டளையிட்டு, ஓய்வுநாளிலே ஒரு சுமையும் உள்ளே வராதபடிக்கு வாசல்ண்டையிலே என் வேலைக்காரரில் சிலரை நிறுத்தினேன்.

நெகே 13:20. அதினால் வர்த்தகரும், சகலவித சரக்குகளை விற்கிறவர்களும், இரண்டொருதரம் எருசலேமுக்குப் புறம்பே இராத்தங்கினார்கள்.

நெகே 13:21. அப்பொழுது நான் அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டு, நீங்கள் அலங்கத்தண்டையிலே இராத்தங்குகிறது என்ன? நீங்கள் மறுபடியும் இப்படிச் செய்தால், உங்கள்மேல் கைபோடுவேன் என்று அவர்களோடே சொன்னேன்; அதுமுதல் அவர்கள் ஓய்வுநாளில் வராதிருந்தார்கள்.

நெகே 13:22. ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்கும்படிக்கு, உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு வாசல்களைக் காக்க வாருங்கள் என்று லேவியருக்கும் சொன்னேன். என் தேவனே, இதைக்குறித்து நீர் என்னை நினைத்தருளி, உம்முடைய மிகுந்த கிருபையின்படி எனக்கு இரங்குவீராக.

நெகேமியாவின் நாட்களில் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஒவ்வொன்றாய் நடைபெறுகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவில்லை.

யூதாவிலே ஓய்வுநாளில் சிலர் ஆலைகளை மிதிக்கிறார்கள். சிலர் தானியப் பொதிகளைக் கழுதைகள்மேல் ஏற்றிக்கொண்டு வருகிறார்கள். திராட்சரசம், திராட்சப்பழம், அத்திப்பழம் முதலானவைகளின் பற்பல சுமைகளை ஓய்வுநாளிலே எருசலேமுக்குக் கொண்டுவருகிறார்கள். அவர்கள் தின்பண்டம் விற்கிறார்கள் (நெகே 13:15).

நெகேமியா ஜனங்களுடைய முரண்பாடுகளை காண்கிறார். அவர்கள் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரியாமல், அதைப் பரிசுத்த குலைச்சலாக்குகிறார்கள். இதற்காக நெகேமியா அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொள்கிறார்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் யூதர்கள் ஓய்வுநாள் பிரமாணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். அவர்கள் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவில்லையென்றால், கர்த்தருடைய பிரமாணங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கமாட்டார்கள்.

ஓய்வுநாளில் என்ன செய்யலாம் என்றும், என்ன செய்யக்கூடாது என்றும் மோசேயின் பிரமாணத்தில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து கொடுத்திருக்கிறார். அது கர்த்தருக்கு பரிசுத்தமான ஓய்வுநாள்.

"ஆறுநாள் வேலைசெய்து, ஏழாம் நாளிலே ஓய்ந்திருப்பாயாக; விதைப்புக் காலத்திலும் அறுப்புக்காலத்திலும் ஓய்ந்திருப்பாயாக" (யாத் 34:21).

ஓய்வுநாளில் மனுஷர்கள் ஓய்ந்திருப்பதுபோல, மிருகங்களும் ஓய்ந்திருக்கவேண்டும். ஓய்வுநாளிலே மிருகங்களுக்கு வேலைகளை கொடுக்கக்கூடாது.

"ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் எருதானாலும், உன் கழுதையானாலும், உனக்கு இருக்கிற மற்றெந்த மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும் யாதொரு வேலையும் செய்யவேண்டாம்; நீ இளைப்பாறுவதுபோல உன் வேலைக்காரனும் உன் வேலைக்காரியும் இளைப்பாறவேண்டும்" (உபா 5:14).

ஆனால் யூதர்கள் ஓய்வுநாளிலே தானியப்பொதிகளை கழுதைகள் மேல் ஏற்றிக்கொண்டு எருசலேமுக்கு வருகிறார்கள்.

"நீங்கள் ஓய்வுநாளில் சுமைகளை எடுத்து, அவைகளை எருசலேமின் வாசல்களுக்குள் கொண்டுவராதபடிக்கும், ஓய்வுநாளில் உங்கள் வீடுகளிலிருந்து சுமையை வெளியே கொண்டு போகாதபடிக்கும், ஒரு வேலையையும் செய்யாதபடிக்கும், உங்கள் ஆத்துமாக்களுக்காக எச்சரிக்கையாயிருந்து, நான் உங்கள் பிதாக்களுக்குக் கட்டளையிட்டபடி ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்குங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 17:21,22).

எருசலேமிலே தீரு தேசத்தார் இருக்கிறார்கள். இவர்கள் எருசலேம் நகரத்திற்குள்ளே மீன்களையும், சரக்குகளையும் கொண்டுவந்து எருசலேம் குடிகளுக்கு விற்கிறார்கள். தீரு தேசத்தார் ஓய்வுநாளிலும் வியாபாரம்பண்ணுகிறார்கள்.

மீனையும் சகலவித சரக்குகளையும் கொண்டுவந்து, ஓய்வுநாளிலே யூதா புத்திரருக்கும் எருசலேமில் இருக்கிறவர்களுக்கும் விற்கிற சில தீரியரும் உள்ளே குடியிருக்கிறார்கள் (நெகே 13:16).

நெகேமியா தின்பண்டம் விற்கிற நாளைப்பற்றி, அவர்களை திடசாட்சியாய்க் கடிந்துகொள்கிறார் (நெகே 13:15). வர்த்தகரும் சகலவித சரக்குகளை விற்கிறவர்களும் ஓய்வுநாளிலே எருசலேமுக்கு புறம்பே இராத்தங்குகிறார்கள். நெகேமியா அவர்களையும் திடசாட்சியாய்க் கடிந்துகொள்கிறார் (நெகே 13:20,21).

நெகேமியா புறஜாதியாரை கடிந்துகொள்ளும்போது, யூதாவின் மனுஷரையும் கடிந்துகொள்கிறார். அவர் யூதாவின் பெரியவர்களையும் கடிந்துகொள்கிறார். நெகேமியா யூதாவின் பெரியவர்களை நோக்கி, "நீங்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிற இந்தப் பொல்லாத செய்கையென்ன?" (நெகே 13:17) என்று கேட்கிறார்.

யூதாவின் பெரியவர்கள் ஓய்வுநாளில் தானியப்பொதிகளை கழுதைகளின்மேல் ஏற்றிக்கொண்டு வரவில்லை. அவர்கள் ஓய்வுநாளில் தின்பண்டம் விற்கவில்லை. ஆனாலும் நெகேமியா யூதாவின் பெரியவர்களைக் கடிந்துகொள்கிறார். நெகேமியா அவர்களைப் பார்த்து, "நீங்கள் ஓய்வுநாளை பரிசுத்த குலைச்சலாக்குகிறீர்கள்" என்று அவர்கள்மீது குற்றம் சொல்லுகிறார்.

யூதாவின் பெரியவர்கள் ஓய்வுநாளை பரிசுத்தக்குலைச்சலாக்கவில்லை. ஆனால் அவர்கள், ஓய்வுநாளை பரிசுத்தக்குலைச்சலாக்குகிறவர்களை கண்டும் காணாதவர்கள் போல் இருக்கிறார்கள். அவர்களைக் கடிந்துகொள்ளாமல் சும்மாயிருக்கிறார்கள். இதனால் யூதாவின் பெரியவர்கள்மீது குற்றம் சுமத்தப்படுகிறது.

பட்டயத்தைப் பிடித்திருக்கிற நியாயாதிபதிகள், தேவைப்படும்போது அதை பயன்படுத்தவேண்டும். பட்டயத்தை அழகுக்காகவோ, கவுரவத்திற்காகவோ பிடித்துக்கொண்டு சும்மா நிற்கக்கூடாது.

யூதாவின் பெரியவர்கள் மற்ற ஜனங்களுக்கு நல்ல முன்மாதிரிகளாயிருக்கவேண்டும். ஆனால் அவர்களோ ஓய்வுநாளில் வீண்கதைகளை பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஓய்வுநாளில் வியாபாரம் பண்ணுகிறவர்களை கடிந்துகொள்ளாமல், அவர்களோடு விற்பனையும் கொள்வனையும் செய்கிறார்கள். யூதாவின் பெரியவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் உலகப்பிரகாரமான காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

நெகேமியா யூதாவின் பெரியவர்களை நோக்கி, "உங்கள் பிதாக்கள் இப்படிச் செய்ததினாலல்லவா, நமது தேவன் நம்மேலும் இந்த நகரத்தின்மேலும் இந்தத் தீங்கையெல்லாம் வரப்பண்ணினார்; நீங்களோவென்றால் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறதினால், இஸ்ரவேலின் மேலிருக்கிற உக்கிரத்தை அதிகரிக்கப் பண்ணுகிறீர்கள்" (நெகே 13:18) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தேசத்திலே ஓய்வுநாளை பரிசுத்த குலைச்சலாக்கினவர்களை கர்த்தர் ஏற்கெனவே தண்டித்திருக்கிறார். கர்த்தருடைய உக்கிரகோபம் அவர்கள்மீது வந்திருக்கிறது. யூதாவின் பெரியவர்களும் பிரபுக்களும், ஏற்கெனவே தங்கள் முற்பிதாக்களுக்கு கிடைத்த தண்டனைகளையும், நடைபெற்ற சோகசம்பவங்களையும் நினைவுகூர்ந்து, எச்சரிப்படையவேண்டும். அவர்கள் செய்த தப்பிதத்தை தாங்கள் செய்து விடாதவாறு மிகவும் கவனமாயிருக்கவேண்டும். ஆனால் இஸ்ரவேலின் பிரபுக்களோ ஓய்வுநாளை பரிசுத்தக்குலைச்சலாக்கி, தேவனுடைய உக்கிரத்தை அதிகரிக்கப்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்படவேண்டும் என்பதே நெகேமியாவின் விருப்பம். அவர்களை கடினமாய்த் தண்டிக்கவேண்டும் என்பது நெகேமியாவின் விருப்பமல்ல. தண்டித்தால் அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்னும் நிலமை வரும்போது, நெகேமியா அவர்களை நிச்சயமாய்த் தண்டிப்பார். அவர் தேவையில்லாமல் ஜனங்களைத் தண்டிக்கமாட்டார்.

யூதாவின் தலைவர்களும், பிரபுக்களும் அதிக ஞானமுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்களுக்கு ஜனங்களை ஆளுகை செய்ய தெரிந்திருக்கவேண்டும். நமக்கு கடிவாளத்தை சரியாக பயன்படுத்த தெரிந்திருந்தால், சவுக்கை அதிகமாய்ப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படாது. கடிவாளத்தை பயன்படுத்த தெரியாதவர்கள், சவுக்கை அதிகமாய்ப் பயன்படுத்துவார்கள். நெகேமியாவோ ஞானமுள்ளவர். கடிவாளத்தைப் பயன்படுத்த தெரிந்தவர்.

எருசலேமின் அலங்கத்திலுள்ள வாசல்களுக்கு கதவுகள் போடப்பட்டிருக்கிறது. கதவுகளைப் பூட்டிவிட்டால் யாரும் எருசலேமுக்குள் பிரவேசிக்க முடியாது. அதிலும் விசேஷமாய் ஓய்வுநாளிலே அலங்கத்தின் கதவுகளைப் பூட்டிவிட்டால், வியாபாரிகளோ, அவர்கள் கொண்டு வரும் சுமைகளோ எருசலேம் நகரத்திற்குள்ளே பிரவேசிக்க முடியாது.

இதற்காக நெகேமியா ஓய்வுநாளுக்கு முன்னே எருசலேமின் பட்டணவாசலில், மாலைமயங்கும்போது, கதவுகளைப் பூட்டவும், ஓய்வுநாள் முடியுமட்டும் அவைகளைத் திறவாதிருக்கவும் வேண்டுமென்று கட்டளையிடுகிறார். ஓய்வுநாளிலே ஒரு சுமையும் உள்ளே வராதபடிக்கு வாசலண்டையிலே நெகேமியா தன் வேலைக்காரரில் சிலரை நிறுத்துகிறார் (நெகே 13:19).

அதினால் வர்த்தகரும், சகலவித சரக்குகளை விற்கிறவர்களும், இரண்டொருதரம் எருசலேமுக்குப் புறம்பே இராத்தங்குகிறார்கள்.

மற்ற தேசங்களிலிருந்து வர்த்தகர்கள் எருசலேம் பட்டணத்திற்குள் இரவு பகல் எப்பொழுதும் வந்துபோகிறார்கள். ஓய்வுநாட்களிலும், மற்ற எல்லா நாட்களிலும் எருசலேம் பட்டணத்திற்கு வந்து வியாபாரம் பண்ணுகிறார்கள். நெகேமியா எருசலேமிற்கு இரண்டாம் முறையாக திரும்பி வந்த பின்பு, ஓய்வுநாளில் நடைபெற்ற வியாபாரத்தை யெல்லாம் நிறுத்திப் போடுகிறார். நெகேமியாவின் இந்தப்புதிய கட்டளையைத் தெரியாத வியாபாரிகள் இரண்டொருதரம் எருசலேமுக்குப் புறம்பே இராத்தங்குகிறார்கள்.

அப்பொழுது நெகேமியா அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொள்கிறார். "நீங்கள் அலங்கத்தண்டையிலே இராத்தங்குகிறது என்ன? நீங்கள் மறுபடியும் இப்படிச் செய்தால், உங்கள்மேல் கைபோடுவேன்" (நெகே 13:21) என்று நெகேமியா அவர்களோடே சொல்லுகிறார். அதுமுதல் அவர்கள் ஓய்வுநாளில் வராதிருக்கிறார்கள்.

"உங்கள்மேல் கைபோடுவேன்" என்னும் வாக்கியத்திற்கு தன்னுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாதோரைக் கைது பண்ணி, சிறையில் அடைப்பேன் என்பது பொருளாகும்.

ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிப்பதில் லேவியருக்கு முக்கியமான பங்கு இருக்கிறது. நெகேமியா லேவியரை நோக்கி, "உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு வாசல்களைக் காக்க வாருங்கள்" (நெகே 13:22) என்று சொல்லுகிறார். லேவியர்கள் ஓய்வுநாளிலே தங்களை சுத்தம்பண்ணிக்கொண்டு, மற்ற ஜனங்களுக்கு முன்மாதிரியாயிருக்க வேண்டும்.

வாசல் காவலாளர்கள் தங்களுடைய வேலைகளைச் சரியாகச் செய்யவில்லை. ஆகையினால் இந்த வேலையைச் செய்வதற்கு நெகேமியா ஒருசில லேவியரையும் பரிசுத்தப்படுத்துகிறார்.

லேவியர்கள் தங்களை சுத்தம்பண்ணிக் கொள்ளும்போது, நியாயாதிபதிகளும், அதிகாரிகளும், பிரபுக்களும், தலைவர்களும் தங்களைச் சுத்தபண்ணிக்கொள்வார்கள். அவர்கள் எல்லோரும் இஸ்ரவேல் ஜனத்திற்கு முன்மாதிரியாக, ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் காலத்தில், யூதர்கள் ஓய்வுநாள் பிரமாணத்திற்கு தேவைக்கு அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுத்தார்கள். அவர்கள் சடங்காச்சாரமான பரிசுத்தத்தில் கவனம் செலுத்தினார்களேயல்லாமல், தங்களுடைய ஆத்துமாக்களின் பரிசுத்தத்திலே அவர்கள் கவனம் செலுத்தவில்லை.

நெகேமியா யூதாவின் தலைவரிடத்தில் ஓய்வுநாளைப்பற்றி சொன்ன பின்பு, அவர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். "என் தேவனே, இதைக்குறித்து நீர் என்னை நினைத்தருளி, உம்முடைய மிகுந்த கிருபையின்படி எனக்கு இரங்குவீராக" (நெகே 13:22) என்று நெகேமியா ஜெபம்பண்ணுகிறார்.

யூதருடைய சுத்திகரிப்பு
நெகே 13:23-31

நெகே 13:23. அஸ்தோத், அம்மோன், மோவாப் ஜாதிகளான ஸ்திரீகளைச் சேர்த்துக் கொண்ட சில யூதரையும் அந்த நாட்களில் கண்டேன்.

நெகே 13:24. அவர்கள் பிள்ளைகள் பேசின பேச்சில் பாதி அஸ்தோத் பாஷையாயிருந்தது; இவர்கள் அந்தந்த ஜாதிகளின் பாஷையைத்தவிர, யூதபாஷையைத் திட்டமாய்ப் பேச அறியாதிருந்தார்கள்.

நெகே 13:25. அவர்களையும் நான் கடிந்து கொண்டு, அவர்கள்மேல் வரும் சாபத்தைக்கூறி, அவர்களில் சிலரை அடித்து, மயிரைப் பிய்த்து: நீங்கள் உங்கள் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக்கொடாமலும், அவர்கள் குமாரத்திகளில் ஒருவரையும் உங்கள் குமாரருக்காகிலும் உங்களுக்காகிலும் கொள்ளாமலும் இருக்கவேண்டுமென்று அவர்களை தேவன்மேல் ஆணையிடப்பண்ணி, நான் அவர்களை நோக்கி:

நெகே 13:26. இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் இதினாலே பாவஞ்செய்தானல்லவா? அவனைப் போன்ற ராஜா அநேகம் ஜாதிகளுக்குள்ளே உண்டாயிருந்ததில்லை; அவன் தன் தேவனாலே சிநேகிக்கப்பட்ட வனாயிருந்தான்; தேவன் அவனை இஸ்ரவேல்லனைத்தின் மேலும் ராஜாவாக வைத்தார்; அப்படிப்பட்டவனையும் மறுஜாதியான ஸ்திரீகள் பாவஞ்செய்யப் பண்ணினார்களே.

நெகே 13:27. நீங்கள் மறுஜாதியான ஸ்திரீகளைச் சேர்த்துக்கொள்ளுகிறதினால், நம்முடைய தேவனுக்குத் துரோகிகளாகி, இந்தப் பெரிய பொல்லாப்பையெல்லாம் செய்யும்படி, உங்களுக்கு இடங்கொடுப்போமோ என்றேன்.

நெகே 13:28. யொயதாவின் புத்திரரிலே பிரதான ஆசாரியனாகிய எலியாசிபினுடைய குமாரன் ஒருவன் ஓரோனியனான சன்பல்லாத்துக்கு மருமகனானான்; ஆகையால் அவனை என்னைவிட்டுத் துரத்தினேன்.

நெகே 13:29. என் தேவனே, அவர்கள் ஆசாரிய ஊழியத்தையும், ஆசாரிய ஊழியத்துக்கும் லேவியருக்கும் இருக்கிற உடன்படிக்கையையும் தீட்டுப்படுத்தினார்கள் என்று அவர்களை நினைத்துக்கொள்ளும்.

நெகே 13:30. இப்படியே நான் மறுஜாதியாரையெல்லாம் நீக்கி, ஆசாரியரையும் லேவியரையும் சுத்திகரித்து, அவரவரை அவர்கள் வேலையின் முறைகளில் நிறுத்தி,

நெகே 13:31. குறிக்கப்பட்ட காலங்களிலே செலுத்தப்படவேண்டிய விறகு காணிக்கையையும், முதற்பலன்களையுங் குறித்துத் திட்டம்பண்ணினேன். என் தேவனே எனக்கு நன்மையுண்டாக என்னை நினைத்தருளும்.

யூதாதேசத்தார் கர்த்தருக்கு முன்பாக பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும் என்று நெகேமியா விரும்புகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். நெகேமியா கர்த்தர்மீது பக்திவைராக்கியமாயிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரில் சிலர் மறுஜாதியான ஸ்திரீகளை விவாகம்பண்ணியிருக்கிறார்கள்.

அஸ்தோத், அம்மோன், மோவாப் ஜாதிகளான ஸ்திரீகளைச் சேர்த்துக் கொண்ட சில யூதரை நெகேமியா அந்த நாட்களில் காண்கிறார் (நெகே 13:23). எஸ்றாவின் காலத்திலும் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் இந்தப் பிரச்சனை இருந்தது (எஸ்றா 9,10 ஆகிய அதிகாரங்கள்).

நெகேமியா யூதாதேசத்திற்கு அதிபதியாயிருக்கிறார். யூதாதேசத்திலுள்ளவர்களை ஆளுகை செய்கிற பொறுப்பு நெகேமியாவினிடத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் யூதருடைய குடும்பங்களின் நன்மைகளை விசாரிக்கிறார். அதே வேளையில் அவர்கள் கர்த்தருக்கு பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரில் சிலர் மறுஜாதியான ஸ்திரீகளை விவாகம்பண்ணி பாவம் செய்திருக்கிறார்கள்.

நெகேமியா அப்படிப்பட்டவர்களுடைய பிள்ளைகளிடத்தில் பேசுகிறார். அவர்கள் பிள்ளைகள் பேசின பேச்சில் பாதி அஸ்தோத் பாஷையாயிருக்கிறது; இவர்கள் அந்தந்த ஜாதிகளின் பாஷையைத்தவிர, யூதபாஷையைத் திட்டமாய்ப் பேச அறியாதிருக்கிறார்கள் (நெகே 13:24).

மறுஜாதியான ஸ்திரீகளுக்கு பிறந்த பிள்ளைகள், அவர்களுடைய தாய் பாஷையையும் பேசுகிறார்கள். யூதபாஷையையும் பேசுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு யூதபாஷையை சுத்தமாய்ப் பேச தெரியவில்லை. அவர்கள் பேசுகிற பேச்சில் பாதி அஸ்தோத் பாஷையாகவோ அல்லது அம்மோன் பாஷையாகவோ அல்லது மோவாப் பாஷையாகவோ இருக்கிறது. அவர்களுடைய தாயார் என்ன பாஷையை பேசுகிறார்களோ, அந்த பாஷையை இவர்களும் கலந்து பேசுகிறார்கள்.

நெகேமியா மறுஜாதியான ஸ்திரீகளின் பிள்ளைகளை கடிந்துகொள்கிறார். அவர்கள்மேல் வரும் சாபத்தை அவர்களுக்கு எடுத்து கூறுகிறார். நெகேமியா அவர்களில் சிலரை அடித்து மயிரைப் பிய்த்துவிடுகிறார் (நெகே 13:25).

எஸ்றாவுக்கும் நெகேமியாவுக்கும் இந்த விஷயத்தில் வித்தியாசம் இருக்கிறது. எஸ்றா இதுபோல பாவம் செய்தவர்களைப் பார்த்தபோது அவர் தன்னுடைய தாடியின் மயிரைப் பிய்த்துக்கொண்டார். பாவம் செய்தவர்களைப் பார்த்து எஸ்றா மிகவும் வேதனைப்பட்டார். நெகேமியாவோ தன்னுடைய மயிரைப் பிய்த்துக்கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக பாவம் செய்தவர்களின் மயிரைப் பிய்த்துப்போடுகிறார். நெகேமியாவினிடத்தில் பரிசுத்தமான கோபம் காணப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் குமாரரையும், குமாரத்திகளையும் அந்நிய ஜாதியாருக்கு கொடுக்கக்கூடாது. இது கர்த்தருடைய பிரமாணம். பிரமாணத்தை மீறுவது பாவம். இதனால் அவர்கள்மேல் சாபம் வரும்.

"அவர்களோடே சம்பந்தம் கலவாயாக; உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக" (உபா 7:3).

நெகேமியா மறுஜாதியான ஸ்திரீகளை விவாகம்பண்ணினவர்களை நோக்கி, "நீங்கள் உங்கள் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக்கொடாமலும், அவர்கள் குமாரத்திகளில் ஒருவரையும் உங்கள் குமாரருக்காகிலும் உங்களுக்காகிலும் கொள்ளாமலும் இருக்கவேண்டும்" (நெகே 13:25) என்று சொல்லி, அவர்களை தேவன்மேல் ஆணையிடப்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரை சுத்திகரிக்கவேண்டும் என்பது நெகேமியாவின் விருப்பம். இதற்காக அவர் இஸ்ரவேல்புத்திரர் மத்தியிலே இருக்கிற மறுஜாதியாரையெல்லாம் நீக்கிப்போடுகிறார் (நெகே 13:30). யூதாதேசத்தில் இருக்கிறவர்கள், தங்கள் குமாரரையும் குமாரத்திகளையும் புறஜாதியாருக்கு கொடுப்பதில்லை என்று அவர்களை தேவன் பேரில் ஆணையிடப்பண்ணுகிறார்.

நெகேமியா இஸ்ரவேல் ஜனத்தாரிடம், மறுஜாதியான ஸ்திரீகளை விவாகம்பண்ணுவது பற்றி சொல்லும்போது, சாலொமோனுடைய சரித்திரத்தை அவர்களுக்கு எடுத்து சொல்லுகிறார்.

நெகேமியா அவர்களை நோக்கி, "இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் இதினாலே பாவஞ்செய்தானல்லவா? அவனைப்போன்ற ராஜா அநேகம் ஜாதிகளுக்குள்ளே உண்டாயிருந்ததில்லை; அவன் தன் தேவனாலே சிநேகிக்கப்பட்டவனாயிருந்தான்; தேவன் அவனை இஸ்ரவேலனைத்தின் மேலும் ராஜாவாக வைத்தார்; அப்படிப்பட்டவனையும் மறுஜாதியான ஸ்திரீகள் பாவஞ்செய்யப் பண்ணினார்களே" (நெகே 13:26) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மறுஜாதியான ஸ்திரீகளைச் சேர்த்துக்கொள்ளுகிறதினால், தங்களுடைய தேவனுக்குத் துரோகிகளாவார்கள். இந்தப் பெரிய பொல்லாப்பையெல்லாம் செய்யும்படி, அவர்களுக்கு இடங்கொடுக்கக்கூடாது என்று நெகேமியா இஸ்ரவேல் புத்திரரை எச்சரிக்கிறார் (நெகே 13:27).

இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். அதிலும் விசேஷமாய் ஆசாரியருடைய குடும்பத்தார் கறை திரையில்லாமல் மிகவும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். யொயதாவின் புத்திரரிலே பிரதான ஆசாரியனாகிய எலியாசிபினுடைய குமாரன் ஒருவன் ஓரோனியனான சன்பல்லாத்துக்கு மருமகனானான் (நெகே 13:28).

சன்பல்லாத் யூதருடைய சத்துருவாயிருக்கிறவன் (நெகே 2:10; 4:1). நெகேமியா அவனை தன்னைவிட்டுத் துரத்திவிடுகிறார். அவனால் இனிமேல் தேவனுடைய ஆலயத்தில் ஆசாரிய ஊழியம் செய்ய முடியாது. துரத்தப்பட்ட சன்பல்லாத்தின் மருமகன், பிற்காலத்தில் சமாரியருக்கு ஆசாரியனானான் என்று யூதருடைய பாரம்பரிய வரலாறு சொல்லுகிறது.

நெகேமியா எலியாசிபினுடைய குமாரனை துரத்திவிட்டு, கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ணுகிறார். நெகேமியா கர்த்தரை நோக்கி, "என் தேவனே, அவர்கள் ஆசாரிய ஊழியத்தையும், ஆசாரிய ஊழியத்துக்கும் லேவியருக்கும் இருக்கிற உடன்படிக்கையையும் தீட்டுப்படுத்தினார்கள் என்று அவர்களை நினைத்துக்கொள்ளும்" (நெகே 13:29) என்று ஜெபம்பண்ணுகிறார்.

ஆசாரியரிலும், லேவியரிலும் சிலர் அந்நிய ஜாதி ஸ்திரீகளை விவாகம் பண்ணியிருக்கிறார்கள். அவர்களை மறுபடியும் ஆசாரிய ஊழியங்களில் நிறுத்துவதற்குப் பதிலாக தங்களுடைய அந்நிய ஜாதி ஸ்திரீகளை விலக்கி வைத்துவிட்டு, தங்களைச் சுத்திகரித்துக் கொள்கிறார்கள். (நெகே 13:29-30; லேவி 21:14).

இப்படியே நெகேமியா மறுஜாதியாரையெல்லாம் நீக்கி, ஆசாரியரையும் லேவியரையும் சுத்திகரித்து, அவரவரை அவர்கள் வேலையின் முறைகளில் நிறுத்துகிறார். குறிக்கப்பட்ட காலங்களிலே செலுத்தப்படவேண்டிய விறகு காணிக்கையையும், முதற்பலன்களையுங் குறித்துத் திட்டம்பண்ணுகிறார் (நெகே 13:30,31).

நெகேமியா இந்தப் புஸ்தகத்தின் முடிவுரையில், கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணி, இந்தப் புஸ்தகத்தை நிறைவு செய்கிறார். "என் தேவனே எனக்கு நன்மையுண்டாக என்னை நினைத்தருளும்" என்பதே நெகேமியாவின் ஜெபமாகும். நெகேமியா ஏற்கெனவே, "அவர்களை நினைத்துக்கொள்ளும்" (நெகே 13:29) என்று ஜெபம்பண்ணினார். இப்போது "என்னை நினைத்தருளும்" என்று தனக்காக ஜெபம்பண்ணுகிறார்.

பொதுவாக வேதபுஸ்தகங்களின் முடிவில் வாழ்த்துதலோ, துதியோ, தீர்க்கதரிசனமோ அல்லது ஒரு வரலாற்றுச் சம்பவமோ இருக்கும். ஆனால் நெகேமியாவின் புஸ்தகமும், புலம்பலின் புஸ்தகமும் ஜெபத்தில் முடிவு பெறுகிறது. நெகேமியா தன் புஸ்தகத்தை ஜெபத்தோடு முடித்து, கர்த்தரிடத்தில் தான் வைத்திருக்கும் பக்தியை வெளிப்படுத்துகிறார்.